# B.A. HISTORY - I YEAR

## *DJH1A* - HISTORY OF INDIA UP TO 1526 AD

### SYLLABUS

**Unit-I**

Geographical features of India - Survey of the sources for Ancient India - Prehistoric India - Harappan Civilization – origin - extent - urban- planning - decline - Vedic Age - Vedic Civilization Vedic Society – Polity - Economy and Religion Varna - Caste systems

**Unit-II**

Rise of new religions movements in North India, Jainism, Buddhism-doctrines and social dimensions - Persian Invasion – Macedonian Invasion, Mauryan Empire – Ashoka – Dharma its nature and propagation - Mauryan State Administration – economy - art and architecture, Kushanas - Kanishka's contribution to Buddhism – Ghandara art.

**Unit-III**

Gupta Empire - Samudra Gupta - Chandragupta II – Fahiyen – Administration – Society – economy – literature - art and architecture, Harsha Vardhana – society - art and architecture – religion - Huen Tsang.

**Unit-IV**

Foundation of Delhi Sultanate Incursions of Muhammed of Ghor, Slave Dynasty - Balban's carrier and achievements - Khilji Dynasty - Alauddin Khilji - military conquests and economic reforms.Rue of Tughlag Dynasty - Muhammed Bin Tughlaq's achievements and failure, Events leading to the decline of Sultanate.

**Unit-V**

Political developments in peninsular India - Vijayanagar Empire – Krishnadevaraya - Bhamini Kingdom - Muhammed Gawan.

**Reference Books:**

1. D.D.Kosambi - An introduction to the study of Indian History
2. T.V.Mahalinagam - Adminisitration and Social life under Vijayanagar Empire.
3. K.M.Panikkar - A survey of Indian History
4. Jawaharlal Nehru - Discovery of India
5. H.C.Ray Chaudhuri - Political History of Ancient India
5. Romila Thapar - History of India
7. K.A.Nilkanda Sastri-History of South India
8. Peter Hardy - Muslims of India
9. R.Sasthinathier - History of India, Vol.1 & Vol.2
10. W.H.Mooreland - From Akbar to Aurengazeb

## DJH1A - இந்திய வரலாறு (தொடக்க காலம் முதல் கி.பி 1526 வரை)

### அலகு -1 : இந்தியாவின் புவியியல் அமைப்பும் வரலாறும்

இந்தியா ஒரு மாபெரும் நாடு. இதனை ஒரு'துணைக்கண்டம்' என்கிறோம். ஆசியாவின் தென்கோடியில் அமைந்துள்ள தீபகற்பகம் தான் இந்தியா.

**இந்தியாவின் எல்லைகளும், பரப்பும்:**

இந்தியாவின் வட எல்லையாக இமயமலைத் தொடர்கள் அமைந்துள்ளது. இம்மலைத்தொடர்கள் சீனாவையும் இந்தியாவையும் பிரிக்கின்றன. தீபகற்பத்தின் தெற்கில் இந்து மாகாசமுத்திரம்,கிழக்கில் வங்கக் கடலும், பர்மாவும், மேற்கில் அரபிக்கடலும். பாகிஸ்தானும் நம் நாட்டின் எல்லைகளாக உள்ளன.

வடக்கே இமயமலைத்தொடரிலிருந்து தெற்கே உள்ள இந்து மகாசமுத்திரம் வரை இந்தியாவின் நிலப்பரப்பு 32,87,263 சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். வடக்கு தெற்காக இதன் நீளம் 3214 கிலோ மீட்டர்கள். கிழக்கு மேற்காக இதன் மிக அதிகமான அகலம் 2933 கிலோ மீட்டர்கள் ஆகும் பூமியின் பரப்பில் 2.4 சதவீதத்தை உள்ளடக்கியது. ஆனால் உலக மக்கள் தொகையில் 16 சதவீதம் கொண்டள்ளது. எனவேதான் மிக விசாலமான நமது நாடு 'துணைக்கண்டம்'(Sub-continent) என்று அழைக்கப்படுகிறது.

இந்தியா மிக விசித்திரமான புவியியல் கூறுகளை உடையது. புனிமூடிக் கிடக்கும் உயர்ந்த மலைகளும், வளம் பெருகி விளங்கும் சமவெளிகளும், மனித இனத்தின் காலடி காணாக் கடும் பாலைவனங்களும், அடர்ந்த காடுகளும், வெப்பமணடலங்களும், குறை வெப்க பகுதிகளும் இந்தியாவின் எல்லைக்குள் அடங்குகின்றன. இயற்கை அமைப்பை அடிப்படையாகக' கொண்டு இந்தியாவை நான்கு முக்கிய இயற்கை பிரிவுகளாக பிரிக்கலாம். அவைகள் பின் வருமாறு:

1. வடக்கே உள்ள இமயமலைத் தொடர்கள் பிரதேசம்
2. சிந்து – கங்கைச் சமவெளிப் பகுதிகள்.
3. தக்காண பீடபூமி.
4. தக்காண பீடபூமிக்கு கிழக்கேயும், மேற்கேயும் அமைந்துள்ள கடற்கரைச் சமவெளிகள். இவைகளை ஒன்றன் பின் ஒன்றாக விளக்கமாகக் காண்போம்.

**1. இமயமலைத் தொடர்கள் பிரதேசம்:**

இமயமலைத் தொடர்கள் இந்தியாவின் வட எல்லையாக அமைந்துள்ளன. இதன் நீளம் கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 2500 கிலோமீட்டர் உள்ளது. அகலம் 200 முதல் 250 கிலோ மீடடர் வரை உள்ளது. இமயமலைப் பகுதிகளின் மொத்தப்பரப்பு 5,00,000 ச.கி.மீ ஆகும். இமயமலை பல கணவாய்களையும், சிகரங்களையும் கொண்டது. இமயமலைத் தொடரின் வடமேற்கில் இந்துகுஷ் சுலைமான் மலைகளுக்கிடையே கைபர், போலன்,குர்ரம் கோமல் முதலிய கணவாய்கள் உள்ளன. ஊலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரம் இம்மலைத் தொடரில் உள்ளது. இதன் உயரம் 8,848மீ ஆகும். மேலும் கஞ்சன் ஜங்கா, மகாலு,

தவளகிரி, அன்ன பூர்ணா, நந்தா தேவி, நங்கபர்வதம் ஆகிய சிகரங்களும் உணடு. மேலும் காஷ்மீர் பீடபூமி, நேபாளப்பீடபூமி, ஷில்லாங் பீடபூமி, ஆகியவைகளும் அமைந்துள்ளன. சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா ஆகியவற்றாத ஜீவநதிகளின் பிறப்பிடமும் இமயமலைத் தொடரே ஆகும்

இமயமலைத் தொடர் பிரதேசம் இந்திய வரலாற்றில் பெரும் பங்கு வகிக்கிறது. வரலாற்றின் போக்கிலும், பண்பாட்டு வளர்ச்சியிலும் அதன் தாக்கம் காணப்படுகிறது.

முதலாவதாக, இமயமலைத் தொடர்கள் நம் நாட்டிற்கு இயற்கை அரணாக உள்ளன. வேளிநாட்டினர் தரைமார்க்கமாக எளிதாக இந்தியாமீது படையெடுத்து வர முடியாது. அதே நேரத்தில் இந்தியர்களின் வெளி உலகத் தொடர்புக்கும் தடையாக இருந்து வந்திருக்கிறது.

இரண்டாவதாக, வடமேற்கில் உள்ள கணவாய்கள், நம் நாட்டிற்கும் மத்திய ஆசியாவிற்கும் ஒரு போக்குவரத்து மார்க்கமாகச் செயல்பட்டு வந்தன. ஆதன் வழியாக பல இனமக்கள் நம் நாட்டில் வந்து குடியேறினர். ஆனால் வேற்று நாட்டினர் இந்தியாவின் மீது போர் தொடுக்கவும் இக்கணவாய்களே காரணமானது.

மூன்றாவதாக, இம்மலைத்தொடரிலிருந்து உற்பத்தியாகும் ஆறுகள் நாட்டுவளம் பெருக முக்கிய காரணமாகும்.

கடைசியாக, நமது நாட்டின் மீது பருவக் காற்றுகளை வடக்கேயும் மேற்கேயும் செல்லவிடாமல் தடுத்து இந்தியாவில் நல்ல மழை பெய்யச் செய்கிறது. மேலும் ஆசியாவிலிருந்து அடிக்கும் கடும் குளிர் காற்றை நம் நாட்டின் மீது வீசாதபடி தடுத்து விடுகின்றன.

இவ்வாறு இமயமலைத் தொடர்கள் இயற்கை அரணாக அமைந்ததோடாமல்லாமல், இந்திய அரசியில், பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியிலும், மாற்றங்களிலும் பெரும்பங்கு வகித்து வந்துள்ளது.

**2. சிந்து – கங்கை சமவெளிப் பகுதிகள்:**

சிந்து கங்கை சமவெளிப் பகுதிகள் பஞ்சாப் முதல் அஸ்ஸாம் வரை பரந்துள்ளது. இச்சமவெளி சுமார் 2500 கிலோ மீட்டர் நீளமும், 200 முதல் 300 கிலோ மீட்டர் அகலமும் கொண்டது. இச்சமவெளியின் மேற்கே உள்ள தார் பாலைவனத்தைத் தவிர மற்ற பகுதிகள் மிகுந்த செழிப்புடையதாகக் காணப்படுகின்றன. சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா ஆகிய நதிகள் பாயும் இப்பிரதேசம், செழிப்பான மண்ணும். வளமும், செல்வமும் மிக்கதாக விளங்குகிறது. இங்கு மக்கள் தொகையும் மக்கள் நெருக்கமும் அதிகம்

பெரும் நதிகளால் பயனடையும் அகன்ற சமசெவளிகள் ஒரு நாட்டின் அரசியல் மேன்மைக்கும், பொருளாதார, கலை, பண்பாட்டு உயர்வுக்கும் சிறந்த காரணங்களாக அமைகின்றன. வரலாற்றில் பெருமை மிக்க நிகழ்ச்சிகளை ஏற்படுத்தியிருக்கினறன.

உதாரணமாக, சிந்து நதிப் பாயும் பிரதேசத்தில் தான் பழமையும் பெருமையும் கொண்ட‘ஹரப்பாநாகரிகம்’ இருந்து வந்தது. சிந்து கங்கைச் சமவெளிப் பகுதிகளில் தான் **‘ஆரிய நாகரிகம்’** சிறந்து. விளங்கியது. பண்டையகால பண்பாடுகளின் உறைவிடமாகவும், கல்வி மையங்களாகவும் திகழ்ந்தது. இப்பிரதேசத்தில் தான் இந்திய வரலாற்றில் காணப்படும் பேரரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் காண முடிகிறது. முக்கியமாக, மகதப் பேரரசு தோன்றியது கங்கை நதிச் சமவெளிப் பிரதேசத்தில் தான் ஆகும். இந்திய வரலாற்றின்

போக்கையே மாற்றியமைத்த சிறப்பு மிக்க நகரங்களான டில்லி, வாரனாசி, பாடலிபுத்திரம், சாரனாத், அலகாபாத், காசி, கயா போன்ற நகரங்கள் சிந்து-கங்கை சமவெளிப் பகுதியிலேயே அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**தக்காணபீடபூமி**

தக்காண பீடபூமி முக்கோண வடிவமுள்ளது. இதன் வடக்கே **'விந்திய சாத்பூரா'** மலைத் தொடர்களும், மேற்கே 'மேற்குத் தொடர்ச்சி மலைகளும், கிழக்கே 'கிழக்கு தொடர்ச்சி மலைகளும்' அமைந்துள்ளன.மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள மிக உயரமான சிகரம் கேரயாவிலுள்ள ஆணைமுடி' யாகும் இதன் உளரம் 2692 மீ ஆகும்.

தக்காண பீடபூமி மிகப் பழமையானதும், மிகக் கடினமான பாறைகளாலும் ஆக்கப்பட்டது. இப்பீடபூமி மேற்கில் உயர்ந்தும், கிழக்கில் தாழ்ந்தும் காணப்படுகிறது. எனவே மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் கோதாவரி, கிரு'ணா, வடபண்ணை, காவிரி,மகாநதி, தாமிரபரணி ஆகிய நதிகள் கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்கக் கடலில் கலக்கின்றன. இப்பீடபூமியின் வடகிழக்குப் பகுதி சற்று உயர்ந்துள்ளது. எனவே இங்கு தோன்றும் நர்மதை, தபதி ஆகிய நதிகள் மேற்குமுகமாக ஓடி அரபிக்கடலில் கலக்கின்றன.

தக்காண பீடபூமி இந்திய வரலாற்றின் போக்கில் பெரும் பங்குவகிக்கிறது. புலவகைகளில் சிறப்பித்துள்ளது. விந்திய சாத்பூரா மலைத் தொடர்கள் தென்னிந்திய வரலாற்றை வட இந்தியாவிலிருந்து பிரித்துத் தனிப்பட்ட வரலாறாகச் செய்கின்றன. வட இந்தியப் படையெடுப்பாளர்கள் தென்னாட்டிற்குள் நுழைய விடாமல் தடுத்து தென்னாட்டு வரலாறும், பண்பாடும் தனித்தன்மையுடன் விளங்க அவை மிகவும் உதவின. மேலும் கிரு'ணாஈ கோதாவரி நதிகள் பாயும் பிரதேசத்தில் பாமினி, விஜய நகர அரசுகள் தோன்றின. மேலும் காவிரி, வைகை, தாமிரபரணி, வடபெண்ணை, தென்பெண்ணை, பாலாறு ஆகிய நதிகள் பாயும் பிரதேசங்களில் சேர,சோழ பாண்டிய மன்னர்கள் சிறப்பாக ஆண்டனர். இந்திய கலை வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற பல்லவர்கள் இப்பகுதிகளிலே சிறப்பாக ஆட்சி செய்தனர். திராவிடப் பண்பாட்டின் பிறப்பிடமும் இப்பிரதேசமே ஆகும்.

**4. கடற்கரைப் பிரதேசங்கள்:**

இந்கிய கடற்கரைப் பகுதியின் நீளம் 7516 கி.மீ ஆகும். என்றாலும் இயற்கை துறைமுகங்கள் மிகவும் குறைவு. இந்தியக் கடற்கரை பிளவுகளும் மிகவும் குறைவு. குடலாதிக்கத்திலும், கடற்கரைப் பாதுகாப்பிலுமட இந்திய அரசர்கள் எப்போதும் அதிக கவனம் செலுத்தி வரவில்லை.

தெற்கிலுள்ள திராவிடர்கள் கடல் வாணிபத்துறையில் சிறந்து விளங்கினார்கள் என்பதை வரலாறு மூலமாக அறிகிறோம். பண்டைக் கால தமிழகம் கடலாதிக்கம் பெற்றிருந்ததினால் தான் ஈழ நாட்டிலிருநது, கீழ்த்திசை நாடுகள் வரை தன் ஆதிக்கத்தை ஏற்படுத்த முடிந்தது. சேர,சோழ, பாண்டிய மன்னர்கள் கீழ்த்திசை நாடுகளில் குடியேற்றங்கள் அமைக்கவும், பணபாட்டுப பரிமாற்றம் செய்து கொள்ளவும் இக்கடற்கரைப் பகுதிகளே பெரிதும் உதவி செய்தன.

**இந்திய வரலாற்றில் புவியியலின் தாக்கம்:**

உலகிலுள்ள பிற நாடுகளைப் போலவே இந்திய வரலாற்றின் போக்கிலும் புவியியலின் தாக்கம் காணப்படுகிறது.

முதலாவதாக, இந்தியாவின் பெரும் பரப்பளவு பல காலமாக இந்தியாவின் அரசியல் ஒற்றுமையைப் பாதித்தது. இயற்கையாக பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இந்தியா தனித்தனியாகவே இயங்கியது. 1947-ல் சுதந்திரம் அடையும் வரை இந்தியா ஒலே தனிப்பட்ட அரசின் கீழ் அமைந்ததே இல்லை. அசோகர், அக்பர் போன்ற பேரரசர்கள் இந்திய அரசியல் ஒற்றுமைக்கு ஓரளவு முயற்சி செய்தனர். எனவே சுதந்திரமாக இயங்கிய பல நாடுகள் இந்திய வரலாற்றின் போக்கை பாதித்தது.

இரண்டாவதாக, வட இந்தியா வடமேற்குப் பிரதேசங்களுடன் எல்லைத் தொடர்பு கொண்டிருந்தால், அப்பகுதியீலுள்ள கைபர்,போலன், டோக்கி ஆகிய கணவாய் மார்க்கமாக பாரசீகர், கிரேக்கர், கூனர், துருக்கியர், மங்கோலியர் மற்றும் முகலாயர் நம் நாட்டின் மீது படையெடுத்தனர். இந்தியாவில் பேரரசுகளை நிறுவினர்.

மூன்றாவதாக, செழிப்பான சிந்து நதிச் சமவெளிப் பிரதேசத்தில் சிறந்த நாகரிகம் தோன்றியது. பேரிய நகரங்கள் தோன்றி பணபாடும், கலாச்சாரமும் பரவின.

நான்காவதாக, விந்திய சாத்பூரா மலைத்தொடாகள் இந்தியாவை இரு பகுதிகளாக பிரித்துவிட்டால், வட இந்தியாவுக்கும், தென்இந்தியாவிற்கு மிடையேநெருங்கிய அரசியல் பணபாட்டு தொடர்பு ஏற்படாமல் போயிற்று.

ஐந்தாவதாக, தென்னிந்திய புவீயயல் அமைப்பு, சுதந்திரமான அரசுகள் தோன்றி வளரக் காணரமாயின. தென்னிந்திய அரசர்கள் கடல் கடந்து அரசியல் வாணிகத் தொடர்பு கொண்டனர். கலாச்சாரத் தொடர்பும் ஏற்பட்டது. மேலும் புவியியல் அமைப்பே வட இந்தியக் கலாச்சாரம் தென்னிந்தியாவில் அதிக பாதிப்பை ஏற்படுத்தாமல் தடுத்தது.

இவ்வாறு இந்திய புவியியல் அமைப்பானது இந்திய வரலாற்றில் பெரும் மாற்றங்களையும், பாதிப்பையும் ஏற்படுத்தியது. எனவே வரலாறும் புவியியலும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையது. ஒரு நாட்டின் அரசியல் வரலாறு, பண்பாட்டு வளர்ச்சி, பொருளாதார மேன்மை ஆகியவை புவியியலின் அடிப்படையில் தான் அமைகின்றன என்பதில் ஐயமில்லை.

## பண்டைய வரலாறு பற்றிய ஆதாரங்கள்

இந்திய வரலாறு உலகில் ஓர் உன்னதமான இடத்தைப் பெற்றுள்ளது. இது ஆதாரங்கள் என்னும் அடித்தளத்தின் மேல் எழுப்பப்பட்ட வலுவான கட்டிடம். ஆதாரங்களின் தன்மையைப் பொறுத்தே கட்டிடத்தின் தன்மையும். பண்டைய இந்திய வரலாற்றைப் பற்றி அறிய உதவும் ஆதாரங்கள் கி.மு. 650 -ம் ஆண்டிலிருந்தே கிடைத்துள்ளன. ஆனால் அவைகள் முறைப்படுத்தப் படவில்லை. மேலும் அவற்றில் பல்வேறு காலம், மொழி பற்றிய கருத்து வேறுபாடுகளும் காணப்படுகின்றன. பொதுவாக வரலாற்று ஆதாரங்களை இரண்டு அடிப்படை பிரிவுகளாக பிரிக்கலாம். அவையாவன,

1. **தொல்பொருள் ஆதாரங்கள்**
2. **இலக்கிய ஆதாரங்கள்**

### தொல்பொருள் ஆதாரங்கள்

வரலாற்று ஆதாரங்களில் முதல்நிலை ஆதாரமாக தொல்பொருள் ஆதாரங்கள் விளங்குகின்றன. பண்டைய இந்திய வரலாற்றுக்குப் பெரிதும் பயன்படும் இத்துறை ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் முக்கியத்துவம் பெற்றது. இலக்கியங்களில்

குறிக்கப்படாத சிந்து சமவெளி நாகரிகத்தைப் பற்றிய முழு வரலாற்றையும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர். தென்னிந்தியாவில் ஆந்தியராவிலுள்ள கடப்பை, கர்நூல் என்ற இடங்களிலும் தமிழ்நாட்டில் அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர் மற்றும் காவிரிபூம்பட்டினம் ஆகிய இடங்கிளலும் அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றன. தொல்பொருள் ஆதாரங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. **கல்வெட்டுக்களும் பட்டயங்களும்**

**(INSCRIPTIONS AND COPPER PALTES)**

2. **நாணயங்கள் (NUMISMATICS)**
3. **நினைவுச் சின்னங்கள் (MONUMENTS)**

**1.கல்வெட்டுக்களும் பட்டயங்களும்**

பொதுவாகப் பாறைகளின் மீது எழுதப்பட்டுள்ள செய்திகளை கல்வெட்டுக்கள் எகலாம். காலத்தால் அழியாத எழுத்து வளர்ச்சியைப் பற்றி அறிய உதவும் இவைகள் மன்னர்களின் காலம், படையெடுப்புகள், தானம், நிர்வாகம், சமூக வாழ்க்கை போன்ற விவரங்களை அறிய உதவுகின்றன. மேலும் ஒரு மன்னரின் ஆட்சி எவ்வளவு தூரம் பரவியிருந்தது போன்ற செய்திகள் கல்வெட்டுக்கள் மூலம் தெரிய வருகின்றது.

கலிங்கநாட்டு மன்னன் காரவேலனின் **"ஹதிகும்பாகல்வெட்டு"**அவருடைய அரிய வெற்றிகளையும், கிரேக்கர்களின் வருகை பற்றியும் கூறுகின்றது. புத்த மதத்தைப் பரப்ப அசோகர் பல வகையான கல்வெட்டுக்களை நிறுவினர். இவை பண்டைய இந்திய வரலாற்றைப் பற்றி அறியப் பெரிதும் உதவுகின்றன. இதேபோல் "கிர்னார்" கல்வெட்டிலிருந்து யசோவர்மன் என்ற மன்னரின் பெருமையும், ஜுனாகத் என்னுமிடத்திலுள்ள முதலாம் ருத்ரமானின் கல்வெட்டிலிருந்து அம்மன்னரின் ஆட்சிமுறையும், அலகாபாத் தூண் கல்வெட்டிலிருந்து சமுத்திரகுப்தரின் வெற்றிகளும் நன்கு தெரிய வருகின்றன. அய்ஹோல் கல்வெட்டிலிருந்து இரண்டாம் புலிகேசியின் பெருமைகளும், முதலாம் பராந்தகச் சோழனின் உத்திர மேரூர் கல்வெட்டிலிருந்து சோழர்களின் உள்ளாட்சி முறை அமைப்பும் நமக்குத் தெரிய வருகின்றது.

தென்னாட்டில் பல இடங்களில் கிடைக்கப்பட்ட பட்டயங்களும் பண்டையச் சோழர்களின் வரலாற்றைப் பறை சாற்றுகின்றன. முதலாம் ராஜேந்திரச் சோழரின் திருவாலங்காட்டுச் செப்புப் பட்டயம் சோழர்களின் சிறப்பான ஆட்சியை நன்கு தெளிவுபடுத்துகிறது.

**நாணயங்கள்(NUMISMATICS)**

இந்திய வரலாற்றை அறிய உதவும் ஆதாரங்களில் நாணயங்களின் பங்கு மிகவும் சிறியது. இந்தியாவில் தங்கம்,வெள்ளி, தாமிரம் போன்றவற்றால் ஆன பல நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன. பாரசீகர்கள் நம் நர்டடிற்கு வந்த பின்னர்கதான் நாணயப் புழக்கம் நடைமுறைக்கு வந்ததாக கருதுகின்றனர். எழுத்துக்களும், உருவங்களும் பொறிக்கப்பட்ட வட்ட வடிவமான நாணயங்களை மக்கள் பயன்படுத்தினர். புண்டைக்காலத்தில் இந்தியாவை ஆட்சி செய்த மன்னர்களின் குறிப்பிட்ட காலவரை முறையை நாணயங்கள் துல்லியமாக உணர்த்துகின்றன. மேலும் அரசியல் ,பொருளாதாரம், சமயம் மற்றும் சமூக நிலைகளையும் இவை நன்கு விளக்குகின்றன. ரோமானிய கிரேக்க நாணயங்கள் இந்தியாவில்

கண்டுபிடிக்கப்பட்டதின் விளைவாக இருநாடுகளுக்கிடையே இருந்த வாணிபத் தொடர்பு தெரிய வருகிறது. மேலும் நாணயங்களில் காணப்படும் ஓவியங்கள் மூலம் அக்கால கலை மற்றும் கலாச்சாரம் பற்றிய நம்மால் அறிய முடிகிறது. குப்தர்கள் காலத்து நாணயங்களில் வீணையை மீட்டும் சமுத்திர குப்தரின் ஓவியம் இடம்பெற்றுள்ளது. இதன்மூலம் கலைத்துறையில் சமுத்திர குப்தருக்கு இருந்த ஈடுபாடு பற்றி அறியமுடிகிறது. ஆக்காலத்திய பொருளாதார நிலைபற்றியும் நம்மால் உணர முடிகிறது. இவ்வாறு நாணயங்கள் பல வரலாற்றுச் செய்திகளை கூறுகின்றது.

4. **நினைவுச் சின்னங்கள் (MONUMENTS)**

மொகஞ்சோதாரோ, ஹரப்பா லோத்தல் மற்றும் கலிபங்கன் போன்ற இடங்களில் நடைபெற்ற தொல்பொருள் ஆய்வுகள் மூலம் சிந்துசமவெளி நாகரீகம் பற்றிய உண்மையை உலகுக்கு உணர்த்தினர். தட்சசீலம், சாஞ்சி முதலிய இடங்களிலுள்ள பழங்கால கட்டிடங்கள், ஸ்தூபிகள் மௌரியர்களின் வரலாற்றையும், அஜந்தா, எல்லோரா ஓவியங்கள் குப்தர்களின் சிறப்பையும் காஞ்சிபுரம், மாமல்லபுரம் போன்ற இடங்களிலுள்ள சிற்பங்கள் பல்லவர்களின் வரலாற்றுச் சிறப்பையும் உணர்த்துகின்றன.

தமிழகத்தில் முதன் முதலில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்ட இடம் பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு ஆகும். 1945-ம் ஆண்டு **சர்மார்டிமர் வீலர்** என்பவரால் இப்பணி தொடங்கப்பட்டது. இங்கு சுடுமண்ணால் செய்யப்பட்ட அழகிய ஆண்,பெண் உருவங்கள், வண்ணம் தீட்டப்பட்ட பளபளப்பான பானைகள், தந்தப் பொருட்கள்,சுடுமண் காதணிகள், சங்கு வளையல்கள் போன்றவைகள் கண்டெக்கப்பட்டுள்ளன. இவை தமிழர்களின் பண்பாட்டுப் பெருமையை உணர்த்துகின்றன. மேலும் ரோமாபுரியுடன் இருந்துவந்த வாணிபத் தொடர்பும் இங்கு கிடைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் மூலம் தெரியவருகிறது. அடுத்து திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் மட்பாண்டங்கள், எலும்புக்கூடுகள், கல்மணிகள், சங்கு வளையல்கள், மண்டை ஓடுகள், வெண்கலப் பொருட்கள், முதுமக்கள் தாழிகள் போன்றவைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு சவக்குழியினுள் குதிரைலாடம், கத்தி,ஈட்டிமுனை, அரிவாள் போன்ற பொருட்கள் காணப்படுகின்றன. இதனால் இறந்தவர்கள் போர்வீரர்களாக இருக்கலாம் அல்லது வணிகர்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மட்பாண்டங்கள் சவ அடக்கத்தின்போது சடங்குகளுக்குப் பயன்பட்டு இருக்கலாம். ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழ்வாராச்சி மூலம் இப்பகுதியில் கடைகற்கால மக்கள் வாழ்ந்த வரலாற்று உண்மை தெரியவருகிறது.

இவை தவிர, தமிழ்நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் அத்திரம்பாக்கம்,குடியம், சானூர், குன்றத்தூர், அமிர்த மங்கலம், வசவ மாவட்டத்தில் செங்கமேட்டிலும், திருச்சி மாவட்டத்தில் திருக்காம்புலியூர், அலகரை. உறையூர், கரூர் போன்ற இடங்களிலும் தஞ்சைமாவட்டத்தில் காவிரிபூம்பட்டினத்திலும் அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இவ்விடங்களில் கிடைக்கப்பட்ட பல பழங்கால நினைவுச் சின்னங்கள் பண்டைய வரலாற்றை அறிய உதவும் சிறந்த ஆதாரமாக விளங்குகின்றன.

**இலக்கிய ஆதாரங்கள்**

இந்தியாவில் பல இலக்கிய நூல்கள் உள்ளன. ஏன்றாலும், அவற்றில் வரலாற்றுச் செய்திகள் குறைவாகவே உள்ளன. இலக்கிய ஆதாரத்தை இரண்டாக பிரிக்கலாம். அவையாவன,

1. **வரையப்பெறாத இலக்கிய காலம்**
2. **வரையப்பெற்ற இலக்கிய காலம்.**

இவற்றுள் வரையப்பெற்ற இலக்கிய காலத்தில் எழுதப்பட்ட இலக்கியங்கள் தான் பெரும்பாலும் தலைசிறந்த இலக்கிய ஆதாரமாக விளங்குகிறது. இவற்றை மேலும் இரண்டாக பிரிக்கலாம். அவை

1. **உள்நாட்டு இலக்கியங்கள். 2. வெளிநாட்டு இலக்கியங்கள்**

**உள்நாட்டு இலக்கியங்கள்**

உள்நாட்டு இலக்கியங்கள் வரலாற்றுச் சான்:றுகளில முக்கியமான இந்திய வரலாறு ஒரு ஆதாரமாக விளங்குகிறது. இவற்றை சமயச் சார்புடைய இலக்கியம் சமயசார்பற்ற இலக்கியம் என வகைப்படுத்தலாம்

**சமயச் சார்புடைய இலக்கியம்**

சமய சார்புடைய இலக்கியங்கட்க்கு காலவரன. முறை இல்லை. இவற்றில் இந்து, புத்த மற்றும் சமண இலக்கியங்கள் அடங்கும். ரிக்,யஜுர்,சாம அதர்வண வேதங்கள் மிகப் பழமையான வேத இலக்கியங்கள் ஆகும். மிகப் பழமையான ரிக் வேதம் ஆரியர்களின் நாகரீகம் பற்றிக் கூறுகிறது. வேதங்களில் பெரும்பாலும் துதிப்பாடல்களே அதிகமாக காணப்படுகிறது. பிராமணங்கள், வேதங்களுக்கு உரையாகத் திகழ்கின்றன. ஆரணியங்கள் மற்றும் உபநிடதங்கள் மதக் கோட்பாடுபளை விவரிக்கின்றன. வீரகாவியங்களான இராமயணமும், மகாபாரதமும் இந்து மற்றும் சமஸ்கிருத மொழிகளிலேயே உள்ளன. புத்த, சமண, சமய இலக்கியங்கள் அக்கால சமுதாய நிலையை படம்பிடித்துக் காட்டுகின்றன. இவை வரலாற்றுக்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

**சமயசார்பற்ற இலக்கியம்**

விசாகதத்தர் எழுதியமுத்திரராட்சசம் என்னும் நாடகம் சந்திரகுப்தமௌரியரைப் பற்றியும்,சாணக்கியரைப்பற்றியும் கூறுகின்றது. சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் என்னும் நூல் மௌரியர்களின் ஆட்சிமுறைப் பற்றியும்,கல்கணர் எழுதிய ராஜதரங்கிணிகா'மீரின் வரலாற்றையும் கூறுகின்றது. மேலும் பதஞ்சலிமுனிவரால் எழுதப்பட்டமகாபா'யம்,பாணபட்டர் எழுதிய ஹா'சரிதம் முதலியவை ஹா'ரைப் பற்றியும் பலவரலாறு உண்மைகளைக் கூறுகிறது.சங்ககாலத்து இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்கணக்குபோன்றவைகள் பண்டைய தமிழக வரலாற்றை உணர்த்துகிறன. சங்ககால மக்களின் அரசியல், பொருளாதாரம், சமூகநிலைகளை இவைகள் விரிவாக எடுத்துக்காட்டுகின்றன. பல்லவர்களின் காலம் பற்றி அறிய தேவாரப்பாடல்களும் மற்றும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும், மகேந்திரவர்மனின் பெருமையைப் பற்றி அறிய மத்தவிலாசபிரகசானமும் பெருமளவிற்கு துணைநிற்கின்றன.

### வெளிநாட்டு இலக்கியங்கள்

பல்வேறு நாட்டைச்சார்ந்த அறிஞர்களும், பெரியவர்களும் பலவேறு நோக்கங்களுக்காக பண்டைக் காலத்தில் இந்தியாவுக்கு வந்தனர். அவர்களில் சிலர் எழுதியுள்ள நூல்களும் பயணக் குறிப்புகளும் பலவரலாற்றுச் செய்திகளைத் தருகின்றன. சந்திரகுப்தரின் அரசவையில் செலுகஸ் நிகேடரின் தூதுவராக இருந்தமெகஸ்தனிஸ் என்பவர் எழுதிய “இண்டிகா” என்னும் நூல் அக்கால அரசியல் செய்திகளைக் கூறுகிறது மேலும் ஸ்ட்ராபோ, தலாமி, பெரிப்ளஸ் போன்ற வெளிநாட்டவரின் நூல்களும் பண்டைய இந்திய வரலாற்றைப் பறை சாற்றுகின்றன. பிளினி என்ற கிரேக்க நாட்டு வல்லுநர் கி.பி. முதலாம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்த செடி, கொடிகள், விலங்குகள் மற்றும் உலோகங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்த சீனப் புனித பயணிகளான யுவான சுவாங், பாகியான் மற்றும் இட்சிங் போன்றோரின் பயணக் குறிப்புகள் பல அரிய செய்திகளைத் தருகின்றன. கி.பி. 11-ம் நூற்றாண்டில் இந்தியாவின்மீது படையெடுத்த கஜினி முகமதுவின் காலத்தில் வாழ்ந்த அல்பெருனி என்பவர் பண்டைய இந்தியாவின் அறிவியல் முன்னேற்றங்களைப் பற்றி குறிப்பிடுகின்றனர். மார்க்கோ போலோவின் குறிப்புகள் பழங்காலத் தமிழக வரலாற்றை நன்கு உணர்த்துகின்றது. இலங்கை இலக்கியங்களான மகாவம்சமும், தீபவம்சமும் பண்டைய இந்திய-இலங்கை உறவை தெளிவுபடுத்துகிறது. இதைதவிர பிற்காலத்தில் இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியர்களின் கடிதங்களும், நாட்குறிப்புகளும், இயேசு சபையினரின் நூற்குறிப்புகளும் இந்திய வரலாற்றை அறிய உதவும் ஆதாரங்களாக விளங்குகின்றன.

## வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இந்தியா

மனித இனம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இம்மண்ணில் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கியது. ஆனால், அக்காலத்தில் இருந்தே வரலாறு துவங்கவில்லை. காடுகளில் கிடைத்த கிழங்குகள், கனிகள், காட்டுவிலங்குகளின் மாமிசம் போன்றவற்றை உண்டு வாழ்ந்தனர். இக்காலமே வரலாற்றுக்கு முந்திய காலம் எனப்படுகிறது. இக்காலத்தைப் பற்றித் தெளிவான செய்திகள் அதிகமாக கிட்டவில்லை. எனினும், உலோகங்களாலும் செய்யப்பட்ட கருவிகளைக் கொண்டு அக்காலத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன

1. **பழைய கற்காலம் (Paleolithic Age)**
2. **புதிய கற்காலம் (Neolithic Age)**
3. **பெருங் கற்காலம் அல்லது உலோகக்காலம்(The Metaal Age)**

### பழைய கற்காலம்(Paleolithic Age)

மிகப் பழமையான காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த மக்களை பழங்கற்கால மனிதர்கள், புதிய கற்கால மனிதர்கள் என இருவகைப்படுத்தலாம். புழங்கற்கால மக்கள் பயன்படுத்திய பல்வேறு வகையான கரடுமுரடான கற்கள் தென்னிந்தியாவில் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மரம் அல்லது விலங்குகளின் எலும்புகளை இக்கற்களுக்கு கைப்பிடியாகப் பயன்படுத்தினர். இவர்கள் பயன்படுத்திய கற்கள் குவார்ட்சைட் என்ற ஒருவகை கல்லால் ஆனது. தமிழகத்தில் செங்கற்பட்டு, வடஆற்காடு, தென்னாற்காடு போன்ற மாவட்டங்களில் பழங் கற்கால கருவிகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்திரம்பாக்கம்

என்னுமிடத்தில் மட்டும் ஆயிரக்கணக்கான கற்கருவிகள் கிடைத்துள்ளன. எனவே இவ்விடம் கருவி உற்பத்திக் கூடமாக இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. இங்கு இன்றும் பூமியின் மேற்பரப்பில் பழங்கற்கால கருவிகள் பல சிதறிக் கிடப்பதைக் காணலாம். குஜராத், வங்காளம், பீகார், மத்திய பிரதேசம், ஒரிசா போன்ற மாநிலங்களிலும் பழங்க கற்காலக் கருவிகள் பல காணப்படுகிறது.

**வாழ்க்கைமுறை**

பழங்கற்கால மனிதர்கள் காட்டு மிராண்டிகள் போல் வாழ்க்கை நடத்தினர். குகைகளிலும்,ஆறுகள், ஏரிகள் போன்றவற்றின் கரைகளிலும் வாழ்ந்தனர். காட்டு விலங்குகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், அவற்றை வேட்டையாடவும் இக்கற்கருவிகளைப் பயன்படுத்தினர். கோடரி,ஈட்டிகள், கத்திகள், எறிகற்கள், சுத்திகள் போன்றவை அவர்கள் பயன்படுத்திய முக்கியமான கற்கருவிகள் ஆகும். என்றாலும், கைக் கோடரிகளைத் தான் அவர்கள் மிக அதிகமாகப் பயன்படுத்தினார்கள். கர்நூல் மாவட்டத்தில் உள்ள சில குகைகளில் மரத்தாலான கருவிகளும் கிடைத்துள்ளன. மேலும் அக்கால மக்களிடையே “நரபலி” இடும் பழக்கம் இருந்தது என்பதற்கான ஆராரங்களும் கிடைத்துள்ளன. மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள குகைகளில் நடனமாடும் மனிதர்களின் ஓவியங்கள் காணப்படுகின்றன. இக்கால மக்கள் நீக்ரிடோ இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் குள்ளமான உருவமும், தட்டையான மூக்கும், கருமையான நிறமும், அடர்த்தியான ரோமமும் உடையவர்கள். இக்கால மக்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றி தெளிவாகக் கூறமுடியாவிட்டாலும், பழங்கற்காலத்தை முதல் கற்காலம், இடைகற்காலம், கடைகற்காலம் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவற்றுள் கடை கற்கால மனிதர்கள் வாழ்ந்த காலம் கி.மு. 4000 என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழகத்தில் பழங்கற்கால மனிதர்கள் சுமார் 35,000 ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

**புதிய கற்காலம்(Neolithic Age)**

புதிய கற்காலத்தின் தோற்றம் மனித குலப் பண்பாட்டின் தொடக்கம் எனலாம். இக்காலத்தில்தான் மனிதன் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்து தன் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளை நிரந்தரமாகப் பெற வேண்டும் என எண்ணினான். புதிய கற்காலச் சின்னங்கள் தமிழகத்தில் திருநெல்வேலி, சேலம் மாவட்டங்களிலும், வட இந்தியாவில் குஜராத், சிந்து போன்ற பகுதிகளிலும் கிடைத்துள்ளன. இவைத் தவில பெல்லாரி, கடப்பா, அனந்தப்பூர், மலபார் ஆகிய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் இக்காலக் கட்டத்தில் மனிதன் வேளாண்மை, விலங்குகளை பழக்கி வளர்த்தல், பானை செய்தல், களிமண் சுவர்களால் வீடுகள் கட்டுதல் போன்ற சாதனைகளை முதன் முதலில் செய்தான். இக்கால கற்கருவிகள் வழவழப்பானவை, எளிதில் எடுத்துச் செல்லக் கூடியவை. தொடக்கத்தில் **“அகேட்”“சாசுப்பர்”**ஆகிய கல்வகைகளைக் கொண்டு கருவிகளைச் செய்தனர். பின்னர் காலப்போக்கில் மரம் மற்றும் எலும்புகளைக் கொண்டும் கூரிய கருவிகளைச் செய்தனர். இக்கால மக்கள் முதலில் சாம்பல் நிறப் பானைகளையும், பிறகு சிவப்பு நிறப் பானைகளையும் பயன்படுத்தினர். இவர்கள் அம்மி, குளவி, மண்வெட்டி, பூச்சட்டி, டம்ளர்கள் போன்றவைகளைப் பயன்படுத்தினார்கள்.

**வாழ்க்கைமுறை**

புதிய கற்கால மனிதர்கள் ‘கிரானைட்’ பாறைகளின் கீழ் வாழ்ந்தனர். அவர்கள் கனிகள், காய்கறிகள், வேர்கள், விதைகள், மீன், பால், மாமிசம் போன்றவற்றை உண்டனர். மரப்பட்டைபளையும், மிருகங்களின் தோலையும் ஆடையாகப் பயன்படுத்தினர். மீன்பிடித்தல், வேட்டையாடுதல், மண்பாண்டம் செய்தல் போன்ற தொழில்களைச் செய்தனர். நாளடைவில் மிருகங்களைப் பழக்கி அவற்றின் பயனறிந்து வளர்க்கத் தொடங்கினர். புதிய கற்காலத்தின் இறுதியில் வேளாண்மைத் தொழிலைக் கற்று அதனை மேற்கொண்டனர். இவர்கள் முன்னோர்களின் ஆவிகளை வணங்கினர். இறந்தவர்களை தாழிகளில் வைத்து அடக்கம் செய்தனர். வழிபாட்டின்போது மிருகங்களை பலியிடுவதை வழக்கமாகக் கொண்டியயருந்தனர். மேலும் இக்காலத்தைப் பற்றிய தெளிவான சான்றுகள் அதிகமாக கிடைக்கவில்லை.

**பெருங்கற்காலம் அல்லது உலோகக் காலம்**

மனித குலப் பண்பாட்டின் வளர்ச்சியில் உலோகக் காலம் அல்லது பெருங்கற்காலம் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. புதிய கற்காலத்தைத் தொடர்ந்து உலோகக் காலம் தொடங்கியது. செம்பின் பயனை அறிந்து மக்கள் அதனைப் பயன்படுத்த தொடங்கினர் என்றாலும், கற்கருவிகளின் உபயோகத்தை உடனடியாக விட்டுவிடவில்லை. தாமிரம் அல்லது செம்பை இம்மக்கள் பயன்படுத்தியதால் இதனை “செம்பு கற்காலம்”(Chalcolithic Age)எனவும் கூறுவர். பின்னர், கி.மு. 800-க்கும் 150 – க்கும் இடையே இரும்பின் பயன் மக்களுக்கு அறிய வந்தது. இதனை“இரும்புக் காலம்” (Iron Age) என அழைக்கின்றனர்.

உலோக காலத்தில் இறந்தவர்களை மண்ணால் செய்யப்பட்ட “முதுமக்கள் தாழியில்” வைத்து அடக்கம் செய்தனர். மேலும் அவர்களின் நினைவாக பல வகையான கற்சின்னங்கள் அமைக்கப்பட்டன. இதனை கல்திட்டை. கல்பதுக்கை, குத்துக்கல், தொப்பிக்கல், குடைக்கல் என்று கூறுவர். இக்கால மக்கள் வேளாண்மைத் தொழிலை நன்கு அறிந்திருந்தனர். நிலங்களை உழுவதற்கு கலப்கைகள் உலோகத்தால் செய்யப்பட்டன. மக்கள் பல வகையான மட்பாண்டங்களை பயன்படுத்தினர். இவைத் தவிர இரும்பு, செம்பு. வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களால் ஆன பொருள்களையும் செய்தனர். கோடரி,ஈட்டி, அரிவாள், மண்வெட்டி, கத்தி, அம்பு, உளி போன்ற கருவிகளையும் இரும்பு, செம்பு ஆகிய உலோகங்களில் செய்தனர். தமிழகத்தில் ஆதிச்சநல்லூரில் கண்டுபிடிக்கப்பட்ட தாழிகளும், சங்கு மற்றும் கண்ணாடி வளையல்களும் உலோக காலத்தைச் சார்ந்தவையே என்பதில் ஐயமில்லை.

இக்காலத்தில் நாகரீகத்தில் வளர்ச்சி ஏற்பட்டது. மக்கள் பல வகையான வீடுகளைக் கட்டினார்கள். இறை வழிபாடு முக்கியத்துவம் பெற்றது. சடங்குகள் நடத்தப்பட்டன. மரக்கலங்களைக் கொண்டு கடற்பயணம் மேற்கொண்டனர். வேளாண்மைத் தவிர வாணிபமும் வளர்ச்சியடையத் தொடங்கியது. மக்களின் உணவு முறைகளிலும், ஆடை அணிகலன்களிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. பருத்தி, கம்பளி ஆடைகள் நெய்யப்பட்டன. நெசவுத் தொழில் ஒரு முக்கியமான தொழிலாக பிரபலமடைந்தது. இவ்வாறு வரலாற்றுக்கு முந்திய காலத்தில் மனிதன் வாழ்ந்தமைக்கான பல சான்றுகள் கிடைத்தாலும் அதன் கால அளவை நிர்ணயிப்பது கடினமாகவே உள்ளது. எவ்வாறு இருந்தாலும், வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்தே

மனித குலத்தின் பண்பாடும், நாகரீகமும் வளர்ச்சியடையத் தொடங்கியது என்ற கருத்தை அனைவரும் கட்டாயம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

## ஹரப்பா நாகரிகம்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை வரலாற்ற ஆய்வாளர்கள் ஆரிய நாகரிகமே மிகப் பழமையான சிறந்த நாகரிகம் என கருதி வந்தனர். ஆனால் 1921 –ம் ஆண்டு சர் ஜாண்மார்'ல் என்பவர் தொல்பொருள் ஆய்வு மூலம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு செழிப்பான நாகரீகத்தை உலகிற்கு உணர்த்தினார். சுா. அலெக்சாண்டர் கன்னிங்காம் என்ற தொல்பொருள் ஆய்வு நிபுணர் ஹரப்பாவில் ஓவிய எழுத்துக்களைக் கொண்ட முத்திரைகளை பூமியின் மேற்பரப்பிலேயே கண்டுபிடித்தார். பின்னர் ஜுபானாடு என்பவர் சிந்துப் பிரதேசத்தில் உள்ள லர்கானா மாவட்டத்தில் புதைந்துகிடந்த மொகஞ்சோதாரோ என்ற நகரத்தை கண்டுபிடித்தார். இந்த பழமையான நாகரீகத்தை கண்டுபிடிக்க உதவிய பெருமை சர்ஜாண் மார்'ல், எம.எஸ். வாட்ஸ், ஆர்.டி. பானர்ஜி, சர். மார்டிமர் வீலர் போன்றவர்களையேச் சாரும்.

ஹரப்பா நாகரீகம் சிந்து சமவெளி நாகரீகம் எனவும் அழைக்கப்படுகிறது. சிந்து சமவெளி பகுதியில் பல இடங்களில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம் பல புதையுண்ட நகரங்கள் கண்டுபிடிபக்கப்பட்டன. இவற்றுள் ஹரப்பா, மொகஞ்சோதாரோ, காலிபங்கன், லோத்தல், சான்குதாரோ, லோகும்ஜோதாரோ, ரங்பூர், ரூபார் போன்ற இடங்கள் முக்கியமானதாகும். இந்த நாகரீகத்தின் காலம் பற்றி பல்வேறு கருத்து வேறுபாடுகள் வரலாற்று ஆய்வாளர்களிடையே நிலவிவருகிறது. சர் ஜாண் மார்ஷலின் கருத்துப்படி இந்நாகரிகம் கி.மு. 4000 முதல் 2500 வரை இடைப்பட்ட காலத்தில் செழித்து வளர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும் டாக்டர் ஆர்.கே. முகர்ஜி என்பார் கி.மு. 3250 –க்கும் 2750 –க்கும் இடைப்பட்ட காலத்தை ஹரப்பா நாகரீகத்தின் காலமாக கருதுகின்றார். ஆகனால் இதுவே இன்று எல்லா வரலாற்று அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய காலமாக உள்ளது.

மொகஞ்சோதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் கிடைத்த புதைபொருள்கள் இந்த வரலாற்றுப் பெருமைவாய்ந்த நாகரீகத்தைப்பற்றி அறிய உதவும் முக்கிய ஆதாரமாக உள்ளது. மொகஞ்சோதாராவையும், ஹரப்பாவையும் ஒப்பிடுகையில் மொகஞ்சோதாரோ பெரிய நகரமாக இருந்தாலும் பரப்பளவில் ஹரப்பாவைவிட சிறியதாகவே இருந்தது. மொகஞ்சோதாரோவில் பல்வேறு இன மக்கள் வாழ்ந்ததாகவும் சொல்லப்படுகிறது. வடமேற்கு இந்தியப் பகுதியில் லோதல், அம்ரா போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற கறுப்பு – சிவப்பு நிற மட்பாண்டங்கள் தொல்பொருள் ஆய்வாளர்களிடையே பல வினாக்களை எழுப்புகின்றன. ஏனென்றால் இத்தகைய மட்பாண்டங்கள் தென்னிந்தியாவில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் பல இடங்களில் கிடைத்துள்ளன. எனவே இவ்விரு பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள் ஒரே இனத்தைச் சார்ந்தவர்களா? என்பது ஆராய்ச்சிக்குரியதாகும்.

மொகஞ்சோதாரோ தலைநகரமாகவும் செயல்பட்டிருக்கலாம் என பலர் கருதுகின்றனர். ஏனென்றால் இங்கு பல பெரிய கட்டிடங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஆவை அரசு அலுவலகக் கட்டிடங்களாக இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

மேலும் ஹரப்பா நகரைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் உள்ளதை தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

**நாகரீகத்தின் தனிச் சிறப்புகள்**

**சிறந்த நகரமைப்பு**

இந்த நாகரிகம் ஒரு தலைசிறந்த நகர நாகரீகம் ஆகும். ஹரப்பா,மொகஞ்சோதாரோ ஆகிய இரு நகரங்களும் இன்றைய இங்கிலாந்திலுள்ள லங்காஷயர், மான்செஸ்டர் போன்ற நகரங்களின் அமைப்பை உடையதாய் இருந்ததாக சர் ஜாண் மார்ஷல் கூறுகின்றார். நவீன கால நகரமைப்புத் திட்டம் போன்று ஒரு நன்கு திட்டமிட்ட கட்டுமானத்தின் அடிப்படையில் இந்நகரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மக்களின் வசதிக்கும் சுகாதாரத்திற்கும் ஏற்றபடி வீடுகளும், தெருக்களும் அமைக்கப்பட்டிருந்தது இந்நாகரிகத்தின் தனிச் சிறப்பாகும். நகரம், சதுரம் அல்லது செவ்வக வடிவில் இருந்தது. எல்லாத் தெருக்களையும் சிறுசிறு சந்துகள் இணைத்தன. தெருக்கள் கிழக்கு மேற்காகவும், வடக்கு தெற்காகவும் அமைந்திருந்தன. வீடுகள் அனைத்தும் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன. பல சிறிய மற்றும் பெரிய வீடுகளும் விரிவான வடிகால் வசதியுடன் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் குளியலறை இருந்தது. நகரின் மத்தியில் அமைந்திருந்த பொதுக் குளியல் குளம் நல்ல நீர் வருவதற்கும் அசுத்த நீர் வெளியேறுவதற்கும் ஏற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்தது. நுகரத் தெருக்களில் தெருவிளக்குகள் இருந்ததற்கான ஆதாரங்களும் கிடைத்துள்ளன. மேலும் வீடுகளில் கிணறுகளும் இருந்தன. ஓவ்வொரு வீட்டிலும் சாக்கடை குழாய்கள் வடிகட்டிகளுடன் அமைக்கப்பட்டு அவை பெரிய பாதாள சாக்கடையுடன் இணைக்கப்பட்டிருகந்தன. கழிவு நீரும், குப்பை கூழங்களும் நகருக்கு வெளியே கொண்டுச் செல்லப்பட்டன. நகரத்தின் சுகாதாரம் நகராட்சி மன்றத்தாரின் உதவியுடன் பேணப்பட்டது. மொகஞ்சோதாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட பொதுக் குளியல் குளம் சுமார் 55 மீட்டர் நீளமும், 33 மீட்டர் அகலமும், 12மீட்டர் ஆழமும் உள்ளது. அகலமான படிக்கட்டுகளும், உடைமாற்றிக் கொள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்குத் தனித்தனி அறைகளும் இருந்தன. மேலும் ஹரப்பாவில் 42 மீட்டர் நீளமும் 40 மீட்டர் அகலமும் கொண்ட தானியக் பெருங்களஞ்சியம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மக்களிடமிருந்து வரியாகப் பெற்ற தானியங்களை இதில் சேமித்து வைத்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

**பொருளாதாரம்**

இந்த நாகரீகம் சிறப்புடன் விளங்கியதற்கு அதன் பொருளாதார முன்னேற்றமே முக்கிய காரணமாகும். சிந்து சமவெளி மக்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிபத்தில் தலைசிறந்து விளங்கினர், அங்கு கிடைத்த முத்திரை ஒன்றில் பாய்மரம் இல்லாத கப்பல் ஒன்றின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அவர்கள் கடல்கடந்து வாணிபம் செய்து வந்தது நன்கு தெளிவாகிறது. மேலும் லோத்தல், வணிர்கள் அதிகம் வாழ்ந்த பகுதியாக இருந்துள்ளது. அவர்கள் பல்வேறு வகையான அளவை முறைகளையும் நன்கு அறிந்திருந்தனர். மொகஞ்சோதாரோ ஒரு சிறந்த தொழில் மையமாக விளங்கியது. நெசவுத்தொழில், விவசாயம்,சாயம் காய்ச்சுதல், மண்பாண்டம் செய்தல் போன்ற தொழில்களை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். மாட்டு

வண்டிகள், உள்நாட்டு வாணிபத்தில் பயன்படுத்தப்பட்டன. ஆனால் அவர்கள் குதிரையைப் பற்றி அறியவில்லை. ஏற்றுமதியும் இறக்குமதியும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

**சமூக வாழ்க்கை**

மக்கள் நதிக்கரைகளில் வாழ்ந்ததால் அவர்கள் வேளாண்மையில் சிறந்து விளங்கினர். கோதுமை,நெல், பார்லி போன்றவற்றைப் பயிர் செய்தனர். சிந்து சமவெளிமக்கள் சைவம் மற்றும் அசைவ உணவு வகைகளை உண்டனர். பன்றி இறைச்சி, மீன், ஆடு, கோழி, முட்டை போன்றவை அவர்களின் முக்கிய அசைவ உணவுகளாகும். காய்களையும், கனிகளையும் அவர்கள் விரும்பி உண்டனர். தச்சர், தோல்வினைஞர், கட்டிடக்கலைஞர் படகு செய்பவர் போன்ற உலோகங்களைப் பயன்படுத்தினர். ஆனால் இரும்பைப் பற்றியோ அதன் பயனையோ அவர்கள் அறிந்திருக்கவில்லை. சிந்து சமவெளிமக்கள் பருத்தி மற்றும் கம்பளி ஆடைகளை அணிந்தனர். மாடுகள், எருமை, பன்றி, யானை ஒட்டகம் முதலிய விலங்குகளை வளர்த்தனர். ஹரப்பாவில் கிடைக்கப்பட்ட முத்திரைகளில் சிலவற்றில் நாயின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே நாயையும் அவர்கள் செல்லப் பிராணியாக வளர்த்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. காண்டாமிருகம், புலி, குரங்கு, முயல், மான் போன்ற காட்டு விலங்குகளையும் பற்றி நன்கு அறிந்திருந்தனர்.

இங்கு வாழ்ந்த மக்களின் மறறொரு முக்கியத் தொழில் போர்க்கருவிகள் செய்தல் ஆகும். கோடாரிகள், வில், அம்புகள்,ஈட்டிகள் போன்றவை தாமிரத்தாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்டன. ஈட்டிமுனைகள் மிகவும் கூர்மையாகவும் அகலமாகவும் காணப்பட்டன.

**கலையும் கலாச்சாரமும்**

இப்பகுதிகளில் கிடைத்த பல பொருட்கள் அவர்களின் கலைத் திறனையும் கலாச்சார வாழ்வினையும் தெளிவுபடுத்துகிறது. ஆண்,பெண் இருபாலரும் கலைத்துறையில் சிறந்து விளங்கினர். மக்கள் பலவிதமான ஆடைகளை நெய்து அணிந்தனர். அவை களிமண், தங்கம், வெள்ளி, தாமிரம், தந்தம் மற்றும் பித்தளையால் செய்யப்பட்டன. காது வளைஇ மோதிரம், வங்கி, கழுத்தணி, மூக்குத்தி போன்றவைகளை விரும்பி அணிந்தனர். கண்களுக்கு மையும் உதட்டுக்கு சிவப்பு சாயமும் பூசிக் கொண்டனர். பலவித சிகை அலங்காரங்களைக் கையாண்டனர். வெண்கலக் கண்ணாடிகளையும், யானைத் தந்த சீப்புகளையும் பயன்படுத்தினர்.

**பொழுதுபோக்குகள்**

பல்வேறு வகையான பொழுதுபோக்கை மக்கள் கடைபிடித்தனர். பகடை விளையாட்டு அவர்களிடையே பிரபலமானதாகும். இவாகள் பயன்படுத்திய காய்களும், கட்டங்களும் பல இடங்களில் கிடைத்துள்ளன. இசை, நடனம், காளைச் சண்டை, கோழிச் சண்டை, வேட்டையாடுதல் போன்றவை இவர்களின் முக்கிய பொழுதுபோக்குகளாகும். இவை தவிர சித்திரங்கள் வரைந்து அதை அழகுபடுத்தும் கலையையும் நன்கு கற்றிருந்தனர். மூலிகைகளைப் பயன்படுத்தி பலவிதமான நாட்டு மருந்துகளையும் தயாரித்தனர். திருவிழா நிகழ்ச்சிகள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன. முக்கிய நிகழ்ச்சிகளின் போது நடனமங்கைகள் நடனமாடிஅனைவரையும் மகிழ்வித்தனர். ஹரப்பாவில் கிடைத்த கற்சிலைகள் சிறந்த கலைநயம் உடையதாய் உள்ளது. மேலும் வெண்கலத்தால் செய்யப்பட்ட நடனமாதுவின் சிலையும், தாடியுடன் கூடிய யோகியின் சிலையும் அவர்களின் உடலை எரிக்கும் பழக்கமும் பின்னர் அதை தாழிகளில் வைத்துப் புதைக்கும் பழக்கமும்

மக்களிடையேக் காணப்பட்டது. தாழிகளின் மேல் மீன், ஆமை, மயில்கள், இலை, கொடி போன்ற ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

**மொழி**

மக்களின் மொழிமற்றும் எழுத்துவடிவம் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. சிலா் இதனை தமிழ்மொழி எனவும் மேலும் சிலா் இதனை சுமேரியமொழி எனவும் கூறுகின்றனா். புலவட இந்தியஆராய்ச்சியாளா்கள் இதனை சமஸ்கிருதம் எனவும் கூறுகின்றனா். ஹீராஸ் என்ற பாதிரியாா் இதனை திராவிடமொழி எனகுறிப்பிட்டுள்ளாா். இதில் பல குறியீடுகள் உள்ளதால் இதனை சித்திரமுறை எழுத்துக்கள் எனலாம். ஐராவதம் மகாதேவன் மற்றும் சில ரஷ்ய அறிஞா்கள் இந்த எழுத்துக்களை திராவிடமொழி எழுத்துக்களுடன் ஒப்பிடுகின்றனா். இப்பகுதியில் சுமாா் 600 –க்கும் மேற்பட்ட சித்திர எழுத்துக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை இடமிருந்து வலமாக ஒருவரியிலும் பின் வலமிருந்து இடமாக மற்றவரியிலும் எழுதப்பட்டுள்ளன. இவை சுமேரிய, எகிப்து மற்றும் ஹிட்டைட் எழுத்துக்களுடன் தொடா்புடையவை எனக் கூறப்படுகிறது.

**சமயவாழ்க்கை**

மக்கள் மிகுந்தசமயநம்பிக்கைகொண்டவா்கள் எனினும் அகழ்வாரய்ச்சியின்போது எந்தவிதமான கோயில்கள் அல்லது பெரியஆலயங்களோ இருந்தற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. எனவேஅவா்களின் மதம் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது. இங்கு வாழ்ந்த மக்கள் பெண் தெய்வங்களுக்கே முக்கியதுவம் கொடுத்தனா். அங்கு கண்டெடுக்கப்பட்ட முத்திரை ஒன்றில் தவக்கோலத்தில் ஒரு உருவமும் அதன் பக்கங்களில் யானை, புலி, காண்டாமிருகம், காளை போன்ற விலங்குகளின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. மூன்று தலைகளைக் கொண்ட ஒரு தெய்வத்தை அவா்கள் வணங்கினா். சிவலிங்கத்தையும், பசுபதியையும் வழிபட்டதற்கான பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன. எனவே அவா்கள் சைவசமயத்தில் மிகுந்த ஈடுபாடு உள்ளவாகளாக இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சிந்துசமவெளிமக்கள் இயற்கையை வழிபடுவதிலும் அதிக நம்பிக்கைக் கொண்டிருந்தனா். அரசமரத்தையும், வேலமரத்தையும் புனிதமாகக் கருதினா். பலவகையான மிருகங்களை கடவுளின் வாகனங்கள் என நினைத்து அதனையும் வணங்கினா். இவை தவிர, நெருப்பு, சூரியன், பாம்பு போன்றவைகளையும் வணங்கினா். பிற்காலத்தில் பாம்புக்கு கோயில்கட்டி வழிபடும் வழக்கம் ஹரப்பா மக்களிடமிருந்து பரவியதாக சிலா் கருதுகின்றனா். அவா்கள் பாா்வதியையும் முக்கிய தெய்வமாக வழிபட்டனா். எனவே இந்துச் சமயத்திற்கும் சிந்துசமவெளி மக்களின் சமயக் கோட்பாடுகளுக்கும் நெருங்கிய தொடா்பு இருப்பதை உணரமுடிகிறது.

**நாகரீகத்தின் மறைவு**

ஹரப்பாநாகரீகத்தின் மறைவு அல்லது அழிவு பற்றி பல்வேறு கருத்துக்கள் உள்ளன. என்றாலும், ஓா் உயரிய உன்னதமான நாகரீகம் காலப்போக்கில் முழுவதுமாக அழிவுற்றது அனைவருக்கும் வியப்பையேத் தருகிறது.

1. சிந்துவெளிநகரங்கள் பெரும்பாலும் ஆற்றின் கரை ஓரங்களிலேயே அமைந்திருந்தன. எனவே சிந்துநதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அது தன் போக்கை மாற்றியதின் விளைவாக அந்தநகரங்கள் அழிந்திருக்கலாம். ஏனென்றால் அகழ்வாராய்ச்சியின் போது

எங்கும் மணல் மேடுகளே காணப்பட்டன. மேலும் கண்டுபிடிக்கப்பட்ட நகரங்களும் மணல் குன்றுகளுக்கு அடியிலேயே இருந்தது..

2. அகழ்வாராய்ச்சியின் போது பல எலும்புக் கூடுகள் மொகஞ்சோதாரோ பகுதியல் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றை விஞ்ஞான முறைப்படி ஆய்வு செய்த அறிஞர்கள் அவைகளின் மேல் காணப்படும் சிதைவுகள், போர்க்காயங்கள் எனக்கூறுகின்றனர். எனவே ஏதாவது அந்நியர்களின் படையெடுப்பில் இந்நாகரீகம் முற்றிலும் அழிந்திருக்க வாய்ப்புள்ளது.
3. நாளடைவில் பருவமழை பொய்த்து கடுமையான பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு அதன் மூலம் மக்கள் அப்பகுதிகளை விட்டு இடம்பெயர்ந்து சென்றிருக்கலாம் எனவும் சிலர் கூறுகின்றனர்.
4. பூகம்பம், புயல் அல்லது ஏதாவது தொற்றுநோய்கள் போன்ற இயற்கை சீற்றங்களினால் இந்நாகரீகம் அழிந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.
5. இன்னும் பலவரலாறு ஆய்வாளர்கள் ஆசிரியர்களின் வருகையால் தான் சிந்துசமவெளிநாகரீகம் மறைந்தது என வாதிடுகின்றனர்.

முடிவாக ஹரப்பர் நாகரீகமும் சிலவழிகளில் ஒற்றுமையாக இருந்தாலும் பலவகைகளில் வேறுபடுகின்றன. இன்னும் சில அம்சங்களில் சிந்துசமவெளி மக்கள் திராவிட நாகரீகத்தை ஒத்திருக்கின்றன. எனவே சில வரலாற்றுவலலுநர்கள் சிந்துசமவெளியில் வாழ்ந்த மக்கள் திராவிடர்களே எனக் கூறுகின்றனர்.

## ஆரியர்களின் பூர்வீகம்

## வேத காலம்

ஹரப்பா நாகரீகத்தின் மறைவுக்குப் பின் இந்தியாவில் மேலும் ஒரு சிறந்த நாகரீகத்தை நிலைநாட்டியவர்கள் ஆரியர்களே ஆவார்கள். இந்த ஆரியர்களின் பூர்வீகம் பற்றி பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. ஆரியர்களின் வருகைக்குப் பின்னரே இந்தியாவில் ஒரு முறையான லரலாற்றுக் காலகட்டம் தொடங்கியது என்றால் மிகையாகாது. ஆரியர்களின் காலத்தில்தான் வேதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவைகள் சிறப்புடன் செயல்பட்டன. ரிக்,யஜீா, சாமம், அதா்வணம் என நான்கு வகை வேதங்கள் தோன்றின. இதனையே வேதகாலம் எனக் கூறுகின்றனர். இது முந்திய வேதகாலம் மற்றும் பிந்திய வேதகாலம் என இருவகைப்படும்.

**முந்திய வேதகாலம்**

முந்திய வேதகாலம் என்பது கி.மு. 2000 முதல் கி.மு. 1000 வரை உள்ள காலத்தில் இருந்திருக்கலாம். இதனையே ரிக. வேதகாலம் எனவும் கூறுகின்றனர். ஏனென்றால் வேதங்களுள் மிகப் பழமையானது. ரிக் வேதகாலமாகும். பாலகங்காதார திலகர், ரிக் வேதம் கி.மு. 4000 –ல் இயற்றப்பட்டதாகக் கூறுகிறார். பேராசிரியர் மாக்ஸ்மில்லர் என்பவர் வேதபாடல்கள் கி.மு. 1200-ல் இயற்றப்பட்டதாகக் கூறுகிறார். எனினும் ரிக் வேதத்தின் உண்மையானக் காலத்தைப் பற்றி இன்னும் சரியான முடிவு தெரியவில்லை.

**வேதகால இலக்கியம்**

வேதகால இலக்கியங்கள் பலவகைப்படும் ‘வேதா’ என்றால் ‘‘அறிவு’’ என்பது பொருள். ரிக்,யஜுர், சாமம், அதா்வணம் என நான்கு வகையான வேதங்கள் இருந்தன.

இவற்றுள் ரிக் வேோம் மிகவும் பழமையானதாகும். இதில் 10 மணடலங்களும் 1017 பாடல்களும் உள்ளன. இப்பாடல்கள் இந்திரன், வருணன், அக்னி போன்ற கடவுள்களைப் பற்றிப் பாடப்பட்டதாகும். அடுத்து யஜுா் வேதம் வேதங்களில் இரண்டாவதாகக் கருதப்படுகிறது. இதில் 40 அத்தியாயங்களும்,2000 மந்திரங்களும் உள்ளன. யாகங்கள் செய்யும் முறைகளைப்பற்றியும்,புரோகிதா்களின் செயல்பாடுகள் பற்றியும் இதில்தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இது முழுவதும் செய்யுளும், உரைநடையமாக உள்ளது. இது வேதகால ஆரியா்களின் சமூகம் மற்றும் சமய வாழ்க்கையை விளக்குகிறது.

அடுத்து மூன்றாவது சாம வேதகாலம் இசை இனிமைக்காக இயற்றப்பட்டது. இதில் 1540 பாடல்கள் உள்ளன. இதன் பெரும்பகுதி ரிக் வேதத்திலிருந்து தொகுக்கப்பட்டதாகும். இப்பாடல்கள் பெரும்பாலும் யாகங்கள் நடைபெறும் போது பாடப்பட்டன. இறுதியாக அதா்வண வேதம் முக்கியமானதாககட கருதப்படுகிறது. 20 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 731 பாடல்களும் 5839 மந்திரங்களும் உள்ளன. இவை பகுதி செய்யுளும் பகுதி உரைநடையுமாய் உள்ளது. இவை மாயாஜால, மந்திர தந்திரங்கள் மற்றும் மாந்திரீகம் பற்றியும் தெளிவாகக் கூறுகிறது. வேதங்களைப் பற்றி உரைநடைகள் "பிராமணங்கள்" என அழைக்கப்பட்டன. ஒவ்வொரு வேதத்திதற்கும் ஒரு பிராமணம் உண்டு. ஆனால் ரிக் வேதத்திற்கு மட்டும் இரண்டு பிராமணங்கள் உள்ளன. காட்டு நூல்கள் அல்லது "ஆரண்யங்கள்" எனஎப்படுபவை பிராமணங்களின் ஒரு பகுதியாகும். இவற்றை நாடு, நகரத்தை விட்டு காடுகளுக்கு சென்று படிப்பதால் **காட்டுநூல்கள்** எனப் பெயா் வந்தது. அடுத்து, உபநிடதங்கள் ஆரியா்களின் சமயக் கருத்துக்களை விளக்குகின்றது. உபநிடதங்கிளன் எண்ணிக்கை 300 ஆகும். காமம், முக்தி, மாயை போன்ற கோடடபாடுகளை உபநிடதங்கள் விரிவாகக் கூறுகின்றன.

வேதகால இலக்கியங்களில் வேதாந்தங்கள் அல்லது சாஸ்திரங்கள் எனப்படும் நூல்கள் ஆரியா்களின் சமுதாய வாழ்க்கையும், சூத்திரங்கள் குடும்பத் தலைவனின் கடமைகளையும் பற்றி நன்கு எடுத்துரைக்கின்றது. இந்த வேதகால இலக்கியங்கள் வேதகால நாகரீகம் பற்றி அறிய உதவும் முக்கியச் சான்றுகளாக விளங்குகின்றன.

**அரசியல் வாழ்க்கை**

பண்டைய வேதகால மக்களிடையே மன்னராட்சி முறை வழக்கிலிருந்தது. முடியாட்சி அரசாங்க முறையாகத் திகழ்ந்தது. பெரும்பாலும் மன்னா்கள் பரம்பரை உரிமை அடிப்படையில் தோ்வு செய்யப்பட்டனா். சில சமயங்களில் மன்னா்கள் மக்களால் தோ்ந்தெடுக்கப்பட்டனா். நாட்டையும், மக்களையும் பாதுகாப்பதே மன்னரின் தலையாயக் கடமையாக இருந்தது. முக்கள் கிராமங்களில் கூட்டமாக வாழ்ந்தனா். குடும்பம் என்பது அடிப்படை அரசியல் பிரிவு. இவை உறவுகளினால் இணைக்கப்பட்டு கிராமம் என்ற அமைப்பு ஏற்பட்டது. கிராமத்தின் தலைவன் அரசன் ஆனான். அவன் ராஜன் என்றும் அழைக்கப்பட்டான். "ராஜன்","சாம்ராட்" என்ற சொற்கள் வேத இலக்கியங்களில் பல இடங்கில் சொல்லப்பட்டுள்ளது. மன்னருக்கு உதவி செய்ய பல அலுவலா்கள் இருந்தனா். பெரிய அரண்மனையில் மன்னன் வாழ்ந்தான். புரோகிதா்கள் அல்லது மதகுருமாா்கள் மன்னனுக்கு அவ்வப்போது பல ஆலோசனைகள் வழங்கினா். இவா்களின் உதவியுடன் மன்னன் பல வேள்விகளை நடத்தினான்.

“சேனானி” எனப்பட்ட படைத்தலைவன் போர்க்காலங்களில் மன்னனுக்கு உதவினான். ஊளவறிய ஒற்றர்களையும் மன்னன் நியமித்தான். மக்களின் உணர்வுகளை நன்கு அறிந்தே மன்னன் ஆட்சி செய்தான். மக்கள் பல நன்கொடைகளை மன்னனுக்கு அளித்தனர். ஆனால் மன்னன் வரிவசூல் செய்யவில்லை எனத் தெரிகிறது. நீதி வழங்குவதிலும் அரசன் மிக முக்கியப் பங்கு வகித்தான். கிராமம் என்பது அடிப்படை அமைப்பாக இருந்தது இதன் நிர்வாகத்தைக் கவனிக்க “கிராமணி” என்ற அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தார். அரசன் பல அதிகாரங்களைப் பெற்றிருந்தாலும் “சபா” என்னும் முதியோர் அவை “சமிதி” என்னும் மக்கள் அவைகளால் அவனுடைய அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இவற்றுள் “சபா” என்பதை மூத்த அதிகாரிகளும், அறிஞர்களும் அடங்கிய அமைப்பு என்றும் “சமிதி” என்பதை மக்களின் சட்டமன்றம் என்றும் சிலர் கூறுகின்றனர். மேலும் இக்காலத்தில் பல குடியரசுகள் இருந்தற்கான ஆதாரங்களும் வேத இலக்கியங்களில் காணப்படுகிறது.

**சமூக வாழ்க்கை**

குடும்பம் என்ற அமைப்பு வேதகாலத்தில் அடிப்படை பிரிவாக இருந்தது. எல்லா குடும்ப அங்கத்தினர்களும் ஒரே வீட்டில் வாழந்தனர். குடும்பத் தலைவன் **“கிரகபதி”** என அழைக்கப்பட்டான். மக்கள் மிகவும் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தனர். ஆரம்ப காலத்தில் இடம் விட்டு இடம் பெயர்ந்து வாழ்ந்தனர். எனவே கால்நடை வளர்ப்பு அவர்கள் வாழ்க்கையில் முக்கியமான ஒரு தொழிலாக இருந்தது. பின்னர் நாளடைவில் வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்டனர். மக்கள் கிலாமங்களிலேயே வாழ்ந்தனர். நகர வாழ்க்கையைப் பற்றி அவர்கள் அறியவில்லை. திருமணத்தை மிகவும் புனிதமாகக் கருதினர். ஒரு தாரமணம் நடைமுறையிலிருந்தது என்றாலும் அரச குடும்பத்தினரும், செல்வந்தர்களும் சில நேரங்களில் பலதார மணத்தைப் பின்பற்றினர். குழந்தைத் திருமணம் நடைமுறையில் காணப்படவில்லை. பெண்கள் சமுதாயத்தில் உயர்வாகப் போற்றப்பட்டனர். அவர்கள் மதச் சடங்குகளின்போது கணவனுக்குச் சமமான உரிமைகளைப் பெற்றனர். விதவைகள் அவர்களுக்கு குழந்தைகள் இல்லாவிட்டால் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். சமுதாயத்தில் ஆண் குழந்தைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. திருமணத்தின்போது வரதட்சனை வாங்கும் முறையும் வழக்கத்திலிருந்தது. தந்தையின் சொத்தில் உரிமை ஆண்களுக்கு மட்டுமே இருந்தது. பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கினர். கோ'ா, லோபமுத்ரா போன்ற பெண் புலவர்கள் பல பாடல்களை இயற்றியுள்ளனர்

**கலாச்சாரம்**

முந்திய வேதகாலம் மக்களின் உடைகள் மூன்று விதமாக இருந்தன. செல்வந்தர்களும், அரசர்களும் தங்கத்தால் பின்னல் வேலைப்பாடுகளுடன் கூடிய ஆடைகளை அணிந்தனர். நிவி(கீழாடை) வாசஸ் (உள்ளாடை) அதிவாசஸ் (மேலாடை) போன்றவை பெண்களால் அணியப்பட்டன. இவை தவிர ஆட்டு ரோமத்தினால் நெய்யப்பட்ட ஆடைகளுக்கு வண்ணம் தீட்டி அவற்றையும் அணிந்தனர். வேதகால ஆண்களும், பெண்களும் ஆபரணங்களிலும் அதிக கவனம் செலுத்தினர். கழுத்தணி (அட்டிகை) காப்பு, ஒட்டியாணம், காதணி, போன்ற அணிகலன்களை அணிந்தனர். ஆண்கள் விதவிதமான தாடிகளை வைத்திருந்தனர். தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் பழக்கம் அவர்களிடம்

இருந்தது. பெண்கள் சிகை அலங்காரத்திற்கு முக்கியத்துவம் அளித்தனர். தொலினால் செய்யப்பட் பலவிதமான காலணிகளையும் மக்கள் அணிந்தனர்.

மக்கள் மண், ஓலை முதலியவற்றால் ஆன வீடுகளில் வசித்தனர். பாலும் அதனுடன் தொடர்புடைய உணவுப் பொருட்களையும் அவர்கள் விரும்பி உண்டனர். ஆடு அல்லது எருது போன்றவற்றின் மாமிசத்தை உண்டனர். பசுவை புனிதமாகப் கருதியதால் அதனை உண்ணவில்லை. அரிசி, பார்லி போன்ற தானியங்களையும் மேலும் அவற்றில் பலகாரங்கள் செய்து அதை நெய்யுடன் சேர்த்து உண்டனர். போதை தரும் **சோமபானம், சராபானம்** என்ற இருவகையான பானங்கள் அருந்தினர். இவற்றுள் சோமபானம் என்பது ஒரு வகை மூலிகைச் செடியிலிருந்து தயாரிக்கப்பட்டு செல்சந்தர்கள் மட்டுமே அருந்தினர். ஆனால் சுராபானம் பார்லியிலிருந்து தயார்க்கப்பட்டு சாதாரண மக்களும் பருகினர். நுடனம், இசை, தேர் ஓட்டம், குதிரை ஓட்டம், பகடையாட்டம் போன்றவை அவர்களின் முக்கியப் பொழுது போக்குகளாகும். இதில் பகடையாட்டம் என்பது சூதாட்டமாகக் கருதப்பட்டது. பெண்கள் தயாக்கட்டையாடுதல் விளையாட்டில் சிறந்து விளங்கினர். வேட்டையாடுதல் செல்வந்தர்களிடம் காணப்பட்ட முக்கிய பொழுதுபோக்காகும்.

**ஜாதிகள்**

முந்திய வேதகாலத்தின் தொடக்கத்தில் ஜாதிமுறைகள் காணப்படவில்லை. ஆனால் ரிக் வேதகாலத்தின. இறுதியில் மெதுவாக ஜாதிகள் தோன்ற ஆரம்பித்தன. பிராமணர், ‘சத்திரியர், வைசியர் மற்றும் சூத்திரர் என்ற நான்கு பிரிவினரை அடிப்படையாகக் கொண்டு ஜாதிமுறை தோன்றின.

**பொருளாதாரம்**

வேதகால நாகரீகம் ஒரு கிராம நாகரீகம் ஆகும். வேளாண்மை அவர்களின் முக்கியத் தொழிலாகும். கால்நடைகள் வளர்த்தல், வாணிபம் செய்தல், தோல் பதனிடுதல், நெசவுத்தொழில் போன்றத் தொழில்களும் பழக்கத்தில் இருந்தன. இவைத்தவிர, உலோக வேலை செய்தவர்கள் பற்றியும் மண்பாண்டத் தொழில் செய்தவர்கள் பற்றியும் வேத இலக்கியத்தில் பல குறிப்புகள் உள்ளன. பார்லி, கரும்பு போன்ற பயிர்களை அவர்கள் பயிரிட்டனர். ஆனால், நெல் பயிர் செய்ததாகத் தெரியவில்லை. எருதுகள், காளைகள் போன்ற விலங்குகளை விவசாயத்திற்குப் பயன்படுத்தினர். ஆறு அல்லது எட்டு அல்லது பன்னிரெண்டு எருதுகள் பூட்டப்பட்ட ஏரால் நிலத்தை உழுதனர். விளைநிலங்கள் நன்கு பாசன வசதிகள் செய்யப்பட்டிருந்தன. கிணற்றுப்பாசனம், ஏரிப் பாசனம் மற்றும் கால்வாய்ப் பாசனம் போன்ற முறைகள் வழக்கத்தில் இருந்தன.

முந்திய வேதகாலத்தின் இறுதியில் சமுதாயத்தில் வைசியர் என்ற வணிகர்கள் தோன்றினர். இவர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிபத்தில் ஈடுபட்டனர். வாணிபம் பெரும்பாலும் ‘‘பண்டமாற்று’’ முறை மூலம் நடைபெற்றது. ஆனால் அச்சிட்ட நாணயங்கள் இல்லை. அதற்கு மாறாக பசுக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. ஆனால்‘‘நி‘கர்’’ என்ற தங்க நாணங்களை செல்வந்தர்கள் பயன்படுத்தியதாகச் சான்றுகள் கிடைத்துள்ளன. பொருட்களை, வாங்கவும் விற்கவும் சந்தைகள் இருந்தன. ஒப்பந்தங்களின் அடிப்படையில் கடன்கள் கொடுக்கப்பட்டு அவற்றிற்கு வட்டியும் வசூலிக்கப்பட்டன. தரகர்களும், தரகு முறையும்

வாணிபத்தில் காணப்பட்டன. பொற்கொல்லர்கள் தங்கத்தாலும் பிற உலோகங்களாலும் பலவிதமான அணிகலன்களை உருவாக்கினர்.

**சமயவாழ்க்கை**

முந்திய வேத கால ஆரியர்கள் இயற்கையைக் கண்டு அஞ்சி அதனையே வழிபடலாயினர். மக்கள் பல வகையான இயற்கை சக்திகளை தெய்வங்களாக வழிபட்டனர். பிருத்வி, சோமா, அக்னி போன்றவை நிலப்பகுதி வாழ் தெய்வங்களாக போற்றப்பட்டன. வருணன் வானத்தின் கடவுளாகவும், வாயு, மாருதி போன்றவை புயல் கடவுளாகவும் வணங்கப்பட்டன. இந்திரன் அவர்களின் முக்கிய கடவுளாக கருதப்பட்டார். ஆனால் அக்காலத்தில் கோவில்களோ, உருவவழிபாடோ இருந்ததாகத் தெரியவில்லை. பலவகையான பொருட்களை இறைவனுக்குக் காணிக்கையாகப் படைத்தனர். பால், நெய், தானியம், சோமபானம்,இறைச்சி ஆகியப் பொருட்களையும் இறைவனுக்குக் காணிக்கையாகச் செலுத்தினர். வேதகாலமக்கள் மரணத்திற்குப் பின்னும் ஒரு வாழ்க்கை இருந்ததாகக் கருதினர். மிகப்பெரிய அளவில் வேள்விகள் நடத்தி யாகங்கள் செய்தனர். அக்னியை கடவுளின் பிரதிநிதியாக எண்ணினர். வேதகால சமயம் ஒரே கடவுளை வழிபடும் வழக்கத்தையே வலியுறுத்தியது. புலவகையான பெயர்களைக் கொண்டிருந்தாலும் இறைவன் ஒருவனே என்ற நியதியை மக்கள் நம்பினார்கள். பின்னர் நாளடைவில் பல மாறுதலகள் வேதகால மக்களின் சமயவாழ்க்கையில் ஏற்பட்டன.

**பிந்திய வேதகாலம் நாகரீகம்**

வேத காலத்தின் ஆரம்பத்தில் ஆரியர்கள் குறிப்பிட்ட சில பகுதிகளிலேயே மையம் கொண்டிருந்தனர். ஆனால் பிற்கால வேதகாலத்தில் அவர்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலிருந்து மெதுவாக கங்கைச் சமவெளி பகுதியில் குடியேறினர். பிந்திய வேதகாலத்தின் காலம் கி.மு. 1000 முதல் கி.மு. 600 வரை என பொதுவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. யஜுர்,சாம, அதர்வண வேதம், பிரதமணங்கள், ஆரண்யங்கள் மற்றும் உபநிடதங்கள் முதலியன பிற்கால வேதகாலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றாக உள்ளன. கோசலம், காசி, விதேகம் முதலியப் பகுதிகள் ஆரியர்களின் கிழக்கு குடியேற்றப் பகுதிகளாக விளங்கின. இமய மலைத் தொடர் முதல் விந்திய மலை வரையிலான பகுதிகளில் அவர்கள் பரவியிருந்தனர். பிற்கால வேதகாலத்திலும், வீரகாவியற்களின் காலத்திலும் ஆரியர்கள் சுதேசிகளுடன் கலந்து பல புதிய தேசிய அரசுகள் தோன்றின.

**அவற்றுள் முக்கியமானவை பின்வருவன.**

1. ஹஸ்தினாபுரத்தை தலைநகராகக் கொண்ட கௌரவர்கள்
2. காம்பில்யத்தைத் தலைநகராகக் கொண்ட பாஞ்சாலர்கள்
3. அயோத்தியைத் தலைநகராகக் கொண்ட கோசலர்கள்
4. காசியைத் தலைநகராகக் கொண்ட காசிகள்

**அரசியல் நிலை**

ரிக் வேதகாலம் அல்லது முந்திய வேதகால ஆரியர்களின் பேரரசுகளை விட பிற்கால ஆரியர்களின் சாம்ராஜ்ஜியம் பரந்து காணப்பட்டது. எனவே அரசனின் வலிமை மிகுந்த ஆட்சி தேவைப்பட்டது. மன்னரின் மதிப்பும் அதிகாரங்களும் அதிகரித்தன. மன்னர் தெய்வத்தன்மை மிக்கவராகக் கருதப்பட்டார். அரசன் ‘த்திரிய குலத்தைச் சார்ந்தவனாக இருந்தான். படை நிர்வாகம், நீதி வழங்குதல் போன்றவை மன்னனின் முக்கியக் கடமைகளாக இருந்தன.

அசுவமேதயாகங்களும் நடத்தப்பட்டன. ‘‘இராஜாதிராஜன்’’, ‘‘ஏக்ராட்’’ இ ‘‘சாம்ராட்’’ போன்றப்பட்டப் பெயர்களையும் மன்னன் சூட்டிக் கொண்டான்.

அரசனுக்கு உதவி செய்ய பல அலுவலர்கள் இருந்தனர். இக்குழுவுக்கு இரத்தினங்கள் என்று பெயர். மேலும் கருவூலப் பொறுப்பாளர், வரி வசூலிப்பவர், தேர்த்தலைவன், மேலாளர்கள் போன்ற அலுவலர்களும் இருந்தனர். நீதி வழங்குவதில் அரசன் முக்கியப் பங்கு வகித்தான். கிராமங்களில் ஏற்படும் சிறு பூசல்களை கிராமிய நீதிபதியும் அவரது சபையும் விசாரித்தது. புரோகிதர்களை கொலை செய்தல், சுரதபானம் அருந்துதல், தங்கத்தை திருடுதல் மற்றும் அரசனுக்குத் துரோகம் செய்தல் போன்றவை மிகப் பெரிய குற்றங்களாகக் கருதப்பட்டன. இவற்றிற்கு தண்டனைகளும் கடுமையாக இருந்தது. சிறு குற்றங்களுக்கு அபராதம் வசூலிப்பதும் நடைமுறையில் இருந்தது. முந்திய வேதகாலத்தில் தோன்றிய ‘‘சமிதி, சபா’’ போன்ற சபைகளின் பணியும் தொடர்ந்து நடந்து வந்தது. மன்னர் தவறு செய்யும் போது அவரும் நீதி மன்றம் மூலம் தண்டிக்கப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்டார். மேலும் புதிய மன்னரை தேர்ந்தெடுக்கும் பழக்கமும் இருந்தது.

**சமுதாய நிலை**

பிற்கால வேதகாலத்தில் சமுதாயத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. தொழிலின் அடிப்படையில் தோன்றிய ஜாதிமுறைகள் படிப்படியாகப் பிறப்பினை அடிப்படையாகக் கொண்டு மாறியது. பிராமணர்கள் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்தனர். அவர்களுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டன. வேதங்களைப் படித்து அவற்றை ஓதுவதே அவர்களின் முக்கியத் தொழிலாக இருந்தது. படைப்பிரிவில் பணியாற்ற ‘த்திரியர்களும், வாணிபம் செய்ய வைசியர்களும், ஏவல் வேலைகளை செய்ய சூத்திரர்களும் பணிக்கப்பட்டனர். எனவே நாளடைவில் அவர்களுக்குள்ளே ஏற்றத் தாழ்வுகள் தோன்றின.

அரச குலப் பெண்கள் சுயம்வரம் மூலம் தங்கள் கணவன்களை தேர்ந்தெடுத்தனர். பெண்கள் கல்வியறிவு பெற்றனர். பெண்களுக்கு சொத்துரிமை மறுக்கப்பட்டது. பெண்குழந்தைகள் பிறப்பதை குடும்பத்தின் சாபக்கேடாக கருதினர். பொதுவாக ஒரு தார மணம் நடைமுறையில் இருந்தாலும், செல்வந்தர்கள் பலதார மணம் செய்தனர். இது பெண்களைப் பெரிதும் பாதித்தது. குழந்தை மணமும் மெதுவாக நடைமுறைக்கு வந்தது. வர்ணாஸ்ரமதர்மம் வலியுறுத்தப்பட்டது. ஒருவன் குடும்பத் தலைவனாகும்போது ‘‘கிரஹஸ்தா’’ என்றும் குடும்ப வாழ்வை துறந்து வனத்தில் வசிப்பதை ‘‘வனப்பிரஸ்தா’’ என்றும் இவ்வுலகையேத் துறந்தது உயர்நிலையை அடைவதை ‘‘சந்நியாசம்’’ என்றும் கூறப்பட்டது. கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. வாய்வழிக் கல்வியை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை இருந்தது. வேதங்கள், கணிதம், வானநூல் போன்றவற்றை மாணவர்கள் கற்றனர். மாணவர்கள் குருவுடன் அவர் வீட்டிலேயே தங்கி கல்வி கற்றனர். தட்சசீலம் ஒரு சிறந்த கல்வி மையமாக விளங்கியது.

மக்களின் ஆடைகளில் பலவித மாற்றங்கள் ஏற்பட்டன. புலால் உண்ணுதலை பிற்கால ஆரியர்கள் வெறுத்தனர். பலவிதமான பொழுதுபோக்குகளும் மக்களிடையே ஏற்பட்டன. பிற்கால வேதகாலத்தின் இறுதியில் மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறி பல நகரங்களை உருவாக்கி அதில் குடியேறத் தொடங்கினர்.

**பொருளாதார நிலை**

விவசாயம் முக்கியத் தொழிலாக கருதப்பட்டது. பல புதிய விவசாயக் கருவிகளும், புதிய தானிய வகைகளும் அறிமுகமாயின. ஊதாரணமாக ஏர் மற்றும் கலப்பைகள் அளவில் பெரிதாக்கப்பட்டன. 24 எருதுகள் இழுக்கக் கூடிய கலப்பைகள் கூட இருந்ததாக சில ஆதாரங்கள் கூறுகின்றன. நிலங்களுக்கு உரமிடப்பட்டன. பார்லி தவிர நெல்,கோதுமை,எள் போன்றவைகளும் பயிர் செய்யப்பட்ன. மேலும் தோல் பதனிடுதல், தச்சுத்தொழில், கூடைமுடைதல் போன்ற தொழில்களும் நடைபெற்றன. தொழிலார் மற்றும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக பல சங்கங்கள் அமைக்கப்பட்டன. வாண்பமும் முக்கியமான தொழிலாக நடைபெற்றது. கடல்கடந்து வாணிபமும் செழித்து வளர்ந்தது. பெண்கள் பெரும்பாலும் சாயம் போடுதல், பூவேலை செய்தல், கூடைமுடைதல் போன்ற தொழில்களைச் செய்தனர். ஈயம், தகரம், வெள்ளி, தங்கம், செம்பு போன்ற உலோகங்களைப்பற்றி அறிந்திருந்தனர். வெள்ளியும், தங்கமும் அண்கலன்கள் செய்யப் பயன்படுத்தப்பட்டன. பண்ட மாற்று முறையில் வாணிபம் நடைபெற்றது. ‘‘சதமானம்’’‘‘கிரு‘ணலம்’’ போன்ற நாணயங்களும் நடைமுறையில் இருந்தது. பிற்கால வேதகாலத்தில் பொருளாதாரம் நன்கு செழிப்பான நிலையில் இருந்தது.

**சமயநிலை**

பிற்கால வேதகாலத்தில் மக்கள் வேள்விகள் மீது அதிக நம்பிக்கைக் கொண்டனர். எனவே யாகங்களும், வேள்விகளும் அதிக அளவில் நடைபெற்றன. சிவன், உருத்திரன், வி‘ணு போன்ற கடவுள்கள் முக்கியத்துவம் பெற்றனர். இந்திரன், சூரியன் போன்றவர்களை வழிபடுதல் படிப்படியாகக் குறைந்தது. ஆனால் இயற்கையை வழிபடுதல் தொடர்ந்து நடைபெற்றது. பில்லி சூனியம், மாந்திரீகம் போன்றவைகளில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. இவற்றை நல்ல காரியங்களுக்கும், தீய காரியங்களுக்கும் பயன்படுத்தினர். பிலாமணர்கள் இல்லாமல் வேள்விகள் நடத்த முடியாது என்ற நிலை உருவானது. எனவே பிராமணர்களின் மதிப்பு இன்னும் உயர்ந்தது. சாதாரணமக்கள் முதல் அரசன் வரை யாகங்களும், வேள்விகளும் நடத்தினர். யாகத்தின் போது மிருகங்களை பலியிடுவது முக்கியச் சடங்காகக் கருதப்பட்டது.

பிந்திய வேதகாலத்தில் பிறப்பு, இறப்பு மற்றும் இறப்பிற்குப்பின் வாழ்வு என்னும் நம்பிக்கை மக்களிடையேக் காணப்பட்டது. ‘‘துறவு நிலையை’’ அவர்கள் புனிதமாகக் கருதினர். இப்பிறவியில் நல்வினைகள் செய்ய வேண்டும் என எண்ணினர். மறுபிறப்பு பற்றிய நம்பிக்கையும் ஏற்றுக்கொண்டனர். சமயங்களில் ஏற்பட்ட மாறதல்கள் பிற்காலத்தில் அறிவியல் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்களின் நிலை மற்றும் அவற்றின் சலனம் பற்றிய அறிவியல் அறிவு வளர்ந்தது. தர்மத்திலிருந்து விலகிச் செல்பவர்கள் கடுமையான தண்டனைகளுக்கு ஆளாவார்கள் என்ற நம்பிக்கையும் மக்களிடையே ஏற்பட்டது.

**ஜாதிமுறைகள்**

முந்திய வேதகாலத்தின் தொடக்கத்தில் எந்தவிதமான ஜாதிகளும் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. ஆனால்ஈ அதன் இறுதிக்காலத்தில் மெதுவாக ஜாதிகள் தோன்ற ஆரம்பித்தன. முதலில் பிராமணர், ‘த்திரியர்,வைசியர் மற்றும் சூத்திரர் என்ற நான்கு

பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டே ஜாதிமுறைகள் தோன்றின. முதலில் தொழிலின் அடிப்படையில் எழுந்தது. சமுதாயத்தில் அரசர்களுக்கு அடுத்தப்படியாக பிராமணர்கள் மதிக்கப்பட்டனர். சிலர் சமயங்களில் இவர்கள் தெய்வங்களுக்கு இணையாகக் கருதப்பட்டனர்.

பல்வேறு வகையான ஜாதிப்பிரிவுகள் இந்தியாவில் மட்டுமே காணப்படுகின்றது. இதற்கு நாட்டின் இயற்கையமைப்பும் ஒரு காரணமாகும். பல குடும்பங்கள் தனித்து விளங்கி தங்களுக்குள்ளேயே ஒரு விழாக்களையும் நடத்திப் பிரித்துக் கொண்டனர். இதன் அடிப்படையிலேயே ஜாதிகள் தோன்றியதாகக் கருதுகின்றனர். பிராமணர்,'த்திரியர், வைசியர் போன்றோர்கள் ஆரியர்கள் என்றும் திராவிடர்கள், சூத்திரர்கள் என்றும் நீக்ரிடர்கள், ஆஸ்டிரலாய்டுகள் போன்றவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்றும் கூறப்படுகிறது. ஆனால் ஆரியர்கள் முதன்முதலாக இந்தியாவிற்குள் நுழைந்தபோது இந்திய மக்கள் கறுப்பு நிறத்தவர்களாக இருந்ததைக் கண்டு தங்களை வேறுபடுத்திக் கொள்வதற்காக முதன்முறையாக வருணம் என்ற சொல்லைப் பயன்படுத்தினர். இதுவே பின்னர் வகுப்பு எனப்பெயர் பெற்றது. பிற்கால வேத காலத்தில் ஆரியர்கள் கங்கைச் சமவெளி நோக்கி முன்னேறிய போது அங்கிருந்த கறுப்பு இனமக்களுடன் ஒன்று கலந்தனர். அதன்விளைவாக தோன்றிய இனம் ‘‘சூத்திரர்கள்’’ எனப்பட்டனர். இது பற்றி ரிக் வேதத்தில் எவ்விதக் குறிப்பும் இல்லை.

நான்கு வகையான ஜாதிப்பிரிவினரும் வெவ்வேறு வகையான உடைகளை உடுத்தினர். பிராமணர்கள் வெண்மை நிற ஆடைகளையும்,'த்திரியர் சிவப்பு நிற ஆடையையும், வைசியர் மஞ்சள் நிற ஆடையையும், சூத்திரர் கறுப்பு நிற ஆடையையும் உடுத்தினர். தூய்மையின் சிகரமாக பிராமணர்கள் போற்றப்பட்டனர். அவர்களுக்குப் பலவித சலுகைகளும் அளிக்கப்பட்டன. இதனால் தங்களை உயர்ந்தவர்களாகக் காட்டிக்கொள்ள பல புதிய சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் ஏற்படுத்தினர். தங்களின் கீழ் இருக்கும் பிரிவினரோடும் தொடர்புகொள்ள வெறுத்தனர் என்றாலும், சூத்திரர் அல்லாத பிற பிரிவினரோடு திருமண உறவு வைத்துக் கொண்டனர்.

**தீண்டத்தகாதவர்கள்**

சூத்திரர்களோடு திருமண உறவு செய்வது பெரும்பாலும் நடைமுறையில் இல்லாமல் இருந்தது. ஆனால் சில சமயங்களில் அவர்களோடு ஏற்பட்ட திருமண உறவை இரு வகையாகப் பிரித்தனர். அதாவது மேல் ஜாதியைச் சார்ந்த ஒருவன் சூத்திரப் பெண்ணைத் திருமணம் செய்வது **‘‘அநுலோமா’’** எனவும் மேல்ஜாதிப் பெண் ஒருத்தி சூத்திரனைத் திருமணம் செய்வது **‘‘பிரத்திலோமா’’**எனவும் அழைக்கப்பட்டது. ஆனால் பிரத்திலோமா முறையில் திருமணம் நடைபெற்று அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளை ‘‘பாவிகள்’’ என்றும் ‘‘சண்டாளர்கள்’’ என்றும் அழைத்தனர். இவர்களே சமுதாயத்தில் தீண்டத்தகாதவர்கள் எனப்பட்டனர், நாளடைவில் ஆரிய நாகரீகம் பல இடங்களிலும் பரவியது. ஜாதிப்பிரிவுகள் இடத்திற்கு இடம் மாறுப்பட்டன. பல பகுதிகளில் தொழிலின் அடிப்படையில் பல கிளை ஜாதிகள் தோன்றின. மனிதன் இறந்தபிறகு பிணத்தைச் சுடுவதற்கும், துணிகளைத் துவைப்பதற்கும் தலைமுடியை ஒழுங்கு செய்யவும், ஆடு, மாடு இறந்த பிறகு அதன் தோலை உரிக்கவும் சிலர் முன்வந்தனர்.அத்தொழில்களைச் செய்வது **தீட்டு** என சாஸ்திரங்கள் சொல்லுவதால் அவர்கள் தீண்டத்தகாதவர்களாயினர். பின்னர் அவர்களின் சமுதாயத்திலேயே

பள்ளர், பறையர், வள்ளுவர், மருத்துவர் போன்ற உட்பிரிவுகள் ஏற்பட்டன. அவர்களைத் தொடுவதும், பார்ப்பதும் குற்றமாகக் கருதப்பட்டது. இந்நிலை குப்தர்களின் காலத்தில் நிலவியதை வரலாற்றில் தெளிவாகக் காணலாம்.

பிராமணர்களுக்குள்ளே மேலும் பல பிரிவுகள் இருந்தன. பிராமணர்கள் ரிக் வேதகாலத்தில் திருமண நிகழ்ச்சியின்போது மாமிச உணவைத் தானும் உண்டு விருந்தினர்களுக்கும் கொடுத்தனர். சில பிராமணர்கள் மீன் உணவும் உண்டனர். ஆனால் கல்வி கற்கும் காலத்தில் அது தடைசெய்யப்பட்டது. வைணவ சமயப் பிராமணர்கள் ‘‘ஐயங்கார்’’ என்றும் சைவ சமய பிராமணர்கள் ‘‘ஐயர்’’ என்றும் அழைக்கப்பட்டனர். கோயில்களில் பூஜைகள் செய்வோர் ‘‘சிவ பிராமணர்’’ அல்லது ‘‘கோயிற் பிராமணர்’’ எனப்பட்டனர். இந்த ஜாதி முறைகளில் பல கலப்புகள் இருந்ததை வேத இலக்கியங்களில் காண முடிகிறது. ஊதாரணமாக, விசுவாமித்திரர் ‘த்திரிய குலத்தைச் சார்ந்தவர். அவர் பிரம்ம ரிீயாக விளங்கினார். வீ‘டர் ஒரு விலைமாதின் மகன். வியாசர் ஒரு மீனவப் பெண்ணின் புதல்வன். பிராமணரான துரோணர் ஒரு சிறந்த போர் வீரராக திகழ்ந்தார்.

ஜாதி முறைகள், வளர்ந்து வரும் ஒரு நாட்டிற்குத் தடையாகவே உள்ளது. கலாச்சாரம் சீர்கெடுவதற்கும் ஜாதிமுறையேக் காரணமாக உள்ளது. தேசிய ஒற்றுமை சீர்குலையவும், தீண்டாமை வளரவும், ஜாதிமுறைகளேக் காரணமாகும். இந்தியாவில் ஜாதிமுறைகள் ஆரியர்களின் வருகைக்குப் பின்னரே தோன்றியது எனவும், ஆனால் மிகப் பழங்காலத்திலிருந்தே ஜாதிகள் இருந்து வந்துள்ளது எனவும், இரு கருத்துக்கள் நிலவுகிறது. எவ்வாறு இருந்தாலும், இன்று நாடுமுழுவதும் பல்வேறு வகையான ஜாதிப்பிரிவுகள் உள்ளன. சில சமயங்களில் அவர்களுக்குள் ஏற்படும் பூசல்கள் நாட்டின் சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தையே சீர்குலைத்து விடுகின்றன

**வர்ணாசிரம தர்மம்**

வேத காலத்தில் சமதாயம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இது போலவே ஒரு சராசரி மனிதனின் வாழ்க்கையும் நான்கு பிரிவுகளாக அல்லது ஆசிரமங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பதை வேத இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன., அவை பிரம்மசாரியம், கிரகஸ்தம், வனப்பிரஸ்தம் மற்றும் சந்நியாசம் என்பனவாகும்.

**1.பிரம்மச்சாரியம்**

பிராமணச் சிறுவனுக்கு **உபநயனம்** எனப்படும் பூணூல் அணியும் சடங்கு அவனது 8-வது வயதில் செய்யப்பட்டது. இந்த வயதில்தான் அவன் வேதங்களை கற்றறியும் பக்குவத்தை அடைகிறான். இச்சமயத்தில் தன் பெற்றோரைப் பிரிந்து குருவின் இல்லத்திலேயே கல்வி முடியும் வரை தங்கியிருக்க வேண்டும், குரு அவனுக்கு முதன் முதலில் சந்தியா வசனத்தைச் சொல்லிக் கொடுப்பார். நூன்கு வேதங்கள், ஆறு வேதாங்கங்கள் மற்றும் சிக்‘கல்பம், நிருக்தம், வியாகர்ணம், ஜோதிடம், தத்துவம், மருத்துவம் போன்றவைகளும் போதிக்கப்பட்டன. ஒவ்வொரு குலத்தவரும் இக்காலத்தில் மிகுந்த கட்டுப்பாடுகளுடன் இருந்தனர்.

**2.கிரகஸ்தம்**

குருவின் இல்லத்தில் தங்கியிருந்து கல்வி முடித்து வரும் மாணவனை அவனது பெற்றோர் இல்லற வாழ்வில் ஈடுபட வைத்தனர். திருமணத்தின் போது வீட்டிலிருந்து பெற்ற

பொருளை சீதனம் என அழைத்தனர். வேதகாலத்தில் 8 வகையான திருமண முறை இருந்தது. அவை பிரம்மம், தெய்வம், அர்‘ம், பிரஜாபத்யம்,காந்தர்வம், அசுரம், பைசாசம், மகீ என்பனவாகும். பிராமணர்கள் மற்ற குலத்தவருடன் திருமண உறவு வைத்துக் கொள்ளுதல் தடை செய்யப்பட்டிருந்தது. சில நேரங்களில் இந்தக் கட்டுப்பாட்டையும் மீறி திருமணம் நடைபெற்று அவர்களுக்குப் பிறக்கும் குழந்தையை **சண்டாளன்** எனக் கூறினர். இதுவே பிற்காலத்தில் தீண்டத்தகாதவர்கள் என்ற பிரிவினராக மாறியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

**3.வனப்பிரஸ்தம்**

இந்த நிலையில் ஒருவன் தனிமையாக தன் உறவுகளைத் துறந்து தன் மனைவியுடன் காட்டில் சென்று உலகப் பற்றைத் துறந்து, நல்ல எண்ணங்களை நினைத்து, உள்ளத் தூய்மையுடன் வாழ்வதாகும்.

**4.சந்நியாசம்**

இந்த நிலையானது மானிடப் பிறவியின் மிகவும் உயரிய நிலையாகக் கருதப்பட்டது. ஒருவன் தன் மனையையும், புதல்வர்களையும், உற்றார் உறவினர்களையும், பொன்னையும், பொருளையும் துறந்து மனதை ஒருநிலைப்படுத்தி, கேடும், ஆக்கமும் நீக்கி துறவற நிலையை அடைவதாகும். இத்தகைய நான்கு நிலைகளுமே வேதகாலத்தில் **வருணம்** அல்லது **வர்ணாசிரமத்தர்மம்** எனப்பட்டது.

# அலகு - 2 : சமண சமயம்

ஜைன மதம் அல்லது ஆருகத மதம் என்று கூறப்படும் சமண மதத்தின் தொடக்க காலம் பற்றி சரியான விளக்கங்கள் வரலாற்றில் இல்லை. மகாவீரர்தான் தோற்றுவித்த சமணசமயத்தை தோற்றுவித்தவர் என முதலில் கருதப்பட்டது. ஆனால் இச்சமயத்தை மகாவீரருக்கு முன்பே ரிஷப தேவர் என்பவர் முதன்முதலாக தோற்றுவித்ததாக கூறப்படுகிறது. மகாவீரர் இச்சமயத்தின் 24-வது தீர்த்தங்கராவர். மகாவீரருக்கு முன்பாக விருஷபதேவர். அஜித நாதர், சம்பவநாதர் அபிநந்தனர், சமதிநாதர், பதுமநாதர், சுபார்சவநாதர், சந்திரப்பிரபர், புஷ்பநாதர், சீதளநாதர், சீரியாம்நாதர், வாசபூஜ்யர், விமலநாதர், அனந்தநாதர், தர்மநாதர், சாந்திநாதர், தந்துநாதர், அரநாதர், மல்லிநாதர், முனிசுவர்த்தர், நமிநாதர் நேமிநாதர், பார்சநாதர், போன்ற 23 தீர்த்தங்கரர்கள் இருந்துள்ளனர்.

**மகாவீரர் (கி.மு. – 527)**

கி.மு. 8ம் நூற்றாண்டைச் சார்ந்த பார்சவநாதர் பனாரசை ஆண்டு வந்த அசுவசேனர் என்பவரின் மகனாவார். அவர் தமது 30ம் வயதில் துறவறம் பூண்டார். பின் சுமார் 70 ஆண்டுகள் சமணமதக் கருத்துக்களை மக்களிடையே பரப்பி இயற்கை எய்தினார். மகாவீரரின் காலத்திற்கு 150 ஆண்டுகளுக்கு முன்பு அவர் வாழ்ந்திருக்க வேண்டும். அவரை பின்பற்றிய மகாவீரர் கி.மு.599ல் பீகார் மாநிலத்தில் வைசாலிக்கு அருகிலுள்ள குண்டக் கிராமத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் “வர்த்தமானர்” என்பதாகும். இவர் யசோதா என்பவரை திருமணம் செய்துக்கொண்டார்.இருவருக்கும் அனோஜா என்ற பெண் குழந்தை பிறந்தது. தன்னுடைய 30வது வயதில் பெற்றோரை இழந்த மகாவீரர் துறவறம் பூண்டு சுமார் 12 ஆண்டுகள் கடும் தவம் புரிந்து ரிஜிபாலிகா என்னும் இடத்தல் ஞானம் பெற்றார். “ஜைனர்” என்றால் வென்றவர் என்வது பொருள். ஐம்புலன்களையும் அடக்கி வென்றதால் அவர் ஜைனமகாவீரர் என அழைக்கப்பட்டார். அவரை பின்பற்றியவர்கள் “ஜைனர்கள்” அல்லது “சமணர்கள்” என்று அழைக்கப்பட்டனர். மகாவீரர் சுமார் 30வருடங்கள் தமது கத்துக்களை பரப்பும் பணியில் ஈடுபட்டு தமது 72வது வயதில் கி.மு. 527ல் பாவா என்னும் இடத்தில காலமானார். இவர் பிம்பிசாரர், அஜாத சத்ரு போன்ற மன்னர்களின் சமகாலத்தில் வாழ்ந்தவர் என வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன.

**போதனைகள்**

அகிம்சை கொள்கையைச் சமணர்கள் தீவிரமாகப் பின்பற்றினர். நன்னம்பிக்கை, நன்னடத்தை, ஆகிய மூன்று பண்புகளுமே மனிதரை நல்வழிப்படுத்தும். இதனை “மூன்று ரத்தினங்கள்” என்று கூறுவர். ஊயிர்ப்பலி, வேள்விகள் போன்றவற்றை மகாவீரர் வன்மையாக கண்டித்தார். சமணத்துறவிகள் புழுப் பூச்சிகளைக் கூட கொல்வதில்லை தம்மையும் அறியாமல் சிற்றுயிர்களுக்கு துன்பம் விளைவிக்க கூடாது என்பதற்காக அவர்கள் நடந்த பாதையை பெருக்கி கொண்டே நடந்தனர். இரவில் உணவருந்தும் வழக்கத்தை கைவிட்டனர். தங்களுடைய வாயை சிறு துணியால் மூடிக்கொண்டனர்.

கடவுள் இல்லை என்றும் கல், நெருப்பு ஆகியவற்றிற்க்கு உயிர் உண்டென்றும் மரம், செடி, கொடிகளை வெட்டுதல் கொலைக்கு சமமானது என்றும் கூறினார். மனிதன் இறந்தபின் மீண்டும் இவ்வுலகில் பிறக்கிறான் என்ற மறுபிறப்பு கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தனர். இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு பொருள்களுக்கும் ஆன்மா உண்டு. ஒருவனின் செயல்கள் “வினை” எனப்படும் இப்பிறவியில் செய்கின்ற வினைக்கேற்ப மறுபிறவி அமையும் என சமணர்கள் நம்பினார்கள். சுமண சமயத்தில் ஒன்பது வகையானப் பொருள்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஆவை உயிர், உயிரற்றது, பாவம், புண்ணியம், ஊற்று, செறிப்பு, உதிர்ப்பு கட்டு, வீடு என்பவை.

இப்பிறவியில் நாம் செய்யும் நல்வினை, தீயவினைகளுக்கேற்ப மறுபிறவியில் அதன் பலன் விடைக்கும். மேலும் துறவிகளே வீடு பேற்றை அடையமுடியும். இல்லறத்தில் ஈடுபடுவோர் தனை அடையமுடியாது. உயிர்கள் என்பது உருவ அளசில் மாறுப்பட்டிருக்கும். உயிர்களை கொல்வது மிக்ப்பெரிய பாவமாகக் கருதப்பட்டது. கடுந்தவம் புரிவதால் மறுபிறப்பில் இன்பமான வாழ்வு ஏற்படும’என சமணர்கள் நம்பினர். மனிதனே தனதுவிதியை நிர்ணயிக்கிறான். முனித வாழ்விலேயே சிறந்தது துறவறம்தான் என நம்பினர். நல்வினை, தீயவினை இரண்டுமே எண்ணம், செயல், சொல் இவற்றின் மூலம் உயிரை அடைக்கின்றன.

சமணமதம் 13 வகையான பாவங்களைக் கூறுகின்றது. உயிர்ப்பலி,பொய்கூறுதல், களவு, மதுஅருந்துதல், பொறாமை, கோபம், தற்பெருமை, போன்றவை முக்கியமானதாகும். ஐம்புலன்களை அடக்குவதை கட்டு எனக் கொண்டனர். தன்னைத்தானே வருத்திக் கொள்ளுதல் போன்ற கடுமையான நடவடிக்கைகளை சமணர்கள் மேற்கொண்டனர். சமணமதம் பெண்களை ஆண்களுக்கு சமமாகக் கருதியது. பெண்கள் துறவறம் மேற்கொள்வதை ஆதரித்து ஆடம்பரத்தை சமணர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

**கலை இலக்கியத்தில் சமணர்களின் தொண்டுகள்**

சமண முனிவர்கள் தங்குவதற்கு நாடுமுழுவதும் பல குகைகள் ஏற்படுத்தப்பட்டு அவை அவர்களின் இருப்பிடமாய் திகழ்ந்தன. உதயகிரி அபுகுன்றுகள், எல்லோரா, கிர்நார், சித்துர், நாகமலை போன்ற இடங்கள் சமண முனிவர்களின் முக்கிய இருப்பிடங்களாக இருந்தன. இன்னும் பல சமக் கோயில்களும் காணப்படுகின்றன. இசை சமணர்கள் கலை உலகிற்கு அளித்த பெரும் கொடைகளாகப் போற்றப்டுகின்றன. சுரவண பெலகொலாவில் உள்ள கோமதீஷ்வரர் ஆலயம் சமணர்களின் கலைநயத்திற்கு சிறந்த எடுக்காட்டாக உள்ளது.

ஆங்கங்கள், சேத்தசூத்திரங்கள், மூலசூத்திரங்கள், போறவை முக்கயமான சமண இலக்கியங்களாகும். இவை சமணர்களின் நெறிமுறைகள் பற்றியும், துறவிகளின் நன்னடத்தை பற்றியும் கூறுகின்றன. சமஸ்கிருத மொழியிலும் பிராகிருத மொழியிலும் பல நூல்கள் எழுதப்பட்டன. துமிழில் சீவகசிந்தாமணி எனும் இலக்கியநூல் சமணநூலாகும். சில வரலாற்றுஅய்வாளர்கள் திருவள்ளுவரை சமணசமயத்தை சார்ந்தவர் எனக் கூறுகின்றனர். தெலுங்கிலும், கன்னடத்திலும் பல சமண நூல்கள் உள்ளன. இவ்வாறு சமணர்கள் இலக்கியத் துறைக்கும் பலதொண்டுகள் செய்துள்ளனர். சிலம்பு, உதயணன்கதை, சிலப்பதிகாரம், வளையாபதி, சூடாமணி, நீலகேசி போன்ற காவியங்களும் நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி, தினைமாலை நூற்றைம்பது போன்ற நூல்களும் சமண சமய நூல்களாகும்.

**சமணத்தின் வளர்ச்சி**

வட இந்தியாவில் பரவிய சமணசமயம் மெதுவாக தென்னிற்தியாவிலும் பரவியது. இதற்கான பல ஆதாரங்கள் தென்னிந்தியாவில் கிடைத்துள்ளன. சுமணசமயம் மகாவீரரின் காலத்திலேயே அதிகமாகப் பரவியது என்றாலும் அவருடைய மறைவிற்குப் பின் வேகமாக பரவியது. பல அரச குடும்பங்களின் சயமாக அது திகழ்ந்தது. நந்த வம்சத்திலும் மௌரிய வம்சத்திலும் சமணசமயம் ஆழமாக வேருன்றியது. சந்திரகுப்த மௌரியர் பல சமண சங்கங்களை நிறுவினார். முதலாவது சமணசமய மாநாடு பாடலிபுத்திரத்தில் கூட்டப்பட்டது. கி.மு. முதலாம் நூற்றாண்டில்உஜ்ஜயினி சமணசமயத்தின் தலைமை இடமாக விளங்கியது. நூளடைவில் சமணசமயம் இந்தியா முழுவதும் பரவியது. நுந்தர்கள், குஷாணர்கள், கலிங்கர்கள், குப்தர்கள், கங்கர்கள், கடம்பர்கள், சாளுக்கியர்கள் போன்றோர்களும் சமணசமயத்திற்கு ஆதரவு அளித்தனர்.

**சமணத்தின் வீழ்ச்சி**

மகாவீரரின் மறைவிற்குப் பின் பல ஆண்டுகள் செல்வாக்குடன் விளங்கிய சமணசமயம் படிப்படியாக வீழ்ச்சியடைய ஆரம்பிததது. பிற்காலத்தில் அஜாத சத்ரு சமண சமயத்திற்கு சிறந்த தொண்டுகளைச் செய்தார். மகாவீரருக்கு பின் சதார்மன் சமணசமயத்தின் தலைமைக்கு குருவாக விளங்கினார். அவருக்குப் பிறகு ஜீம்பு ஜம்புதவிஜயன், பத்திரபாகு போன்றோர் தலைமைப் பொறுப்பேற்றனர். அதற்கு பிறகு சரியான தலைமை இல்லாததால் சமணசமயம் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

மகாவீரரின் மறைவுக்குப்பின் சமணர்கள் “சுதேம்பரர்”“திகம்பரர்” என இரு விரிவாகப் பிரிந்தனர். மகாவீரரின் போதனைகள் தொகுக்கப்பட்டு “பூர்வங்கள்” என அழைக்கப்பட்டன. இவற்றை பின்பற்றியவற்கள் “திகம்பரர்கள்” என அழைக்கப்பட்டன. பத்திரபாகு தலைமைப் பொறுப்பேற்றதும் சமணத்தைப் பரப்பும் போக்கில் தென்னிந்தியா நோக்கிச் சென்றார். அப்போது வடநாட்டில் ஸ்துாடபத்திரன் என்பவர் தலைமைக் குருவாக இருந்தார். அவருடையத் தலைமையில் பல சமணர்கள் பத்திரபாகுவின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வெண்ணிற ஆடை அணிந்து “சுவேதம்பரர்” என்றுக் கூறிக்கொண்டனர். இருப் பிரிவினர்களின் கொள்கையிலும், வழிப்பாட்டிலும் வேறுப்பாடுகள் இருந்தது. இதுவும் சமண சமயத்தின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

அடுத்து சமணசமயத்தின் உயிர், மறுபிறவி, கா்மம் போன்ற கருத்துக்கள் இந்து சமயத்திலும் காணப்படுவதால் பலர் அதில் அதிக ஈடுபாடு கொள்ளவில்லை. மேலும் சமணசமயத்தில் இல்லறத்தை வெறுப்பது, கடுந்தவம், தன்னைதானே வருத்திக்கொள்ளுதல் போன்ற கடுமையான நடைமுறைகள் வழக்கத்தில் இருந்தால் எல்லா மக்களும் அதனை எளிதில் பின்பற்ற முடியவில்லை.

சமண சமயத்தின் கடவுள் இல்லையென்றாலும் மகாவீரரும் மற்றத் தலைமைத் துறவிகளும் கடவுளாகவே போற்றப்பட்டனர். அவர்களுக்கு உருவ வழிபாடு செய்யத்தொடங்கினர். எனவே சமணசமயம் நாளடைவில் அதன் தனித்தன்மையை இழந்தது. பக்தி இயக்கத்தின் வளர்ச்சியால் பல இந்து தலைவர்களின் முயற்சியால் சமண சமயம் ஆதரவை இழந்து வீழ்ச்சிடையக்காரணமானது.

பிற்காலத்தில் சமண சமயம் மன்னர்களின் ஆதரவை இழந்தது. முகலாயர்களில் அலாவுதீன்கில்ஜியின் ஆட்சிக் காலத்தில் பல சமணக்கோயில்கள் இடிக்கப்பட்டன. சமணத்துறவிகள் கொல்லப்பட்டனர். இது சமணத்தின் வளர்ச்சியை தடை செய்தது. அடுத்து புத்த மதத்தின் வளர்ச்சி வட இந்தியாவில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. புத்தமதத்தின் எளிமையான கொள்கைகளும், மொழியும் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. எனவே பலர் சமணசமயத்தை விட்டு புத்த மதத்திற்கு மதம் மாறினார்கள். இவ்வாறு சமண சமயம் நாளடைவில் இந்தியாவிலிருந்து மறைந்தது.

## புத்த சமயம்

இந்திய வராற்றில் புத்தமதம் தனி இடத்தைப் பெற்றுள்ளது. மேலும் உலகிலுள்ள முக்கிய மதங்களில் புத்த மதமும் முக்கியமானதாகும். புத்தமதம் இலங்கை, பர்மா, தாய்லாந்து, கம்போடியா, மத்திய ஆசியா, சீனா, நேபாளம், திபெத் ஆகிய நாடுகளில் இன்று முக்கிய மதமாக விளங்குகிறது. இந்தியாவில் கி.மு. 6ம் நூற்றாண்டில் ஏற்பட்ட மிகப்பெரிய சமண சமுதாய மாற்றங்களில் புத்தசமயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் முக்கியமானதாகும்.

**புத்தரின் இளமைக்காலம்**

புத்தர் ஷத்திரிய குலத்தைச் சேர்ந்தவர். புத்தரின் தந்தையின் பெயர் சுத்தோனர் ஆவார். துாய் மாயா தேவி ஆவார். கேளதம குடும்பத்தில் கபிலவஸ்த்துக்கு அருகிலுள்ள லும்பினி தோட்டத்தில் கி.மு. 567-ல் பிறந்த புத்தரின் இயற்பெயர் சித்தார்த்தர் ஆகும். புத்தரை “சூரியக்கடவுள்” என்றும்இ அவரது 12 கருத்துக்களை வருடத்தின் 12 மாதங்கள் என்றும் கூறுவர். சித்தார்த்தர் பிற்காலத்தில் துறவறம் மேற்கொள்வார் என்று ஜோதிடர் கூறியதை கேட்ட சுத்தோதனர்

அவரைக் கவலைகள் இல்லாமல் அலண்மனைக்குள்ளேயே வளர்த்து வந்தார். சித்தார்த்தர் பிறந்த சில நாட்களிலேயே தாய் மாயாதேவி இறந்தார். இளமையிலேயே அறிவும் ஆற்றலும் மிகுந்த சித்தார்த்தர் தன்னுடைய 16-ம் வயதில் யசோதரை என்ற அரசகுலத்துப் பெண்ணை மணந்தார். இவர்களுக்கு ராகுலன் என்ற அழகிய மகன் பிறந்தான். செல்வ செழிப்பில் வளர்ந்த சித்தார்த்தர் ஒரு நாள் அரண்மனைக்கு வெளியே பசியோடு ஒருவனையும், நோயாளி ஒருவனையும், வயதானவன் ஒருவனையும், இறந்தவனின் சடலத்தையும் காணநேர்ந்தது. இவை எதனால் ஏற்படுகிறது? எப்படி ஏற்படுகிறது? என எண்ணத்தொடங்கினார். பின்னர் தன்னுடைய இல்லற வாழ்வில் வெறுப்புற்று தனது 29 வயதில் தன்னுடைய மனையையும், மகனையும் விட்டுப் பிரிந்து அரண்மனையை விட்டு வெளியேறினார்.

பல அறிஞர்களையும், துறவிகளையும் சந்தித்து உலக வாழ்க்கைக்கு புது விளக்கம் கேட்டார். ஆரதகலாமா, உத்தகராமபுத்திரர் போன்றோரிடமிருந்து உபதேசம் பெற்றார். அகங்காரம் உள்ளடக்கி ஐம்புலன்களைச் சுட்டறுத்து, அமைதிகாண முற்பட்டார். உண்ணாமலும், உறங்காமலும் ஐந்து துறவிகளுடன் தவம் புரிந்தார். ஆனால் எண்ணியது ஈடேறவில்லை. இறுதியில் புத்த கயாவிலுள்ள போதிமரத்தடியில் அமர்ந்து துன்பங்களுக்கு உண்மைக்காரணம் தெரியும் வழரயில் இவ்விடத்தைவிட்டு நீங்குவதில்லை என்ற முடிவுடன் கடுந்தவம் புரிந்தார். இறுதியில் மெய்யறிவு பெற்று அனைத்து அல்லல்களுக்கும் ஆசையே காரணம் எனக்கண்டார். அதன் பின்னர் அவர் புத்தர் என அழைக்கப்பட்டார். புத்தர் என்றால் மெய்யறிவு பெற்றவர் என்பது பொருளாகும். அவர் தனது முதல் சொற்பொழிவை காசிக்கு அருகிலுள்ள சாரநாத் என்னுமிடத்தில் நிகழ்த்தினார். புல லட்சக்கணக்கான மக்கள் அவருடைய சீடர்களானார்கள். இறுதியில் தனது 80-வது வயதில் கி.மு.487-ல் புத்தர் குசி நகரில் இறந்தார்.

**புத்தரின் கொள்கைகள்**

புத்தர் சாதாரண மக்களும் பின்பற்றக்கூடிய எளிய கொள்கைகளை எடுத்துரைத்தார். அவரின் கொள்கையில் உண்மை இருந்தது. அவர் நான்கு உண்மைகளை எடுத்துரைத்தார்.

1. இவ்வுலகம் துன்பம் நிறைந்தது.
2. ஆசையே துன்பத்திற்கு காரணம், நிறைவேறாத ஆசைகளே மறுபிறவிக்குக் காரணம்.
3. ஆசைகளை ஒழித்தால் மறுபிறவி இல்லை. அதுவே நிர்வாணம் ஆகும்.
4. ஆசையை ஒழிக்க எட்டு வழிமுறைகளை கடைபிடிக்கவேண்டும்.

உலக வாழ்க்கை ஒரு சங்கிலித்தொடர் போல் உள்ளது. எந்தப்பொருளும் அழியாதது. இவ்வுலக வாழ்வின்நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைப்பெற்றுக் கொண்டிருகின்றன. ஒருவன் எண் மார்க்கத்தையும் கடைபிடித்தால் உயர்ந்த வாழ்வு பெறலாம்.

1. நன்னம்பிக்கை
2. நல்லெண்ணம்
3. நற்பேச்சு
4. நற்செயல்
5. நல்வாழ்வு
6. நன்முயற்சி
7. நற்சிந்தனை
8. நல்லதியானம்

இந்த புத்தசமயக் கருத்துக்கள் அனைத்தும் மத்திய மார்க்கம் எனப்பட்டது. புத்தசமயக் கருத்துக்களை :திரிபீடகம்'' என்ற நூல் கூறுகின்றது. இவை சுத்த பீடகம், வினய பீடகம் மற்றும் அபிதமம்பீடகம் என மூன்று பிரிவாக உள்ளது.

**புத்தமதத்தின் வளர்ச்சி**

புத்தருக்குப் பின் புத்தமதக் கொள்கைகளைப் பரப்புவதில் திறமையான புத்த பிட்சுகள் ஈடுபட்டனர். உண்மை, உழைப்பு, எளிமை, பரிசுத்தம் இவைகளின் உறைவிடமே துறவற வாழ்க்கையாகும். நாளடைவில் பெண்களும் துறவிகளாக சேர்த்துக்கொள்ளப்பட்டனர். நாடு முழுவதும் பல புத்த மடாலயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. வட இந்தியா முழுவதும் புத்தசமயம் மிக விரைவாகப் பரவியது. இந்திய வரலாற்றில்புத்தசமயத்தின் வளர்ச்சி ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அதன் துரித வளர்ச்சிக்குப் பல காரணங்கள் இருந்தன.

**புத்தமதத்தின் எளிமை**

புத்த மதத்தின் இலக்கியங்களும் போதனைகளும் மக்கள் அனைவரும் எளிதில் அறியக்கூடிய பாலி மொழியில் இருந்தன. புத்த மதத்தை நிறுவிய புத்தர் எளிமையான வாழ்க்கை நடத்தி மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக திகழ்ந்தார். மேலும் அவருடைய கொள்கைகளை சாதாரண மனிதன் கூட எளிதில் புரியும்படி இருந்தது. அதில் கூறப்பட்டுள்ள எண் வழிகளும் எல்லா தரப்பு மக்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

**ஜாதிமுறைக்கு எதிர்ப்பு**

இந்து சமயத்தின் பல ஜாதிபிரிவுகள் இருந்தன. இதனால் சமுதாயத்தில் பல ஏற்றதாழ்வுள் ஏற்பட்டன. பிராமணர்கள் உயர்ந்தவர்களாக கருதப்பட்டனர். ஆனால் புத்த சமயம் ஜாதிப்பிரிவுகளில் நம்பிக்கை கொள்ளவில்லை புத்தசமயம் கடுமையாக எதிர்த்தது. இதனால் பல இந்து மக்கள் இந்து சமயத்திலிருந்து புத்த சமயத்திற்கு மாறினார்கள். அவர்கள் ஜாதிவேறுபாடற்ற ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைக்க நினைத்தனர்.

**புத்த சமயத்தின் செல்வாக்கு**

புத்த மதக் கொள்கைகள் நம்பிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தன. விழாக்கள், சடங்குகள், உயிர்ப்பலிகள், வேள்விகள் போன்றவற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இதனால் சமுதாயத்தில் அதிக செல்வாக்கு பெற்றது. மேலும் ஹர்ஷர், கனிஷ்கர், அசோகர் கலிங்கப்போருக்கு பின் புத்த மதத்தைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டார். தர்ம மகாமாத்திரர்களை அனுப்பி அறநெறிக் கொள்கைகளைப் பரவச் செய்தார். எகிப்து, சிரியா, இலங்கை மலேசியா தாய்லாந்து போன்ற வெளிநாடுகளிலும் புத்தமதத்தைப் பரப்பியபெருமை அசோகருக்கு உண்டு. தன் மகன் மகேந்திரனையும் மகள் சங்கமித்தரையையும் இலங்கைக்கு அனுப்பி புத்த மதபோதனைகளை பரவச் செய்தார். இந்தியாவில் பல இடங்களில் கல்தூண்களிலும், பாறைகளிலும் அறநெறிக் கொள்கைகளைப் பொறித்தார். புத்த சமய மாநாடுகள் கூட்டப்பட்டன.

**புத்த சங்கங்கள்**

புத்த மதத்தின் வளர்ச்சிக்கு புத்த சங்கங்களின் பணி மிகவும் இன்றியமையாதாகும். கி.மு. 483-ல் நாட்டிலுள்ள ராஜகிரிகம் என்னுமிடத்தில் முதல் புத்த சங்கம் கூட்டப்பட்டது. இதில் சுமார் 500 புத்த பிட்சுகள் பங்கேற்றனர். அஜாத சத்ரு மன்னரின் ஆதரவில் நடைப்பெற்ற இச்சங்கங்களின் புத்த சமயக் கருத்துக்கள் திரிபீடகமாக தொகுக்கப்பட்டன. அடுத்து கி.மு.387-ல் வைசாலியில் இரண்டாவது புத்த சங்கம் கூட்டப்பட்டது. இதில் சுமார் 700 துறவிகள் பங்கேற்றனர்.

கி.மு. 251-ல் பாடலிபுத்திரத்தில் மூன்றாவது புத்தசங்கம் கூட்டப்பட்டது. இதில் சுமார் 1000 பிட்சுகள் கலந்துக் கொண்டனர். இதன் பிறகு தான் புத்தமதம் வெளிநாட்டில் பரவ ஆரம்பித்தது. நான்காவது புத்த சங்கம் கி.பி.100-ல் கனிஷ்கரின் ஆட்சிக் காலதில் காஷ்மீரிலுள்ள குண்டலவனத்தில் நடைப்பெற்றது. இச்சமயத்தின் புத்தமதத்தில் மகாயானம் ஹீனயானம் என இரு பிரிவுகள் தோன்றின.

**புத்த சமயத்தின் உதவிகள்**

புத்தசமயத் துறவிகள் ஏற்படுத்திய மடங்களும், சங்கங்களும் ஏழை எளியவர்களின் வறுமையையும், பசியையும் போக்கின. மேலும் புத்த சமய இலக்கியங்கள் அவர்களுக்குக் கல்வியறிவை போதித்தன. புத்த சமயத்திற்கு எதிராக புதிய மதங்கள் எதுவும் தோன்றவில்லை. புத்த சமயம் நெகிலும் தன்மையுடையதாய் இருந்தது. இது தேச ஒற்றுமைக்கும் உலக சமாதானத்திற்கும் அடிப்படையாக அமைந்தது. கலையுலகின் வளர்ச்சிக்கும் இலக்கியத் துறையின் வளர்ச்சிக்கும் புத்த சமயம் பல பணிகளைச் செய்துள்ளது. புத்த பிட்சுகள் பல மடாலயங்கள் குகைக்கோயில்கள் போன்றவற்றை நிறுவி அதன் சுவர்களில் பல வண்ண ஓவியங்களை வரைந்தனர். குாந்தாரக் கலை இதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். திரிபீடகங்கள், ஜாதகங்கள் போன்றவை புத்த சமயத்தின் அரிய இலக்கியங்களாகும். இவை கல்வியின் மேம்பாட்டிற்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுகிறது. இவ்வாறு பல காரணங்களால் புத்த சமயம் விரைவாக இந்தியாவில் மட்டுமிலாது வெளிநாடுகளிலும் பரவியது.

**மகாயானம்**

கனிஷ்கரின் ஆட்சிக் காலத்தில் புத்த சமயத்தில் இரு பிரிவுகள் தோன்றின. அவை மகாயானம் மற்றும் ஹீனயானம் என அழைக்கப்பட்டன. இரு பிரிவுகளுக்குமிடையே பல வேறுபாடுகள் இருந்தன. மகாயானப் பிரிவில் புத்தர் கடவுளாகவே சித்தரிக்கப்பட்டார். மேலும் இப்பிரிவினர் உருவ வழிப்பாட்டில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர். புத்த ஆலயங்கள் கட்டப்பட்டன. புத்தருக்கு திருவிழாவும், ஊர்வலமும் நடத்தப்பட்டன. காந்தாரக் கலை வளர்ச்சிக்கு மகாயானப் பிரிவினரின் தொண்டுகள் அளவிடமுடியாததாகும். இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள இப்பகுதியில் சிற்பக் கலையின் வளர்ச்சி அதிகமாக காணப்பட்டது. பல வடிவங்களில் புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டன. மேலும் மகாயானப் பிரிவினர் சமஸ்கிருத மொழியை பின்பற்றினர்கள்.

**ஹீனயானம்**

புத்த சமயத்தின் ஆரம்ப காலம் ஹீனயானம் என அழைக்கப்பட்டதாக சிலர் கருதுகின்றனர். இப்பிரிவினர் உருவ வழிப்பாட்டினை முற்றிலுமாக வெறுத்தனர். இவர்கள் புத்தரை கடவுளாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆதற்கு மாறாக அவரை ஒரு புனிதத்தின் பிறவியாகடீவ கருதினார்கள். மேலும் இவகள் புத்த சங்கங்களின் செயல்களையும், புத்தரின் எண் வழிகளையும் மதித்து அவற்றிக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இவர்கள் பாலிமொழியை ஆதரித்தனர். ஆடம்பர திருவிழாக்களையும், சடங்கு முறைகளையும் வெறுத்தனர். ஏளிமையான வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். எதிலும் நல்ல நம்பிக்கை கொள்வதில் உறுதியாக இருந்தனர். இவ்வாறு ஏற்பட்ட இருபிரிவுகளும் பிற்காலத்தில் புத்த மதத்தின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தன.

**புத்த மதத்தின் வீழ்ச்சி**

1. இந்து மதத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி புத்த சமயத்தின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.குப்தர்களின்ஆட்சியின் இறுதியில் சமஸ்கிருத மொழி பிரபலமானது. பிரமாணர்கள் மீண்டும் சமுதாயத்தில் ஏற்றம் பெற்றனர். இந்து மத தத்துவதங்கள் மீண்டும் புத்துயிர் பெற்றன. சைவமும்இ வைணவமும் மக்களிடையே பிரசித்தி பெற்றன. எனவே புத்த சமயம் படிப்படியாக செல்வாக்கிழந்தது.

2. அசோகர், ஹர்ஷர் மற்றும் கனிஷ்கர் போன்ற மாமன்னர்களின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் புத்த சமயத்திற்குப் பல அரிய தொண்டுகளைச் செய்தனர். ஆனால் இவர்களுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் புத்த சமயத்திற்கோ அதன் வளர்ச்சிக்கோ எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவிலை.

3. புத்த சங்கங்கள் ஆரம்ப காலத்தில் நல்ல முறையில் செயல்பட்டன. ஆனால் நாளடைவில் அவை மக்களின் நம்பிக்கையை இழந்தன. பல புத்த பிட்சுகள் தவறான வழியில் சென்றனர். மேலும் புத்த விவகாரங்களில் பதவிப் போட்டியும்இ பொருள் சேகரிக்கும் போட்டியும் தலைதூக்கின. அவர்கள் ஆடம்பரவாழ்க்கையில் நாட்டம் கொள்ள தொடங்கினர்.

4. உருவ வழிபாடு புத்த சமயத்தின் வீழ்ச்சிக்கு மற்றொரு முக்கிய காரணமாகும். இந்து சமயத்தின் உருவ வழிபாடு அதிகரித்ததின் விளைவாகவே மக்கள் ஒரு புதிய சமயத்தை வரவேற்றனர். ஆனால் புத்த சமயத்தில் ஏற்பட்ட மகாயானம் மற்றும் ஹீனயானம் என்ற பிரிவினர்களுக்கிடையே ஏற்பட்ட வேறுபாடுகள் மக்களை சிந்திக்க வைத்தன. மகாயான பிரிவினர் உருவ வழிப்பாட்டில் அதிக நம்பிக்கை வைத்து புத்தருக்கு பல கோயில்களையும் பல வடிவங்களான உருவங்களையும் செய்து வழிப்பட்டனர். இது மக்களிடையே புத்த மதத்தின் மீது வெறுப்பையே ஏற்படுத்தியது.

5. கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில இந்தியாவில் ஊடுருவிய ஹீணர்கள் பல புத்த மடாலயங்களை கொள்ளையடித்துச் சென்றனர். அராபியர்களின் படையெடுப்பு மற்றும் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஏற்பட்ட முகாலயர்களின் படையெடுப்பு போன்றவற்றால் புத்த மதம் வீழ்ச்சியுற்றது. ஆயிரக்கணக்கான புத்தத்துறவகள் கட்டாயமாக முஸ்லீம் மத மாற்றம் செய்யப்பட்டனர்.

6. புத்த மதக் கொள்கைகள் நாளடைவில் மக்களிடையே செல்வாக்கை இழந்தது. நாட்டில் ஏற்பட்ட போட்டியும், பொறாமையும் புத்த சமயத்தின் அகிம்சை கொள்கைகளுக்கு ஒரு சவாலாக அமைந்தது. இராஜபுத்திரர்களின் எழுச்சி இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு ஒரு ஆதரவாக இருந்தது. மேலும் அப்போதைய அரசியல் சூழ்நிலைகள் அவர்களை அகிம்சை கொள்கைக்கு மாறாகச் செயல்பட வைத்தன. எனவே படிப்படியாக புத்த மத தத்துவங்கள் மறைந்தன.

7. புத்தருடைய மறைவிற்குப் பிறகு அவரைப் போன்ற ஒரு திறமையான தலைமை புத்த மதத்திற்கு கிடைக்கவில்லை. எனவே புத்த மத் அதன் சிறப்புத் தன்மையை இழந்தது. இவ்வாறு புத்த சமயம் தான் தோன்றிய மண்ணிலிருந்து படிப்படியாக மறையத் தொடங்கியது. ஆனால் அது பர்மாஇ நேபாளம்இ இலங்கை, தாய்லாந்து, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளில் அதிகளவில் பரவியுள்ளது. கம்போடியா, லாவோஸ், திபெத்து, பூடான் போன்ற நாடுகளட புத்த சமய நாடுகளாகவே அறிவிக்கப்பட்டுள்ளன. இது தவிர இன்று தென் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிலும் புத்த மதத்தினர் உள்ளனர். இன்று உலகில் சுமார் 6 சதவீதம் பேர் புத்த மதத்தை பின்பற்றுபவர்கள் ஆவார்கள். இந்தியாவில் மகாராஷ்டிராஷ, காஷ்மீர், அருணாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் புத்த சமயத்தினர் அதிகமாக வாழ்கின்றனர்.

## பாரசீகப் படையெடுப்பு

இந்தியாவிற்கும் வாரசீகத்திற்குமிடையே பண்டைகாலம் முதல் தொடர்பு இருந்து வந்தற்கான ஆதாரங்கள் உள்ளன. இந்தோ ஆரியர்களுக்கும் பாரசீக வாணிபர்களுக்குமிடையே வியாபாரத் தொடர்பு இருந்து வந்தது. பாரசீக மதமான சொராஸ்டிரிய மதத்தை தோற்றுவித்த சொராஸ்டிரியருக்கு இந்திய வேதங்களை பற்றிய

அறிவு இருந்தது. சொராஸ்டிரிய மதத்தின் புனித நூலான செனட் அவஸ்தாவில் இந்தியக் கடவுள்களான இந்திரன், வாயு, மித்திரன் ஆகியோர்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு இருந்த உறவானது பாரசீகத்தில் 'அகிமீனியப் பேரரசு' (Achase, emian empire) தோன்றியதற்குபின்னர் அதிகமாகியது. கி.மு. ஆறாம் நூற்றாண்டில்இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் நிலவிய அரசியல் நிலை இந்த அகிமீனிய பேரரசர்களை இந்தியாவின் மீது படையெடுப்பதற்குத் தூண்டியது. வடமேற்கு இந்தியாவில் இருந்த சிறுசிறு அரசுகள் ஒன்றையொன்று தாக்கி சண்டையிட்டுடன் கொண்டிருந்தன. இச்சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு அகிமீனியப் பேரரசர் சைரஸ் என்பவர் இந்தியாவின் மீது படையெடுத்தார். இவ்வாறு பாரசீப் படையெடுப்பு ஆரம்பானது.

**முக்கிய படையெடுப்புகள்:**

பாரசீக அரசர் முதலாம் சைரஸ் (கி.மு.558-530) என்பவர் காந்தாரத்தை தாக்கி கைப்பற்றிக் கொண்டார். இவருக்குப் பின் பதவியேற்ற காம்பிசஸ் (Cambyses கி.மு.530-522) எகிப்தில் போரிட வேண்டியதிருந்ததால் இந்தியப் படையெடுப்பைப் பற்றி சிந்திக்கவில்லை.

இவருக்குப்பின் பதவியெற்றமுதலாம் தாரியஸ் (Darius 522-530 BC) மிகவும் புகழ் வாய்ந்த மன்னராவார். இவர்காலத்தில் தான் பாரசீகர்கள் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார்கள் என்று உறுதியாகக் கூறலாம். இவரது படையெடுப்புகளைப் பற்றி இவரது கல்வெட்டுகள் மூலமாகவும்இ ஹெரடோட்டசின் குறிப்புகள் மூலமாகவும் நாம் அறிய முடிகிறது. இந்தியாவிலுள்ள பஞ்சாப் சிந்து ஆகிய பகுதிகளை தனது பேரரசுடன் இணைந்து அவைகளைத் தனது பேரரசின் இருபதாவது மாநிலமாக (20th satrap) அமைத்துக் கொண்டார். தூரியசின் இந்திய பகுதிகள் செல்வச் செழிப்புள்ள பகுதிகளாக விளங்கியது. அவரது பேரரசின் வருமானத்தினல் மூன்றில் ஒரு பகுதி இந்தியப் பகுதிகளிலிருந்தே கிடைத்தது. இவர் சிந்துவை ஆராய்வதற்காக ஸ்கைலாக்ஸ் (Skylax) என்பவர் தலைமையில் ஒரு கப்பற்படையை அனுப்பினார். இவ்வாறு இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திய தாரியஸ் கி.மு. 490-ல் மரணமடைந்தார்.

தாரியசுக்குப் பிறகு பதவிளேற்ற செர்க்லஸ் (Xerxes, 486&465Bc) இந்தியாவுடன் தொடர்ந்து உறவு கொண்டிருந்தார். மேலும் இவரது ராணுவத்தில் இந்தியப்படைப் பிரிவு ஒன்றும் இருந்தது. இவரது காலத்தில் பாரசீகர்களுக்கும் கிரேக்கர்களுக்குமிடையே போர் ஏற்பட்டதாக ஹெரட்டோட்டஸ் குறிப்பிடுகிறார். போர் கி.மு.479-ல் பிளாட்டகா(lataca) என்ற இடத்தில் நடைபெற்றது. இந்த போரில் இந்திய வீரர்களும் குதிரைப்படையும் போரிட்டன. போரில் அகிமீனிய மன்னர் செர்க்ஸஸ் தோற்கடிக்கப்பட்டார்.

இந்தத் தோல்விக்குப் பின்னர் பாரசீகர்களின் வலிமை குறைய ஆரம்பித்தது. அதன்பின் அவர்களால் இந்தியாவில் மேலும் முன்னேற்றம் அடைவது இயலாது போய்விட்டது. (கி.மு.300) கபலம் வரை பாரசீகர்கள் சிந்து பகுதியுடன் தொடர்பு கொண்டிருந்தனர். மூன்றாம் தரயஸ் 'ஆர்பில்லா' என்ற இடத்தில் அலக்சாந்தரால் தோற்கடிக்கப்பட்டார். இந்த பெரும் தோல்விக்குப் பின்னர் சிந்துஇ பஞ்சாப் ஆகிய பகுதிகளிலிருந்த பாரசீகர்களின் ஆட்சி முடிவடைந்ததாகக் சொல்லப்படுகிறது.

### பாரசீகப் படையெடுப்புகளின் விளைவுகள்

1) சுமார் நூறு ஆண்டுகளுக்கு மேல் நீடித்த பாரசீக இந்தியஉறவின் விளைவாக இவ்விரு நாடுகளுக்கிடையே வாணிபம் செழித்தோங்கியது.
2) பாரசீகப் படையெடுப்புகள் அலக்சாந்தரின் இந்தியப் படையெடுப்புக்கு வழிகாட்டியது.
3) இரு நாடுகளுக்கிடையே பண்பாட்டுத் தொடர்புகள் வளர்ச்சியடைந்தன. பாரசீக எழுத்தாளர்கள் இந்தியாவில் அராபிக் எழுத்து முறையைப் புகுத்தினர். கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை வடமேற்கு இந்தியாவில் நிலவி வந்த கரோஸ்தி (முாயசழளவாை) எழுத்து முறை பாரசீகத் தொடர்பால் ஏற்பட்டதேயாகும். இந்த எழுத்துக்கள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டன.
4) இந்தியத் தத்துவஞானிகளும்இ அறிஞர்களும் பாரசீகத்திற்குச் சென்றனர். மௌரிய பேரரசின் அரசர்களிடம் பாரசீக உயர்குடியினர் பணியாற்றினர். குறிப்பாகப் பாரசீகப் பெண்கள் மௌரிய அரசர்களுக்கு பாதுகாவலர்களாக விளங்கினர்.
5) பாரசீக கலையின் சிறப்புத் தன்மைகள் இந்தியாவில் பலவின. மௌரியர் காலத்துக் கட்டிடங்களிலும்இ தூண்கல்வெட்டுகளிலும் பாரசீகப் பண்புகள் காணப்படுகின்றன. மேலும் பாரசீகத் தொடர்பினால் இந்திய நாணயங்களும் ஒரு சில மாறுதல்கள் அடைந்தன.

இவ்வாறு நூறு ஆண்டுகாலம் நிலவிய இந்திய பாரசீத் தொடர்பு இந்தியாவில் பல் விளைவுகளை ஏற்படுத்தின. ஆனால் நிரந்தரமான எந்த பாதிப்புகளையும் ஏற்படுத்தவில்லை என்று கூறலாம். அதே நேரத்தில் இந்திய மாசிடோனியத் தொடர்பை விட பாரசீகத் தொடர்பு அதிகமான பயன்களை அளித்ததாகக் கூறலாம்.

## மாசிடோனியப் படையெடுப்பு

மாசிடோனிய மன்னர் இரண்டாம் பிலிப் என்பவரின் மகனாக அலக்சாந்தர் கி.மு.356-ல் பிறந்தார். அவர் தனது பதிமூன்றபம் வயது முதல் பதினாறாம் வயது வழர கிரேக்க தத்துவ ஞானியான அரிஸ்டாட்டில் என்பவரிடம் மாணவராக சேர்ந்து கல்வி கற்றார். ஹோமர் எழுதிய இலியட் என்ற காவியத்தை ஆர்வமுடன் படித்தார். கு.மு.356-ல் தனது தந்தை கொலை செய்யப்பட்ட பின்பு இருபதாம் வயதில் மாசிடோனிய மன்னரானார்.

ஆட்சி பீடத்தில் அமர்ந்த அலெக்சாந்தர் தனக்கு ஏற்பட்ட எதிர்ப்புகளையெல்லாம் அடக்கினார். வுலிமையான படை ஒன்றை அமைத்து கொண்ட அலக்சாந்தர் கிரேக்கர்களை முற்றிலும் அடக்கினார். இதன்பிறகு தான் அசியாவின் மீது படையெடுக்கும் எண்ணம் கொண்டார். தனது வீரமும்இ ஆற்றலற்ற மூன்றாம்தரயசின் கீழ் இருந்த அகிமீனியப் பேரரசின் சீர்கேடுகளும் அலக்சாந்தருக்குத் துணை புரிந்தன. கு.மு.331-ல்அர்போலா (யுசடிநடய) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் மூன்றாம் தரயசைத் தோற்கடித்து அகிமீனியப் பேரரசை முழுவதுமாக கைப்பற்றினார் அலெக்சாந்தர். ஆதன் பிறகு தான் அகிமீனியப் பேரரசின் கிழக்கு பகுதியில் இருந்த இந்திய மாநிலத்தின் மீது தனது கவனத்தைத் திருப்பினார்.

### அலெக்சாந்தரின் இந்தியப் படையெடுப்பிற்கான காரணங்கள்

a) உலகப் பேரரசனாக ஆக வேண்டும் என்ற ஆசை அலெக்சாந்தரிடம் இருந்தது. தனக்கு தெரிந்திருந்த நாடுகளையெல்லாம் தன் வசமாக எண்ணம் கொண்டார்.

b) இந்தியாவின் செழிப்பையும்இ செல்வத்தை பற்றியும் ஹெரட்டோட்டஸ் மற்றும் பல ஆசிரியர்கள் மூலம் அறிந்து கொண்டிருந்த அலெக்சாந்தர் இந்தியாவை கைப்பற்ற நினைத்தார்.

c) முன்பு பாரசீக இந்தியப் படைகள் கிரேக்க நாட்டின் மீது படையெடுத்ததால்இ பாரசீகப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் அலெக்சாந்தர் இந்தியாவை தாக்க எண்ணினார்.

d) இயல்பாகவே அலெக்சாந்தரிடம் நிலநூல் ஆராய்ச்சி அறிவு இருந்ததால் புதிய இடங்களைக் கண்டு ஆராய அவர் மனம் துடித்தது.

மேற்கண்ட காரணங்களால் அலெக்சாந்தர் இந்தியாவின் மீது படையெடுத்தார்.

**அலக்சாந்தர் படையெடுப்பின் போது வடமேற்கு இந்தியநிலை**

அலக்சாந்தரின் படையெடுப்பின் போது வடமேற்கு இந்தியாவில் பல அரசர்கள் ஆண்டு வந்தனர். சுயாட்சியுடன் கூடிய பல குடியரசு நாடுகளும் ஆங்காங்கே காணப்பட்டன. தட்சசீலத்தை ஆண்டு வந்த அம்பி (Ambhi) அபிசார மன்னர்இ சீலம் நதிக்கும் சீனாப் நதிக்கும் இடைப்பட்ட நாட்டை ஆண்டு வந்த போரஸ் (Poros) ஆகியோர் சிறந்த மன்னர்கள் ஆவார்.

இவர்கள் தவிர கதோய்இ ஆஸ்ட்ரேகேய்(முயவாயழைஇ முஒலனசயமழை) போன்ற போர்க்குணமுடைய மலைசாதி மக்களும் வாழ்ந்து வந்தனர். சிந்து பகுதியில் இருந்த முசிகேனஸ் பேரரச (Kingdo, of Ousikanos) ஸ்பார்ட்டர் கிரிட் போன்ற நகர அரசுகள் போன்று செயல்பட்டு வந்தது. இந்த அரசர்களுக்கிடையே ஒற்றுமை காணப்படவில்லை. அரசர்களும் மற்ற சிறுசிறு கூட்டத்தினரும் தங்களுக்குள் அடிக்கடி போரிட்டுக் கொண்டிருந்தனர். இது வடமேற்கு இந்தியாவின் ஒற்றுமையையும்இ வலிமையையும் வெகுவாகப் பாதித்தது.

**அலெக்சாந்தரின் இந்திய படையெடுப்பு**

கி.மு. 327இ மே மாதம் அலெக்சாந்தர் இந்துகுஸ்மலைத் தொடரிலிருந்து இந்தியா நோக்கிப் புறப்பட்டார். கி.மு.326இ பிப்ரவரியில் சிந்துநதியைக் கடந்து தட்சசீலத்தை அடைந்தார். ஆதன் மன்னரான அம்பி அலெக்சாந்தர் எதிர் சென்று அம்பியை சிறப்பாக நடத்தினார். ஆதன் பிறகு சீலம் நதிக்கும் சீனாப் நதிக்கும் இடையிலுள்ள பிரதேசங்களை ஆண்டு வந்த போரஸ் என்பவரை தனது மேலாண்மைக்குப் பணியுமாறு தூதுவர்களிடம் சொல்லி அனுப்பினார். ஆனால் போரஸ் பணிந்துவிடாமல் கி.மு.326 ஜீலை மாதம் அலெக்சாந்தருக்கும் பேரரசுக்குமிடையே சீலம் நதிக்கரையில் கடும் போர் நடந்தது. போரஸ் தீரத்துடன் போரிட்டார். போரஸின் மகன் போரில் கொல்லப்பட்டார். ஒன்பது காயங்களுடன் கைதியாகப் பிடிக்கப்பட்டார். தன்கை எவ்வாறு நடத்த வேண்டும் என்று பேரரசிடம் அலெக்சாந்தர் கேட்டார். அதற்கு போரஸ் ‘தன்னை ஒரு மன்னர் போன்று நடத்த வேண்டும்’ என்று வீரத்துடன் பதிலளித்தார். பேரரசின் வீரத்தை பாராட்டிய அலெக்சாந்தர் அவரது பேரரசையும் மேலும் தான் வென்ற பதினெந்து குடியரசுகளையும் பேரரசுக்கு அளித்து பாராட்டினார் என்று அறிவோம்.

இதன் பிறகு அலெக்சாந்தர் பியாஸ் நதியை நோக்கிச் சென்றார். அப்போது அலெக்சாந்தரின் படைவீரர்கள் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். போரில் பலர் மடிந்து விட்டார்கள். எனவே எஞ்சிய வீரர்கள் தாய்நாடு திரும்பவேண்டுமென விரும்பினார். ஏவ்வளவோ

அலெக்சாந்தர் பேசியும் அது எடுபடாமல் போயிற்று. எனவே சொந்த நாட்டிற்குத் திரும்ப வேண்டியதாயிற்று. தனது படையின் ஒரு பகுதியை நியர்க்ஸ் (Nearchus) என்ற தளபதியின் தலைமையில் கடல்மார்க்கமாக யூப்ரட்டீஸ் நதியின் முகதுவாரத்தை நோக்கிஅ னுப்பி வைத்தார்.

அலெக்சாந்தர் ஒரு படையுடன் கி.மு.325 அக்டோபர் மாதம் இந்தியாவை விட்டுப் புறப்பட்டார். தரைமார்க்கமாக ஹெட்ரோசியா வழியாக வடமேற்கு நோக்கி சென்றார். ஏழு மாத பயணத்திற்கு பிறகு கி.மு.324, மே மாதம் பாரசீகத்திலுள்ள சூசா (ளுரளய)நகரை அடைந்தார். பின்னர் திடீர் என்று நோய்வாய்பட்டு கி.மு.323 ஜீன் மாதம் பாபிலோனியாவிலட மரணமடைந்தார் மாவீரன் அலக்சாந்தர்.

**இந்தியாவில் அலெக்சாந்தர் செய்த நிர்வாக ஏற்பாடுகள்**

அலெக்சாந்தர் உண்மையில் இந்தியாவில் தங்கியது பத்தொன்பது மாதங்களேயாகும். அந்த பத்தொன்பது மாதங்களிலும் பத்து மாதங்கள் பிராயாணங்களிலேயே செலவிட்டார்.இந்த குறைந்த காலத்திற்குள் அலெக்சாந்தர் தான் வென்ற இந்தியப் பகுதிகளை ஏழு சத்ராப்புகளாகப் பிரித்து நிர்வாகம் செய்ய ஏற்பாடு செய்தார். சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை பராமரிக்கபர இடங்களில் மாசிடோனிய கிரேக்க படைகள் நிறுத்தப்பட்டன. ஆனால் போரினால்இந்தியா அடைந்த நஸ்டங்கள் சிறிது காலத்தில மாறின. கிரேக்க நாகரிகத்தை முழுவதுமாக இந்தியா ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே தான் அலெக்சாந்தரின் வெற்றிகள் முழுவதுமாக மங்கி போயின. ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாகவே மாசிடோனிய ஆதிக்கத்தை சந்திரகுப்த மௌரியர் தகர்த்தெரிந்தார். இந்திய வரலாற்றின் வரலாற்றுஆசிரியர்கள் எவரேனும் அலெக்சாந்தரின் படையெடுப்பைப் பற்றி தெளிவாக எழுதவில்லை. இந்திய நிலையங்களில் கிரேக்க கருத்துக்கள் காணப்படவில்லை. மேளரியரின் உடை உள்நாட்டு முறையில் அமைக்கப்பட்டிருந்தது என்று கௌடில்யரும்இ மெகஸ்தனிசும் குறிப்பிடுகின்றனர். எனவே அலெக்சாந்தரின் படையெடுப்பு உடனடியாக எந்த விளைவுகளை ஏற்படுத்தாவிட்டாலும் பிற்கால இந்தியாவை ஓரளவு பாதித்தது.

**அலெக்சாந்தரின் படையெடுப்புகளின் விளைவுகள்:**

**a) அரசியல் ஒற்றுமை ஏற்படுத்தப்பட்டது**

அலெக்சாந்தரின் படையெடுப்பினால் வடமேற்கு இந்தியாவின் அரசியல் ஒற்றுமை ஏற்படுத்தப்பட்டது. இது மிக முக்கியமான விளைவாகும். ஆலெக்சாந்தர்தான் வென்றபகுதிகளை பல ‘சாத்ரப்’ களாகப் பிரித்து மாசிடோனிய மற்றும் பாரசீகத் தலைவர்கள் பலரை ஆட்சி செய்யுமாறு ஏற்பாடு செய்தா: இந்தியத் தலைவர்கள் பலரும் அதற்கு உதவி செய்தார்கள். சிந்து நதிக்கு அப்பால் உள்ள பகுதிகளில் சிற்றரசர்களை தலைமையாகக் கொண்ட பல பாதுகாப்பு நாடுகளை ஏற்படுத்தினார். இவ்வாறு தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்த பல சிற்றரசுகளையும்இ பல இனத்தவர்களையும் வென்று அவர்களது ஆட்சிப் பகுதிகளை ஒன்றாக இணைத்ததன் விளைவாக அரசியல் ஒற்றுமை ஏற்பட்டது. இது பின்னர் சந்திரகுப்த மௌரியர் ஒரு பேரரசை நிறுவ வழி வகுத்தது.

**b) போக்குவரத்தும் வாணிகமும் பெருகியது**

புதிய கடல் வழிகளும்இ நில வழிகளும் கண்டுபிடிக்கப்பட்டதால் ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு ஏற்பட்டது. ஆலெக்சாந்தர் அமைத்த சாலைகள் பிற்காலத்தில் வாணிபப் போக்குவரத்திற்குப் பயன்பட்டன. இதனால் வாணிபத் தொடர்பு ஏற்பட்டு இந்திய வாணியம் வளர்ச்சியடைந்தது. இந்தியர்கள் கிரேக்கர்களிடமிருந்து நறுமணப் பொருட்களையும்இ பிற ஆடம்பரப் பொருட்களையும் தயாரிக்கக் கற்றுக் கொண்டார்கள்.

c) கலைவளர்ச்சி படையெடுப்பால் இந்தியக் கலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. இந்தியக் சிலைகள் மற்றும் சிற்பவேலைப்பாடுகளுக்கு பாக்டீரிய (Bactria) விலிருந்து சிற்பிகள் வரவழைக்கப்பட்டனர். இதனால்இந்தியக்கலையும் கிரேக்ககலையும் இணைந்து புதியதொரு கலையான 'காந்தார கலை' தோன்றியது. இவை தவிர சிந்து நதி இரண்டாகப் பிரிகின்ற பட்டலா (Patala) என்ற இடத்தில் அலெக்சாந்தர் துறைமுகம் ஒன்றை அமைத்தார். மேற்கு ஆசியாவில் இவரது பெயராலேயே நகரம் ஒன்று அமைக்கப்பட்டது. ஆதற்கு அலெக்சாந்திரியா என்று பெயர். இந்த நகர அமைப்பின் அடிப்படையில் இந்தியாவிலுமம் பல நகரங்கள் அமைக்கப்பட்டன.

**d) நாணயமுறையில் வளர்ச்சி:**

அலெக்சாந்தரின் படையெடுப்புக்கு முன்பு இந்திய நாணயங்கள் ஒழுங்கின்றி காணப்பட்டன. ஆனால் படையெடுப்பின்விளைவாக கிரேக்க நாடுகளுக்கும் இந்தியாவுக்மிடையே தொடர்பு ஏற்பட்டதால் இந்திய நாணயங்கள் நன்கு சீர்படுத்தப்பட்டு கிரேக்க வடிவில் வெளியிடப்பட்டன. பழைய இந்திய நாணயங்கள் மறைந்து போயின. இவ்வாறு நாணய முறைவளர்ச்சியடைந்தது.

**e) படையமைப்பில் மாற்றம்:**

அலெக்சாந்தரின் படையெடுப்புக்கு முன்புவரை இந்தியாவில் தேர்ப்படைக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஆனால் படையெடுப்புக்குப் பின்னர் யானைப்படை முக்கியத்துவம் பெற்றது. குதிரைப்படையும் போர்களில் அதிகமாக பயன்படுத்தப்பட்டது.

f) கிரேக்கர்களுடன் ஏற்பட்ட தொடர்பினால் இந்தியாவில் நிலவி வந்த பழமையான வானசாஸ்திர முறை கைவிடப்பட்டு கிரேக்க வானசாஸ்திரம் பணன்படுத்தப்பட்டது. மேலும் கிரேக்க கணிதம் மருத்துவம் ஆகியவற்றையும் இந்தியர் கற்றுக் கொண்டனர். இது அறிவியல் வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

**g) வரலாற்றின் வளர்ச்சி:**

அலெக்சாந்தருடன் வந்த நிலவியல் ஆய்வாளர்களும்இ வரலாற்றாசிரியர்களும் அக்காலத்து இந்தியாவில் அரசியல்இ சமுதாய நிலைகளை எழுதியுள்ளார்கள். இது இந்திய வரலாற்றுக்கு செய்த மிகப்பெரிய சேவையாகும் ஏனெனில் அலெக்சாந்தரின் படையெடுப்பு எந்த ஆண்டில் நிகழ்ந்தது என்ற திட்டவட்டமான குறிப்பு நமக்கு கிடைக்கிறது. எனவே இதன்பிறகு இந்திய வரலாற்று நிகழ்ச்சிகள் திட்டமான

ஆண்டுகளைக் குறிப்பிட்டுத் தொகுக்கப்படவழிவகுத்தது. இதனால் அலெக்சாந்தரின் படையெடுப்பு இந்திய வரலாறு வளர்ச்சியடையக் காரணமானது.

**இந்திய வரலாற்றில் அலெக்சாந்தரின் இடம் :**

அலக்சாந்தரின் இந்தியப் படையெடுப்பைப் பற்றி எந்த இந்திய வரலாற்றாசிரியர்களும் அப்போது குறிப்பிடாவிட்டாலும்இ இந்திய வரலாற்றில் அலெக்சாந்தர் முக்கிய இடம்
பெற்றுள்ளார். மாபெரும் வீரரும் தளபதியுமான அலெக்சாந்தர் தான் எதிர்பார்த்தது மாதிரி எளிதாக வெற்றியடைய முடியவில்லை. எனவேதான் பல இடங்களில் கொடுரமாக நடந்து கொண்டார். மேலும் அப்போது வலிமையாக இருந்த மகதப் படையை அவர் எதிர் கொள்ளவில்லை.

அலெக்சாந்தர் இந்தியாவில் பத்தொன்பது மாதங்களே தங்கியதால் நகரங்களை அமைத்து கிரேக்க கலாசாரத்தை நிறுவி அதை வேரூன்றி வளரச் செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. அதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சி வெற்றியளிக்க வில்லை மேலம் அவர் இந்தியாவில் குடியேற்றிய மாசிடோனிய பாரசீக மக்களிடம் ஒற்றுமை இல்லை. அதே நேரம் அந்நியரின் ஆதிக்கத்தை அகற்ற மக்களும் பதவியை இழந்த அரசர்களும் போராட்டத்தில் இறங்கினார்கள். இவ்வாறு அலெக்சாந்தர் எதிர்பார்த்தது நடைபெறாமல் இந்திய மண்ணில் அவரது பெருமை குறையவில்லை.

கி.மு. 323-ல் அலெக்சாந்தர் இறந்த செய்தியைக் கேட்டவுடன் பஞ்சாப் குழப்பமான நிலையை அடைந்தது. பல கிரேக்க மாசிடோனியர்கள் கொல்லப்பட்டனர். எஞ்சிய கடைசிய கிரேக்கத்தலைவரான யூடமஸ் (Eudamus) இறந்தவுடன் மாசிடோனியப் படையெடுப்பின் அடையாளம் கூட இல்லாமல் மறைந்து விட்டது. மொத்தத்தில் அலெக்சாந்தரின் இந்திய வெற்றி ஒரு பயனில்லாத வெற்றியே ஆகும்.

# மௌரியப் பேரரசு

## அசோகர்

இந்திய வரலாற்றில் மட்டுமில்லாது, உலக வரலாற்றிலேயே தனக்கென்று ஒரு உன்னத இடத்தை வகிக்கும் அசோகரை மாமன்னர் என அழைப்பிதழில் வியப்பில்லை. இடைவிடாத படையெடுப்புகள் மூலம் தன்னுடைய பேரரசை விரிவுபடுத்த நினைத்த அசோகருக்கு “கலிங்கபோர்” ஓர் திருப்புமுனையாக அமைந்தது. அதன்பிறகு அன்பும் அமைதியுமே இவ்வுலகை ஆளமுடியும். அதுவே நிரந்தரமானது எனக்கூறிதன் வாழ்க்கையில் அதை நிருபித்தார். ஆசோகரின் ஆட்சிக் காலம் இந்திய வரலாற்றில் ஒரு ஒளிமிக்கக் காலமாக உள்ளது. மேலும் அவருடைய ஆட்சியில் முதன்முறையாக சமயத் துறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அசோகரின் வாழ்க்கை இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. குலிங்கப் போருக்கு முன்புவரை அசோகர் கொடிய எண்ணங்களைக் கொண்டிருந்தார். ஆனால்,

கலிங்கப் போருக்குப்பின் புத்த மதத்துறவியாகவே வாழ்ந்து புத்த மதத்திற்கு பல அரிய தொண்டுகளைச் செய்துள்ளார்.

**இளமைக்காலம்**

அசோகரின் பிறப்பு பற்றி பலகருத்துக்கள் நிலவுகின்றன. அசோகருடைய தாயார் சம்பா நகரத்தில் வசித்து வந்த சுமத்திராங்கி என்ற பிராமணப் பெண்ணாகும். ஆனால் மகாவம்சம் போன்ற புத்தமத நூல்கள் அசோகரின் தாயின் பெயர் தர்மா என்று கூறுகின்றன. மேலும் அசோகர் பிந்து சாரரின் இரண்டாவது மகனாவார். இவர் அரியணையேறுவதற்காக தன்னுடைய 99 சகோதரர்களை கொன்றதாகவும் ஒரு கருத்து உள்ளது. இதற்காகவே அசோகர் முடிசூட்டிக் கொள்ள சுமார் 4 வருடங்கள் ஆகியதாகவும் சொல்லப்படுகிறது.

அசோகரின் இளமைப் பருவம் பற்றி ‘‘அசோகாவதனம்’’ என்ற நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. துன்னுடைய 18வது வயதில் அவந்தி நாட்டு அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட அசோகர் தட்ச சீலத்திலும்இ உஜ்ஜயினியிலும் ஏற்பட்ட கலகத்தை அடக்கி மாபெரும் வெற்றியை தன் தந்தையாருக்கு தேடித்தந்தார். விதிஸா நகர வணிகர் ஒருவரின் மகளான தேவியை மணமுடித்தார். இவர்களுக்குப் பிறந்தவர்கள்தான் மகன் மகேந்திரனும்இ மகள் சங்கமித்திரையும் ஆவார். அசோகர் புத்தமதத்திற்கு மாறுவதற்கு அவரது மனைவி தேவிதான் காரணம் என்றும் கூறுவர்.

இளமைப் பருவத்தில் அசோகர் பல கொடிய எண்ணங்களைக் கொண்டிருந்தார். வேட்டையாடுதல் அவருக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு ஆகும். தினமும் அவரது அரண்மனையில் விருந்திற்காக நூற்றுக்கணக்கான மயில்களும், ஆடுகளும் கொல்லப்பட்டன. குற்றவாளிகளுக்கு கழுவிலேற்றுதல், சாட்டையடி, தீயின் மீது நடக்கச் செய்தல் கொடிய விசப் பாம்புகளைச் கொண்டு கொத்தச் செய்வது, தலைகீழாக கட்டித் தொங்கவிடுதல், கண்களைக் குருடாக்குதல் போன்ற தண்டனைகள் கொடுக்கப்பட்டன. தன்னுடையத் தந்தையர் மரணப் படுக்கையில் இருக்கும்போதே தன் சகோதரர்களை இரக்கமின்றி கொன்றுவிட்டு பின்னர் அரியனையைக் கைப்பற்றியவர் அசோகர். ஆனால் கலிங்கப் போருக்கு பின் அசோகர் தன்னை முற்றிலுமாக மாற்றிக் கொண்டார்.

**கலிங்கப் போர் (கி.மு.261)**

சந்திர குப்தர்இ பிந்து சாரர் போன்றவர்கள் பலமுறை தென்னிந்தியப் படையெடுப்பை மேற்கொண்டனர். ஆனால் தென்னாட்டில வலிமையுடன் இருந்த சேரஇ சோழஇ பாண்டிய மன்னர்களையுமம் கலிங்க நாட்டையும் வெற்றி கொள்ள இயலவில்லை. ஆனால் அசோகரின் ஆட்சியில் 13-வது ஆண்டுகலிங்கப்போர் கி.மு.261-ல் நடைப்பெற்றது. அசோகரின் 13-வது பாறைக் கல்வெட்டு ‘‘இப்போர் பற்றிக் கூறுகிறது. இப்படையெடுப்பு நன்கு திட்டம் தீட்டிய பின்னரே நடத்தப்பட்டது. அசோகரின் வாழ்வில் ஒரு பெரும் திருப்பு முனையாக அமைந்த இப்போர் பல வழிகளில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இப்போரில் சுமார் 1 லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் காயமடைந்தனர். பலர் நாடு கடத்தப்பட்டனர்.அசோகரைத் துணிவுடன் எதிர்க்கொண்ட அந்த கலிங்க நாட்டு மன்னனைப் பற்றி தெளிவாகத் தெரியவில்லை. போர்க்களத்தில் அசோகர் கண்ட காட்சிகள் அவரை மெய்சிலிர்க்க வைத்தன. போரினால் ஏற்பட்ட கொடுமைகளையும், அழுக்குரல்களையும் இரத்த ஆறுகளையும் கண்ட அசோகர் மனம் மாறினார். இனி உயிர்களைக் கொல்வதில்லை. போரின்

பேரொலி கேட்டது போதும் இனி தர்மத்தின் சங்கொலி எங்கும் முழங்கட்டும் எனக்கூறினார். ஏன் உடைவாளைக் கொண்டு இவ்வுலகை இனி வெல்லமாட்டேன் என சபதம் பூண்டார். அன்று முதல் மௌரியப் பேரரசில் திக் விஜயம் நிறுத்தப்பட்டது. மாறாக தர்ம விஜயம் தொடரப்பட்டது.

**மதிப்பீடு**

அசோகருடைய பேரரசு மிகப் பரந்து காணப்பட்டது. அவருடைய கல்வெட்டுக்களும் வரலாற்றுச் சின்னங்களும் பேரரசின் எல்லையை நிர்ணயிக்கின்றன. தேற்கில் அவருடையப் பேரரசு மைசூர் வரை பரவியிருந்தது. வரலாற்றில் எத்தனையோ மாமன்னர்கள் இடம் பெற்றிருந்தாலும் அசோகர் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றார்.

**அசோகரின் சமயம்:**

அசோகரது சமயத்தைப் பற்றிய பல கருத்துக்கள் நிலவுகின்றள. ஒரு சில நூலாசிரியர்கள் அசோகர் இந்து மதத்தை சேர்ந்தவர் என்றும், மற்றும் சிலர் அவரை சமண மார்க்கத்தைச் சார்ந்தவர் என்றும் கூறுகின்றனர். ஆனால் அசோகரின் கல்வெட்டுகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கண்டுபிடிக்கப்பட்ட பொழுது இந்த ஐயத்திற்கே இடமில்லாமல் போய்விட்டது. அசோகர் பௌத்த சமயத்தைச் சார்ந்தவர் என்பதை முதலாவது சிறிய கற்பாறை ஆணையும்இ பாப்ரு ஆணையும் தெளிவாகக் கூறுகின்றன. வரலாற்றில் பௌத்த சமயம் பரவிடக் காரணமானவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக விளஙகுகிறார் அசோகர். ஆச்சார்ய உபகுப்தர் என்பவரே அசோகரை இந்து சமயத்திலிருந்து பௌத்த சமயத்திற்கு மாற்றியவர் என்றும் கூறப்படுகிறது.

**அசோகருடைய தர்மம்:**

அசோகரினால் போதிக்கப்பட்ட தர்மக்கோட்பாடு எது என்பது குறித்து வரலாற்று அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை நிலவுகிறது. பேளத்த சமயசான்றுகள் அசோகர் பௌத்தராகவே வாழ்ந்தார் என்றும்இ பௌத்த தர்மத்தையே பரப்பினார் என்றும் கூறுகின்றன. ஆனால் புத்தரின் அடிப்படைக் கோட்பாடுகளான 'நான்கு உயர் உண்மைகள்' 'எண்வழிப்பாதைகள்' மற்றும் பத்துக் கட்டளைகள்' பற்றி அசோகரின் கல்வெட்டு எதிலும் நேரடிக் குறிப்பு காணப்படவில்லை. ஆனால் வி.ஆர். இராமசந்திர தீட்சதர் போன்ற அறிஞர்கள் அசோகர் போதித்த கோட்பாடு 'அவருடைய தர்மக் கோட்பாடே' என்று எடுத்துரைத்தனர். ஆனால் எளிதில் புரிந்து பின்பற்ற முடியாமல் இருந்த பௌத்த சமயத்தை எளிமைப்படுத்தி எல்லாமக்களும் கடைபிடிக்கும் வண்ணம் தர்மக் கோட்பாடுகளை வழங்கினார் அசோகர் என்பர் சிலர்.

ஆனால் அசோகர் பௌத்தராக மாறினார் என்றும், பௌத்தம், தர்மம், சங்கம் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தார் என்றும் ஆதாரப்பூர்வமாக அறிகிறோம். எனவே அசோகரின் தர்மக்கோட்பாட்டிற்கும், புத்தரின் தர்மக் கோட்பாட்டிற்கும் ஒற்றுமை உள்ளது. பௌத்த சமயத்திற்குப் புத்துயிர் அளித்து மக்களின் ஒழுக்க நெறி உயரவேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டார். நடைமுறையில் எல்லோராலும் ஏற்கப்பட்ட செயல்முறைக்கு ஏற்ற அறக்கோட்பாடுகளையே வலியுறுத்தினார். புதிமூன்றாவது பாறைக் கல்வெட்டில் தர்மம் என்றால் என்ன என்பது குறித்து சுருக்கமான விளக்கம் உள்ளது.

அசோகரின் கல்வெட்டுகளில்காணப்படும் தர்மக்கோட்பாடு எந்த ஒரு சமயத்தின் தர்மமோ அல்லது சமயமுறை சார்ந்தோ அல்ல. அவை ஒழுக்கநெறிகளே ஆகும். ஆனைத்து சமயங்கட்கும் பொதுவானது. அசோகரின் எல்லாக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றதர்மக்கோட்பாடு பின்வருமாறு.

தாய்தந்தை சொற்கேட்டல், ஆசிரியருக்கு அடிபணிதல், எல்லா உயிர்களிடத்தும் அன்புகாட்டல், உண்மையைப் பேசுதல், விலங்குகளைப் பலியிடாதிருத்தல், அந்தணர்கட்கு தானம் வழங்குதல், வேலையாட்கள், அடிமைகளை நல்லமுறையில் நடத்துதல், புலனடக்கம்,மனத்தூய்மை, நன்றி, சமயப் பொறையுடைமை, பயனற்ற சடங்குகளை நீக்குதல்,பாவத்தை நினைத்து அஞ்சுதல், முரட்டுதனம், கொடுமை, சினம், பொறாமை ஆகியவை இல்லாதிருத்தல் தர்மயாத்திரை செல்லுதல், தர்மதானம் ஆகியவையாகும். இவைகளைப் பார்க்கும்போது பொதுவாக பணிவுடைமை, மரியாதை, அறப்பண்பு, வாய்மை, தூய்மை, சுயக்கட்டுப்பாடு, ஒழுக்கம், நன்றியுடைமை போன்ற அறக்கோட்பாடுகளை வலியுறுத்துகிறார் அசோகர்.

அசோகரின் இந்த தர்மக்கோட்பாடு, வெறும் செயல்முறை சார்ந்ததாக அமையாமல், அசோகரின் ஒழுக்க நெறியை வலியுறுத்தக் கூடிய தனித்தன்மையினை வெளிப்படுத்தக் கூடியவையாக உள்ளது. இவை எல்லா சமயங்கட்கும் பொதுவானஇ நிலையானஇ அறவழிஇ நேர்வழி ஆகியவற்றின் மறுபதிப்பு என்று கூறலாம். இவ்வாறு அனைத்து மக்களும் பொதுவாக எண்ணிப் பின்பற்றக்கூடிய சமயம் ஒன்று உருவாவதற்கான அடிப்படையினை முதன்முதலில் வரலாற்றில் வழிகாட்டியவா அசோகர் எனலாம்.

மொத்தத்தில் அசோகரின் தர்மம் என்பது பௌத்த சமயத்தில் தாக்கத்தினால் பகுத்தறிவு அடிப்படையில் செயல்முறைக்குஉகந்ததாக அமைக்கப்பட்ட ஒன்று. அதனை அசோகர் தம் வாழ்க்கை முழுவதற்குமான உரைக்கல்லாக உருவாக்கினார்.

சு.மு.முகர்ஜி என்பவர் “அசோகரின் தர்மம் ஒரு நன்னெறி விதி முறைகளேயன்றிச் சமயமுறையன்றுஇ அது எல்லாச் சமயங்களின் சாரம்” என்று கூறுகிறார்.

ரொமிலாதாபர் என்பவர்இ “அசோகரின் தர்மம் உயர்ந்த குறிக்கோளையும்இ நற்பழக்கங்களையும் கொண்ட நடைமுறைக்கேற்ற வாழ்க்கை முறையே என்று கூறுகிறார்.

மு.யு. நீலகண்ட சாஸ்திரியர்இ “ அசோகரின் தர்மம் செயல்முறைக்கேற்ற ஒரு சமுக நன்னெறியே. அது எந்த சமயத்தையும் சார்ந்ததல்ல” என்கிறார்.

டாக்டர் பிளிட் என்பவர்இ “அசோகரின் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ள தர்மம் பௌத்த தர்மம் அல்லஇ அது அரச தர்மமே” என்று கூறுகிறார்.

செனார்ட் என்ற பிரெஞ்சு அறிஞர்இ “அசோகரின் போதனைக்கும் பௌத்த வேதமான தம்ம பாதத்திற்கும் தொடர்பு உண்டு. அசோகளின் கல்வெட்டுக்கள் அக்காலத்தில் இருந்த பௌத்த சமயத்தை முழுமையாகக் காட்டுகின்றன” என்று கருதுகிறார்.

**புத்தமதத்தைப் பரப்ப அசோகர் எடுத்துக் கொண்ட முயற்சி**

அசோகர் தாம் போதித்த தர்மத்தைப் பரப்ப பல முயற்சிகளை எடுத்துக் கொண்டார். அவர் பின்பற்றிய வழிகள் பின்வருமாறு:

**1) புனித யாத்திரைகள் மூலமாக:**

கலிங்கப்போருக்குப் பிறகு புத்த சமயத்தைப் பரப்புவதற்காக அசோகர் பல புனிதயாத்திரை அல்லது தர்மயாத்திரை (Dharma Yatras) களுக்கு ஏற்பாடு செய்தார். புத்தரின் வாழ்க்கையுடன் தொடர்புடைய புனித இடங்களானாலும்பினிஇ கபிலவஸ்துஇ சாரநாத்இ குசிநகர்இ கயா ஆகிய இடங்களுக்கு யாத்திரைகளை மேற்கொண்டார் அசோகர். இதன் விளைவாக புத்த சமயக்கருத்துக்கள் மீது மக்கள் அதிக ஆர்வம் கொண்டு அதனை பின்பற்ற ஆரம்பித்தனர்.

**2) புத்தசமயம் தேசியசமயமாக அறிவிக்கப்படல்:**

புத்தசமயத்தின் வளர்ச்சிக்காக தன்னை அர்பணித்துக் கொண்ட அசோகர் அதனை தனது பேரரசில் வாழ்ந்து வந்த

மக்கள் புத்த சமயத்தின்பால் ஈர்க்கப்பட்டனர். அசோகரை கடவுளின் பிரதிநிதி என்றே நம்பினர். இவ்வாறு புத்தரின் அறிவிப்பால் புத்த சமயம் அதிகமாக பரவி வளர்ச்சியடைந்தது.

**3) சமயபரப்புக் குழுக்களின் மூலமாக:**

அசோகர் புத்த மார்க்கத்தைப் பரப்புவதற்காக பல சமயக்குழுக்களை அனுப்பினார் என்று 13-வது பாறைக் கல்வெட்டு கூறுகிறது. சிரியாஇ எகிப்துஇ சைரீம்இ எபிரஸ்இ மாசிமோனியா முதலிய வெளிநாடுகளுக்கும் சோழ, சேர, பாண்டிய நாடுகளுக்கும் சமயக் குழுக்களை அனுப்பினார். மராத்திய, ஆந்திர நாடுகளுகளுக்கும் அனுப்பப்பட்டது. சுவர்ணபூமி என்பது, பர்மாவைக் குறிக்கிறதா அல்லது தக்காணத்தைக் குறிக்கிறதா என்று அறிய முடியவில்லை. புத்த நூல்களில், சமனுனழ ஈழுநுர்டுடீறுகும் இனுப்பப்பட்டதாக காணப்படுகிறது. அந்தக்குழு அசோகரின் மகன் மகேந்திரன் மகள் சுங்கமித்திரை தலைமையில் சென்றது. போதி மரத்தின் ஒரு கிளையை அவர்கள் எடுத்து இலங்கையின் நடுப்பாகத்திலுள்ள அனுராதபுரம் என்னுமிடத்தில் நட்டினர். சிங்கள மன்னர் திச்சா பௌத்தராக மாறினார். அவர் ஆட்சியின் போது தான் சிங்களத்தில் பௌத்தம் வேகமாக பரவியது. இவ்வாறு உலகம் முழுவதும் பௌத்த சமயம் வேகமாக பரவிட வழி செய்தார் அசோகர். இவரது முயற்சி புனிதபாலும், பேரரசர் அகஸ்டினும் கிறிஸ்துவ சமயம் பரவிட மேற்கொண்ட செயலுக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார் கென்னத் சாண்டர்ஸ் என்பவர்.

**4) ஆணைகளின் மூலமாகப் பரவச் செய்தல்:**

அசோகர் தனது முப்பதாறு கல்வெட்டுகளின் மூலம் புத்தமார்க்க அறிவுரைகள் மக்களை அடையுமாறு செய்தார். சிறியபாறை கல்வெட்டுகள், பதினான்கு பாறை கல்வெட்டுகள், ஏழுதூண் கல்வெட்டுகள் ஆகியவற்றில் புத்தமார்க்க அறிவுரைகள் கூறப்பட்டுள்ளது. (மேலும் விபரங்களுக்கு அசோகரின் கல்வெட்டுகளை பார்க்க) இந்த ஆணைகள் மூலம் சாதாரண மக்களும் புத்த சமயக்கருத்துக்களை அறிந்துக் கொள்ளும் படி செய்தார்.

5. **அதிகாரிகளின் உதவியுடன் பரப்புதல்:**

அசோகர் புத்தமதத்தைப் பரப்ப அரசாங்க அதிகாரிகளை நன்கு பயன்படுத்தினார் என்று அவர் கல்வெட்டுகளிலிருந்மு அறிகிறோம். மூன்றாவது கற்பாறை கல்வெட்டில் ‘‘தர்மத்தைப் பரப்புவது எல்லா அதிகாரிகளின் கடமை என்றும், அதன் பொருட்டு அவர்கள்

ஐந்து ஆண்டிற்கு ஒரு முறை இடம் மாறி செல்லுதல் வேண்டும்'' என்றும் அசோகர் கட்டளையிடுவதாக உள்ளது.

'ஏற்றக்குடி' சிறிய கற்பாறை ஆணையில் மன்னன் புத்த சமய அறிவுரைகளை முதலில் இராஜுகர்களுக்கு அதிகாரப்பூர்வமாக அனுப்ப வேண்டுமென்றும் அவர்கள் அதனை மக்களுக்கு அறிவிப்பர் என்றும் கூறப்பட்டுள்ளது. கி.மு.256-ல் "தர்ம மகாமாத்திரர்கள், தர்மயுக்தர்கள் என்ற தனிப்பட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டு புத்த சமயத்தை பரப்ப ஏற்பாடு செய்தார். இவர்களுக்குரிய அலுவல்களைப் பற்றி ஐந்தாம' பாறை கல்வெட்டு அறிவிக்கிறது. விலங்குகளுக்கு துன்பம் ஏற்படுவதையும் மக்கள் தீய வாழ்க்கை வாழ்வதையும் இந்த அதிகாரிகள் தடுத்து வந்தனர்.

இராஜுர்கள், பிரதேசிகர்கள், யுக்தர்கள் ஆகிய அதிகாரிகள் நாடெங்கிலும் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் ஏழைகள் பணக்காரர்கள் மத்தியில் தங்கள் பணிகளைச் செய்தார்கள் பன்னிரெண்டாவது பாறைக் கல்வெட்டின் படி, குற்றம் கண்டுபிடிக்கும் 'பெண் மகாமாத்திரர்கள்' நியமிக்கப்பட்டார்கள் என்று அறிகிறோம்.

**6. மூன்றாவது புத்த மாநாடு:**

அசோகர்தான் அரியணை ஏறிய பதினேழாவது ஆண்டு காலத்தில் மூன்றாவது புத்த மாநாடு கி.மு.242-ல்பாடலிபுத்திரத்தில் கூடினதாக சான்றுகள் கிடைக்கிறது. ஆனால் ஒரு சிலர் கி.மு.240-ல் கூட்டப்பட்டிருக்கலாம் என எண்ணுகின்றனர். தீப வம்சத்தில் இந்த மாநாடு பற்றிய செய்திகள் கிடைக்கிறது. இம்மாநாடு முகலிபுத்த திசாவின் தலைமையில் நடைப்பபெற்றது. சுமார் ஒன்பது மாதங்கள் வரை நடைப்பெற்றது. இந்த மாநாட்டில் புத்த மார்க்கத்தின் கொள்கைகளும் அதற்குரிய சட்டங்களும் உறுதி செய்யப்பட்டன. தவறான கோட்பாடுகளைப் பரப்பிக் கொண்டு புத்த மடங்களில் வாழ்ந்து வந்தவர்கள் புத்த சங்கத்திலிருந்து நீக்கப்பட்டார்கள் வெள்ளாடையே உடுத்தவேண்டும். புத்த தர்மத்தைப் பரப்ப தேரர்களைப் பல நாடுகளுக்கும் அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

**7. அசோகர் தானே ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்தல்:**

மக்கள் தர்மத்தையும் நல்லொழுக்கத்தையும் பின்பற்றுவதற்கு ஏற்றவாறு அசோகர்தானே ஒரு உதாரணமாகத் திகழ்ந்தார். சொல்லொன்று செயல்வேறாக அவர் இல்லை. தனக்கு எது முடியுமோ அதனையே பிறருக்குப் போதித்தார். தாம் போதித்ததைத் தனிப்பட்ட வாழ்வில் செயற்படுத்தியும் வந்தார்.

நாடுகளைப் பிடிப்பதற்கான போரைகைவிட்டார் புத்த மார்க்க புண்ணிய ஸதலங்களுக்கு புனித யாத்திரை மேற்கொண்டார். அரண்மனையில் விருந்துக்காக விலங்குகள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டது. விலங்குகட்கு மருத்துவ சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. கிளி, வாத்து, குரங்கு போன்ற உயிரினங்களை எந்த நேரத்திலும் கொல்லக்கூடாது என்றார். மிருகங்களுக்கு சூடு போடுதல் தடுக்கப்பட்டது.

இவ்வாறு அசோகர் செய்த பெருமுயற்சியால் பௌத்த சமயம் இந்தியா, இலங்கை, ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளில் வேகமாக வளர்ச்சியடைந்தது. அது உலக மதமாக வளர ஆரம்பித்தது. பௌத்த சமயத்தில் புத்தருக்கு அடுத்த இடத்தை அசோகர் அடைந்தார். அசோகர் பௌத்த தர்மத்தைப் போதித்தாலேயே இப்புகழை அடைந்தார். வரலாற்றாசிரியர் அர்னால்ட் டாயின்பி அசோகரை "மெஞ்ஞானப் பேரரசர்'' என்று புகழ்கிறார்.

**அசோகரின் சமயக் கொள்கை பற்றி ஓர் ஆய்வு:**

1. ஒரு சில வரலாற்றாசிரியர்கள் அசோகருடைய புத்த மார்க்கக் கொள்கைகளும், அதனை பரவச் செய்ய எடுத்த முயற்சியுமே பௌத்த சமயமும், மௌரியப் பேரரசும் அழிவதற்குக் காரணம் என்று கூறுகின்றனர். அவர் புத்த சங்கத்திற்கு அளித்த சலுகைகளும், பணஉதவியும் சங்கங்களின் கட்டுப்பாடுகளைக் குறைத்தது. சங்க உறுப்பினர்கள் ஊக்கமின்றி வீணாகப் பொழுதைக் கழித்தனர் என்று கூறுகின்றனர். ஆனால் அது தவறு. புத்த சங்கங்களை அசோகர் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார் என்று அறிகிறோம்.
2. மேலும் இவரது புத்தமார்க்க பிரச்சாரம், மற்றும் அகிம்சைக் கொள்கை, மக்களின் வீரத்தன்மையைக் குறைத்தது என்றும், இதனால் போர் வலிமையிழந்து நாடு அழ்ந்தது என்ற குற்றச்சாட்டையும் ஏற்க முடியாது. அசோகர் போதித்த தர்மம் பௌத்த இல்லற தர்மமே ஆகும். மேலும் அசோகர் போரைக் கைவிட்டாரே தவிர, தனது படைகளையோ, படைக் கருவிகளையோ இறுதிக்காலம் வரை குறைந்ததே இல்லை. வெற்றி பெற்ற கலிங்கத்தைத் திருப்பிக் கொடுக்கவேயில்லை. எனவே அசோகருக்குப் பின் வந்தவர்களின் ஆற்றலின்மையே மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைக் காரணமாகும்.
3. அசோகர் தனது புத்தமதப் பிரச்சாரம் மூலம் இந்துக்களுக்கு எதிரியானார் என்றும் அதன் காரணமாக 'பிராமண பு்'யமித்திர சுங்கன்' மௌரிய ஆட்சியை வீழ்த்தினான் என்ற குற்றச்சாட்டும் பொருத்தமுடையதாக இல்லை. ஏனெனில் அசோகர் பிற மதத்தலைவாகளை மதித்து போற்றினார். எல்லா மக்களின் நன்மைக்காகவே அரசாட்சி செய்தார். ஆறாவது கற்றூண் ஆணையில் தான் எல்லா சமயத்தினரையும் போற்றி வருவதாக அறிவிக்கிறார். ஒருவன் தன் சொந்த மதத்தை பின்பற்றுவதே முக்கியமானது என்று தனது கல்வெட்டுகளில் மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறார். இதிலிருந்து அசோகர் எல்லாச் சமயங்களையும் ஙபோற்றினார் என்பதை அறியலாம். அவருடைய சமயப் பொறையுடைமைக் கொள்கை இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய ஒன்றாகும்.

## மௌரியர்களின் ஆட்சி முறை

மிகப்பெரிய பரந்த மௌரிய பேரரசுக்கு ஒரு சிறந்த நிர்வாக அமைப்பு இன்றியமையாதாக இருந்தது. கி.மு.325 முதல் கி.மு.188 வரை ஆட்சப்புரிந்த மௌரியர் காலத்தில் நிர்வாகம் முறையாகவும், வலிமைமிக்கதாகவும் இருந்தது. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரமும் மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகாவும் மௌரியர்களின் ஆட்சிமுறை பற்றித் தெளிவாகக் கூறுகின்றது.

**மன்னன்**

மன்னன் பேரரசின் தழலவனாகக் கருதப்பட்டான். ஆரச பதவி வாரிசுரிமையாக இருந்தது. பெரும்பாலும் இறைமை பெற்றவர்களே மனன்னர்களாயினர். முக்களின் நலன் கருதி பல ஆணைகளைப் பிறப்பித்து மக்களுக்காகவே மன்னன் வாழ்ந்தார். சட்டம் இயற்றவும், அதை செயல்படுத்தவும், நீதிவழங்கவும் அனைத்து அதிகாரங்களையும் மன்னன் பெற்றிருந்த ஆபாதும் சர்வாதிகார ஆட்ச நடத்தவில்லை. நீதி வழங்குவதில் மன்னன் மிகவும் கவனத்துடன் நடந்துக் கொண்டார். தினசரிக் கடமைகளை மன்னர் அட்டவணைப்படி செய்தார்.

மேலும் மன்னருக்கு உதவி செய்ய பல அதிகாரிகளும் இருந்தனர். மௌரியர்கள் வலிமை வாய்ந்த ஒரு மத்திய அரசையும் நிறுவியிருந்தனர்.

**அமைச்சரவை**

மௌரியர்கள் காலத்தில் மந்திரிசபை என்பது ஆட்சித் துறையில் முக்கிய பங்கு வகித்தது. அமைச்சரவையில் இருவகையான மந்திரிகள் இருந்தனர். முதல் வகையினர் மன்னருக்கு மிகவும் நெருக்கமான தலைமை அமைச்சர், ராஜகுரு, சேனாதிபதி, யுவராஜா, ஆகியோர் ஆவார்கள். இரண்டாம் பிரிவினர் சமுதாயத்தில் இருந்த உயர்குடி .பிரிவினர்கள் இதற்கு மற்திரி பரி'த் என்று பெயர். மக்களால் அதிகம் விரும்பப்படுகின்றவரே தலைமை அமைச்சராக இருந்தார். ஆண்டு வருமானமாக 48,000 பணங்களை அவர் பெற்றார். சேனாதிபதி என்பவர் மன்னருக்கு அடுத்தபடியாக படைகளுக்கு தலைமைக் காவலராக இருந்தார். யுவராஜா என்பவர் மன்னரின் மூத்த புதல்வர். இவருக்கு இளவல் பட்டம் சூட்டப்பட்டு மாநிலக் கவர்னர் பதவி அளிக்கப்படும். முந்திரி பரி'த் குழுவில் உள்ள மந்திரிகளுக்கு 12,000 பணம் ஆண்டு வருவாயாக அளிக்கப்பட்டது. நெருக்கடியான காலங்களில் இச்சபையை மன்னர் கூட்டி முடிவுகளை எடுப்பது வழக்கம். பலவிதமான அருங்குணங்களைப் பெற்றவர்களே இதில் உறுப்பினராக இருப்பர்.

**பிற அதிகாரிகள்**

மந்திரிசபை எடுக்கும் முடிவுகளை நடை முறைப்படுத்த அமாத்தியர்கள் என்ற அலுவலர்கள் இருந்தனர். சமாகர்த்தா என்பவர்கள் வரிவசூலிக்கும் அனைத்து அதிகாரங்களையும், அந்தபாலர் என்பவர் எல்லைப் புறங்களையும், துர்க்கபாலர் என்பவர் கோட்டையையும் அரண்மனையையும் நிர்வகித்தனர். அதியட்சா என்ற அதிகாரி மன்னரின் உடைமைகளையும் சொத்துக்களையும் பாதுகாத்தனர்.

**மாநில ஆட்சிமுறை**

ஆட்சித்துறையின் வசதிக்காக நாடு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. அசோகரின் ஆட்சிக் காலத்தில் தட்ச சீலம், உஜ்ஜயினி தோசாலி, சுவர்ணகிரி போன்ற முக்கிய மாநிலங்கள் இருந்தன. ஐந்தாவது மாநிலமாக கலிங்கம் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மாநிலமும் ஒரு கவர்னரின் கட்டுப்பாட்டில் இருந்தது. கவர்னர்கள் பெரும்பாலும் மன்னரின் மூத்த புதல்வராகவே இருந்தனர். மாநிலங்கள் அகரங்கள், வி'யங்கள், பிரதேசங்கள் எனப் பிரிக்கப்பட்டன. மாநில ஆளுநர்களுக்கு உதவ பல அதிகாரிகளும் இருந்தனர்.

**நகராட்சிமுறை**

சந்திரகுப்தரின் ஆட்சிக் காலத்திலேயே ஒரு சிறந்த நகராட்சி முறையை மௌரியர்கள் அமைத்திருந்தனர். பாடலிபுத்திரத்தின் நகர நிர்வாகம் பற்றி மெகஸ்தனிஸ் சிறப்பாகக் கூறியுள்ளார். 30 உறுப்பினர்களைக் கொண்ட 6 வாரியங்கள் நகர நிர்வாகத்தைக் கவனித்து வந்தன. ஒவ்வொரு வாரியங்களும் முறையே, தொழில், வெளிநாட்டவரின் நடவடிக்கை, சுகாதாரம், பிறப்பு, இறப்பு, வாணிபம், உற்பத்தி, ஆலயங்கள், பொதுப்பணிகள், விங்பனைவரி போன்றவற்றை கவனித்தன. ஆண்டுக்கு ஒருமுறை மக்கள் தொக கணக்கெடுப்பு நடைப்பெற்றது. உலகிலேயே முதன்முதலாக இம்முறையை மௌரியர்கள்தான் பின்பற்றினர். மேலும், சொத்து விபரங்களும் கணக்கெடுப்பட்டன.

**ஊராட்சிமுறை**

மௌரியர்களின் ஆட்சிப் பரிவின் அடிப்படையாக விளங்கியது கிராமங்கள். இவை பல கிராமங்கள் சேர்ந்து கிராமத் தொகுதிகள் எனவும் அழைக்கப்பட்டன. ‘கிராமிகர்’ என்பவர் ஆட்சிப் பொறுப்பை கவனித்தார். கிராமத் தொகுதிகளை கவனிக்க ‘கோபர்கள்’ மற்றும் ‘ஸ்தானிகர்’ போன்ற அதிகாரிகள் இருந்தனர். அடுத்து ‘பிரதேசிகர்கள்’ என்பவர்கள் பல கிராமங்களுக்குச் சென்று நீதி, நிர்வாகத்தை மேற்பார்வையிட்டனர். ஒவ்வொரு கிராமங்களிலும் சுமார் 100 முதல் 500 குடும்பங்கள் வரை வசித்து வந்தனர்.

**நீதித்துறை**

நீதியின் அரசர் மன்னராகவே இருந்தார். மௌரியர்கள் காலத்தில் தர்மத்தின் அடிப்படையிலேயே சட்டங்கள் அமைத்திருந்தன. நீதிமன்றங்கள் இருவகப்பட்டன. அவை ‘தருமஸ்தீயம்’ மற்றும் கண்டக சோதனம்’ என்பதாகும். முதலாவது சிவில் வழக்குகளையும் இரண்டாவது கிரிமினல் வழக்குகளையும் விசாரித்தன. மகாமாத்திரர்கள், ராஜீகர்கள் போன்றவர்களின் தலைமையில் நீதிமன்றங்கள் செயல்பட்டன. சிறிய வழக்குகள் கிராம அளவிலேயே முடிக்கப்பட்டன.

மௌரியர்கள் காலத்தில் தண்டணைகள் மிகவும் கடுமையாகவே இருந்தது. சித்திரவதை, கை கால் போன்ற உறுப்புகளை வெட்டுதல், நீரில் மூழ்கடித்தல், சவுக்கடி, கண்களை குருடாக்குதல், கடும் அபாராதம் போன்ற தண்டனைகள் குற்றங்களுக்கேற்ப வழங்கப்பட்டன. பொதுவாக நீதித்துறையில் சமத்துவம் இருந்தாலும் பிராமணர்களுக்கு மரண தண்டைனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. ஆனால் அசோகர் காலத்தில் இம்முறை மாற்றப்பட்டது.

**வருவாய் மற்றும் செலவினங்கள்**

மௌரியர்கள் காலத்தில் நில வருவாய் முக்கியமானதாக இருந்தது. மேலும் பல வகையான வரிகள் விதிக்கப்பட்டதாகவும் கௌடில்யர் கூறுகின்றார். பல வகையான பொருள்கள் மீதும் தொழில்கள் மீதும் வரிகள் விதிக்கப்பட்டன. கிராமங்களில் ‘பகா’ என்றும் ‘பாலி’ என்றும் இரு வகையான வரிகள் இருந்தன. இவற்றுள் பகா என்பது விளைச்சல் வரியாகவும் பாலி என்பது சிறப்பு வரியாகவும் இருந்தது. ‘நதிபாலா’ என்ற வரி கப்பல், படகு போன்றவைகளிடமிருந்து வசூலிக்கப்பட்டது. தோட்டப் பயிர்களுக்கும், காடுகளிலிருந்து கிடைக்கும் பொருள்கள் மீதும், விலங்குகள் மீதும் தங்கம், வெள்ளி, வைரம், உப்பு போன்றவைகள் மீதும் வரிகள் விதிக்கப்பட்டன. வரிகளை வசூலிப்பதற்குத் தனி அலுவலர்கள் இருந்தனர். வரிக் பணமாகவும், பொருளாகவும் வசூலிக்கப்பட்டன.

அரசுக்குப் பல வழிகளில் வருவாய் கிடைத்தலும் செலவினங்களும் அதிகமாகவே இருந்தது. அரண்மனைச் செலவுக்கும், அமைச்சர்களின் ஊதியங்களுக்கும், பொதமக்களின் நல் வாழ்விற்கும், படை நிர்வாகத்திற்கும் ஒரு பெரும் தொகை ஒதுக்கப்பட்டது. அமைச்சர்கள, தளபதிகள், புரோகிதர்கள் போன்றோர்கள் அதிகமான ஊதியம் பெற்றனர். எழுத்தாளர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட்டது. மேலும் அசோகருடைய ஆட்சிக் காலத்தில் ஒரு பெரும் தொகை பாசன வசதிக்காக ஒதுக்கப்பட்டது. ஏராளமான கிணறுகள்,ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் போன்றவை வெட்டப்பட்டன. மேலும் சமயப் பரப்பாளர்களுக்கும் அன்பளிப்புகளும், ஊக்கத் தொகைகளும் வழங்கப்பட்டன.

**ராணுவ நிர்வாகம்**

சந்திரகுப்தரின் காலத்திலேயே மௌரியர்கள் படைபலத்தின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்திருந்தனர். எனவே ஆரம்ப காலம் முதல் மௌரியர்கள் ஒரு பெரிய படையை அமைத்திருந்தனர். காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை போன்ற பிரிவுகள் இருந்தன. 6,00,000 காலாட்படையும், 30,000 குதிரைப்படையும், 9,000 யானைகளும், 4,000 தேர்களும் மௌரியர்களிடம்இருந்ததாக பிளினி என்ற கிரேக்க ஆசிரியர் கூறுகின்றார். இவைத்தவிர, எந்நேரமும் போர் செய்வதற்காக நிலைப்படை என்ற ஒரு சிறப்பு படையும் இருந்தது.

போர்க்காலங்களில் பெரும்பாலும் மன்னரே முன்னின்று படைகளை நடத்திச் செல்வது வழக்கமாக இருந்தது. ஒவ்வொரு படைப் பிரிவிற்கும் தனித்தனி தளபதிகள் இருந்தனர். படைவீரர்கள் 'த்திரியர்களின் குலத்திலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர். படைகளை கவனிக்க 30 அங்கத்தினர்கள் கொண்ட ஒரு குழு இருந்தது. இது ஆறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்ததுஇ மௌரியர்கள் ஒரு சிறந்த கப்பற்படையையும் கொண்டிருந்ததாக கௌடில்யர் குறிப்பிட்டுள்ளார். மருத்துவர்கள், சமையலகாரர்கள், பொறியியல் வல்லுநர்கள் போன்றவர்களும் படைப்பிரிவில் பணியாற்றினர்.

## மௌரியர் கால பொருளாதாரம், கலை,கட்டிடக்கலை

## பொருளாதார நிலை

விவசாயம் மக்களின் முக்கியமானத் தொழிலாக இருந்தது. விவசாயிகள் எவ்விதக் கவலையும் பயமும் இல்லாமல் தங்கள் தொழிலை செய்து வந்தனர். விவசாயிகள் பெரும்பாலும் தங்களுடைய கழனிகளிலேயே தங்கித் தங்கள் தொழிலை நன்கு கவனித்தனர். அரசு, விவசாயிகளுக்கு விதைகள், நீர்ப்பாசனவசதி போன்ற பல உதவிகளை செய்தது. விளைச்சலில் ¼ பகுதி வரியாக வசூலிக்கப்பட்டது. ஆனால் வறட்சிக் காலங்களில் வரிகள் ரத்துச் செய்யப்பட்டன. கோதுமை, அரிசி, சோளம், பார்லி, கரும்பு, கடுகு, பருத்தி, புகையிலை உருளைக்கிழங்கு போன்றப் பயிர்களை பயிர் செய்தனர். இயற்கை உரங்களையே அதிகமாக பயன்படுத்தினர்.

**பிற தொழில்கள்**

விவசாயத்திற்கு அடுத்தபடியாக நெசவுத் தொழில் சிறப்புடன் நடைபெற்றது. குாசி, மதுரா, வங்கம் போன்ற நகரங்கள் நெசவுத் தொழிலுக்கு பிரசித்தி பெற்றவையாகத் திகழ்ந்தன. இவைத் தவிர கப்பல் கட்டுதல், உலோக தொழில், சுரங்க தொழில்ஈ கால்நடைவளர்ப்பு, உப்பு காய்ச்சுதல் போன்ற தொழில்களும் நடைபெற்றன. சில பகுதிகளில் முத்துக்குளித்தல் தொழிலும் நடைபெற்றதாக சில குறிப்புகள் உள்ளன.

**வாணிபம்**

மௌரியர்கள் காலத்தில் பல வெளிநாடுகளுடன் தொடர்புகள் ஏற்பட்டதால் உள்நாட்டு வாணிபமும், வெளிநாட்டு வாணிபமும் சிறப்புற்றிருந்தது. சீனா, எகிப்து, பாரசீகம் போன்ற நாடுகளுடன் நேரடி வாணிப வர்த்தகம் நடைபெற்றது. வைசியர் இனத்தைச் சார்ந்தவர்களே பெரிய வணிகர்களாக இருந்தனர். ஏற்றுமதியும், இறக்குமதியும் பல துறைமுகங்கள் வழியாக நடைபெற்றன. நாணயமுறை மௌரியர் கால வாணிபத்தில் முக்கிய இடம்பெற்றது. எனினும்

பண்டமாற்று முறையும் நடைமுறையில் இருந்தது. வியபாரச் சந்தைகளும் பல இடங்களில் அமைக்கப்பட்டிருந்தது.

## மௌரியர் கால கலையும் கட்டிடக் கலையும்

கல்வி கலைக்கும், கட்டிட கலைக்கும் மௌரியர்கள் அதிக முக்கியத்துவம் அளித்தனர். பாரசீகம், எகிப்து போன்ற நாடுகளிலிருந்து பல அறிஞர்கள் வரவழைக்கப்பட்டனர். இவர்கள் பல்வேறுத் துறைகளில் சிறந்து விளங்கினர். மௌரியர் காலத்தில் பாலி,சமஸ்கிருதம், பிராகிருதம் போன்ற மொழிகள் மக்களிடையே வழக்கத்திலிருந்தது. எனினும், பிராகிருத மொழியே அரசாங்க மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மக்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர். இதற்கு அசோகரின் கல்வெட்டுகள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம், மெகஸ்தனிஸின் இண்டிகா, பத்திரபாகுவின் கல்பசூத்திரம் போன்றவை இலக்கிய வளர்ச்சியைக் காட்டுகின்றன. குருகுலங்களும் மடாலயங்களும் கல்வி பயிலும் இடங்களாக விளங்கின. வேதங்கள், புராணங்கள், கணிதம், வானவியல் போன்ற பாடங்கள் பயிற்றுவிக்கப்பட்டன. தட்சசீலம், காசி போன்றவை முக்கிய கல்வி ழையங்களாக இருந்தன.

**கட்டிடக்கலை**

அசோகர் காலத்தில் பல கட்டிடங்களையும், மடாலயங்களையும் அவர் கட்டினார். நேபாளத்தில் அசோகர், புத்தர் பிறந்த இடத்தில் நான்கு ஸ்துாபிகளையும், கா'மீரில் பல புத்த மடங்களையும் கட்டினார் என ராஜதரங்கிணியில் கூறப்பட்டுள்ளது. மகாவம்சத்தில் அசோகரும் அவருடைய வழித் தோன்றல்களும் சுமார் 84,000 கல்துாண்களை நிறுவியதாக உள்ளது. கலை நயத்துடன், சிற்ப வேலைப்பாடுகளுடனும் கூடிய பல ஸ்துாபிகளை அசோகர் சாஞ்சி, சாரநாத், பாடலிபுத்திரம் போன்ற இடங்களில் கட்டியுள்ளார். இவை முழுவதும் செங்கல் மற்றும் கருங்கல் கொண்டு கட்டப்பட்டது. பார்கட் என்னுமிடத்தில் உள்ள ஸ்துாபி அசோகரின் காலத்தில் கட்டப்பட்டது. இதன் வாயிலில் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் உள்ளன. அசோகரின் கல்வெட்டுகளும் இங்கு காணப்படுகின்றன. மௌரியர்களின் கட்டிடக்கலை கிரேக்க நாட்டு கட்டிடக்கலையை பிரதிபலிப்பதாக சிலர் கூறுகின்றனர். பாடலிபுத்திரத்தில் இருந்த அரண்மனையின் கலை நுட்பங்களைப் பற்றி பாகியான் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். சாஞ்சியில் அமைந்துள்ள வரலாற்று சிறப்பு மிக்க ஸ்துாபி செங்கற்களால் கட்டப்பட்டது. இதன் மேற்புற அடிபட்டம் 110 அடியாகும். பீடத்தின் விட்டம் 121 அடியாகும். இதன் உயரம் 771∴2 அடியாகும் இதனைச் சுற்றி 11 அடி உயரமுள்ள ஒரு கல் வேலி அமைக்கப்பட்டுள்ளது. சிற்ப வேலைப்பாடுடன் கூடிய 34 அடி உயரமுள்ள 4 வாயில்கள் உள்ளன. ஸ்துாபியின் தெற்கு வாயில் அருகே அசோகருடைய கல்துாண் ஒன்றும் அதன்மேல் மூன்று சிங்கங்களின் முகமும் காணப்படுகின்றன. இது மௌரியர் கால கட்டிடக்கலைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். தட்சசீலம், கா'மீர், அயோத்தி, தானேசுவரம், கயா, வைசாலி, பனாரஸ் போன்ற இடங்களில் அசோகரின் கல்துாண்கள் காணப்பட்டதாக யுவான்சுவாங் குறிப்பிட்டுள்ளார்.

# குஷாணர்கள்

## கனிஷ்கர்

குஷாண வம்சத்தில் மிகவும் சிறந்த மன்னராக கனிஷ்கர் போற்றப்படுகின்றார். இவருடைய ஆட்சிக்காலம் பற்றி பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. ஆனால் நாணய ஆதாரங்களின் அடிப்படையில் கி.பி.முதலாம் நூாண்ணான்டில் கனிஷ்கர் ஆட்சி புரிந்தார் என்பது புலனாகிறது. மேலும் சாகா சகாப்தம் இவரால் தொடங்கப்பட்டதாகும். கி.பி.78-ல் சாகா சகாப்தம் தொடங்கியது. எனவே, கனிஷ்கர் அரியணை ஏறிய ஆண்டாகும் என ராப்சன், பெர்குசன், பானர்ஜி போன்றவர்கள் கூறுகின்றனர்.

**கனிஷ்கரின் படையெடுப்புகள்**

கனிஷ்கர் ஆட்சிக்கு வரும்போது கு'ாணர்களின் பேரரசு ஆப்கானிஸ்தான், சிந்து, பஞ்சாப், பாக்டீரியா, பார்த்தியா போன்ற பகுதிகளைக் கொண்டிருந்தது. ஆனால் கனிஷ்கர் தன்னுடைய பேரரசை விரிவுபடுத்த நினைத்து கா'மீர் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினார். காஷமீரின் இயற்கை அழகைக் கண்டு அங்கு கனிஷ்கபுரம் என்ற நகரை ஏற்படுத்தினார். அடுத்து மகத நாட்டிற்கு ஒரு பெரும்படையை அனுப்பி தலைநகர் பாடலிபுத்திரத்தைக் கைப்பற்றி தன்னுடன் இணைத்தார். இப்படையெடுப்பின் பொது அஸ்வகோஷர் என்ற புத்த மதத்துறவியை தன்னுடைய தலைநகருக்கு அழைத்து வந்தார், என புத்த இலக்கியங்கள் கூறுகின்றன. உஜ்ஜயினியை ஆண்ட மேற்கு சத்திரபாக்களை வென்று மாளவத்தைக் கைப்பற்றினார். ஆனால் பார்த்தியர்கள் வென்று மாளவத்தைக் கைப்பற்றினார். ஆனால் பார்த்தியர்கள் தங்களுடைய வலிமையான தாக்குதலால் கனி'கரை தோற்கடித்தனர்.

சீனாவின் மீது ஒரு படையெடுப்பு நடத்த நீண்டகாலமாக திட்டமிட்டிருந்த கனி'கர் சீனத் தளபதி பாஞ்சோவின் இறப்புச் செய்தி கேட்டு மகிழ்ச்சியுற்று. உடனே ஒரு படையை அனுப்பி யார்கண்ட், கோட்டான் போன்ற பகுதிகளைக் கைப்பற்றினார். மேலும் சீனாவிலிருந்து ஏராளமான செல்வங்களையும் கொண்டு வந்து தன்னுடைய தலைநகரான பெ'ாவர் என்ற புருஷபுரத்தை நன்கு அழகுபடுத்தினார்.

**கனிஷ்கரும் புத்தமதமும்**

ஆரம்ப காலத்தில் கனி'கர் பின்பற்றிய சமயம் பற்றி தெளிவான குறிப்புகள் இல்லை அஷ்வகோ'ர் என் புத்த பிட்சுவின் துாண்டுதலின் பேரில் புத்த மதத்தில் அதிக ஈடுபாடு கொண்டார். அசோகரைப் போன்று கனி'கரும் புத்த மதத்தின் வளர்ச்சிக்குப் பெரும் தொண்டுகளைச் செய்தார். கனிஷ்கர் வெளியிட்ட நாணயங்களில் புத்தரின் ஓவியங்களும்,போதனைகளும் இடம்பெற்றன.

கனிஷ்கருடைய காலத்தில் நான்காவது புத்த சமய மாநாடு கா'மீரிலுள்ள குண்டலவானம் என்னுமிடத்தில் கூட்டப்பட்டது. வசுமித்திரர் தலைவராகவும், அ'வகோ'ர் துணைத் தலைவராகவும் இருந்தனர். நாடு முழுவதிலிருந்து சுமார் 500 புத்த துறவிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். மேலும் புத்தரின் கருத்துக்களைத் தொகுத்து மகாவிபா'ா என்று பெயரிட்டு அதனை செப்பு பட்டயங்களில் எழுதி கல்லால் ஆனப் பெட்டியில் வைத்து பூமியில் புதைத்து வைத்தனர். இதனை மாபெரும் பொக்கி'மாகக் கருதினார்.

கனிஷ்கரின் காலத்தில் புத்த சமயத்தில் மகாயானம், ஹீனயானம் என்ற இரு பிரிவுகள் ஏற்பட்டன. இருபிரிவினருக்குமிடையே பல ஒற்றுமை வேற்றுமைகள் காணப்பட்டன. ஆனால் மகாயானம், மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குடன் திகழ்ந்தது. கனிஷ்கர் மகாயானப் புத்த சமயத்தை அரசாங்க மதமாக பிரகடனம் செய்தார். எனவே புத்த சமயம் மேலும் வளர்ச்சியடைந்தது. இந்து சமயத்தில் உள்ள பலவிதமான வழிபாட்டு முறைகள் இதில் புகுத்தப்பட்டன. மேலும், புத்த சமயக் கோட்பாடுகளிலும் பல சலுகைகள் இருந்தன. ஆதலால் ஏராளமான மக்கள் இதில் இணைந்தனர்.

**மகாயான புத்த சமயம்**

புத்த சமயம் அசோகருடைய காலத்தில் ஹீனயானம் என்றும் பின்னர் கனிஷ்கருடைய காலத்தில் அது மகாயானம் என்றும் அழைக்கப்பட்டதாக ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால் சிலர் இதை ஏற்க மறுக்கின்றனர். மாறாக கனிஷ்கருடைய ஆட்சிக் காலத்தில்தான் புத்தசமயத்தில் இப்பிரிவுகள் முதன்முதலில் தோன்றியதாகக் கூறுகின்றனர், மகாணானத்தில் புதிய சமயக் கருத்துக்களும், வழிபாட்டு முறைகளும் புகுத்தப்பட்டன. புத்தரை ஒரு அவதாரப் புருஷனாக மக்கள் வழிப்பட்டனர். புத்தருக்கு பல கோயில்கள் கட்டப்பட்டன. அதில் பல வடிவங்களில் புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டன. இந்து சமயத்தில் காணப்பட்ட உருவ வழிப்பாட்டு முறைக்கு அளிக்கப்பட்டது. மேலும் புத்த சமயக் கொள்கைகள் சாதாரண மக்களும் பின்பற்றக்கூடிய முறையில் எளிதாக்கப்பட்டன. எனவே ஏராளமான மக்கள் மகாயானத்தில் சேர்ந்தனர். மக்களிடம் அதிக வரவேற்பை பெற்று மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்த மகாயானத்தை கனி‘கர் அரசாங்க மதமாக அறிவித்தார். வசுமித்திரர், அ‘வகோ‘ர், நாகர்ஜீனர் போன்றவர்கள் மகாயானக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் சமஸ்கிருத மொழியில் எழுதினர். காந்தாரக் கலையின் வளர்ச்சிக்கு மகாயானம் பெரிதும் உதவியது.

**கனிஷ்கரின் சீர்திருத்தங்கள்**

கனிஷ்கருடைய ஆட்சிக் காலத்தில் கல்வித் துறையில் பல முன்றேங்கள் ஏற்பட்டன. கனிஷ்கர் ஒரு சிறந்த கல்வியாளராக இருந்தார். எனவே அவர் கற்றவர்களையும், கல்வியையும் நன்கு ஆதரித்தார். பாலி மொழிக்கும், சமஸ்கிருத மொழிக்கும் ஆதரவு தந்தார். கனிஷ்கர் புத்த வரலாறு, சூத்திர அலங்காரம் முதலிய வடமொழி இலக்கியங்களை இயற்றினார். அவரது அவையில் அஷ்வகோஷர், நாகார்ஜீனர் போன்றவர்கள் இருந்தனர். அறிவியல் துறையிலும் பல நூல்கள் எழுதப்பட்டன. வசுமித்திரர் என்பவர் மகாவிபா‘ா என்ற புத்த சமய கருத்துக்களை தொகுத்தார். மேலும் ‘‘சௌந்தரநந்தம்’’ என்ற நூலையும் ‘‘சாரிபுத்திர பிரகர்ணம்’’ என்ற நாடகத்தையும் எழுதினார். கனி‘கருடைய அவையில் சாரகன் என்ற சிறந்த மருத்துவ மேதை இருந்தார். அவர் மருத்துவக் குறிப்புகள் அடங்கிய ‘‘சுஷ்ருதா’’ என்ற நூலை எழுதினார்.

சீனா, ரோம் போன்ற நாடுகளுடன் சிறந்த வாணிபத் தொடர்பை ஏற்படுத்தினர். இந்தியப் பண்பாடும் நாகரீகமும் வெளிநாடுகளில் பரவியது. பல புத்த சமய இலக்கியங்கள், நூல்களும் சீனமொழியில் மொழி பெயர்க்கப்பட்டன.

**காந்தாரக்கலை**

குஷாணர்கள் காலம் கலைதுறையின் பொற்காலம் என்றால் அது மிகையாகாது. கலைத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியே இதற்கு காரணமாகும். குனி‘கரின் காலத்தில் மதுரா,

காந்தாரம், அமராவதி போன்ற கலைகள் சிறப்புடன் விளங்கின. இவற்றுள் காந்தாரக்கலை மிகவும் முக்கியமானதாகும். பாரசீகர்களின் படையெடுப்பின் விளைவாக இந்தியாவுக்குள் நுழைந்த இக்கலை கனி'கர் காலத்தில் மகாயானம் புத்த மதத்தின் செல்வாக்கினால் மேலும் வளர்ச்சியடைந்தது. ஏ.யு. சுமித்தின் கருத்துப்படி காந்தாரக்கலை என்பது கிரேக்க ரோமானியக் கலையின் ஒரு கலப்பு ஆகும். இது கி.பி.2-ம் நூற்றாண்டில் பிரபலமடைந்தது. இதில் கிரேக்க அம்சங்கயே அதிகமாக இடம்பெற்றன. ஆனால் இதன் உட்கரு இந்தியக் கலையை மையமாகக் கொண்டிருந்தது. கிரேக்க மற்றும் ரோமானிய கலை வல்லுநர்கள் பாக்டீரியா, காந்தாரம் போன்ற பகுதியில் தங்கி அங்கிருந்த பாறைகள், மலைகள் போன்றவற்றில் தங்கள் கலைத்திறனை பயன்படுத்தி பல வகையான சிற்பங்களை செதுக்கினார். மகாயானம் வளர்ச்சியடைய ஆரம்பித்ததும் புத்தரின் உருவச் சிலைகள் அதிகளவில் இப்பகுதியில் செதுக்கப்பட்டன.

ஹட்டா, பாமியன், சுவாத் பள்ளத்தாக்கு, பெ'ாவர் போன்றப் பகுதிகள் காந்தாரக்கலையின் மையங்களாகத் திகழ்ந்தன. புத்தரின் உருவச்சிலைகள் கிரேக்க ரோமானியப் பாணியில் அமைக்கப்பட்டன. கிரேக்க, ரோமானியக் கடவுள்களான சீயெஸ், அப்பலோ போன்றோரின் வடிவங்கள் புத்தமத துறவிகளின் சிலைகளில் பிரதிபலித்தன. மேலும் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் சிற்பங்களும் காந்தாரக்கலையின் முக்கிய அம்சங்களாகும். ஆனால் நாளடைவில் இக்கலை தன் மதிப்பை இழந்தது. இதற்கு இந்து அரசர்களின் ஆதரவில் மறுமலர்ச்சியடைந்த இந்தியக் கலையும், மதுராக் கலையும் காரணமாகும்.

**மதுராக் கலை**

இக்கலையானது காந்தாரக் கலை வளர்ச்சியடைந்த காலத்தின் இறுதியில் தோன்றியது. இது காந்தாரக் கலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு காணப்படுகிறது. இது மிக குறுகிய காலத்தில் வீழ்ச்சியடைந்தாலும் கு'ாணர்களின் காலம் வரை நீடித்தது. இது இந்தியக் கலையம்சத்தையே பெரும்பாலும் பிரதிபலிக்கிறது. கனி'கருடைய காலத்தில் காந்தாரக்கலையின் சில அம்சங்கள் மதுராக் கலையிலும் தென்பட்டன. இதன் அடிப்படை நெறிமுறைகள் புத்த கமயக் கோட்பாடுகளுக்கு எதிராகவையாகக் கருதப்பட்டது. நீளமானத் தூண்களில் சிற்பவேலைகளுடன் கூடிய பலவகையான உருவங்கள் செதுக்குவது இக்கலையின் தலையாய அம்சமாகும். இவற்றுள் மானிடப் பிறவியின் சிற்றின்பங்களை விவரிக்கும் பலவிதமான பெண்களின் சிற்பங்களும் இடம்பெற்றன. இவற்றை மனிதனின் ஒழுக்க விதிமுறைகளுக்கு இழுக்காக பலர் கருதினர். எனவே மக்களிடம் இக்கலையானது, அதிகமாக செல்வாக்குப் பெறவில்லை. கனி'கரின் காலத்தின் இறுதியில் மதுராக்கலை தன் பொலிவை இழந்து படிப்படியாக நலிவடையத் தொடங்கியது.

**அமராவதிக்கலை**

இக்கலையும் காந்தாரக்கலையின் சமகாலத்தில் வளர்ச்சியடைந்தது. இவற்றுள் பெரும்பகுதி காலத்தால் முற்பட்டது என்றாலும் முக்கியமான ஸ்தூபிகள் கி.பி.முதல் நூற்றாண்டைச் சார்ந்தவை ஆகும். இவை கலைநயத்தில் காந்தாரக் கலையை விட நேர்த்தியாக உள்ளன. புத்தரின் வாழ்க்கை வரலாறு மற்றும் புத்தரின் உருவங்கள் மிகவும் தத்ரூபமாக கல்லில் செதுக்கப்பட்டுள்ளது இதன் தனிச்சிறப்பாகும். நாகார்ஜீன கொண்டாவில் உள்ள சிற்பங்களும் அமராவதியில் உள்ள புத்த மத நினைவுச் சின்னங்களும் இக்கலைக்கு

ஓர் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது. ஆமராவதிக் கலையானது இந்தியாவில் தோன்றி வளர்ந்தாலும் காலப்போக்கில் தனது பொலிவை இழந்தது. ஆனால் இன்று இலங்கை மற்றும் சில தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இக்கலையின் பிரதிபலிப்புக் காணப்படுகிறது.

## அலகு - 3 : குப்தபேரரசு

**சமுத்திர குப்தர் (கி.பி. 335 - 375)**

சமுத்திரக் குப்தர் அரியணை ஏறிய காலம் பற்றிய உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லை. சமுத்திரக் குப்தரின் அலகாபாத் தூண் கல்வெட்டும், நாலாந்தாவில் கிடைத்த செப்பு பட்டயங்களும் அவர் கி.பி.335-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார் எனக் கூறகின்றன. சந்திரகுப்தருக்கு ஒரு புதல்வர் இருந்தார் என்றும் அவர் தன்னுடைய பாட்டானாரின் பெயராகிய கடேத்கஜா என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டார் எனவும், இவரே பிற்காலத்தில் சமுத்திர குப்தர் என்ற பெயருடன் ஆட்சிக்கு வந்தார் எனவும் கூறப்படுகிறது.

**சமுத்திர குப்தரின் வெற்றிகள்**

அலகபாத் தூண் கல்வெட்டு சமுத்திர குப்தரின் வெற்றியை விளக்குகிறது. சமுத்திர குப்தர் ஒரு மாபெரும் வெற்றி வீரர் அவருடைய ஆட்சிக் காலத்தில் சுமார் 100 போர்களை நேரடியாக சந்தித்தார். அவர் மேற்கொண்ட அனைத்து போர்களிலும் வெற்றியே பெற்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

இவர் வட இந்தியாவில் ருத்ரதேவன், மதிலன், நாகசேனன், சந்திரவர்மன், அச்சுதன், நாகதத்தன், பாலவர்மன் போன்ற மன்னர்களை தோற்கடித்தார். ஆனால் இம்மன்னர்கள் ஆட்சி செய்த பகுதிகள் பற்றி தெளிவான குறிப்புகள் இல்லை. எனினும் இவர்கள் நாகர்களாக இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. வென்ற பகுதிகள் அனைத்தையும் தன்னுடன் இணைத்துக் கொண்டார். பின்னர் கானகத்து அரசர்களையும் வென்று அப்பகுதிகளையும் தன்னுடன் இணைத்தார்.

பின்னர் சமுத்திரகுப்தர் தன் கவனத்தை தென்னிந்தியா மீது திருப்பினார். தக்காணப் பகுதியில் இருந்த முற்றரசுகளையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். இவரால் தோற்கடிக்கப்பட்ட தென்னாட்டு மன்னர்களின் பட்டியல் கீழ்வருமாறு

1. கோசலை நாட்டு மகேந்திரன்
2. கேரள நாட்டு மண்டராஜன்
3. பிஷடாபுர மன்னன் மகேந்திரகிரி
4. கோட்டூர் நாட்டு சுவாமிதித்தன்

5. ரெண்டப்பள்ளி தமணன்
6. காஞ்சி வி'ணு கோபன்
7. வேங்கி நாட்டு ஹஸ்திவர்மன்
8. பாலாக்காவின் உக்கிரசேனன்
9. தேவரா'டிரத்தின் குபேரன்
10. வஸ்தலபுரத்து தனஞ்செயன்

மேலே குறிப்பிட்ட மன்னர்களை வென்று அவர்களை சிறைபிடித்து தனக்கு கப்பம் கட்டும்படி ஆணையிட்டார். சமுத்திரகுப்தர் முதலில் தக்காணப் பகுதியினுள் நுழைந்து பின்னர் கலிங்கதேசம் (ஒரிஸ்ஸா) வழியாக தெற்கில் காஞ்சி வரையில் முன்னேறினார். ஆனால் அவர் தென்னிந்தியாவில் தர்மவிஜயம் என்னும் கொள்கையை மேற்கொண்டார் எனவும், எனவே தான் கைப்பற்றிய பகுதிகளை அந்தந்த மன்னர்களுக்கே திருப்பிக் கொடுத்து அவர்களை கப்பம் கட்டும்படிச் செய்தார் எனவும் கூறப்படுகிளது. ஆனால் தென்தமிழகப் பகுதிகளை அவர் வென்றதற்கான சான்றுகள் இல்லை.

மேலும் எல்லைப்புற நாடுகளான காமரூபம்,நேபாளம், போன்றவற்றையும் வென்றார் அடுத்து பழங்குடி மக்களான அபீரர், சனிகானிகர், சாகர் போன்றோர்களை தோற்கடித்தார். குஷாணர்கள் மற்றும் மேற்கு சத்திரபாக்கள் போன்ற வெளிநாட்டவர்களையும் அடிபணியச் செய்தார். இலங்கை, ஜாவா, சுமத்ரா, மலேசியா போன்ற தீவுகளையும் வென்றதாக அலகபாத் கல்வெட்டு கூறுகிறது. தோல்விடைந்த இலங்கை வேந்தன், புத்த கயாவில் ஒரு மடாலயத்தையும் ஒரு விடுதியையும் கட்டியதாக யுவாங்சுவாங் தனது குறிப்பில் கூறியுள்ளார். சமுத்திர குப்தரின் பேரரசு வடக்கில் இமயம் முதல் தெற்கில் நர்மதை வரையிலும் மேற்கில் சம்பல் பகுதி முதல் கிழக்கில் பிரம்மபுத்திரா வரையிலும் பரவியிருந்தது.

தான் பெற்ற வெற்றிகளை நினைவூட்டும் வகையில் அசுவமேதயாகம் ஒன்றை நடத்தினார். புல நாட்டு மன்னர்களும் இதில் கலந்து கொண்டனர். மேலும் இதன் நினைவாக நாணயமும் வெளியிட்டார்இ இந்திய வரலாற்றில் அசுவமேதயாகம் நடத்திய முதல் மாமன்னர். சமுத்திர குப்தர்தான் என சிலர் கருதுகின்றனர். எட்டு வகையான தரமிக்க தங்க நாணயங்களை இவர் வெளியிட்டார். அவற்றுள் லெட்சுமியின் உருவம், குதிரையின் உருவம் சமுத்திரகுப்தரின் பல்வேறு வகையான உருவங்கள் பொறித்த நாணயங்கள் முக்கியமானதாகும்.

## இரண்டாம் சந்திரகுப்தர்

சமுத்திரகுப்தருக்குப் பின் அவருடைய மைந்தரான இரண்டாம் சந்திரகுப்தர் பதவிக்கு வந்தார். முதலாம் சந்திரகுப்தர் அரியணை ஏறுதற்கு சமுத்திரகுப்தரை எவ்வாறு தேர்ந்தெடுத்தாரோ அதைப் போலவே, சமுத்திரகுப்தரும் ஓர் இளையமைந்தனை அடுத்தவாரிசாக நியமஞ் செய்தனர். இரண்டாம் சந்திரகுப்தர் தந்தைக் கேற்ற தனயனாகத் திகந்தார். தேவிசந்திரகுப்தம் போன்ற இலக்கிய மரபுகளும், சில நாணயச் சான்றுகளும், சமுத்திரகுப்தருக்குப் பின் ராமகுப்தர் அரியணை ஏறினார் என்றும் அதன் பின்னரே இரண்டாம் சந்திரகுப்தர் அரியணை ஏறினார் என்றும் கூறுகின்றன. எனவே சமுத்திரகுப்தருக்குப் பின் ராமகுப்தரே அரியணை ஏறினார் எனக் கொள்ளலாம்.

### திருமண உறவுகள்:

போர் மேற்செல்லும் வாழ்வினை மேற்கொள்வதற்கு முன்னதாக இரண்டாம் சந்திரகுப்தர் திருமண உறவுகளின் மூலம் தம்முடைய நிலையினை உறுதிப்படுத்திக் கொண்டார். மேலை, மத்திய மாநிலங்களில் உள்ள நாகத் தலைவர்களை இணைக்கும் வகையில் இவர் குபேர நாகா என்ற நாக இளவரசியை மணந்தார். இவர்களுக்குப் பிறந்த பிரபாவதி குப்தாவை பீரரின் வாகாடக அரசரான இரண்டாம் உருத்திரசேனருக்குத் திருமணம் புரிவித்தார். இத் திருமண உறவுகளால், இவர் தம்முடைய புது உறவினர்களின் நன்மதிப்பையும், ஆதரவையும் பெற்றார்.

## இரண்டாம் சந்திரகுப்தரின் படையெடுப்புகள்:

கீர்த்திமிகு தம் தந்தையாரைப் போலவே இரண்டாம் சந்திரகுப்தரும் நாடுகளை வெற்றிக்கொண்டு நிலைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். போரில் இவர் கண்ட வெற்றிகளும், புகழும் ‘‘விக்கிரமாதித்தர்’’ என்ற விருதினை இவருக்குத் தேடித்தந்தன. குப்தப் பேரரசின் மேற்கு எல்கைகளை இவர் விரிவுபடுத்தினார். இவர் மேலைச்சத்திரப்புக்களிடமிருந்து மாளவம், சௌரர்‘டிரம் ஆகிய இரு பகுதிகளையும் முழுமையாக வெற்றி கொண்டார். மேலைச் சத்திரப்புக்ககளின் செல்வாக்கிற்கு சாவுமணி அடித்தவர் இவரேயாவார். கடைசி மேலைச் சத்திரப்பு அரசரான மூன்றாம் உருத்திர சிம்மரைத் தோற்கடித்துக் கொன்று கி.பி. 395-ல் மேற்கத்திய முழுவதையும் குப்தப் பேரரசுடன் இணைத்தார். இவ்வாறு தமது பேரரசின் மேற்கு எல்கைகளை அரபிக்கடல் வரை விரிவுபடுத்தியதின் மூலம் உரோமானியர்களுடன் கூடுதலான அளவில் வணிகப் பெருக்கமும் பண்பாட்டு உறவும் கொள்வதற்கு வழிவகுத்தார். சீனாப் நதிக்கரை வரை இவருடைய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருப்பதிலிருந்து இவருடைய செல்வாக்கு அவ்வளவு தூரம் படர்ந்திருக்கக்கூடும் எனக் கூறமுடியும் மேற்கு இந்தியாவில் இவர் கொண்ட வெற்றிகளைப் பறைசாற்றும் வகையில் இவர் ஓர் அசுவமேத யாகத்தை நடத்தினார்.

## பாஹியானின் வருகை:

இரண்டாம் சந்திரகுப்தரின் ஆட்சிக் காலத்தில் புகழ்பெற்ற சீனப் பயணியான பாஹியான் இந்தியாவிற்கு வருகை புரிந்தார். அவர் பயணத்திலே கழித்த 15 ஆண்டுகளில் 9 ஆண்டுகள் இந்தியாவில் கழிந்தன. அவர் இந்தியாவில் பெ‘ாவர், மதுரா, கனோஜ் சிராவஸ்தி, காசி, கபிலவஸ்து, குசிநகரம், வைசாலி, பாடலிபுத்திரம் முதலிய இடங்களுக்குச் சென்றிருந்தார். இவர் புத்தருடைய வாழ்வை ஒட்டிய இடங்களைக் கண்ணுறுவதிலும் பௌத்த சமய இலக்கியங்களையும் சின்னங்களையும் காமுறுவதிலும் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தமையால் ஆறாண்டுகாலம் பேரரசின் கண் வாழ்ந்தபோதிலும் மன்னரின் பெயர்கூட இவரால் குறிக்கப்பெறாது விடுபட்டுப்போயிற்று. ஆனால் மக்களின் பொருளாதார, சமுதாய, அறநெறி வாழ்வைப் பற்றியும் குப்தர்களுடைய ஆட்சி முறையைப் பற்றியும் இங்குமங்குமாகச் சில செய்திகள் இவருடைய பயணக் குறிப்புக்களில் உள்ளன. பாஹியானுடைய பயணக் குறிப்புக்கள் பல குறைபாடுகளைக் கொண்டுள்ள போதிலுங்கூட குப்தருடைய ஆட்சிக் காலத்தைப் பற்றி ஆராய்வதற்கு அரிய சான்றாக உள்ளன.

பாஹியான் மூன்றாண்டு காலம் பாடலிபுத்திரத்தில் தங்கியிருந்தார். மகாயான, ஹீனயானக் கோட்பாடுகளைப் பரப்பும் வகையில் இந்தியா முழுவதிலிருந்து ஏரானமான மாணவர்களை ஈர்த்த இரு பௌத்த மடாலயங்களை அந்நகரில் இவர் கண்ணுற்றார். பாடலி

புத்திரத்தில் அசோகர் எழுப்பியிருந்த வியத்தகு அரண்மனை சீனப் பயணியின் உள்ளத்தில் பெரும் வியப்பை ஏற்படுத்தியதோடு பாராட்டு தலையும் பெற்றது. “அசோகர் தேவதைகளைக் கொண்டே இந்த அரண்மனையை எழுப்பியிருக்க வேண்டும்” என்பது பாஹியானுடைய கருத்தாகும். மகத நாட்டுப் பேரூர்களில் மக்கள் செல்வச் செழிப்போடு வளமிகு வாழ்க்கை நடத்தினார்கள். ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டுக் கொடை வள்ளல்களாவும், நேர்மையாளர்களாகவும் வாழ்ந்து வந்தனர். நாடெங்கிலும் ஏரானமான இளைப்பாறும் இல்லங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பாடலிபுத்திரத்திலிருந்து மருத்துவமனையில் இலவச மருத்துவ வசதிகள் தரப்பட்டன.

மேலைச் கங்கைப் பள்ளத்தாக்குப் பகுதியில் வாழ்ந்து வந்த மக்களின் வாழ்க்கையைப் பற்றி பாஹியான் தெளிவாகக் குறித்துள்ளார். “கணக்கிலடங்கா மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகிறார்கள். தங்களுடைய வீடுகளைப் பற்றி அவர்கள் பதிவு செய்யவேண்டிய தேவையில்லை. மாஜிஸ்டிரேட்டுகளிடம் செல்லவோ, அவர்களுடைய சட்டதிட்டங்களுக்கோ இவர்கள் உட்பட்டு வாழ்வில்லை. அரசருடைய நிலங்களைப் பயிரிடுவோர் மட்டுமே விளைச்சலில் கிடைக்கும் இலாபத்திலிருந்து அரசருக்கு ஒரு பகுதி கொடுக்கவேண்டும். அவர்கள் செல்வதாக இருந்தால் செல்லலாம் ' இருப்பதாக இருந்தால் இருக்கலாம். சிரச்சேதம், கசையடி போன்ற உடல்சார்ந்த தண்டனைகள் ஆகியவை இல்லாமலேயே அரசர் ஆட்சி செய்து வந்தார். குற்றங்களின் தரத்தைப் பொறுத்து குறைவாகவோ அதிகமாகவோ குற்றவாளிகள் மீது அபராதத் தொகை விதிக்கப்பட்டது. தொடர்ந்து பலமுறை அரசரை எதிர்த்துத் தீயவுள்ளத்துடன் புரட்சி செய்தாலும் அவர்கடைய வலது கைகளெ துண்டிக்கப்படும்”. மேலே குறிப்பிட்டுள்ள பகுதியை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கில்லை எனினும் இரண்டாம் சந்திரகுப்தருடைய ஆட்சி முறையைப் பற்றி ஓரளவு உணர்த்துகிறது. இந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பௌத்த சமயத்தின் பிடிதரத்தைப் பற்றி பாஹியான் எழுதியுள்ளார். பௌத்தம் வடமேற்கு இந்தியாவில் புகழ் பெற்றிருந்ததாகவும், வங்காளத்தில் தழைத்துச் செழித்ததாகவும், மதுராவில் முன்னேறி வருவதாகவும் கூறுகிறார்.

## குப்தர்களின் ஆட்சிமுறை

குப்தபேரரசு ஒரு பெரிய பரந்தப் பேரரசாக இந்ததால் அதனை ஆட்சி செய்ய ஒரு நிலையான வலிமை வாய்ந்த ஆட்சித்துறை தேவையானது. குப்தர்கள் காலத்தில் குடியரசு நாடுகள் மற்றும் முடியரசு நாடுகள் என இருவகை அரசுகள் இருந்தன. அலகபாத் தூண் கல்வெட்டு இதனை விளக்குகிறது. மேலும் குப்த மன்னர்கள் மக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருந்ததால் ஆட்சித் துறைக்கு அவர்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தனர்.

**மன்னர்**

குப்த பேரரசு முடியாட்சி அமைப்பில் செயல்பட்டது. அரசுரிமை பரம்பரையாக இருந்தது. மூத்த புதல்வன் யுவராஜா மன்னனாக கருதப்பட்டு அரியணையில் அமர்ந்தான். மன்னர் கடவுளுக்கு நிகராகக் கருதப்பட்டார். தெய்வீக உரிமை கோட்பாட்டை மன்னன் பின்பற்றினாலும் அதிகாரங்கள் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் தான் இருந்தது.

சட்டம் இயற்றுதல், நிர்வாகம் செய்தல், நீதி வழங்குதல் போன்ற அரசின் முக்கிய கருவிகள் மன்னரிடமே இருந்தன. தங்கள் ஆட்சிக் காலத்திலேயே தங்கள் புதல்வருக்கு ஆட்சித் துறையில் பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களை பிராந்தியங்களின் மேற்பார்வையாளராகவும்,ஆளுநர்களாகவும், சில நேரங்களில் படைத்தளபதிகளாகவும் நியமித்தார். கலை, இலக்கியம் போன்றவற்றின் வளர்ச்சிக்கு மன்னன் பல அரிய பணிகளைச் செய்தார். நீதித் துறையில் உச்சவரம்பு அதிகாரத்தை மன்னர் பெற்றிருந்தார். போர்காலங்களில் அரசனே தலைமை தாங்கி படைகளை வழி நடத்திச் சென்றார். விளைநிலங்கள் அனைத்தும் அரசனுக்கே உரியதாய் இருந்தது. மன்னருக்கு உதவி செய்ய அமைச்சர்கள் அடங்கிய ஒரு மந்திரிசபையும் இருந்தது.

**மந்திரிசபை**

குப்தர்கள் காலத்தில் அமைச்சர்கள் சச்சிவா என அழைக்கப்பட்டனர். மூத்த அமைச்சர் முக்கிய மந்திரி எனப்பட்டார். மந்திரி சபையானது மன்னருக்கு பல ஆலோசனைகளையும், தீர்மானங்களையும் வழங்கியது அமைச்சரவையில் மாற்றம் செய்யும் உரிமையை மன்னர் பெற்றிருந்தார். பொதுவாக அமைச்சர்களின் பதவி பரம்பரை அடிப்படையிலேயே இருந்தது. கஞ்சுகி என்பவர் அமைச்சரவைக்கும் மன்னருக்கும் பிரதிநிதியாகவும் அமத்தியார் என்பவர் மந்திரிசபையின் தீர்மானங்களை மன்னருக்குத் தெரிவிப்பவராகவும் செயல்பட்டனர், ஆனால் சபையின் கருத்தை ஏற்பதும், மறுப்பதும் மன்னரின் தனிப்பட்ட உரிமையாகும். முன்னர் திடீரென்று இறந்தால் இச்சபையானது முழு அதிகாரங்களையும் பெற்று ஆட்சி பீடத்தின் பாதுகாவலாக இயங்கியது. அரசுரிமை பற்றிய சிக்கல்களை தீர்க்கவும் இச்சபைக்கு அதிகாரம் இருந்தது. இளவரசின் பட்ட ஏற்பு விழாவை கவனிப்பதும் இச்சபையின் தலையாய கடமையாகும்.

**மாநில ஆட்சி**

குப்த பேரரசு ஆட்சி வசதிக்காக பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மாநிலம் என்பது தேசம் ரா்'டிரம், மண்டலம் என பல பெயர்களில் அழைக்கப்பட்டது. மாநிலங்களின் நிர்வாகத்தை கவனிக்க ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். அவருக்கு உதவி செய்ய பல அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர். ஆளுநர்கள் பொதுவாக இளவரசர்களாகவே இருந்தனர். குமார அமத்தியார் என்னும் அமைச்சர் ஆளுநருக்கு ஆலோசகராக இருந்தார். மகாதண்ட நாயக்கர் என்ற ராணுவத் தளபதி, தண்ட பாசாதி கரணிகர் என்ற காவல்துறைத் தலைவர் பாட்டியபரிகா என்ற தலைமை கணக்காயர், ததாயுக்தர் என்ற கருவூல அதிகாரி ஆவசதிகர் என்ற அறநிலையத்துறை அதிகாரி பொன்றவர்கள் மாநில ஆட்சித்துறையின் முக்கிய அதிகாரிகளாக விளங்கினார். மாநிலங்கள் மேலும் பிரிக்கப்பட்டு பக்தி என அழைக்கப்பட்டன. இதன் தலைவர் உபரிகர் எனப்பட்டார்.

**மாவட்ட ஆட்சி**

குப்த மன்னர்கள் சிறந்த மாவட்ட ஆட்சித் துறையை அமைத்திருந்தனர் என கல்வெட்டு ஆதாரங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அதிட்டாணம் என்ற ஒரு தலைநகர் இருந்தது. மாவட்ட ஆட்சித்தலைவரின் அலுவலகம் அதிகரணம் என்பட்டது. தலைமை வங்கி அதிகாரி, வணிகக் குழுவின் தழலவர், தொழிற்சங்கங்களின் தலைவர், வனஅதிகாரி, நிலவருவாய் அதிகாரி, போன்ற பல அலுவலர்கள் அடங்கிய ஒரு குழு மாவட்ட

ஆட்சித் தலைவருக்கு நிர்வாகத்தில் உதவி செய்தது. ஆவணக் காப்பாளர் என்ற அதிகாரியும், ஆவண எழுத்தர்களும் மாவட்ட ஆட்சித் துறையில் இடம் பெற்றிருந்தனர்.

**நகராட்சி மற்றும் கிராம நிர்வாகம்**

குப்தர்கள் காலத்தில் நகராட்சியும் கராம நிர்வாகமும் முக்கிய அம்சங்களாக இருந்தன. நகரத்தைப் புரம் எனவும் அதன் ஆட்சித் தலைவரை புரவலர் அல்லது இரட்சகர் எனவும் அழைத்தனர். இவரை நியமிக்கும் அதிகாரம் மாநில ஆளுநருக்கு இருந்தது. நாலந்தா, வைசாலி, கன்னோஜ், சாஞ்சி, பாடலிபுத்திரம் போன்ற முக்கியமான நகரங்கள் குப்த பேரரசில் இருந்தன. நகரங்களைச் சுற்றி கோட்டையும், அகழிகளும் அமைக்கப்பட்டிருந்தது.

கிராமம் என்பது குப்த பேரரசின் அடிப்படை பிரிவாக இருந்தது. பல கிராமங்கள் இணைந்து வி'யம் என்ற ஒரு அமைப்பை உருவாக்கியது. இதன் தலைவர் வி'யாபதியாவார். குிராமத்தின் தலைவர் கிராமிகர் என அழைக்கப்பட்டார். கிராமங்கள் பட்டா என்றும் அக்ரஹாரம் என்றும் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் சுதந்திரமாக செயல்படும் ஒரு சபை காணப்பட்டது. கணக்கர், எழுத்தர், நிலவரி அலுவலர், வருவாய் அதிகாரி போன்ற அதிகாரிகள் கிராம நிர்வாகத்தில் சிறப்பாக பணியாற்றினர்.

**வருவாய்த்துறை**

நில வருவாய் குப்தர்களின் முக்கியமான வருமானமாக இருந்தது. விளைச்சலில் 1/6 பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது. வரியை மக்கள் தானியமாகவோ அல்லது பொன்னாகவோ அரசுக்குச் செலுத்தினர். இதற்கு பாகம் என்ற பெயர் வழக்கத்திலிரந்தது. இது தவிரசுங்க வரியும் துறைமுகங்கள், ஒடக்கரைகள் மூலம் வசூலிக்கப்பட்டது. உப்பளங்கள், காடுகள், சுரங்கங்கள் மீதும் வரி விதிக்கப்பட்டன. காவல்துறையின் சீரமைப்பிற்காக சோர தண்டவர்ஜம் என்ற வரி வசூலிகக்கப்பட்டது. அரசின் வருவாயில் பெரும்பகுதி மக்கள் நலனுக்காகவும் பொதுப் பணிகளுக்கும் செலவிடப்பட்டது. அமைச்சர்கள், அரசு ஊழியர்கள், படைவீரர்கள் போன்றவர்களுக்கு ஊதியங்களும் அளிக்கப்பட்டது.

**இராணுவம்**

குப்த மன்னர்கள் தங்கள் பரந்தப் பெரரசை காப்பாற்ற ஒரு நன்கு வலிமை வாய்ந்த படையை அமைத்திருந்தனர். அதில் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என்ற பிரிவுகள் இருந்தன. மன்னர்களே முன்னின்று படைவீரர்களை தேர்ந்தெடுத்தனர். நல்ல உடற்கட்டும், அறிவுத்திறனும் உள்ளவர்களே படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். குப்தர்களட கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கினர். ஆனால் அவர்களிடம் கப்பற்படை இருந்ததற்கான ஆதாரங்கள் கிட்டவில்லை.

**நீதித்துறை**

குப்தர்களின் நீதித்துறை பற்றி இலக்கிச் சான்றுகளிலும், கல்வெட்டுக்களிலும் குறிப்பிடபட்டுள்ளது. அவர்கள் வழக்குகளை சிவில் மற்றும் கிரிமினல் என இரு பிரிவாக பிரித்திருந்தனர். மகாதண்டநாயகர், மகாட்ச பாலாலிகர் ஆகியோர் நீதித்துறையின் முக்கிய அதிகாரிகள் ஆவர். 18 வகையான சட்டங்கள் குப்தர்கள் காலத்தில் நடைமுறையில் இருந்தன. தலைநகரத்தில் உயர் நீதிமன்றமும் மற்ற முக்கிய நகரங்களில் மாவட்ட நீதிமன்றங்களும் இருந்தன. வழக்குகளில் இறுதி முடிவு எடுக்கும் உரிமை மன்னருக்கு இருந்தது. அவரே நீதித்துறையின் பாதுகாவலராகவும் இருந்தார். நீதிபதிகளை மன்னரே

நியமித்தார். தீர்ப்புகள் சான்றொர்கள் அடங்கிய ஒரு குழுவின் மூலம் நன்கு விசாரணை நடத்தியப் பிறகே வழங்கப்பட்டு குற்றவாளிகளுக்கு வழக்குகளில் மேல் முறையீடு செய்யும் உரிமையும் இருந்தது.

குப்தர்கள் காலத்தில் தண்டனைகள் சாதரணமாகவே இருந்ததாக பாகியான் குறிப்பிட்டுள்ளார். எனினும் தேசத்துரோகம், கலகம் விளைவித்தல் போன்ற குற்றங்களுக்கு தண்டனைகள் கடுமையாக இருந்தது. யானையின காலால் நசுக்குதல், கண்களை குருடாக்குதல், கை, கால்களை வெட்டுதல் போன்ற தண்டனைகளும் வழக்கத்திலிருந்தன. குற்றவாளிகளை கண்டறிய சோதனைச் சடங்குகள் நடத்தப்பட்டன. இதன் மூலம் உண்மையான குற்றவாளியை கண்டறிந்து அதற்கேற்ப தண்டனைகள் வழங்கப்பட்டது. ஆனால் தண்டனைகளை குறைக்கவோ அல்லது ரத்து செய்யவோ மன்னருக்கு அதிகாரம் இருந்தது.

**அறநிலையத்துறை**

குப்தர்கள் காலத்தில் இந்துமதம் புதிய வளர்ச்சியைக் கண்டது. சமணமும், பௌத்தமும் தங்கள் செல்வாக்கை இழந்தன. நாடு முழுவதும் பல இந்து கோயில்கள் கட்டப்பட்டன.

வேதகால சடங்கு முறைகள் மீண்டும் நடைமுறைக்கு வந்தன. எனவே கோயில்களின் வளர்ச்சிக்காகவும், அதனை நிர்வகிக்கவும் ஒரு தனித்துறை தேவைப்பட்டது. எனவே குப்தமன்னர்கள் அறநிலையத்துறைழயயும் அதற்காக ஒரு அமைச்சரையும் நியமித்தனர். அவருக்கு உதவி செய்ய விநயஸ்நிதி என்ற அலுவலர் இருந்தார். எல்லா குப்த மன்னர்களும் மத சகிப்புத் தன்மையை கடைபிடித்தனர்.

**குப்தர்கள் ஒரு பொற்காலம்**

கிரேக்க வரலாற்றில் பெரிக்கிளிசின் காலத்தையும், ரோமானிய வரலாற்றில் அகஸ்டஸ் மன்னரின் காலத்தையும், இங்கிலாந்து வரலாற்றில் எலிசபெத் மகாராணியின் காலத்தையும் பொற்காலம் என குறிப்பிடுவர். அதே போல் இந்திய வரலாற்றில் குப்தர்களின் காலத்தை “பொற்காலம்” என்றால் அது மிகையாகாது. சிலர் இதனை ஒரு ‘மறுமலர்ச்சிக் காலம்’ என்றும் கூறுவர். ஏனெனில் இக்காலத்தில் எல்லா அம்சங்களிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. அது கலை, இலக்கியம், சமயம், சமூகம், பொருளாதாரம் போன்ற துறைகளில் அளவற்ற வளர்ச்சியை ஏற்படுத்தியது.

**இலக்கியம்**

குப்தர்கள் காலத்தில் இலக்கியத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றத் துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியது. குப்தர்களின் சமஸ்கிருத மொழியை ஆதரித்தனர். எனவே வடமொழியான சமஸ்கிருதத்தில் பல இலக்கியங்கள் படைக்கப்பட்டன.

இரண்டாம் சந்திரகுப்தரின் காலத்தில் “நவரத்தினங்கள்” என்ற ஒன்பது அறிஞர்களைக் கொண்ட குழு ஒன்று அரசவையில் இருந்தது. அவர்களில் முக்கியமானவர் காளிதாசர், சாகுந்தலம், விக்கிரம ஊர்வசியம், மாளவிகாக்னிமித்திரம் போன்ற நாடகங்களையும்

இரதவம்சம், குமாரசம்பவம் என்ற காப்பியங்களையும் மேகதூதம், ரிதுசம்காரம் என்ற பாடல்களையும் இயற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றுள் இரகுவம்சம் ராமபிரானின் குலத்தைப் பற்றியும் குமாரசம்பவமு் சுப்பிமணியரின் அவதாரம் பற்றியும் கூறுகின்றன. சாகுந்தலம் என்ற நாடகம் சமஸ்கிருதத்தில் மிகச் சிறந்த நாடக நூலாகும் காளிதாசரை இந்தியாவின் ''ே'க்ஸ்பியர்'' என்றும் கூறுவர். விசாகதத்தர் என்பவர் முத்திரராட்சசம், தேவிசந்திரகுப்தம் என்ற இரு நாடகங்கைளயும் எழுதியுள்ளார். இவற்றில் முதல் நூல் மௌரியர்களுக்கும், நந்தர்களுக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டங்களையும், இரண்டாவது நூல் ராமகுப்தர் மற்றும் துருவாதேவியின் வரலாற்றையும் கூறுகின்றன. சூத்திரகர் எழுதிய மிருச்சகடிகம் என்ற நாடகம் உஜ்ஜயினியில் வாழ்ந்த சாருதத்தன் என்ற வணிகனுக்கும் வசந்த சேனை என்ற பெண்ணுக்கும் ஏற்பட்ட காதலைப் பற்றிக் கூறுகின்றது. அடுத்து பாரவி என்ற புகழ்பெற்ற கவிஞர் கீர்த்தார்ஜீனியம் என்ற கவிதையை எழுதினார். வாத்ஸ்யாயனர் என்ற கவிஞர் காமசூத்திரத்தை வடமொழியில் இயற்றினார். மேலும் குப்தர்கள் காலத்தில் பல நீதிக்கதைகளும், பஞ்சதந்திரக் கதைகளும் எழுதப்பட்டன. வாராகமிரர் பிருகத்சம்கிதையும், பாமகர் காவிய அலங்காரத்தையும் இலக்கண விதிமுறைப்படி எழுதினர். குப்தர்கள் காலத்திற்கு முன்பு எழுதப்பட்ட மகாபா'யம் என்ற நூலுக்கு இக்காலத்தில் விளக்க உரை எழுதப்பட்டது.

**அறிவியல்**

குப்தர்கள் காலத்தில் ஏராளமாக அறிவியல் நூல்களும் எழுதப்பட்டன. சூரியசித்தாந்தம் என்ற அறிவியல் நூலை ஆரியப்பட்டர் என்ற வானவியலு் வல்லுநர் இயற்றினார். இந்நூலில் சூரிய மற்றும் சந்திரரகிரகணங்களுக்கான காரணங்கள் பற்றியும், பூமியின் சுழற்சி பற்றியும் விளக்கினார். ''பிரம்மகுப்தர்'' என்பவர் பவியீர்ப்பு விசையைப்பற்றி நியூட்டனுக்கு மன்னரே கூறினார். ''பாலகாப்பியரால்'' எழுதப்பட்ட ஹஸ்தயயூர் வேதம் என்னும் நூல் கால்நடை வைத்தியம் பற்றி விவரிகின்றது. ஆ'மாங்கசங்கிரகம், அ்'டாங்க கிருதயசம்கிதை என்ற இரண்டு நூல்கள் குப்தர்கள் காலத்திய மருத்துவம் பற்றி பல அரிய செய்திகளைத் தருகின்றன. இவற்றை வாக்பட்டர் என்பவர் இயற்றினார்.

**கணிதம்**

கணிதத்துறையில் தசம எண்மான முறை குப்தர்கள் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இயற்கணிதம், வர்க்கமூலம், கனமூலம், எண்கணிதம், தரிகோனகணிதம் போன்றவை பற்றியும் பல நூல்கள் வெளியிடப்பட்டன. ''பக்சலி'' என்ற இடத்தில் கிடைக்கப் பெற்ற ஆதாரங்கள் குப்தர்கள் காலத்தில் பின்னம், சமன்பாடுகள் போன்றவை நடைமுறையில் இருந்தது என்பதைக் காட்டுகின்றன.

**கலையும் கட்டிடக்கலையும்**

குப்தர்களின் காலம் பொற்காலம் என்பதற்கு அவர்கள் காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியும் ஒரு காரணமாகும். மதுரா, பனாரஸ், பாடனா, போன்ற இடங்களில் பல வகையான கலைச்சின்னங்கள் காணப்படுகின்றன.

**ஓவியக்கலை**

குப்த மன்னர்கள் அழகிய கலை நயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இக்கால ஓவியக்கலை புத்த சமயக் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன. அஜந்தாவில் காணப்படும்

ஓவியங்கள் மிகுந்த கலை நயத்துடன் வடிவமைக்கபட்டுள்ளன. ஆவை கடவுளர்கள், முனிவர்கள், அரசர்கள், அரசிகள் போன்றவர்களை நினைவூட்டுவதாய் உள்ளன. குவாலியருக்கு அருகிலுள்ள ‘‘பாக்’’ என்னுமிடத்தில் காணப்படும் குகை ஓவியங்கள் குப்தர்களின் ஓவியக் கலைக்கு ஒரு சிறந்த சான்றாக உள்ளன. மேலும் குப்தர்கள் கால ஓவியங்களில் பெண்கள் மெலிந்த இடையுடன், அழகிய அணிகலன்களுடனும் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

**சிற்பக் கலை**

இக்காலத்தில் பல வகையான அழகிய சிற்பங்கள் செதுக்கபட்டன. ஏராளமான புத்தர் சிலைகளும், சிவன், பார்வதி, அனந்தசயன மூர்த்தி, நரசிம்மமூர்த்தி போன்ற தெய்வங்களின் சிலைகளும் வடிக்கப்பட்டன. சாரநாத்திலுள்ள புத்தர் சிலையும், உதயகிரி என்னுமிடத்தில் காணப்படும் வராக உருவமும் குப்தர்களின் சிற்பகலைக்கு சிறந்த சான்றாகும். உலோகங்களினால் சிலைகள் செய்யப்படுவதும் இக்காலத்தில் வழக்கத்திலிருந்தது. பல அழகிய வேலைபாடுகளுடன் கூடிய செப்புத் திருமேனியுயம் குப்தர்களின் சிற்பக்கலைக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

**கட்டிடக்கலை**

குப்தர்கள் காலத்தில் நான்கு வகையான கட்டிடக்கலைகள் பின்பற்றப்பட்டன. இவை குனை மண்டபங்கள், விமானம் இல்லாத கோயில்கள், மேடைமீது கட்டப்பட்ட கோயில்கள் என்பனவையாகும். துிகாவா என்னுமிடத்திலுள்ள வி்ஹுு கோயில் பூமரா என்னுமிடத்திலுள்ள சிவன் கோயில் சாஞ்சி, கயா இடங்களிலுள்ள புத்தர் கோயில்கள் தியோகர் என்னுமிடத்திலுள்ள செங்கற் கோயில்கள் போன்றவை குப்தர்களின் கட்டிடக்கலைத் திறனை உலகிற்கு உணர்த்துகின்றன.

இக்காலத்தில் செங்கல் மண்ணை கொண்டு நுண்ணிய வேலைபாடுகளுடன் பல உருவங்கள் செய்யப்பட்டன. தெய்வங்கள், ஆண்கள், பெண்கள், மிருகங்கள் போன்ற உருவங்கள் குப்தர்களின் கலைத்திறனை வெளிப்படுத்துகின்றன. அஜந்தாவிலும்-, ஆந்திராவிலும் உள்ள குகைக் கோயில்களும் தூாண்களும் குப்தர்கள் கட்டிடக்கலைத்திறனை நன்கு உணர்த்துகின்றன. இசைம ற்றும் நடனக்கலையிலும் குப்தர்கள் சிறந்து விளங்கினர். சிற்பங்கள், ஓவியங்கள், நாணயங்களில் காணப்படும் ஓவியம் போன்றவை அவர்களின் இசை ஆர்வத்தையும், நடன ஆர்வத்தையும் உணர்த்துகின்றன. மத்தளம் உடுக்கை, யாழ், பறை, சங்கு, சகடை போன்ற இசைக் கருவிகளையும் அவர்கள் பணன்படுத்தினர்.

**சமுதாய நிலை**

சமுதாயத்தின் ஜாதிமுறைகள் இருந்தது. பிராமணர்கள் ‘த்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என நான்கு பிரிவுகள் இருந்தனர். அவற்றுள் பிராமணர்கள் உயரிய நிலையில் இருந்தனர். பல வகையான சலுகைகளை இவர்கள் பெற்றனர். ‘‘சண்டாளர்கள்’’ எனப்பட்ட கலப்பு ஜாதியினர் தீண்டத்தகாதவர்களாகத் கருதப்பட்டனர். அவர்கள் ஊருக்குப்புறத்தே வசித்தனர். குப்தர்கள் காலத்தில் கூட்டுக்குடும்பமுறை நடைமுறையிலிருந்து தந்தை குடும்பத்தின் தலைவனாகக் கருதப்பட்டார். பெண்களின் நிலை வரைமுறைக்குட்பட்டிருந்தது. மிகவும் இளம் வயதிலேயே திருமணம் செய்விக்கப்பட்டது. பெண்களைவிட ஆண்களுக்கு மூன்று வயது அதிகம் இருக்கவேண்டும்.உயர்குலப் பெண்கள் கல்வி கற்றனர். இசை, நடனம்,

பாடல் முதலியவற்றில் அவர்கள் சிறந்து விளங்கினர். ஊடன்கட்டை ஏறும் முறை பின்பற்றப்பட்டது. கலப்புத்திருமணமும் பல எதிர்ப்புகளுக்கிடையே ஆங்காங்கே நடைப்பபெற்றது. ஒரு பெண் இருவரை மணக்கும் பழக்கமும் மிக அரிதாக வழக்கத்திலிருந்தத. பருத்தி, கம்பளி, பட்டு ஆகியவை ஆடைகள் நெய்யப் பயன்பட்டன. பலவிதமான அணிகலன்களை ஆண்களும், பெண்களும் விரும்பி அணிந்தனர். தங்கம், வெள்ளி, தந்தம் போன்றவற்றால் நகைகள் செய்யப்பட்டன. மேலும் குப்தர்கள் காலத்தில் அடிமைகள் முறையும் காணப்பட்டது. ‘‘தாசர்கள்’’ என்று அழைக்கப்பட்ட அவர்கள் பலவிதமான கடின வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அடிமைகளை வாங்கவும், விற்கவும் உயர் குடியினருக்கும், செல்வந்தர்களுக்கும் உரிமை இருந்தது.

**பொருளாதாரம்**

குப்தர்கள் காலத்தில் பொருளாதாரம் சிறந்த நிலையில் இரந்தது. வாணிபமும், வேளான்மையும் நன்கு செழித்தது. வேளான்மை பெரும்பாலான மக்களின் முக்கயத் தொழிலாக இருந்தது. பல வகையான பயிர்கள் பயிர் செய்யப்பட்டன. மன்னர்கள் நீர்பாசன வசதியைப் பெருக்கினர். பிராமணர்களுக்கு நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டன. கங்கைச்சமவெளியில் பல குடியேற்றங்கள் உருவாயின. நெசவுத்தொழில், தச்சுத்தொழில் உலோகத்தொழில், கட்டிடத்தொழில், மீன்பிடித்தல் போன்ற தொழில்களும் நடைபெற்றன. தொழிலாளர்கள் நலனுக்காக பல சங்கங்கள் அமைக்கப்பட்டன. இவை அக்கால வங்கிகள் போன்று செயல்பட்டன. வாணிபமும் சிறப்புடன் நடைபெற்றதாக பாகியான் குறிப்பிட்டுள்ளார்.

உஜ்ஜயினி, பனாரஸ், வைசாலி, கணா, பிரயாகை, மதுரா போன்ற நகரங்கள் முக்கிய வாணிப ஸ்தலங்களாக இருந்தன. இந்நகரங்கள் நெடுஞ்சாலைகள் மூலம் இணைக்கபட்டிருந்ததால், வாணிபம், தங்கு தடையின்றி நடந்தது. சாலைகளில் பாதுகாப்பிற்காக காவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அயல்நாட்டு வாணிபமும் கடல்வழியாக நடைப்பபெற்றது. ‘‘தாமிரலிப்தி’’ என்னுமிடம் முக்கியத் துறைமுகமாக விளங்கியது. சீனா, சுமத்திரா, ஜாவா, இலங்கை போன்ற நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு இருந்தது. உலோகப் பொருட்கள், பட்டு பேரிச்சம்பழம், குதிரைகள் போன்றவைகள் இறக்குமதி செய்யப்பட்டன. ‘‘சிரோனி’’‘‘நிகமம்’’‘‘புகா’’ என்ற வணிகக் குழுக்கள் வியாபார நடவடிக்கைகளை கவனித்தன.

**சமயநிலை**

குப்தர்கள் காலத்தில் இந்துமதம் புத்துயிர் பெற்றது. பக்திக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. சடங்குகளும், வேள்விகளும் மெதுவாக மறையத் தொடங்கின. முக்கள் பலவகையான தெய்வங்களை வணங்கினர். பேண் தெய்வங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. உருவ வழிபாடு பிரபலமடைந்தது. குப்த மன்னர்கள் மத சகிப்புத் தன்மையைப் பின்பற்றினர். எனவே பல இடங்களிலும் கோயில்கள் கட்டினர். வைணவமும், சைவமும் சிலரின் முக்கிய மதமாக இருந்தது. வி‘ணுவின் வெவ்வேறு அவதாரங்களும் மக்களிடம் வரவேற்பை பெற்றன. சில பகுதிகளில் சமணமும் காணப்பட்டது. விநாயகர் வழிபாடு மக்களிடையே சிறப்புந்நிருந்தது. கோயில்களில் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன. அப்போது யாகங்களும் எளிமையான முறையில் நடைப்பெற்றன. ஆனால் குப்த மன்னர்கள் அசுவமேதயாகம் போன் பெரிய யாகங்களைச் செய்துள்ளதாக ஆதாரங்கள் உள்ளன.

வாயுபுராணம், மச்சபுராணம் போன்ற புராணங்கள் இயற்றப்பட்டு சிவபெருமானின் பெருமை போற்றப்பட்டது.

## ஹர்ஷவர்த்தனர்

**தோற்றம்**

கி.பி.6-ம் நூற்றாண்டில் இந்தியாவின் அரசியல் நிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. குப்தர்களின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஹீணர்கள் எழுச்சியடைந்தனர். இது இந்திய அரசியலில் அமைதியைக் குலைத்தது. ஒரு பகுதியில் ஹீணர்கள் வலிமையுடன் ஆட்சி நடத்தினாலும், மாளவமும், வாலாபியும் முக்கியப் பேரரசுகளாகத் திகழ்ந்தன. தென்னிந்தியாவில் சேரர், சோழர், பாண்டியர் மற்றும் பல்லவர்களுக்கிடையே போராட்டங்கள் நடந்தன. இத்தகையச் சூழ்நிலையில் வர்த்தன வம்சம், தானேசுவரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சிக்கு வந்தது.

**வரலாற்றுச் சான்றுகள்**

வர்த்தன வம்சத்தைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள யுவான்சுவாங்கின் குறிப்புகளும், பாணர் எழுதிய ஹர்'சரிதமும் உதவுகின்றன. இவ்வம்சத்தின் தலைசிறந்த அரசரான ஹர்'ரால் எழுதப்பட்ட இரத்தினாவளி, நாகாநந்தா, பிரியதர்சிகாபோன்ற நூல்களும் சிறந்த ஆதாரமாக உள்ளன. இவை தவிர ''மதுபன்'' பட்டயங்கள், பான்சேரப்பட்டயங்கள், கோனபட்டயங்கள் முதலியனவும் சில நாணயங்களும் வர்த்தன வம்சத்தின் சிறப்புகளைப் பற்றிக் கூறுகின்றன.

**ஹர்ஷசரிதம்**

ஹர்சரின் மிக நெருங்கிய நண்பராகவும் அறிஞராகவும் விளங்கிய பாணர் ஹர்'சரிதம் என்ற நூலை எழுதினார். இதில் ஹர்'ரின் சாதனைகளையும், படையெடுப்புகளையும் பற்றிநயம்படக் கூறியுள்ளார். மேலும் அக்காலத்து அரசியல், சமுதாயம், பொருளாதாரம் மற்றும் சமயநிலை பற்றியும் இந்நுரலில் கூறப்பட்டுள்ளது. இது 8 அத்தியதயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் அத்தியாயம் ஆசிரியரைப் பற்றியும் இரண்டாவதில் ஹர்'ர் பற்றியும், மூன்றாவதில் தலைநகர் தானேசுவரம் பற்றியும், நான்காவது அத்தியாயத்தில் ஹர்'ரின் முன்னோர்களான பு்'யபூதி, பிரபாகரவர்த்தனர், இராஜ்யவர்த்தனர் ஆகியோர் பற்றியும் குறிப்புகள் உள்ளன. அடுத்து ஐந்தாவது அத்தியாயத்தில் பிரபாகரவர்த்தனரின் இறப்பு பற்றியும், ஆறாவதில் இராஜ்யவர்த்தனரின் ஆட்சிப் பொறுப்பும், இராஜ்யஸ்ரீயின் திருமணமும், பின்னர் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள் பற்றியும், ஏழாவதில் ஹர்'ரின் படையெடுப்புகள் பற்றியும், எட்டாவது அத்தியாயத்தில் பல தத்துவ அறிஞர்கள் விந்திய மலையில் இருந்ததைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சைவ சமயத்தில் அதிக நம்பிக்கை கொண்ட பு்'யபூதி என்பவரால் வர்த்தன வம்சம் தோற்றுவிக்கப்பட்டது. நாரவர்த்தனர், இராஜ்யவர்த்தனர், ஆதித்யவர்த்தனர், பிரபாகவர்த்தனர் ஆகியோர் இந்த பரம்பரையின் முந்திய அரசர்களாவார்கள். பிரபாகவர்த்தனர், ''மகாராஜாதிராஜா'' என்ற பட்டப் பெயருடன் அழைக்கப்படுகின்றார். இவர் கி.பி.583-ல் ஆட்சிக்கு வந்தார். வலிமைமிக்க இவர் ஒரு மாளவ இளவரசியை மணந்தார். அவருக்கு இராஜ்யவர்த்தனர், ஹர்'வர்த்தனர் என்ற இரு மகன்களும், இராஜ்யஸ்ரீ என்ற ஒரு மகளும் இருந்தனர். இளவரசர்கள் இருவரையும் வடமேற்கில் ஹீணர்களின் அச்சுறுத்தலைத் தடுக்க தந்தையார் அனுப்பி வைத்தார். அவர்களும் ஒரு படையுடன் சென்று ஹீணர்களை

தோற்கடித்து வெற்றியுடன் நாடு திரும்பியதும், தந்தை இறந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தனர்.

அப்போது தங்கள் தங்கையின் கணவனான கன்னோசி மாளவ மன்னக் தேவகுப்தனால் கொலை செய்யப்பட்ட செய்தி, மேலும் அவர்களைத் துயரத்தில் ஆழ்த்தியது. சினம் கொண்ட இராஜ்யவர்த்தனர் ஒரு படையுடன் மாளவம் நோக்கிப் புறப்பட்டார். ஆனால் வழியிலேயே கௌடாவின் (வங்காளம்) மன்னன் சாசங்கனின் சூழ்ச்சியால் கொல்லப்பட்டார். இராஜ்யஸ்ரீயை எதிரிகள் சிறையில் அடைத்தனர். இத்தகையச் சூழ்நிலையில் ஹர்'வர்த்தனது தனது 16-ம் வயதில் கி.பி.606-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அரியணையேறியதும் முதலில் சாசங்கனைப் பழிவாங்கவும், தனது தங்கையைச் சிறையிலிருந்து மீட்கவும் சபதம் பூண்டார். இவ்வரலாற்றை மிகவும் நயம்பட பாணர் கூறியுள்ளார்.

**ஹர்ஷரின் படையெடுப்புகள்**

இளம் வயதிலேயே அரியணை ஏறிய ஹர்'ரின் ஆரம்பகாலம் பலச் சிக்கல்களை கொண்டிருந்தது. தனது அண்ணனைக் கொன்ற சாசங்கனைப் பழிவாங்கவும் தனது தங்கையைச் சிறையிலிருந்து மீட்கவும் நினைத்த ஹர்'ர் தனது படைகளை பெருக்கினார். காமரூபத்தை (அஸ்ஸாம்) சார்ந்த பாஸ்கரவர்மனுடன் ஒரு ரகசிய உடன்படிக்கைச் செய்துகொண்டார். அதன்பின் சாசங்கனுடன் போர்புரிய ஒரு படையை அனுப்பினார். ஆனால் சாசங்கன் தப்பியோடிவிட்டான். ஆவனை ஹர்'ரால்இறுதிவரை போரில் தோற்கடிக்க முடியவில்லை. மாளவத்தின் சிறையிலிருந்த தனது தங்கையை மீட்கச் சென்ற போது அவள் அங்கிருந்து தப்பிய செய்தி கேட்டு அவளைத் தேடி விந்தியமலைப் பகுதிகளில் அலைந்தார். இறுதியில் தற்கொலைக்கு முயன்று கொண்டிருந்த தனது தங்கையை அழைத்து வந்தார்.

வட இந்தியாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிய ஹர்'ர் தனது கவனத்தை தக்காணம் மீது திருப்பினார். இரண்டாம் புலிகேசி தென்னிந்தியாவில் மிகவும் வலிமைபெற்று விளங்கினான். நர்மதை ஆற்றுக்கரையில் கி.பி.627-ல் ஹர்'ருக்கும், இரண்டாம் புலிகேசி பரமெஸ்வரன் என்ற பட்டத்தைந் சூட்டிக்கொண்டான். மேற்கு சிந்துப் பகுதி மீதும் போர்தொடுத்து ஹர்'ர் தோல்வியை தழுவினார். ஓரிசாவின் வடக்குப்பகுதி ஹர்'ரின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. நேபாளம், கர்'மீர் போன்ற பகுதிகளும் அவருடைய கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால், எல்லைப் புறத்தில் இருந்த சிற்றரசுகள் வலிமையுடன் விளங்கியதால் ஹர்சர் தன்னுடையப் பேரரசை விரிவடையச் செய்ய முடியவில்லை. டாக்டர் ஏ.யு.ஸ்மித்தின் கருத்துப்படி மாளவம், குஜராத் (வாதாபி), கட்ச், கத்தியவார் போன்ற பகுதிகள் ஹர்'ருடையப் பேரரசில் இருந்தன. சாசங்கன் ஆட்சி செய்த வங்காளப்பகுதியை அவன் உயிருடன் இரக்கும்வரை ஹர்'ரால் கைப்பற்ற முடியவில்லை. ஆனால் கி.பி.642-ல் சாசங்கள் இறந்த பிறகு, அப்பகுதியை கைப்பற்றினார். இதுவே ஹர்'ரின் இறுதியான படையெடுப்பு ஆகும்.

**சமயநிலை**

ஹர்ஷரது முன்னொர்கள் பல சமயங்களைப் பின்பற்றினார்கள். பிபாகரவர்த்தனர் சூரியக்கடவுளையும், இராஜயவர்த்தனர் புத்தசமயத்தையும் பின்பற்றினார்களா. ஆனால் ஹர்'ர் முதலில் சிவன், சூரியன் ஆகியோரை வழிப்பட்டு பின்பு யுவான்வுாங்கின் அறிவுரையின்படி மகாயான புத்தமதத்தையும் தழுவினார். இவருடைய ஆட்சிக்காலத்தில் புத்தமதம் செல்வாக்குடன் விளங்கினாலும் சமணமதமும், இந்துமதமும் சில மக்களால் பின்பற்றப்பட்டன. ஹர்'ர் மதசகிப்புத் தன்மையுடன் அனைத்து சமயத்தினரையும் சமமாகவே நடத்தினார். சிவன்,

விஷ்ணு போன்ற கடவுள்களின் உருவங்களும் கோயில்களில் இடம்பெற்றன. பிராமணர்கள் பசுவை புனிதமாகக் கருதினார்கள். வைசாலி முக்கியமான சமண மையமாகத் திகழ்ந்தது.

**ஹர்ஷரும் புத்தசமயமும்**

ஹர்ஷர் பல அளவிடற்கரிய தொண்டுகளை புத்த சமயத்திற்கு செய்துள்ளார். புத்தமதக் கொள்கைகளைத் தீவிரமாக அமல்படுத்தினார். புத்த சமயத்தை பின்பற்றிய மக்கள் புலால் உண்பதை தடை செய்தார். உயிர் கொலைகளைத் தடுத்தார். தன்னுடையப் பேரரசில் ஆயிரக்கணக்கான ஸ்துாபிகளை கட்டினார். கி.பி.643-ல் கன்னோசியில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். இதில் சுமார் இருபது நாடுகளிலிருந்து மன்னர்களும், நாலந்தா பல்கலைக் கழகத்திலிருந்து சுமார் 1000 மாணவர்களும் சுமார் 6000 புத்தத் துறவிகளும் கலந்துக் கொண்டனர். மொத்தம் 23 நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டில் 3 அடி உயரமுள்ள தங்கத்தால் செய்யப்பட்ட புத்தர் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. மாநாட்டின் முடிவில் யுவான்சுவாங்கின் தலைமையில் புத்த சமய கருத்தரங்கமும் நடைபெற்றது. இதனையடுத்து அலகாபாத்திலும் ஒரு மாநாட்டைக் கூட்டி புத்தத் துறவிகளையும் யுவான்சுவாங்கையும் கௌரவித்தார். பல விலையுயர்ந்த பொருட்களை ஹர்‘ர் தானமாக ஏழைகளுக்கு அளித்தார். இதற்கு சில பிராமணர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் அத்தனைத் தடைகளையும் ஹர்ஷர் முறியடித்து சுமார் 75 நாட்கள் தொடர்ச்சியாக மாநாட்டை நடத்தினார். இவ்வாறு அசோகர், கனி‘கர் ஆகியோருக்கு அடுத்தபடியாக ஹர்‘ர் புத்த சமயத்திற்கு பல அருட்பணிகளைச் செய்தார்.

**சமுதாய நிலை**

ஹர்ஷர் காலத்தில் சமுதாயம் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. முக்கியமான ஜாதிப் பிரிவுகளைத் தவிர பல கலப்புச் ஜாதிகளும் இருந்தன. பிராமணர்களின் நில உயர்வாகவே இருந்தது. மக்கள் பெரும்பாலும் வண்ண ஆடைகளைவிட வெண்மையான ஆடைகளையே விரும்பி அணிந்தனர். பால், நெய், சீனி, ரொட்டி போன்றப் பொருட்கள் அவர்களின் உணவுகளில் இடம் பிடித்தன. ஆண்குழந்தை பிறப்பதை மகிழ்ச்சியாகக் கொண்டாடினார்கள். குழந்தை மணமும், பலதார மணமும் நடைமுறையில் இருந்தது. வேளாண்மைத் தவிர வாணிபமும் முக்கியத் தொழிலாக நடைப்பெற்றது. பொன், வெள்ளி நாணயங்கள்புழக்கத்தில் இருந்தன. மக்கள் குறிப்பாக பெண்கள் பல வகையான அணிகலன்களை விரும்பி அணிந்தனர். தங்கமும், வெள்ளியும் ஆபரணங்கள் செய்யப் பயன்பட்டன.

**கலையும் கட்டிடக்கலையும்**

ஹர்ஷர் மகாயானத்தை பின்பற்றியதால் பல ஸ்துாபிகளும், புத்தர் சிலைகளும் உருவாக்கப்பட்டன. மேலும் பல கோயில்களும் கலைநயத்துடன் கட்டப்பட்டன. இலக்கியத் துறையின் வளர்ச்சிக்கும் ஹர்ஷர் அரும்பணிகள் பல செய்தார். இரத்னாவளி, பிரியதர்சிகா நாகாநந்தா, போன்ற நூல்கள் ஹர்ஷரால் இயற்றப்பட்டன. பாணர் எழுதிய **“ஹர்ஷசரிதமும்”,“காதம்பரி”** என்ற காதல் இலக்கியமும், சந்திசதகம் என்ற நூலும் இலக்கிய வளர்ச்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். பத்ருஹரி என்பவர் வாக்கிய பா‘யம் என்ற இலக்கணநூலையும், மௌரியன் என்பவர் மௌரியசதகத்தையும் இயற்றினார்கள். ஹர்‘ர் கலையையும், இசையையும் பெரிதும் ரசித்தார். அவர்காலத்தில் கட்டப்பட்ட புத்த

மடாலயங்களும், கோயில்களும்,ஸ்தூபிகளும் அக்காலக் கட்டிடக்கலையை பிரதிபலிக்கும் சிறந்த சான்றுகளாக விளங்கின. குட்டிடக் கலைஞர்களையும், சிற்பக் கலைஞர்களையும் ஹர்ஷர் நன்கு ஆதரித்தார். அவர்களுக்குப் பல உதவிகளைச் செய்தார்.

**நாலாந்தா பல்கலைக்கழகம்**

ஹர்ஷருடைய காலத்தில் கல்வித்துறையில் வியத்தகு முன்னேற்றங்கள் ஏற்பட்டன. நாலாந்தாவிலும், வாலாபியிலும், விக்கிரம சீலத்திலும் பல்கலைக்கழகங்கள் இருந்தன. இவற்றுள் நாலாந்தா பலடகலைக்கழகம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாய் விளங்கியது. இதன் பெயரும் புகழும் உள்நாடு மட்டுமில்லாது வெளிநாட்டிலும் பரவியது. இது பீகார் மாநிலத்தில் ராஜகிரிகாவிலிருந்மு சுமார் 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.கி.பி.5-ம் நூற்றாண்டின் மத்தியில் முதலாம் குமாரகுப்தரால் அடிக்கல் நாட்டப்பட்டு, பின்னர் ஹர்‘ருடையக் காலத்தில் தலைசிறந்த பல்கலைக் கழகமாக மாறியது. சுமார் 10000 மாணவர்கள் இந்தியா மட்டுமில்லாமல் சீனா, திபெத், கொரியா, புக்காரா, ஜாவா, போன்ற பகுதிகளிலிருந்து இங்கு கல்வி பயின்றார்.

இப்பல்கலைக் கழகம் இலவசச் கல்வி மட்டுமில்லாது, இலவச உணவும், தங்குமிடமும் அளித்தது. இதற்கு வருமானம’ பல்கலைக்கழகத்திற்குத் தானமாக அளிக்கப்பட்ட நிலங்களிலிருந்து கிடைத்தது. இதன் விதிமுறைகள் மிகவும் கண்டிப்பாக இருந்தன. ஆரம்பத்தில் ஒரு சிறு புத்த மடாலயமாக இருந்து இது பின்னர் மிகப் பெரிய பல்கலைக்கழகமாக மாறியது. புத்தமத தத்துவங்கள் இப்பல்கலைக் கழகத்தின் அடிப்படை பாடத்திட்டமாக இருந்தது. இதனை“மகாயான புத்தசமயத்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைகழகம்” என்றால் மிகையாகாது. சீனப்பயணிகளான யுவான்சுவாங், இட்சிங் ஆகியோர் இப்பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தர்மபாலர் இதன் துணைவேந்தராகவும், சந்திரபாலர், குணமதி, சிதர்மதி, சில்பத்ரா போன்றவர்கள் உட்பட சுமார் 1500 ஆசிரியர்களும் இங்கு பணியாற்றினர். புத்த மதத்தத்துவங்கள் தவிர வேதங்கள், வானவியல், மருத்துவம், எண்கனிதம், இலக்கணம் போன்றப் பாடங்களும் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டன. பல நூற்றாண்டுகள் கல்விப் பணியாற்றிய இப்பல்கலைக்கழகம் கி.பி.12-ம் நூற்றாண்டில் முகமது கோரியின் தளபதியான முகமதுபின் பக்தியார் கில்ஜியால் அழைக்கப்பட்டது. இதன் கட்டிடங்களும், நூலகமும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன.

**விக்கிரமசீலப் பல்கலைக்கழகம்**

நாலாந்தா பல்கலைக்கழகத்திற்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்று விளங்கியது விக்கிரமசீலப் பல்கலைக்கழகமாகும். குி.பி.8-ம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட இது மகத நாட்டில் ஒரு மலையின் மீது இயற்கை எழில் சூழ்ந்து அமைந்துள்ளது. இங்கு திபெத், நேபாளம் உள்பட பல வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்கள் கல்வி பயின்றனர். இதன்கீழ் 6 கல்லூரிகள் செயல்பட்டன. ஒவ்வொரு கல்லூரியிலும் சுமார் 108 ஆசிரியர்கள் பணியாற்றினர். இங்கு பாடத்திட்டம் புத்தமதக் கொள்கையின் அடிப்படையில் இருந்தாலும் மருத்துவம், வஞ்ஞானம் போன்றப் பாடங்களும் பயிற்றுவிக்கப்பட்டன. இங்கு கல்விகற்க நுழைவு தேர்வுகளும் நடத்தப்பட்டன. மாணவர்கள் இலவசக் கல்வி பெற்றதுடன் தாங்கள் விரும்பும் பாடங்களை தங்களாகவே தேர்வு செய்தனர். இந்தியக் கலாச்சாரம் திபொத்திலும்,

நேபாளத்திலும் பரவ இப்பல்கலைகழகம் பெரிதும் பங்கெடுத்தது. கி.பி. 1203-ல் முகமது போரி இதனை இடித்து தரைமட்டமாக்கினார்.

**யுவான்சுவாங் (Hieun-Tsang)**

கி.பி.7-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்த முக்கியமான சீனப் பணணி யுவான்சுவாங் ஆவார். கி.பி. 600-ல் சீனாவில்பிறந்த இவர், புத்தரின் மீதும் வெர் கொள்கைகளின் மீதும் அதிக ஈடுபாடு கொண்டு அந்தப் புனித தலங்களைக் காணும் பொருட்டு கி.பி.630-ல் இந்தியாவுக்கு வந்தார். பின்னர் 15 வருடங்கள் இந்தியாவில் தங்கியிருந்து புத்தமதக் கருத்துக்களையும், தத்துவங்களையும் நன்கு கற்றறிந்தார். ஹர்‘ரின் நெருங்கிய நண்பராக மாறிய இவர் சுமார் 8 வருடங்கள் ஹர்‘ரின் அரண்மனையிலேயே தங்கியிருந்தார். பின்னர் கி.பி.641-ல் மேலைச் சாளுக்கியர், மற்றும் பல்லவர் நாடுகளுக்குச் சென்றார். காஞ்சியில் 1000 புத்த மடங்களும் 10000 புத்தத் துறவிகளும் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். கன்னோசி, அலகாபாத் போன்ற இடங்களில் ஹர்‘ர் நடத்திய மாநாட்டிற்கு யுவான்சுவாங் தலைமை தாங்கினார்.

இந்தியாவில் தான்கண்டவற்றையும், கேட்டவற்றையும் தரிசித்த இடங்கள் பற்றியும், மன்னர் மற்றும் அவரது பேரரசு பற்றியும் ஒரு நூல் எழுதினார்.657 தொகுதிகளைக் கொண்ட இந்நூல் சீன மொழியில் “சியூக்கி” (Siyu-ki) எனப்பட்டது. இதற்கு “மேலை உலகின் ஆவணங்கள்” என்று பொருள். இவ்வாறு இந்தியாவில் பல இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு இறுதியில் கி.பி.645-ல் ஹர்‘ரிடம் பிரியாவிடை பெற்று பாமீர் பீடபூமி வழியாக தாய்நாடு திரும்பினார். வழியில் திருடர் பயம் இருந்ததால் ஹர்‘ர் வழியாக உதித்தன் என்ற சிற்றரசனை யுவான்சுவாங்க்குத் துணையாக உடன் அனுப்பினார். இவரின் பயணக்குறிப்புகள் இந்திய வரலாற்றை குறிப்பாக ஹர்‘ர்கால அரசியல். சமுதாயம், பொருளாதாரம் மற்றும் சமய நிலைகளை அறிய உதவும் முக்கிய வரலாற்றுச் சான்றாகப் பயன்படுகின்றது.

## அலகு – 4 : டில்லி சுல்தானியம்

### கோரி முகமது

கஜினி முகமது ஆண்ட காலத்தில் அதாவது 11-ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் கோரி என்னும் நகரம் ஹீரட், காபூல் ஆகியவற்றைப் போல கஜினியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. முகமதின் திறமையற்ற சந்ததியார்கள் காலத்தில் கஜினியின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு சுதந்திரம் எய்திய நகரங்களில் கோரியும் ஒன்று. கஜினியை ஆண்ட பஹ்ராம் என்னும் மன்னனின் ஆணையால் கோரியில் இருந்த மாலிக் குத்புதீன் ஹஸன் என்னும் இளவரசன் கொலை செய்யப்பட்டான்.

அதனால் குத்புதீன் ஹஸனின் சகோதரனான சைபுதீன் ஆரி என்பான் கஜினி மீது படையெடுத்து பஹ்ராமைத் தோற்கடித்தான். பஹ்ராம் கோரியைத் திருப்பித் தாக்கி சைபுதீனைக் கொன்றார். அதற்குப் பதிலடியாக சைபுதீனின் தம்பியாகிய அலாவுதீன் ஹுசேன் என்பான் கி.பி. 1155-ல் கஜினி நகரத்தை முற்றிலும் அழித்தான். கோரியில் அலாவுதீன் ஹீசேனுக்குப் பிறகு சைபுதீனும் அவனுக்குப் பிறகு கியாஸுதீனும் அரசாண்டனர். கியாஸுதீன் கஜினியைக் கைப்பற்றித் தம் தம்பியான முகமது கோரி என்பானிடம் அதன் ஆட்சியை ஒப்படைத்தான். முகமது கோரி கஜினியில் தனியாட்சி நடத்தி வந்தாராயினும் தம் அண்ணனுக்கு அடங்கி நடந்ததாகவே வெளியில் காட்டிக் கொண்டார்.

கஜினி முகமதிற்குப் பிறகு இந்தியாவைப் பெரிய அளவில் படையெடுத்துத் தாக்கியவர் முகமது கோரியே ஆவார். ஆவர் இந்தியாவின் மீமு படையெடுத்ததற்குப் பல காரணங்கள் உண்டு. அண்டை நாடுகளை எம் முறையாலேனும் கைப்பற்றி ஆள வேண்டும் என்னும் விருப்பம் அவருக்கு இருந்தது. மாளவம், மூல்தான், பஞ்சாப் முதலிய இடங்களிலிருந்து ஆண்ட அரசர்களால் தமது அரசிற்கு யாதொரு தீங்கும் விளையாமல் இருக்கும் பொருட்டுத் தாமே முன்கூட்டி அவர்கள் நாட்டின் மீது படையெடுக்க விரும்பியதும் ஒரு காரணம். இவற்றிற்கெல்லாம் மேலாக இஸ்லாமைப் பரப்ப வேண்டும் என்னும் ஆவல் மிகுந்தது.

கி.பி. 1175-ல் முகமது கோரி முத்னமுதலாக மூல்தானைத் தாக்கினார். அந்நகரம் எளிதில் கைப்பற்றப் பெற்று அங்கு ஒரு முஸ்லீம் கவர்னர் நியமிக்கப்பட்டார். அவர் அங்கிருந்து உச்சிற்குப் படைகொண்டு சென்றார். பட்டி மன்னருக்கும் மனைவிக்கும் இடையே உறவு கசந்திருந்தது. இந்நிலையைக் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய முகமது கோரி பட்டி அரசியிடம் அவள் தன் கணவனைக் கொன்று விடவேண்டும், அவ்வாறு செய்தால் அவளுடைய மகளைத் தாம் மணந்து கொள்வது என்று வாக்களித்தார். இவ்வுடன் பாட்டில் முன்னையது நிகழ்ந்ததாயினும் பின்னையது நிகழவில்லை.

கி.பி. 1182-ல் அன்ஹில்வாரை ஆண்டுவந்த மன்னர் இரண்டாம் பீமா. கோரியின் படை அவரிடம் சிக்கிப் பெரும் தோல்வி கண்டது. முகமது கோரி எஞ்சிய தனது படையோடு திரும்பி வந்ததே பெரும்பாடாயிற்று. இதிலிருந்து மூல்தான், சிந்து ஆகிய இடங்களின் வழியாக இந்தியாவினுள் புகுந்து வெற்றிகளைக் காண்பது அரிது என்பதை உணர்ந்தார். அதற்கு மாறாக பஞ்சாபின் வழியாக டெல்லியை அடைவதே இந்தியாவை அடைவதற்கு வழி என்பதை உணர்ந்தார். ஆகவே, அவர் பஞ்சாபை வெல்ல முற்பட்டார். பஞ்சாப் மன்னரின் ஆட்சியிலிருந்த பெ'ாவரை 1179-ல் தாக்கிக் கைப்பற்றினார். 1185-ல் மறுபடியும் இது நிகழ்ந்தது. பஞ்சாபில் மன்னராயிருந்த குஸ்ரூ மாலிக் முகமது கோரியை எதிர்க்காமல் அவருக்குப் பல வெகுமதிகளை அனுப்பினார். இரண்டாம் முறை பஞ்சாப்பைத் தாக்கியபோது சியால் கோட்டையையும் கைப்பற்றினார். இவ்வாறே தொடர்நது நடந்து கொண்டிருந்ததால்

பஞ்சாப் முழுவதுமே அவர் வென்றுவிடுவார் என்று அஞ்சிய குஸ்ரூமாலிக் கோகர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டு சியால் கோட்டைத் தாக்கினார். ஆனால் அதை அவரால் கைப்பற்ற முடியவில்லை.

கி.பி. 1186-ல் முகமது கோரி மறுபடியும் பஞ்சாபின் உட்புகுந்து லாகூரை முற்றுகையிட்டார். அவ்வமயம் குஸ்ரூ மாலிக்கின் பகைவராயிருந்த ஜம்மு மன்னரான ராஜா சக்கரதேவர் என்பவர் முகமது கோரியை இந்தியாவிற்கு வர வேண்டுகோள் விடுத்தார். குஸ்ரூ மாலிக்கை நேரடியாகப் போரில் தோற்கடிக்க முடியாத முகமது கோரி, தான் சிறைப்பிடித்திருந்த அவர் மகளை விடுவிப்பதாகவும் அவளை இட்டுச் செல்ல குஸ்ரூ மாலிக்கே நேரில் வரவேண்டுமென்றும் தூது விடுத்தார். இதை நம்பிவந்த குஸ்ரூ மாலிக்கையும் சிறைப்பிடித்து 1192-ல் கொன்றுவிட்டார்.

பஞ்சாப், மூல்தான், சிந்துப் பகுதிகள் ஏறத்தாழ அவர் வசமாகிவிட்டன. ஆயினும் அவர் மேலும் இந்தியாவினுள் புகுந்து பெரும் பிரதேசங்களைக் கைப்பற்றாமல் தடுப்பதற்குப் பல இராஜபுத்திர அரசர்கள் இடையூறாக நின்றனர். இராஜபுத்திரர்கள் உண்மையில் வீரர்களே, போரில் பெருவிருப்பம் கொண்டவர்கள். அவர்களுடைய வாழ்க்கை மரபே போரையும், காதலையும் இரு மையங்களாக வைத்து அமைக்கப்பட்டவை. அவர்கள் பொதுவாழ்க்கையிலும் தனி வாழ்க்கையிலும் பெருமளவு தியாகம் செய்யக் கூடியவர்கள். இத்தகைய தகுதிகளைப் பெற்றிருந்த இராஜபுத்திரர்கள் அக்காலத்தில் இந்தியாவின் வாயில் என்று கருதக்கூடிய வடமேற்குப் பகுதியில் அரசோச்சியிருந்தும் அவர்களால் கஜினியின் படையெடுப்பை தடுக்க முடியவில்லை. இதற்குக் காரணம் அவர்களிடையே சமூகத்திலும் அரசியலிலும் வேற்றுமை உணர்வும், ஒன்றோடொன்று ஒவ்வாத பாகுபாடுகளும் மிகுந்திருந்தமையோடு கூட அவர்களிடையே பொறாமையும் உள்நாட்டுச் சண்டையும் மிகுந்திருந்தமையேயாகும். முஸ்லிம்களிடையே சமயத்தின் பெயரால் நிலவிய ஒற்றுமை இந்து மதத்தைப் பின்பற்றியவரிடையே காணவில்லை. தவிர நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கும் சிலர் இருந்தனர். இத்தகையவர்கள் எப்போதும், எந்நாட்டிலும் காணப்படுவர்.

## தரையின் போர்கள்

பஞ்சாபிலும், சிந்துவிலும் முகம்மது கோரி போர் முயற்சிகளை மேற்கொண்டிருந்த காலத்தில், இரு இராஜபுத்திரர்கள் இராஜபுதனத்திலும் டெல்லியிலும் ஆட்சி செய்து வந்தனர். அவர்களில் ஒருவர் கனோஜியைச் சேர்ந்த ஜெயச்சந்திரர், மற்றவர் பிருதிவிராஜ் சௌஹான். அவர்களில் பிருதிவிராஜ் முகமதுவின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தத் தீர்மானித்துத் தராயின் என்னுமிடத்தில் (டெல்லிக்கு வடக்கேயுள்ள தானேசுவரிலிருந்து 14 மைல் தொலைவிலுள்ளது) கி.பி. 1191-ல் துருக்கிப் படையோடு மோதினார். அப்போரில் பிருதிவிராஜ் வெற்றி கண்டார். போர்களத்தினின்றும் தப்பிப் பிழைத்தார். நாற்பது மைல் தூரத்திற்குத் துருக்கிப் படையை இராஜபுத்திரர்கள் துரத்திச் சென்றனர். ஆனால் சிரிஹிந்தைக் கைப்பற்ற முயன்ற இராஜபுத்திரர்களுக்கு வெற்றி கிட்டவில்லை.

கஜினியை அடைந்த முகமது கோரி தராயின் போர்க்களத்தில் தான் அடைந்த தோல்வியை எவ்வாறேனும் மாற்றவேண்டும் என்று இராப்பகலாக எண்ணமிட்டுத் திட்டமிட்டார். அதன்படியே 1192-ல் அவர் இரண்டாம் முறையாக இந்தியாமீது படையெடுத்தார். பிருதிவிராஜை எதிர்த்துப் போரிட்டு வெற்றி காணவே அவர் விழைந்தார். அவர் எண்ணப்படியே

முன்பு போர் நடந்த தராயினிலேயே துருக்கிப் படையும் இந்துப் படையும் நெருங்கிப் போரிட்டன. இப்போரில் முகமதுவின் படையில் ஏறத்தாழ 11.ீ2 லட்சம் வீரர்கள் இருந்தனர். பிருதிவிராஜருக்கு ஆதரவாக 150 இராஜபுத்திரச் சிற்றரசர்கள் ஈடுபட்டனர். இப்போரிலும் இராஜபுத்திரர்களுக்கு வெற்றிகிட்டும் வாய்ப்பு இருந்தது. ஆயினும்ஈ காலையிலிருந்து இரவுவரை தொடர்ந்து நடந்த கடும்போரில் முகமது கோரியே வெற்றி கண்டார். பிருதிவிராஜருக்கு உதவியாக வந்த கோவிந்தராஜ் போர்க்களத்தே இறந்தார்.

முதல் தராயின் போரில் முகமது கோரிக்குக காயம் ஏற்படுத்திய கண்டேராய் என்பவரும் கொல்லப்பட்டார். பிருதிவிராஜ் மனமுடைந்து களத்தை விட்டு ஓடினார். ஆயினும், சிர்சூடி அருகே அவர் பிடித்துக் கொணரப்பட்டார். அவர் எவ்வாறு கொல்லப்பட்டார் என்பதைப்பற்றி பலவகையான கருத்துகள் கூறப்படுகின்றன. இஸாமி என்பவர் பிருதிவிரஜ் ஆஜ்மீருக்கு கொண்டுச் செல்லப்பட்டு அங்கு ஒரு விசாரணையின் முடிவாகக் கொல்லப்பட்டார் என்பார். ஆனால் மின்ஹாஜ் உஸ் சிராஜ் என்னும் ஆசிரியர் போர்ககளத்திலேயே அவர்சிறை பிடிக்கப் பெற்று நகரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்று கூறுவார்.

தராயினில் நடந்த இரண்டாம் போரின் விளைவாக இந்தியாவின் அரசியல் எதிர்காலம் நிர்ணயிக்கப்பட்டது. இப்போரினை இந்தியாவின் நிர்ணயப் போரில் ஒன்றாக வி.ஏ. ஸ்மித் கூறுவார். இப்போருக்குப் பிறகு பெரிய அளவில் துருக்கிப் படைகளைத் தடுத்து நிறுத்தும் ஏற்பாடோ, முயற்சியோ நடைபெறவில்லை. மற்றும் இப்போரைத் தொடர்ந்து சிர்சூடி, கூரம், ஹன்ஸி, ஆஜ்மீர் முதலிய இடங்களெல்லாம் கைப்பற்றப்பட்டன. முகமது கோரி பல இந்தக் கோயில்களை இடித்து அவ்விடங்களிலெல்லாம் மசூதிகளைக் கட்டினார். அன்றியும், முஸ்லீம் கலைகளையும் தர்மத்தையும் போதித்த பல கலைக் கல்லூரிகளை நிர்மாணித்தார்.

கனோஜில் ஆண்ட ஜெயச்சந்திரரையும் தோற்கடித்தாலன்றி இந்தியாவில் முஸ்லீம்களுடைய ஆட்சி நிலைப்படாது என்று முகமது கோரி விரும்பினார். ஆதலால், கனோஜி மீது படையெடுத்தார். தராயின் இரண்டாம் போரின் பாடங்களை ஜெயச்சந்திரர் நன்கு உணரவில்லை. அவருக்குப் படைபலம் மிகுந்திருந்தது. அவர் பரந்த நாட்டிற்கு மன்னராயிருந்தார். ஆயினும், துருக்கியர்களிடையே இருந்த கட்டுப்பாட்டுணர்ச்சி இந்துப் படைகளிடையே இல்லை. 1194-ல் சந்த்வாரா என்னுமிடத்தில் நடந்த போரில் களத்திலேயே இராஜபுத்திர மன்னர் கொல்லப்பட்டார். உடனேயே அவருடைய படை சிதறியது.

ஹஸ்னி என்னும் கோட்டையில் ஜெயச்சந்திரர் சேர்த்து வைத்திருந்த ஏராளமான நிதிகளை முகமது கோரி கொள்ளையிட்டார். அவர் காசியில் மட்டும் ஆயிரம் இந்துக் கோயில்களை இடித்து அவையிருந்த இடத்தில் பல மசூதிகளைக் கட்டினார். ஜெயச்சந்திரரை வென்று விட்டதாலேயே கனோஜ் முழுவதையும் அவர் வென்றுவிட்டதாகக் கருதமுடியாது. சில ஆண்டுகள் கழித்து ககதவால மன்னர்கள் கனோஜையும் கைப்பற்றி விட்டனர். 1195-96-ல் அவர் கங்கைக்கரைப் பிரரேசத்தை மறுபடியும் தாக்கிச் சில பிரதேசங்களைக் கைப்பற்றினார். அதற்குப் பிறகு சில ஆண்டுகள் வரையில் அவர் இந்திய அரசியலில் தலையிட முடியாமல் மத்திய ஆசியாவிலிருந்து அவருடைய தலைநகரத்திற்கு ஏற்பட்ட தொல்லைகளைத் தவிர்ப்பதில் ஈடுபட்டிருந்தார்.

## கஜினி முகமதும் கோரி முகமதும்

கஜினி முகமது இந்தியாவின் எப்பகுதியையும் தனத அரசில் இணைத்துக் கொள்ள வேண்டும். நாடு பிடிக்க வேண்டும் என்றும் என்னும் எண்ணத்தோடு இந்நாட்டின் மீது படையெடுக்கவில்லை. அவருக்கு இஸ்லாமைப் பரப்பும் நோக்கம் இருந்தது. முஸ்லீம் அல்லாதருடைய வழிபாட்டிடங்களை இடித்து அங்கிருந்த செல்வத்தைக் கவர்ந்து அதனைக் கொண்டு தனது நாட்டில் முஸ்லீம்களுக்குத் தர்மம் செய்வதிலும் அவர்களுடைய கலைகளை வளர்ப்பதிலும் ஈடுபட விரும்பினார். ஆனால் கோரி முகமதுவிற்கு அத்தகைய எண்ணமில்லை. அவரும் இந்துக் கோவில்களை இடித்தார். அவ்விடங்களில் மசூதியைக் கட்டினார். ஆயினும், அவை அவருடைய முக்கிய நோக்கங்களல்ல. அக்காலத்தில் இருந்த எந்த முஸ்லீம் மன்னனும் அவற்றைச் செய்திருக்கக் கூடும். ஆனால் கோரி முகமதுவின் முக்கிய நோக்கம் தனது அரசை இந்தியாவிலும் பரவவிட வேண்டும் என்பதே. மற்றும் கஜினி முகமது தோல்வியென்பதையே அறியாதவர். ஆனால் கோரி முகமது பல தோல்விகளைக் கண்டிருந்தார். கஜினி அத்துணைப் பெரிய வீரராயிருந்தும் அவர் பெயரால் ஓர் அரசை இங்கு நிறுவவில்லை.

முகமது கோரி தொடங்கி வைத்த சுல்தானியம் லோடி ஆட்சியோடு ஒருவாறு முற்றுப் பெற்று தாயினும், அதையும் தொடர்ந்து முஸ்லீம் ஆட்சி 1857 வரை இந்நாட்டில் நிகழ்ந்தது என்பதை நினைவுகூர்தல் வேண்டும். கோரி முகமது தன்னினும் புகழ்வாய்ந்த கஜினி முகமதுவைப் போலப் புலவர்களைப் போற்றிப் புரவலர் அல்லர். கஜினி முகமது இந்திய வரலாற்றின் ஓரத்தில் நின்று அதன் உள்நாட்டு அரசியலில் ஈடுபடாமல் கொலையும் கொள்ளையுமே பயின்றார். ஆனால் முகமது கோரியோ இந்தியாவின் எதிர்காலத்தையும் நிர்ணயிப்பவராய் ஓர் இராச்சியத்தை நிறுவ முயன்றவர்.

முகமது கோரி இந்தியாவின் வடபகுதிகளை வென்று கைப்பற்றியபோது நாட்டை அவர்களிடமிருந்து காக்கும் தகுதி இராஜபுத்திரர்களுக்கு மட்டுமே இருந்தது. ஆயினும், இராஜபுத்திரர்களுடைய வீரம் தங்களுக்குள்ளேயே பரிமாறிக் கொள்ளக் கூடியதாயிருந்ததேயன்றி முஸ்லீம்களைத் தடுத்து, நிறுத்தி, விரட்டி அடிக்கக்கூடிய திறமையாக விளங்கவில்லை.

### அடிமை வம்சம்

## குத்புதீன் ஐபக் (1206 – 1210)

டெல்லி சுல்தானியப் பேரரசில் அடிமை வமிசத்தைத் தோற்றுவித்தவர் குத்புதீன் ஐபக் ஆவார். குத்புதீன் உருவாக்கிய வமிசத்திற்கு அடிமை வம்சம் என்று கூறுவது தவறு எனச் சிலர் கருதுகின்றனர். இவ்வமிசத்தில் குத்புதீனைத் தவிர மற்றைய அரசர்கள் அடிமைகளாக இருந்தபோதிலும், அவர்கள் அரசர்களாவதற்கு முன்னரே அடிமைத்தனையிலிருந்து விடுபட்டு இருந்தனர்.

### ஆரம்பகால வாழ்க்கை

குத்புதீன் பெற்றோர்கள் துருக்கியர்கள், சிறுவனாக இருந்தபொழுதே அவர் நி'பூருக்கு அடிமையாக அழைத்துச் செல்லப்பட்டார். அவ்வூரிலிருந்த காசி (Gaazi) அவரை விலைக்கு வாங்கினார். காசியின் மறைவிற்குப் பிறகு அவருடைய பிள்ளைகள் கோரி முகமதுவிற்கு குத்புதீனை விற்றுவிட்டனர். நி'பூரிலிருந்து பொழுது அவர் பெற்றிருந்த குதிரைப் பயிற்சி, வாள் பயிற்சி முதலியன குத்புதீனின் வளர்ச்சிக்கு மிகவும் உதவின. திறமையையும்,

போர்ப்பயிற்சியும், தயாள குணத்தையும் கண்ணுற்று, முகமது கோரி, அவரை சுல்தானின் குதிரைச் சேனையின் தலைவராக்கினார். 1192-ஆம் ஆண்டு தரைன் போருக்குப் பிறகு முகமது கோரி இந்தியாவில் தாம் வென்ற பகுதிகளைக் கண்காணிக்கும்படிச் செய்து குத்புதீனை இந்துஸ்தானத்தின் வைசியராக நியமித்தார்.

## வைசியராக ஐபக்

வைசியராக நியமிக்கப்பட்ட பின்னர் துருக்கியர்களை விரட்ட சௌஹான்கள் (Chauhans) முயற்சித்தனர். ஐக்வான் என்ற இந்துத் தலைவரின் கிளர்ச்சியை அடக்கி பகார் என்ற இடத்தில் அவரைக் கொன்றார். புலந்த‘ரும், மீரத்தும் ஐபக்கால் கைப்பற்றப்பட்டன. 1194-ல் ஆஜ்மீர் டெல்லியுடன் இணைக்கப்பட்டது. 1196-ல் சாளுக்கிய மன்னனான இரண்டாம் பீமதேவரைத் தோற்கடித்து, அன்குல்வார் கோட்டையைக் கொள்ளையடித்தார். பின்னர் 1197-ல் சந்த்வார், பதௌன், கன்னோஜ் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார். பண்டேல்கண்டின் சாந்தேல மன்னரான பரமார்டியைத் தோற்கடித்து, 1202-ல் கலிஞ்சார், மஹோபா, கஜிராஹூ ஆகிய பகுதிகளை இணைத்துக் கொண்டார். அதே சமயத்தில் ஐபக்கின் படைத்தலைவரான இக்தியாருதீனும் 1198-ல் பீகார், வடவங்கம் ஆகியவற்றறைக் கைப்பற்றி துருக்கியர்களின் ஆட்சி அமைய வழிவகுத்தார். இப்படையெடுப்புகளை மேற்கொள்ளும்பொழுது தான், பல்கலைக் கழகங்களாகப் புகழ் பெற்று விளங்கிய நாளந்தா, விக்கிரமசீலா மற்றும் ஒதந்தபுரி ஆகியவற்றைஅழித்ததோடு, கணக்கற்ற புத்த விகாரங்களையும் நாசப்படுத்தினார். இவ்வாறு இருவரும் துருக்கிப் பேரரசு இந்தியாவில் நிலைபெற வழிவகுத்தனர்.

## ஐபக் அரியணையேறுதல்

கி.பி. 1206-ல் கோரி முகமது கொலை செய்யப்பட்டனர். அவருக்கு வாரிசு யாரும் கிடையாது. கஜினியில் அவரைப் பின்பற்றி அலாவுதீனும், பின்னர் மகமூத்-யின்-கியாசுதீனும் பட்டமேற்றனர். இந்தியப் பகுதிகளை ஆளும் பொறுப்பினை குத்புதீன் ஐபக் ஏற்றுக் கொண்டு 1206-ல் ஆண்டு ஜூன் மாதம் 24-ம் நாள் முடிசூட்டிக் கொண்டார்.

## திருமண உறவுகள்

தன் வலிமையைப் பெருக்கப் பல வழிகளை ஐபக் கையாண்டார். நட்புறவுகளின் மூலமாக உறவை வலுப்படுத்தியதோடு, திருமண உறவுகளின் மூலமாகவும் ஆட்சிக்கு வருமுன்னர் தன் வலிமையை பெருக்கிக் கொண்டார். இவர் தம்முடைய மகளை இல்டுமி‘ (iilthumish) என்பவருக்கும், தம்முடைய தமக்கையை நசீருதீன் குபாச்சா(naziruddin gubachaah) என்பவருக்கும் திருமணம் செய்வித்தார். மேலும் தாஜூத்தின் யுல்துஸின் மகளை குத்புதீனே திருமணம் செய்து கொண்டார். இத்தகைய சிந்து-ஆப்கானிஸ்தானம், நாடுகளின் திருமண உறவுகள் மூலம் தம்முடைய பகைவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டார்.

## ஆரம்ப காலம்

அரியணையேறியவுடன் குத்புதீன் தம்மை சுல்தான் என்று அழைத்துக் கொள்ளாமல் மாலிக், சியாசாலர் என்று அழைத்துக் கொண்டார். தம்முடைய பெயரில் நாணயங்களை

வெளியிடவில்லை. இதற்கு முக்கியக் காரணம் அவர் அடிமையாகவே இருந்தார் என்பதுதான். கி.பி. 1208-ல் அவர் அடிமை நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டார். முகமது கோரியைப் பின்பற்றி ஆட்சிக்கு வந்த கியாசுதீன் மாமூது குத்புதீனைப் பாராட்டி அரசருக்கான சின்னங்களை அனுப்பியதோடு அல்லாமல் சுல்தான் என்ற பட்டப் பெயரையும் சூட்டிச் சிறப்பித்தார்.

## ஆட்சிமுறை

குத்புதீன் நான்கு ஆண்டு காலமே ஆட்சி புரிந்தார். அக்காலங்களில் வெளிநாட்டுப். பிரச்சினைகளைக் கவனிப்பதிலேயே கவனம் சென்றதால், உள்நாட்டுச் சீர்திருத்தங்களைச் சீர்படச் செய்ய முடியவில்லை. ஆனால் இந்துஸ்தானத்தின் பல முக்கிய நகரங்களில் படைகளை நிறுத்தி அவற்றைக் கொண்டு ஆட்சி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. முக்கிய நகரங்களின் நிர்வாகத்திற்கு முஸ்லீம் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். உள்ளூர் அதிகாரிகளைக் கொண்டே ஊராட்சி கவனிக்கப்பட்டது.

## வெளிநாட்டுப் பிரச்சினைகள்

குத்புதீன் அரியணையேறியவுடன் பல வெளிநாட்டுப் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அவற்றைக் காண்போம்.

1. கோரியின் மறைவிற்குப் பிறகு தன்னுடைய பேரரசை விரிவுபடுத்த குவாரிசம் நாட்டு ஷா முயன்று கொண்டிருந்தார்.
2. குத்புதீனுக்கு எதிராக அரியணைக்குப் போட்டியிட்ட தாஜுதீன்யுல்தஷ, நசீருத்தீன் குபாச்சா ஆகியோரை எதிர்க்க வேண்டியிருந்தது.
3. சந்தேலர்களும், காகிதவாலர்களும் தங்கள் உரிமையை நிலைநாட்ட முயன்றார்.
4. வங்கமும் கிளர்ச்சியில் ஈடுபட்டுத் தனித்தியங்க முற்பட்டது.

கி.பி. 1206-ல் இராஜபுத்திரர்கள் கலின்ஜாரை மீட்டுக் கொண்டார். பரூக்காபாத், பதோன் ஆகிய இடங்களை காஹதவாலரும், குவாலியரை பிரதிகாரரும் மீண்டும் கைப்பற்றி ஆளத் தொடங்கினர். இக்தியாரின் மறைவிற்குப் பிறகு வங்கத்தில் புரட்சி ஏற்பட்டது. இத்தகைய குழப்பங்களுக்கிடையே மத்திய ஆசியாவிலிருந்தும் குழப்பமும் எதிர்ப்பும் ஏற்பட்டன.

கி.பி. 1208-ல் கஜினியை குத்புதீன் கைப்பற்றிய போதிலும், மக்கள் பதோனின் கவர்னராகிய இல்டுமி‘யே விரும்பினர். இல்டுமி‘ முகமது கோரியின் மாப்பிளையாவார். வங்கத்தில் ஏற்பட்ட கலகத்தை அடக்கி அலிமர்கான் என்பவரை ஆளுநராக நியமித்தார். இவ்வாறு பல இடர்ப்பாடுகளை சந்தித்த குத்புதீன் ஐபக் போலோ (குதிரை) விளையாட்டின் போது தவறி விழுந்து 1210-ல் காலமானார்.

அடிமையாக இருந்தபொழுதே அஞ்சாநெஞ்சமும் போர்ப் பயிற்சியும் பெற்றிருந்த குத்புதீன் இந்திய மண்ணில் துருக்கியப் பேரரசு நிறுவுவதற்கு அடிக்கல் நாட்டினார். மேலும் சுற்றிலும் பகைவர்கள் இருந்தபோதிலும், சிறிதும் அஞ்சாமல் அனைத்தையும் எதிர்த்துத் திறமையுடன் சமாளித்தார். குத்புதீன் நேர்மையானவர், நெறிபிறழாப் பண்பாளர், தாராள மனப்பான்மையாளர், கற்றவர்களை ஆதரித்தார், கலைஞர்களை ஊக்குவித்தார். ஹாசன் நிசாமி, பக்ரே முதிர் போன்ற அறிஞர்களை ஆதரித்தார்,

படையெடுப்புகளின் பொழுது அழிக்கப்பட்ட இந்துக் கோயில்களின் பொருள்களைக் கொண்டு குவ்வதும் இஸ்லாம் என்ற பள்ளியை ஆஜ்மீரில் கட்டினார்.

## பால்பன்

**இளமைப் பருவம்**

அல்ட்டமிஷைப் போலவே கௌரவமான இல்பாரிய இனத்தைச் சார்ந்த துருக்கிய உயர்குடி ஒன்றிலிருந்து கியாசுதீன் பால்பனும் தோன்றினார். மங்கோலியர்கள் இவரை சிறைகொண்டு பஸ்ராவைச் சார்ந்த குவாஜா ஜமாலுதீனுக்கு ஓர் அடிமையாக விற்றனர். இறுதியில் அல்ட்டமி‘ இவருடைய எஜமானர் ஆனார். நாற்பது அடிமைகள் பிரிவில் இவர் சேர்க்கப்பட்டார். ரஸியாவின் ஆட்சிக் காலத்தில் வேட்டைத்துறைத் தலைவர் (Amir-i-Shikar) என்ற பதவியை வகித்தார். ரஸியாவின் பிடிதரம் தளர்ந்துகொண்டிருந்த வேளையில் இவர் சதிகாரர்களுடன் சேர்ந்துகொண்டு பஹ்ரமை அரியணையேற்றினார். இதற்காகச் சுல்தான் ரேவாரிப் பகுதியை இவருக்கு மானியமாக வழங்கினார். பின்னர் மசூதை அரியணையேற்றியதற்காக ஹான்சி மாவட்டம் பரிசாகக் கொடுக்கப்பட்டது. “நாற்பது பெருங்குடி” யினரில் பால்பன் தலைசிறந்தவராக விளங்கினார். 1245-ல் மங்கோலியர்கள் உச் மீது படையெடுத்தபோது சரியான நேரத்தில் பால்பன் நடவடிக்கைகளை மேற்கொண்டு மங்கோலியப் படையெடுப்பை கை விடுமாறு செய்தார். இவர் சளையாது உழைத்தமைக்காக இவருக்கு ‘வல்லமைமிக்க தலைவன்’ (ulugh khan) என்ற பட்டம் வழங்கப் பட்டது. இவர் மங்கோலியரைப் படுதோல்விக்குள்ளாக்கினார். மசூதை அரியணையிலிருந்து அகற்றி நாசிருதீனை அரியணையில் அமர்த்தினார். பால்பன் நிகழ்முறை அரசரானார்.

பால்பன் சுல்தானிற்கு உதவியாளரானார். அரசின் உயர் பதவிகளில் தம்முடைய உறவினர்களை நியமித்தார். சுல்தானிற்கு தம் மகளை மணம் செய்து வைத்ததன்மூலம் தம்முடைய நிலையை மேலும் வலுப்படுத்திக் கொண்டார். புரட்சிகளையடக்கி, சதித்திட்டங்களைத் தகர்த்து, மங்கோலியப் படையெடுப்பபுக்களை முறியடித்து முழு அரசு அதிகாரங்களை பால்பன் செலுத்தியபோது குரானை நகல் எடுத்துத் துறவிபோன்ற வாழ்க்கையை மேற்கொண்டவராகச் சுல்தான் விளங்கினார். பால்பனின் ஏற்றம் உயர்குடி மக்களில் ஒரு பிரிவினரிடையே பொறாமையை ஏற்படுத்தியதால் பால்பனை அகற்றுவதற்கான சதித்திட்டம் ஒன்றினை அவர்கள் தீட்டினர். சதிகாரர்களின் வலையில் வீழ்ந்த சுல்தான் பால்பனைப் பதவியிலிருந்து நீக்கினார். பதவி உயர்வுகளும், பதவிக் குறைப்பபுக்களும், இடமாற்றங்களும் இதன் பின் தொடர்ந்தன. ஆனால் 1253-லிருந்து 1254 வரை தற்காலிகமாக மட்டுமே பால்பனின் செல்வாக்கு மங்கியிருந்தது. இவருடைய தலைமையில துருக்கிய உயர்குடி மக்கள் ஒன்றுப்பட்டுத் தலைநகரை நோக்கிச் செல்லலாயினர். பால்பனின் வலிமை பெருமளவு மிகுந்திருந்ததால் வேறு வழியின்றிச் சுல்தான் அடிபணிந்து 1254-ல் மீண்டும் அவரைப் பதவியில் அமர்த்தினார்.

சுல்தானின் அதிகாரத்தை ஒருங்கிணைத்து நாட்டில் ஒழுங்கை மீட்பதற்குப் பால்பன் அரும்பாடுபட்டார். பல நாட்களாக வங்க மாநிலம் சுல்தானுக்கு அடிபணிவதில் தயக்கம் காட்டியது. 1257-ல் அறிவுத்திறனைப் பயன்படுத்திப் பால்பன் மைய அதிகாரத்தின் செல்வாக்கினை வங்கத்தில் மீண்டும் நிலைநிறுத்தினார். ஆனால் அடுத்த மூன்று,

நான்காண்டுகளில் வங்கம் சுதந்திரம் பெற்றது. இடையறாத மங்கோலியப் படையெடுப்புக்களின் விளைவாக வடமேற்குப்புறத்தில் மைய அரசின் அதிகாரம் தொடர்ந்து ஆட்டம் காணுவதாகவே அமைந்திருந்தது. முல்தான் ஆளுநர் சுதந்திரத்தை நிலைநிறுத்தி பாரசீகத்தை ஆண்டுவந்த மங்கோலிய அரசருக்குத் திறை செலுத்து பவரானார். முல்தான் ஆளுநர் அவுத் ஆளுநருடன் சேர்ந்துகொண்டு தில்லியைக் கைப்பற்ற முயற்சித்தார். ஆனால் விழிப்புணர்வுடனிருந்த பால்பன் அம்முயற்சியை முறியடித்தார். மங்கோலிய அச்சுறுத்தல் தடைசெய்ய முடியாத அளவிற்குப் பெருகியது அவர்கள் பஞ்சாபை தங்களுடைய ஆதிக்கக் கோட்டையாக வைத்திருந்தனர். நாசிருதீனுடைய ஆட்சிக் காலத்தில் மங்கோலியப் படையெடுப்பு இடையறாமல் தொந்தரவையே கொடுத்துவந்தது.

இந்துக் குறுநில ஆட்சியாளர்களும் தாம் இழந்த புகழை மீண்டும் பெறவேண்டுமென முயற்சித்தனர். தோவாப் பகுதியின் இந்து ஆட்சியாளர்களின் எதிர்ப்புகளை பால்பன் அடக்கினார். பலரும் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். மகளிரும் குழந்தைகளும் அடிமைகளாகத் தூக்கிச் செல்லப்பட்டனர். மீவட் பகுதியில் கிளர்ந்தெழுந்த இனத்தாரைப் பால்பன் அடக்கினார். ராந்தம்பூரை வெற்றி கொண்ட, கலஞ்சார் கோட்டையின் இந்துத் தலைவருடைய எதிர்ப்படைகளை நடத்திச் சென்றார். 1265-ல் நாசிருதீன் இறந்தபின் பால்பன் அரசுப் பொறுப்பை முழுமையாக ஏற்றுக்கொண்டார்.

## முடியாட்சியை உயர்த்துதல்

துருக்கிய உயர்குடியினரே சுல்தானின் அதிகாரக் குறைவிற்கு அடிப்படைக் காரணமாக இருந்தனர் என்பதைத் தமது நெடுநாளைய அரசுத் தொடர்பினின்றும் பால்பன் உணர்ந்து கொண்டார். நாடு எந்த அளவிற்குப் பரிதாபமான நிலைக்குத் தாழ்வுற்றிருந்ததென்பதை பரனி கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார். “ஒரு சிறந்த அரசுக்கும் புகழுக்கும் மேன்மைக்கும் அடிப்படையாக அமைந்துள்ள ஆட்சியாளர்களைக் கண்டு அச்சமேற்படும் உணர்வு எல்லோரிடமிருந்தும் மறைந்து நாடு இழிவான நிலையை அடைந்திருந்தது”. வீழ்ச்சியுற்றிருந்த அரசின் பெருமையினையும் அதிகாரத்தையும் மீட்கும் முயற்சியில் பால்பன் ஈடுபட்டார். “இறைவனுடைய அருட்பார்வை அரசருடைய உள்ளத்தில் சிறப்பாகப் படிவதால் அவருக்கு இணையாக மனிதரில் வேறு எவரும் கிடையாது” என்று தம் மைந்தரா பக்ராகானிடம் ஒரு சமயம் கூறினார். அரச பதவியை உயர்த்துவதற்கெனப் பல புதிய வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் நடைமுறையில் கொண்டுவந்தார். ஒரு சீரான அரசையும் மக்களிடமிருந்து கண் மூடித்தனமான கீழ்ப்படிதலையும் ஒரு வல்லாட்சியை ஏற்படுத்தினால்தான முடியும் என்பதை இவர் உறுதியாக நம்பினார். நெருங்கிய பழக்கம் வெறுப்புணர்வைத் தூண்டுவிடுமாதலால் கௌரவமாக ஒதுங்கி வாழும் முறையைப் பயின்று உயர்குடிமக்களிடம் அதிகமாக அண்டிப்பழகாமல் இருந்துவந்தார். தம்முடைய அரசவையில் பாரசீகப் பழக்க வழக்கங்களைக் கொண்டு வந்ததன மூலம் அரச பதவியின் கவர்ச்சியையும் கண்ணியத்தையும் உயர்த்தினார். உயர்குடி மக்களும் அதிகாரிகளும் மது அருந்தும் பழக்கத்தை தடைசெய்தார். தாமே மது அருந்தும் பழக்கத்தை கைவிட்டதோடு களியாட்டங்கள் நடைபெறும் இடங்களிலும் தாம் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி வாழ்ந்தார். அரசவையில் நகைப்பதுகூட அனுமதிக்கப்படவில்லை. இவ்வாறு புறக்கணிக்கப்பட்டிருந்த

அரசின் நிலையை மாற்றி விண்ணளவுமம் உயர்ந்திருக்குமாறு அரியணையின் பெருமையை உயர்த்தினார்.

**“நாற்பது உயர்குடி மக்கள்” (The forty) குழுவினை அழித்தல்**

நாற்பதடிமைகளைத் தலைமையாகக் கொண்ட துருக்கிய உயர்குடி மக்கள்தாம் இடையறா ஆபத்திற்கு மூலக்காரணம் என்பதை பால்பன் நன்கு அறிந்திருந்தார். எல்லா அதிகாரம் “நாற்பது குழுவிடம்” முழுமையாக இருந்ததால் அவர்களே முக்கியமான இடங்களைப் பெற்றிருந்தனர். இதன் விளைவாக சுல்தான் வெறுமையாக்கப்பட்டார். அல்ட்டமீன் காலத்தில் தோன்றிய “நாற்பது குழு” அவருக்குப்பின் வந்தோரின் காலத்தில் அதிகாரப் பெருக்கம் பெறலாயிற்று. “நாற்பது குழு” வின் பெருமையைக் குறைப்பதற்காக பால்பன் இளந் துருக்கியர்களை மேலான பதவிகளும் உயர்த்தினார். “நாற்பது குழு” வினரைச் சார்ந்தோர் ஆட்சியில் தவறிழைத்தாலோ கொடுமையான செயல்களசை செய்தாலோ கடுமையான தண்டனைகள் அளிக்கப்பட்டன. இக்குழுவினரின் நச்சுப் பற்களை அகற்றி மக்களுடைய உள்ளத்தில் அவர்களைப் பற்றிய பெருமையைக் குறைத்தார்.

## ஒற்றர் முறை

பால்பன் திறமையான ஒற்றர் முறையொன்றினை அமைத்தார். சுல்தான அமர்த்தியிருந்த ஏராளமான ஒற்றர்களும் எழுத்தர்களும் நாட்டின் மூலைமுடுக்குகளில் நிகழும் நடப்புக்களனைத்தையும் அவருக்கு உணர்த்தி வந்தனர். ஒற்றர்கள் தங்களுடைய கடமையைச் சரிவரச் செய்யவில்லையென்றால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். ஒழுங்குமுறையுடனும் விழுப்புடனுமிருந்து ஒற்றர்முறை பல தீச் செயல்களை வெளிப்படுத்தி பால்பனின் வல்லாட்சியைப் போற்றிப் பாதுகாக்கும் சக்தி வாய்ந்த கருவியாக நிலவியது.

## இராணுவச் சீர்த்திருத்தங்கள்

ஏராளமான சிறந்த போர்வீரர்களைச் சேர்த்து பால்பன் இராணுவத்தைச் சீர்திருத்தினார். அல்ட்டமீன் காலத்திலிருந்து படை வீரர்கள் படைச் சேவைக்கு ஈடாக நிலங்களை மானியமாகப் பெற்று வந்தனர். அம்மாதிரியான நிலங்களை பெரும்பாலான இறந்த இராணுவ வீரரின் தகுதியற்ற சந்ததியினர் யாதொருவிதமான பணியினையும் செய்யாமல் உரிமைகொண்டாடிவந்தனர். இவர்களைப் பற்றி நடத்திய விசாரனணயினின்றும் முதியவர்கள், விதவைகள், அனாதைகள் முதலியோரின் வயமெ பெரும்பாலும் நிலமானியம் உரைந்திருப்பதைப் பால்பன் உணர்ந்தார். இந்நிலங்களைப் பால்பன் வலிமை படைத்த வீரர்களுக்கு வழங்கினார். ஆனால் இதற்கு முன் நிலத்தைக் கொண்டிருந்தவர் வாழ்க்கை பாதிக்கப்படாமலும் ஏற்பாடுகள் செய்தார். பழைய சேவைகளை மதிக்கும் வகையில் முதியோர், நிலங்களை வைத்துக் கொள்ளலாம் எனவும் அனுமதித்தார்.

## புரட்சிகளை அடக்குதல்

நாட்டில் தோன்றிய புரட்சிகளையும் குழப்பங்களையும் பால்பன் ஈவிரக்கமின்றி அடக்கியொடுக்கினார். தோவாபும் அவுத்தும் புரட்சித் தளங்களான இருந்தன. தில்லி நகரமோ தினமும் கொள்ளையர்களின் தாக்குதலுக்குட்படும் நிலையிலிருந்து தொலைவிலிருந்த மாநிலங்களில் மக்களின் உயிருக்கு உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலை பரவியிருந்தது. பால்பன் தில்லிச் சுற்றுப்பபுறங்களைக் கொள்ளையர்களின் பிடியினின்றும் விடுவித்தார்.

தலைநகரைச் சுற்றியிருந்த காடுகளையழித்துக் கொள்ளையர்களை விரட்டி வேட்டையாடினார். தலைநகரின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இராணுவப் புறக்காவல் நிலையங்களைத் தோற்றுவித்து ஆப்கானியப் படைகளால் அவற்றைப் பலப்படுத்தினார். இதன் பின்னர் தம்முடைய கவனத்தை தோவாப் அவுத் முதலியவற்றின் மீது திருப்பினார். முறையாகக் கொள்ளயைரைத் தாக்கியதின் மூலம் சூறையாடலையும் களவுகளையும் குழப்பங்களையும் ஒழித்துக்கட்டினார். உப்பு நிலப்பகுதியில் கிளர்ச்சியிலீடுபட்ட இந்துக்களை அடக்கினார். ஆனால் இராஜபுதனம், பண்டேல்கண்ட் ஆகிய இடங்களில் தோன்றிய கிளர்ச்சிகளை அடக்குவதில் பெருமளவு வெற்றி கிடைக்கவில்லை. இவ்வாறு காடுகளையளித்து சாலைகளை அமைத்து வலுவான புறக்காவல் நிலையங்களை நிறுவியதன் மூலம் நாட்டைக் கொள்ளையர்களிடமிருந்தும் சட்டத்தை மீறுபவர்களிடமிருந்துமம் மீட்பித்தார்.

## வங்கப் புரட்சியை அடக்குதல்

வங்க ஆளுநராக இருந்த துக்ரில்கான் தீய ஆலோசகரின் போதனைகளினால் பேரவாக் கொண்டார். இவர் 1280-ல் கிளர்ந்து எழுந்து சுல்தான் என்ற விருதினை ஏற்று, நாணயங்களைப் பொறித்து மசூதிகளில் தம் பெயரிலேயே குத்பாவை ஓதவும் செய்தார். அவுத் ஆளுநராக இருந்த அமீன்கானை பால்பன் புரட்சியை அடக்குவதற்காக அனுப்பிவைத்தார் . ஆனால் அவ்வாளுநர் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டார். இதனால் சினமுற்ற சுல்தான், ஆளுநரை அவுத் நகரின் தலைவாயிலில் தூக்கிலிடுமாறு ஆணையிட்டார். புரட்சியாளருக்கெதிரான அடுத்த இரு படையெடுப்புக்களும் படுதோல்வியில் முடிவடைந்தன. எனவே துக்ரில்கானை அடக்குவதற்காகத் தாமே படைகளைச் செலுத்துக்கொண்டு பால்பன் புறப்பட்டார். பால்பன் வரும் செய்தியை அறிந்த துக்ரில்கான் கிழக்கு மாவட்டங்களை நோக்கி ஓடினார். ஆனால் இவர் சிறைப்படுத்தப்பட்டு இவருடைய தலை துண்டிக்கப்பட்டது. பால்பன் லக்னாட்டி கடைவீதியின் இரு புறங்களிலும் கழு மரங்களையமைத்து துக்ரிலைப் பின்பற்றியோரையும் உறவினர்களையும் கழுவேற்றினார். துன்புறுத்திப்பழிவாங்கும் பால்பனின் மனப்பான்மையை அவர் தம்முடைய மைந்தரான பக்ராகானுக்குக் கூறிய உறையினின்றும் அறியலாம். “தில்லிக்கு அடிபணிய வேண்டும் என்ற கருத்திகெதிராக யாரேனும் சதியாலோசனைக் கருத்துக்களைக்கூறி உன்னுடைய உள்ளத்தில் சலனப்போக்கை ஏற்படுத்தவாராயின் லக்னாட்டி கடைவீதியில் நிகழ்ந்த பழிவாங்கும் படலத்தை நினைத்துப்பார்”.

## மங்கோலியப் படையெடுப்புக்கள்

அடிக்கடி நிகழ்ந்த மங்கோலியப் படையெடப்புக்கள் பால்பனின் மனத்தை வாட்டியெடுத்தது. மங்கோலிய ஊடுருவலைத் தடுக்கும் வகையில் வடமேற்கு எல்லைப்புறத்தின் பாதுகாப்பிற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். அணி அணியாக்க கோட்டைகளை வடமேற்கு எல்லைப்புறத்தில் அமைத்து ஆப்கானியத் துருப்புக்களால் அவற்றை வலுப்படுத்தினார். முல்தான், சிந்து, லாகூர், முதலிய மாநிலங்களின் ஆட்சிப் பொறுப்பு அவருடைய மூத்த மைந்தரான முகம்மதுகானிடமும் சுனம் , சமானா ஆகியவற்றின் பொறுப்பு இளைய மைந்தரான பக்ராகானிடமும் ஒப்படைக்கப்பட்டன. இது போன்ற அயராத விழிப்புடனிருந்தபோதிலும் மங்கோலியர்கள் நாட்டில் ஊடுருவி மேலைப் பஞ்சாபைத் தலைமட்டமாக்கியதுடன் சட்லெஜ் நதியைக் கடக்கும் முயற்சியிலும் வெற்றி

பெற்றனர். ஆனால் 1279-ல் இவ்விரு இளவரசர்களாலும் மங்கோலியர்கள் துரத்தியடிக்கப்பட்டனர். 1286-ல் நிகழ்ந்த மற்றொரு மங்கோலிய மோதலில் இளவரசர் முகம்மது தம் உயிரை இழந்தார்.

### பால்பனின் இறுதி நாட்கள்

இளவரசர் முகம்மது இறந்தது பால்பனுக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. இளவரசர் பெரும் வீரராகத் திகழ்ந்ததோடன்றி தலைசிறந்த ஆட்சியாளராகவும் கற்றறிருந்த பெருமகனாவும் விளங்கிவந்தார். தமக்குப்பின் எந்த மைந்தன அரியணையைப் பெறவேண்டும் என பால்பன் விரும்பினாரோ அம்மைந்தன் பால்பனுக்கு முன்னரே இற்நதுவிட்டார். இவ்வதிர்ச்சி பால்பனின் உடல் நலத்தைச் சீராக்கமுடியாத அளவிற்குப் பாதித்தது. முகம்மதின் மைந்தரான கெய்குஸ்ருவை அடுத்த வாரிசாக நியமனஞ் செய்த பின்னர் 1287-ல் பால்பன் இறந்துபட்டார்.

## டில்லி சுல்தானியத்தின் வீழ்ச்சி

## அலாவுதீன் கில்ஜி

துருக்கியப் பேரரசாட்சி அலாவுதீன் காலத்தில் மிகவுயர்ந்த நிலையை அடைந்திருந்தது. நெஞ்சிலே உறுதியும், செயலிலே தீவிரமும், எதிர்ப்போரை இரும்புக் கரம்கொண்டு அடக்கி ஆளும் திண்மையும், வன்மையும் படைத்தவர் அலாவுதீன் கில்ஜி. அவர் காலத்தில் செய்த பொருளாதாரச் சீர்திருத்தங்களும், தென்னிந்தியப் படையெடுப்புகளும், அவரது புகழையும், திறமையையும் மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றன.

### போர் நடவடிக்கைகள்

ஜலாலுதீனின் படைவீரர்களுக்கு, ஹாஜி மௌலா என்ற அடிமையும், ஜவாலி பிரபுக்களும், புதிய முஸ்லீம்களும் செய்த கிளர்ச்சிகளை இவர் இரும்புக்கரம் கொண்டு அடக்கினார்.

### அலாவுதீன் படையெடுப்புத் திட்டங்கள

கவர்னராக இருக்கும்பொழுது பெற்ற வெற்றிகளும் டெல்லிப் பேரரசைக் கைப்பற்றிய முறையும் அலாவுதீனின் ஆசையை அதிகரிக்க செய்தன. உலுக்கான், சுபர்கான், அலப்கான், நஸ்ரத்கான் என்ற நம்பிக்கை மிக்க 4 தளபதிகள் துணைபுரிந்தனர். அவர்களின் உதவியுடன் அகிலத்தையே வென்று தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வர விரும்பினார். அவ்வாறு செய்வதன் மூலம் தாம் அலெக்சாண்டரைப் போல் வெற்றி வீரராகத் திகழலாம் என்று எண்ணினார். மேலும் ஒரு புதிய சமயம் ஒன்றை ஏற்படுத்தித் தன்னைப் புதியவொரு தீர்க்கதரிசியாக்கவும் விரும்பினார். ஆனால் அவருடைய நண்பரான மாலிக் அலா உல் முல்க் என்பவர் புதிய சமயத்தைத் தோற்றுவிக்கும் முயற்சியைக் கைவிடுமாறும் உலகைக் கைப்பற்ற விழையும் முன்னர் இந்தியா முழுவதையம் கைப்பற்றுவதற்குரிய முயற்சியை மேற்கொள்ளுமாறும் ஆலோசனை தெரிவித்தார்.

1. **குஜராத் (1299)**

இந்து அரசர்களின் எந்த நாட்டையும் கைப்பற்றாமல் விடுவதில்லை என்று முடிவு செய்த அலாவுதீன் குஜராத்தை முதலில் தாக்கினார். 1299-ல் உலுக்கான், நஸ்ரத்கான் ஆகிய இருவரும் பெரும்படையுடன் குஜராத்தை தாக்கவும், மன்னர் இரண்டாம் கரன் தேவர் அவர்களின் தாக்குதலை எதிர்க்க முடியாமல் தன்னுடைய மகள் தேவால தேவியுடன் ராமச்சந்திர யாதவ் ஆட்சி செய்த தேவகிரிக்கு ஓடிவிட்டார். ஆனால் அவரது அழகிய மனைவி கமலாதேவி சிறைபிடிக்கப்பட்டு அலாவுதீனின் அந்தப்புரத்திற்கு அனுப்பப்பட்டார். இப்படையெடுப்பின் பொழுதுதான் மாலிக்காபூர் என்ற அடிமை கிடைக்கப் பெற்றார்.

## 2. ராந்தம்பூர் (1299-1301)

புதிய முஸ்லீம்கள் என்ற மங்கோலியர்களுக்கு ராந்தம்பூர் மன்னரான ஹமீர் தேவர் அடைக்கலம் கொடுத்தார். அதைக் காரணமாகக் காட்டி அலாவுதீன் உலுக்கான், நஸ்ரத்கான் தலைமையில் பெரும்படையை அனுப்பினார். அவைகள் தோற்கடிக்கப்பட்டன. நஸ்ரத்கானும் கொல்லப்பட்டார். அலாவுதீனே படையெடுப்பை மேற்கொண்டு கைப்பற்ற இயலா கோட்டையை ஹமீர் தேவரின் முதலமைச்சரைக் கொண்டே வஞ்சகத்தால் 1301-ல் எளிதில் கைப்பற்றினார். ஹமீர் தேவரும் மற்றும் பலரும் கொல்லப்பட்டனர். பின்னர் ராந்தம்பூரை உலுக்கானின் ஆட்சிப் பொறுப்பில் விட்டு வைத்தார்.

## 3. மீவார் (1303)

மீவார் பகுதியை ராணா ரத்தன்சிங் ஆட்சி செய்து வந்தார். அவருடைய மனைவி பத்மினி மிகவும் அழகு வாய்ந்தவர். இச்செய்தியைக் கேள்வியுற்ற அலாவுதீன் அவளைச் சிறைப்பிடிக்க எண்ணி சித்தூர் கோட்டையை முற்றுகையிட்டார். ஆனால் ஐந்து மாத காலமாகியும் முற்றுகை வெற்றி பெறவில்லை. இதில் சுமார் 30,000-க்கும் அதிகமான இராஜபுத்திரர்கள் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கான இராஜபுத்திரப் பெண்டிர் தீயில் குதித்து ஜௌஹார் முறைப்படி உயிர்விட்டனர். ரத்தன்சிங் கைது செய்யப்பட்டாரா என்று தெரியவில்லை. சித்தூர் பகுதியைத் தன்னுடைய மகனான கிஸிர்கானிடம் விட்டார். அவர் 1311-ல் பதவி துறந்தார். பின்னர் மாலதேவர் அப்பகுதியை ஆட்சி செய்து கப்பம் கட்டி வந்தார்.

## 4. மாளவம் (1305)

ராஜா மஹ்லக் தேவா என்பவர் மாளவத்தை ஆட்சி செய்து வந்தார். ஐனுல் முல்க்கின் தலைமையில் ஓர் படையை அனுப்பி மாளவத்தைக் கைப்பற்றினார். மேலும் உஜ்ஜயினி சாந்தேரி, மாண்டு, மார்வார், ஜேலர் பகுதிகளையும் அலாவுதீன் கைப்பற்றிப் பேரரசுடன் சேர்த்துக் கொண்டார்.

# மாலிக்கபூரின் படையெடுப்புகள்

தென்னிந்திய படையெடுப்பை மேற்கொண்டு முழுவெற்றி பெற்ற மாமன்னர் அலாவுதீன் கில்ஜியாவார். குஜராத் படையெடுப்பின் போது கொண்டுவரப்பட்ட மாலிக்காபூரின் தலைமையிலான படையை தென்னிந்தியப் படையெடுப்பிற்கும் பயன்படுத்தினார்.

**மாலிக்கபூரின் தென்னிந்தியப் படையெடுப்பிற்கான காரணங்கள்**

1. தன்னுடைய வல்லமையைப் பெருக்கி தான் ஒரு மாமன்னர் என்பதை நிருபிக்க விரும்பினார்.
2. தென்னிந்தியாவில் ஆட்சி செய்தவர்கள் இந்து அரசர்கள்.
3. யாதவர்கள் ஆட்சி செய்த தேவகிரியில் பெரும் கொள்ளையடித்துப் பெரும்பொருள் சேர்த்த அலாவுதீனுக்கு மீண்டும் பொருள் சேர்க்கும் ஆசை தோன்றியது.
4. தென்னிந்தியாவின் வளமையும் கோயில்களின் செழுமையும் அலாவுதீனின் கவனத்தைக் கவர்ந்தன. தேவலா தேவி தேவகிரியில் தங்கியிருப்பதை அறிந்து அவளை அடைய விரும்பினார். மேற்கூறப்பட்ட மிக முக்கிய காரணங்களால், படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டு யாதவர்கள், ஹொய்சாளர்கள், காகத்தியர்கள், பாண்டியர்கள் ஆட்சி செய்த நாடுகளின் மீது படையெடுப்பு நடத்தப்பட்டது.

### 1. யாதவர்களின் தேவகிரி (1307)

தேவகிரியை ஆட்சி புரிந்து இராமச்சந்திர யாதவ் டெல்லி அரசிற்குச் செலுத்தப்பட வேண்டிய கப்பத்தை மூன்றாண்டுகளாகக் கட்டாமல் இருந்தார். மேலும் குஜராத் மன்னரின் மகள் தேவலா தேவி அவரிடம் புகலிடம் சென்றிருந்ததாகக் கேள்வியுற்று மீட்டுவர அலாவுதீன் விரும்பினார். மாலிக்காபூரின் தலைமையில் 1307-ல் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பு சுல்தானுக்குப் பெரும் வெற்றியைத் தந்தது. இராமச்சந்திரன் தோற்கடிக்கப்பட்டார். தேவலாய தேவி சிறைப் பிடிக்கப்பட்டு அலாவுதீனின் மகனான கிஸிர் கானுக்கு திருமணம் செய்விக்கப்பட்டார்.

### 2. காகித்தியர்களின் வாரங்கல் (1307 - 1310)

இரண்டாம் பிரதாபருத்திரர் என்ற காஹத்திய மன்னர் வாரங்கலை ஆண்டு வந்தார். சுல்தானின் படையெடுப்பு தோல்வியுற்ற போதிலும், 1309-ல் மாலிக்காபூரின் தலைமையில் சென்ற படை வெற்றி கொண்டது. மேலும் டெல்லிக்குக் கப்பம் கட்டும்படி அவரைப் பணித்தனர்.

### 3. ஹொய்சாளர்களின் துவார சமுத்திரம்

ஹொய்சாள மன்னரான மூன்றாம் பல்லாலர் துவார சமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார். மாலிக்காபூர், குவாஜா ஹாஜி ஆகியோர் தலைமையில் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டபோது, இராமச்சந்திரனும் படைகளைக் கொடுத்துதவினார். பல்லாலாவைத் தோற்கடித்து பெரும் பொருள்களைக் கொள்ளையடித்துச் சுல்தான் படைகள் சென்றன. அலாவுதீனின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டு கப்பம் கட்டுவதாக பல்லாலர் ஒப்புக் கொண்டார்.

## 4. பாண்டியர்களின் மதுரை (1311)

மாலிக்காபூரின் தென்னிந்தியப் படையெடுப்பின் பொழுது மதுரையில் சுந்தரபாண்டியர், வீரபாண்டியர் இருவருக்கும் ஏற்பட்ட அரியணைப் போட்டியில் சுந்தரபாண்டியர் டெல்லி சுல்தானின் உதவியைக் கேட்டார். அதனைக் காரணமாகக் கொண்டு படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. வீரபாண்டியர் தப்பிச் சென்றுவிட்டார். வழியில் பல கோயில்களைக் கொள்ளையடித்துச் சென்ற மாலிக்காபூர், வீரபாண்டியரைத் தேடி ராமேஸ்வரம் வரை சென்றார். வழியில் இடிக்கப்பட்ட கோயில்களின் பொருள்களைக் கொண்டு மசூதியொன்றை இராமேஸ்வரத்தில் கட்டிவிட்டு டெல்லிக்குத் திரும்பினார்.

### இறுதிப் படையெடுப்புகள்

யாதவ மன்னரான சங்கரர் முறையாகத் திறை செலுத்தத் தவறியதால் மீண்டும் ஒரு படையெடுப்பு 1313-ல் மாலிக்கபூரால் மேற்கொள்ளப்பட்டது. சங்கரர் கொல்லப்பட்டார். ஹொய்சாளர்களும் தோற்கடிக்கப்பட்டனர்.

### மங்கோலியப் படையெடுப்புகள்

கி.பி. 1296 முதல் கி.பி. 1308 வரை பத்துக்கும் மேற்பட்ட படையெடுப்புகளை மங்கோலியர் மேற்கொண்டனர். பஞ்சாப், மூல்தான், சிந்து பகுதிகளில் வெற்றி கொண்ட மங்கோலியர் டெல்லியையும் அச்சுறுத்தினர். அப்பகுதிகளில் பெரும் கொள்ளையும் நடத்தினர். அலாவுதீன் சித்தூர் கோட்டையின் முற்றுகையின் பொழுதே மங்கோலியர் பெரும் தொல்லை கொடுத்தனர். இத்தகைய கொடூரமான படையெடுப்புகளைத் தவிர்க்கும் பொருட்டு எல்லைப்புறக் கோட்டைகளை பழுது பார்த்தும் புதிய எல்லைப்புறக் கோட்டைகளைக் கட்டியும், காவல்படையை வலுப்படுத்தியும், தீரமிக்க வீரர்களை நியமித்தும் மங்கோலியப் படையெடுப்புகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

### பொருளாதார சீர்திருத்தம் (Economic Reforms)

சுல்தான்களின் ஆட்சியில் மிக உயர்ந்ததாகக் கருதப்படுவது. அலாவுதீன் கொண்டுவந்த பொருளாதாரச் சீர்திருத்தங்களாகும்.

### விலைவாசிக் கட்டுப்பாடு

பெரும்படையை வைத்திருக்க அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தி தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டார். திவான்-இ-ரியாசத், ‘ானா-இ-மண்டி என்ற இரண்டு முக்கிய அலுவலர்களை நியமித்துப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தினார். பொருள்களை அதிகமாக வாங்குவதற்கு முல்தானி வணிகர்களுக்குக் கருவூலத்திலிருந்து முன்பணம் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்கும் முறை நிறுத்தப்பட்டது.

கால்நடைகளின் விலைகளும் குறைக்கப்பட்டன. பசு 4 டங்காக்களும், ஆடு 10 டங்காக்களும், முதல் தரக் குதிரை 100 டங்காக்களும் விற்கப்பட்டன. நிலவரி தானியமாகவே வசூலிக்கப்பட்டு, ஆங்காங்கே அமைக்கப்பட்ட தானியக் களஞ்சியங்களில் அவை பயன்படுத்தப்பட்டன.

உணவுப் பொருள்களின் விலைகள் நிர்ணயிக்கப்பட்டு எவ்விதக் காரணம் கொண்டும் அதிக விலைக்கு விற்கத் தடை செய்யப்பட்டது. அவற்றைக் கவனிக்க ஒற்றர்களும் நியமிக்கப்பட்டனர். விற்பனையாளர்கள் எடையைக் குறைத்து விற்றால், அக்குறைந்த

எடைக்குச் சரிசமமான சதையை அவ்வியாபாரியின் உடம்பிலிருந்து அறுத்து விட ஆணையிடப்பட்டது. நேர்மையற்றவர்கள் வியாபாரம் செய்வதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. அதுபோலவே சுங்கச் சட்டங்களை மீறியவர்களுக்கும் கடும் தண்டனை விதிக்கப்பட்டது. இத்திட்ட முறைகள் நாடு முழுவதும் செயல்படுத்த முடியவில்லை என்றாலும் சில முக்கியத் தலை நகரங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டன.

மக்களை வறுமையிலேயெ வாடவைப்பதால் நாட்டின் குழப்பம் ஏற்படாமல் செய்யலாம் என்று ஒரு புதிய கொள்கையை வகுத்துக் கொண்டார். இந்துக்கள் மீது 50மூ நிலவரி வசூல் செய்தும் மற்றும் பல வரிகள் விதித்தும் அவர்களை மேலும் ஏழ்மைக்குள்ளாக்கினார்.

ஆரம்ப காலம் முதல் அலுவலகங்களில் உலேமாக்கள் அதிக செல்வாக்குப் பெற்று அரசியலில் தலையிட்டுப் வந்தனர். அவர்களை அரசுக் காரியங்களில் தலையிடாதவாறு செய்ததோடு “தான் இடும் ஆணைகள் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கும் நல்ல கொள்கைகளாகவே இருக்கும்” என்று கூறி சமயத் துறையையே அடக்கியதோடு சமயச் சார்பற்ற அரசையும் அலாவுதீன் தோற்றுவித்தார்.

நாட்டின் எல்லையைப் பெருக்க தானே நேரடியாக வீரர்களைத் தேர்ந்தெடுத்தார். மக்களின் பொருளாதாரக் குறையைப் போக்கக் கடும் ஆணைகளைப் பிறப்பித்துத் தீர்ப்புகளையும் தாமே வழங்கினார். சமயத்தைக் கட்டுப்படுத்தி தம் கீழ்க் கொண்டு வந்தார். இத்தகைய முறையில் அனைத்து அதிகாரங்களையும் தன் கையில் வைத்துக் கொண்டு தாமே நேரடியாக ஆட்சி செய்தார். எனினும் அமைச்சர்கள் அவருக்கு ஆலோசகர்களாகவும், எழுத்தர்களாகவும் இருந்தனர். அவருடைய ஒற்றர் படைக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களின் செய்தியை அடிப்படையாகக் கொண்டு திறமையாக ஆட்சி செய்தார்.

## துக்ளக் வம்சம்

### முகமது பின் துக்ளக் (1325 - 1351)

அன்பும் கருணையும் முகமது-பின்-துக்ளக்கிடம் இருந்தன. அதே சமயம் கொடூரமும், கோபமும் வெளிப்பட்டன. சிலர் அவரை இரத்த வெறி பிடித்தவர், கிறுக்கர் என்று கூறிப் பழிதூற்றுகின்றனர். பொதுவாக அவருடைய திட்டங்களைக் காணும்பொழுது மிகவும் உயர்ந்த நன்னோக்குக் கொண்டவைகளாகவே காணப்படும். ஆனால் அவை செயல்படுத்தப்பட்ட விதம் கிறுக்குத்தனமாக இருந்தது என்று கூறலாம்.

கியாசுதீன் துக்ளக்கின் மைந்தரான பக்ருதீன் முகமது ஜுனாகான் என்பவரே முகமது பின் துக்ளக் என்று அழைக்கப்பட்டார். இளம் வயதில் மிகவும் திறம்படச் செயல்பட்டதால் தந்தையார் இவரைப் பட்டத்திளவரசராக நியமித்து உலுக்கான் என்ற பட்டம் அளித்துச் சிறப்பித்தார். 1325-ல் சுல்தானைக் கொன்றுவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினார். டெல்லியை ஆட்சி புரிந்த எந்த மன்னரிடமும் காணமுடியாத பல உயரிய குணங்கள் இவரிடம் காணப்பட்டன. இவர் கணிதம், தத்துவம், வானநூல், உடல்நூல் போன்ற பாடங்களில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். பாரசீக மொழியில் சில பாடல்களையும் இயற்றியுள்ளார். ஆடம்பர மற்று மிக எளிய வாழ்க்கை வாழ்ந்த துக்ளக், இந்து சமயத்தினர் மீது மிகவும் பரிவுகாட்டினார். பொதுவாக மினதாபிமானமிக்க மன்னராக விளங்கினார்.

மேற்கூறப்பட்ட நல்ல குணங்கள் காணப்படினும் சில எதிர்க் குணங்கள் காணப்பட்டு அவருடைய நல்ல செயல்களை நசுக்க முற்பட்டன. உண்மையில் துக்ளக் ஆற்றல் மிக்கவர், அறிவு நிறைந்தவர். ஆனால் அவர் நடைமுறையில் செயல்படுத்த முற்படும்பொழுது கெட்ட காலம் அவரது திட்டங்களை சீர்குலைத்து விடுகின்றன.

## நிர்வாகச் சீர்திருத்தங்கள்

துக்ளக்கின் நிர்வாகச் சீர்திருத்தங்களில் முக்கியமானவை

1. **வருவாய்த்துறை**
2. **தலைநகர் மாற்றம்**
3. **அடையாள நாணயமுறை**
4. **சமயக் கோட்பாடு**
5. **விவசாய இலாகா**

## 1. வருவாய்த் துறை சீர்திருத்தம் (1326-27)

துக்ளக் ஆட்சிப் பொறுப்பேற்று போது கருவூலம் காலியாக இருந்தது. வருமானத்தைப் பெருக்கும் நோக்கோடு மாகாணங்களின் வரவு செலவு பற்றிய குறிப்புகளை உடனடியாகத் பெற்றுக் கொண்டார். வரிவசூல் முறை ஒரு தரப்பட்டதாக இருக்க வேண்டி, எல்லா கிராமங்களையும் தீர்வை செய்யும்படி உத்தரவிட்டார்.

கங்கைக்கும் யமுனைக்கும் இடைப்பட்ட தோ ஆப் பகுதி மீது அதிக வரி விதித்து, வருமானத்தை அதிகரிக்க முயன்றார். தோ ஆப் பகுதி செழுமை மிக்க பகுதி, அங்கு வரி விதித்தது பொருத்தமே என்று சிலர் கூறுகின்றனர். மேலும் அலாவுதீன் காலத்தில் 50மூ வரி விதிக்கப்பட்டது. ஆனால் துக்ளக் காலத்தில் சுமார் 10மூ வரி விதிக்கப்பட்டது. ஆனால் துக்ளக் நிலங்களுக்கு மட்டுமல்லாமல் தோட்டம், வீடு போன்றவற்றிற்கும் வரி விதித்தார்.

இரண்டாவதாக வரிவசூலிக்கப்பட்ட முறை மிகவும் கடுமையானதாகவும், கொடுமை நிறைந்ததாகவும் இருந்தது. மூன்றாவது வரி விதிக்கப்பட்ட இடம் சரியானதென்றாலும் விதிக்கப்பட்ட காலம் முறையற்றது. ஏனெனில் மக்கள் பசியாலும் பஞ்சத்தாலும் வாட்டமுற்றிருந்த சமயத்தில் அதிக வரிப் பளுவைத் தாங்க முடியவில்லை. பஞ்சத்திலிருந்து மக்களைச் சில பஞ்ச நிவாரணங்கள் மூலம் மன்னன் காப்பாற்றுவான் என்று எண்ணிய அவர்களுக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது. இந்நிகழ்ச்சியைப் பற்றி பரணி கூறுவதைக் காண்போம். “ஏழை விவசாயிகளின் முதுகெலும்பு ஒடிக்கப்பட்டது, பணக்காரர்கள் கிளர்ச்சியாளர்களாக மாறினர், நிலங்கள் பாழாயின, பயிர்ச் சாகுபடி நிறுத்தப்பட்டது. பெரும் பஞ்சம் ஆண்டுக் கணக்கில் நிலை கொண்டிருந்ததால் ஆயிரக்கணக்கில் மக்கள் அழிந்தனர். விவசாயிகள் தங்கள் நிலங்களை விட்டு விட்டு வேறு இடம் குடியேறலாயினர்”.

மக்கள் பட்ட க்‘டங்களைத் தீர்க்கும் நோக்கோடு விவசாயிகளுக்கு முன்பணம் கொடுக்கவும். கிணறுகள் வெட்டவும் மற்றும் சில ஏற்பாடுகள் செய்யவும் துக்ளக் முற்பட்டார். இருப்பினும் அவையெல்லாம் தோல்வியடைந்தன.

## 2. தலைநகர் மாற்றம் (1326 – 27)

நாட்டின் வளர்ச்சியையும், வளமையையும், அந்நாட்டு மக்களின் திறமையையும் எடுத்துக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குவது அதன் தலைநகரமே. அத்தகைய தலைநகர் டெல்லியில் இருப்பதால் பயனில்லை என்று அதனை தேவகிரிக்கு மாற்ற ஆணையிட்டார். அதற்குரிய காரணங்களைக் காண்போம்.

1. தலைநகர் நாட்டின் பிற முக்கிய நகரங்களில் மத்தியில் இருந்தால் நிர்வாகம் சீர்படச் செயல்படுத்த முடியும்.
2. வெளிநாட்டினரின் (குறிப்பாக மங்கோலியரின்) அச்சுறுத்தலைத் தவிர்க்கலாம்.
3. நாட்டின் எல்லையைக் பெருக்கி, மற்றப் பகுதிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளலாம்.
4. தென்னிந்தியப் படையெடுப்பு மேற்கொள்ளலாம்.
5. கடற்கரைப் பட்டினங்களுக்கு அருகில் தேவகிரி இருப்பதால் வெளிநாட்டு வணிக உறவு கொள்ளலாம்.

மேற்கண்ட காரணங்கள் சிறந்தவையே. ஆயினும் துக்ளக் செய்த நடைமுறைச் செயல்கள் கொடுமையுடையதாக இருந்தன என்று பரணியும், இபன்பதூதாவும் கூறுகின்றனர். டெல்லியிலிருந்து அரசாங்க அதிகாரிகள் மட்டுமின்றி அனைவரும் (உடல் நோயுற்றிருப்பினும்) தேவகிரி செல்ல வேண்டும் என்று ஆணையிட்டார். குருடனாக இருந்தவனும் முடவனும் (வண்டியில் வைத்து) அழைத்துச் செல்லப்பட்டனர். மக்களனைவரும் சென்றபின் அரண்மனையின் உச்சியிலிருந்து மன்னன் பார்த்த போது எந்த வீட்டிலிருந்தும் புகை வரவில்லை என்று பரணி கூறுகிறார். மக்களனைவரையும் டெல்லியை விட்டு வெளியேறச் சொன்னது மக்களைப் பழிவாங்குவதற்காக என்று சிலர் கூறுவர். அவர் ஆட்சியைக் கைப்பற்றியதும் டெல்லி மக்கள் எதிர்த்ததால் அவர்களை பழிவாங்க முயன்றார் என்பர் சிலர். டெல்லி செல்லும்போது மக்களுக்கு முகமது பின் துக்ளக் பல வசதிகளை செய்து கொடுத்தார்.

டெல்லியிலிருந்து தேவகிரிக்குச் செல்லும் பொழுது மக்கள் துன்பப்படக் கூடாது என்பதற்காக, துக்ளக் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் சாலையமைத்தும், மரங்களையும், சத்திரங்களையும் வழியின் இரு மருங்கிலும் ஏற்படுத்தி வசதி செய்து கொடுத்தார்.

“டெல்லியில் வாழ்ந்த மக்களின் வீடுகளையும், நிலங்களையும் சுல்தானே வாங்கிக் கொண்டு அவற்றிற்குரிய விலையையும் கொடுத்து விட்டார்” என்று இபன்பதூதா கூறுகிறார்.

சுல்தான்களின் பழக்க வழக்கங்களும் சூழ்நிலைகளும் கொண்ட பகுதி டெல்லியாகும். ஆனால் தேவகிரியோ இந்துக்கள் வாழ்ந்த பகுதி. அப்புதிய பகுதியில் தலைநகரை அமைப்பதால், அப்பகுதி முழுவதும் முகமதிய மக்களிடமுள்ள கலாச்சாரம் அமையும் என்று எண்ணினார். ஆகவே, அனைவரையும் அங்கு செல்ல உத்தரவிட்டார்.

ஆனால் மக்கள் அனைவரும் வழி நெடுகிலும் பல அல்லலுக்கு ஆளாயினர், சிலர் மாண்டனர், பலர் நோய்வாய்ப்பட்டனர். அவற்றை அறிந்த சுல்தான் மீண்டும் அனைவரையுமே டெல்லி திரும்ப உத்தரவிட்டார். மக்கள் திரும்பிய போதிலும் டெல்லி தன் பழைய வனப்பைப் பெற சில காலம் பிடித்தது.

## 3. நாணய முறையில் மாற்றம்

அடையாள நாணய முறையைப் புகுத்தி அரசியலிலும் பொருளாதாரத்திலும் ஒரு புரட்சியைத் துக்ளக் ஏற்படுத்தினார். துக்ளக் கொண்டுவந்த இத்திட்டம் வெற்றிபெற்றிருந்தால் அவர் உலக வரலாற்றிலே மிக உன்னத இடத்தைப் பெற்றிருப்பார். செப்பு நாணயங்களை வெளியிடுவதற்கு முன்னர் தங்க நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. இவரது ஆரம்ப காலத்தில் 170 குண்டுமணி எடையுள்ள தினார் என்ற தங்க நாணயத்தையும் 140 குண்டுமணி எடையுள்ள அதாலி என்ற வெள்ளி நாணத்தையும் வெளியிட்டார். ஆனால் தக்காணப் படையெடுப்பின் விளைவாகப் பெரும் பொருள் செலவாகிக் கருவூலம் காலியாகியது. ஆகவே, தங்க நாணயத்தின் புழக்கத்தைக் கட்டுப்படுத்தி, அவற்றைக் கருவூலத்திற்குத் திரும்பப் பெறுவதற்கு செப்பு நாணயங்களை வெளியிட முடிவு செய்தார். இத்தகைய அவரது முடிவு நீண்ட ஆலோசனைக்குப் பிறகு உறுதி செய்யப்பட்டு உத்தரவும் இட்பபட்டது. அவற்றிற்கான காரணங்கள்

1. செப்பு நாணயங்கள் வெளியிடுவதால் தங்க நாணயங்களை மீண்டும் பெற்றுக கருவூலத்தை நிரப்பலாம்.
2. படையெடுப்புகளால் பொருள் ந்‘டம் ஏற்பட்டது.
3. புதிய படையெடுப்புகளை மேற்கொண்டு நாடு பிடிக்கத் திட்டமிட்டார்.
4. தோ ஆப் பகுதியில் எதிர்பார்த்த அளவு வருவாய் கிடைக்கவில்லை.
5. அடையாள நாணய முறையைச் சிலர் வெளியிட்டு வெற்றி கண்டிருந்தார். 1294-ல் பாரசீக மன்னன் கெய்கதுகான் என்பவரும், அதே நூற்றாண்டில் சீன மன்னர் குப்லாய்கானும் காகித நாணயங்களை வெளியிட்டு வெற்றி பெற்றனர். அதுபோலவே நாணய உலகில் புதிய முயற்சியைத் தான் புகுத்தியதாக அனைவரும் பாராட்ட வேண்டும் என்று செப்பு நாணய முறையைத் துக்ளக் புகுத்தினார்.

பொருளாதார நெருக்கடியை ஈடுசெய்வதற்காகச் செப்பு அடையாள நாணயங்கள் பொன், வெள்ளி நாணயங்களின் மதிப்பில் வெளியிடப்பட்டுள்ளதாக அறிவித்து, தங்க நாணயங்கள் வைத்திருப்போர் அவற்றைக் கருவூலத்தில் செலுத்தி விட்டு, செப்பு நாணயங்களைப் பெற்றுக் கொள்ளும்படி ஆணையிட்டார். கண்மணியை விற்று மின்மினியைப் பெற்றுக் கொள் என்றால் யார் முன் வருவார்கள்? கருவூலத்திற்கு யாரும் சென்று செப்பு நாணயத்தைப் பெறவில்லை.

செப்பு நாணயம் வெளியிடுவதை அரசாங்கத்தின் தனி முழு உரிமையாக துக்ளக் செய்யாததால், ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான செப்பு நாணயங்களைத் தன் வீட்டிலேயே செய்து கொண்டு பொருள்களை வாங்கினர். இதனால் தங்க நாணயங்களின் புழக்கத்தைக் கட்டுப்படுத்தி அவற்றைப் பதுக்க முற்பட்டனர். அதனால் செப்பு நாணயங்கள் புழக்கம் மிக அதிகமானது, பொருள்களின் விலையும் உயர்ந்தது. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது துக்ளக்கிற்கும் பெரும் பிரச்சினையாக இருந்தது.

ஆகவே, சீர்கெட்ட பொருளாதாரத்தைச் செப்பனிட மற்றொரு புதிய ஆணையைப் பிறப்பித்தா. அதன்படி செப்பு நாணயங்கள் வைத்திருப்போர் அதற்குப் பதிலாகத் தங்க

நாணயங்களைக் கருவூலத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று அவர் அறிவித்தார். அதன்படி பலர் செப்பு நாணயங்களை எடுத்துச் சென்று, அவற்றின் மதிப்பிற்கேற்ற தங்க வெள்ளி நாணயங்களைப் பெற்றுக் கொண்டனர். இதனால் மேலும் கருவூலம் வறட்சியுற்றது.

துக்ளக்கின் புதிய நாணயமுறைத் திட்டம் தோல்வியுறுவதற்கு முக்கியக் காரணம் செம்பு நாணயங்கள் வெளியீடுவதை அரசாங்கத்தின் தனி உரிமையாக ஆக்கி துக்ளக் ஆணையிடவில்லை. அதனால் போலி நாணயங்கள் புழக்கத்தில் வந்தன. குடிமக்களின் ஒவ்வொரு வீடும் நாணயச் சாலையாக மாறியது என்று பரணி குறிப்பிடுகின்றார். மேலும் உண்மைச் செப்பு நாணயங்களின் தனித்தன்மையைக் குறிக்க எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.

### 4. சமயக் கொள்கை

துக்ளக்கின் சமயக் கொள்ளை மிகவும் சிறப்புடையதாகவே காணப்பட்டது. இருப்பினும் வைதிகப் போக்குடைய முஸ்லிம்களுக்குப் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. சமயச் சட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது, தன் பகுத்தறிவிற்கேற்ப நீதி வழங்கினார். மற்றும் சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காதது தன் விருப்பப்படி நடந்து கொண்டார். அதாவது சமயச் சட்டங்களைப் புறக்கணித்தார். அவருக்கும் உலோமாக்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதோடு, அவர்கள் அரசியலில் தலையிடுவதை துக்ளக் விரும்பவில்லை, காஜிக்களின் தீர்ப்பில் தவறு இருந்தால், அதனை சுல்தான் நிராகரித்தார்.

பிற சமயத்தவர்களுக்கு மதிப்புக் கொடுத்து அவர்களை மிகவும் மரியாதையுடன் நடத்தினார். ஜீன் பிரபா சூரி என்ற சமண அறிஞர் துக்ளக்கின் அவைக்கு கி.பி. 1323-ல் வருகை புரிந்தார். அவரை மிகவும் மரியாதையாக நடத்தி, அவருக்குப் பெரும் செல்வத்தையும், பல பரிசுகளையும் துக்ளக் கொடுத்தார். ஆனால் அவற்றை சமண அறிஞர் ஏற்றுக் கொள்ளவில்லை அதனால் துக்ளக்கிற்கு சமயக் கொள்கையில் மிகவும் ஈடுபாடு ஏற்பட்டது. சமண சமயத் துறவிகளின் மீது அன்புகொண்டு அவர்களுக்கு ஒரு விடுதியும் கட்டிக் கொடுத்தா. (பிரபா சூரியை யானை மீது அமர்த்தி, மாலிக்குகள் அவரைத் தொடர்ந்து நடந்து வர, நடன மாந்தர்களின் நாட்டியத்துடன் ஊர்வலமாக அழைத்துச் சென்று கௌரவித்தார். அதனால், மாலிக்குகள் ஆத்திரமடைந்தனர்) மேலும் இந்து சமயத் துறவிகளுடன் பல இரகசியத் தொடர்பு கொண்டிருந்தார். துக்ளக்கின் இத்தகைய பரந்த மனப்பான்மை அவரது மதிப்பை மிகவும் உயர்த்தியது. ஆனால் வைதிக முஸ்லீம் சமயத்தவர்களிடையே பெரும் மனக் கசப்பையும், துக்ளக் மீது வெறுப்பையும் ஏற்படுத்தியது. துக்ளக்கிற்கும் இஸ்லாமிய மறை ஞானிகளிடத்தில் பற்று ஏற்படவில்லை.

### 5. விவசாய இலாக்கா (திவான்-இ-கோஹி)

விவசாயத்தை ஊக்குவித்து கருவூலத்தின் நிதியை அதிகரிக்க துக்ளக் விவசாய இலாக்கா ஒன்றை ஏற்படுத்தினார். அவ்விலாக்காவிற்கு திவான்-இ-கோஹி என்று பெயர். பயிரிடப்படாத நிலங்களைப் பயிரிட முன்வருவோருக்கு அரசாங்க கருவூலத்திலிருந்து நிதி உதவியும் அளிக்கப்பட்டது. மேலும் 75 கிலோ மீட்டர் சதுர பரப்பளவுள்ள நிலம் மேற்கண்ட விவசாய முறைக்கு முத்னமுதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஓரளவு பலன் கிடைத்தது என்றாலும், அரசாங்கம் 70 இலட்சம் ரூபாய் செலவு செய்தது. இருப்பினும் இத்திட்டம் கீழ்க்கண்ட முக்கிய காரணங்களால் தோல்வியுற்றது.

1. விவசாயத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலம் செழிப்பானது அல்ல.

2.விவசாயத்திற்கென ஒதுக்கப்பட்ட முழுப் பணமும் முறையாகச் செலவிடப்படவில்லை, பெரும் பணத்தை அரசாங்க அதிகாரிகள் தவறாகப் பயன்படுத்தினர்.

3.முன் அனுபவம் இல்லாத இத்திட்டத்தினால் பல இடர்ப்பாடுள் தோன்றின. ஆகவே இது தோல்வியடைந்தது.

## முகமது பின் துக்ளக்கின் வெளிநாட்டுக் கொள்கை

### 1. கொரேசான் படையெடுப்பு

கொரேசான் நாட்டு உயர் குடியினர் சிலர் தங்களுடைய நாட்டின்மீது படையெடுக்க வேண்டும் என்று துக்ளக்கைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அப்படையெடுப்பின் பொழுதே டிரான்சாக்ஸியானா,ஈராக் ஆகிய பகுதிகளையும் வெற்றி கொள்ள துக்ளக் முடிவு செய்து எகிப்து மன்னருடன் நட்புறவு கொண்டார். மேலும் படை வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஓராண்டு ஊதியத்தை அளித்தார். படையெடுப்பிற்குச் சுமார் 3,70,000 பேர்கள் திரட்டப்பட்டனர். ஆனால் அனைத்து முயற்சிகளும் பெரும்பாலும் முடிவுற்றுப் படையெடுப்பு மேற்கொள்ளும் தருணத்தில் அப்படையெடுப்பினால் பலன் ஏதுமில்லை என்று கைவிடப்பட்டது. இதனால் பெரும் ந்'டம் ஏற்படாமல் தடுக்கப்பட்டது.

### 2. நாகர் கோட் படையெடுப்பு (1337)

பஞ்சாப் பகுதியில் காணப்படும் நாகர் கோட் மீது பெரும் படையெடுப்பை மேற்கொண்டு வெற்றி பெற்றார். இருப்பினும் மிகவும் பெருந்தன்மையுடன் அவ்வெற்றி பெற்ற பகுதியை அந்நாட்டை ஆட்சி செய்த இந்து மன்னருக்கே கொடுத்து விட்டார்.

### 3. கராஜல படையெடுப்பு (1337-38)

இமயமலைத் தொடர்களில் ஒன்றான குலு என்ற மலைத் தொடரில் காணப்படும் இப்பகுதியைத் தன்நாட்டுடன் இணைத்துக் கொள்ள ஒரு படையெடுப்பை மேற்கொண்டு முதலில் வெற்றி பெற்றார். இருப்பினும் மழைக்காலத்தில் படையினர் மிகவும் அவதியுற்றார். உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை. இறுதியில் மலை வாசியினர் பேரரசுப் படையினைச் சூறையாடி பலரைக் கொன்றுவிட்டனர். இப்படையெடுப்பைப் பற்றிப் பேரரசருக்குத் தெரிவிக்க 10 குதிரை வீரர்கள் மட்டுமே உயிருடன் திரும்பினா. இருப்பினும் கராஜல் மன்னர் துக்ளக்குடன் கப்பம் கட்டுவதாக உடன்பாடு செய்து கொண்டார்.

### 4. மங்கோலியப் படையெடுப்புக்ள (1328-29)

மங்கோலியப் படையினர் தமாசிரினின் தலைமையில் லாகூரிலிலிருந்து மூல்தான் வரையிலான பகுதிகளை கொள்ளையடித்து நாசம் விளைவித்து, டெல்லிக்கு அச்சம் கொடுத்தனர். அத்தகைய அச்சம் கொடுக்கும் மங்கோலியப் படையெடுப்பைத் தடுக்காமல் அவர்களுக்கு ஏராளமான வெகுமதிகளை அளித்து ஆபத்தைத் தவிர்த்தார். இருப்பினும், மங்கோலியப் படையெடுப்பை துக்ளக் முற்றிலும் தவிர்க்காமல் அவர்கள் மேலும் படையெடுப்பைத் தொடர வழிவகுத்துக் கொடுத்த செயல் இழுக்குடையதே.

### 5. சீனத் தூதக்குழு

1311-ல் தோகன் தைமூர் என்ற சீன மன்னர் துக்ளக் அவைக்கு ஒரு தூதுக்குழுவினை அனுப்பி, கராஜல் படையெடுப்பின் போது அழிக்கப்பட்ட பௌத்த ஆலயங்களைப் புதுப்பிக்கக் கேட்டுக் கொண்டார். ஆனால் ஜிசிவா கொடுக்காவிட்டால் புனரமைக்க, இயலாதெனக் கூறும்படி இபன்பதுதாவை சீன அவைக்கு துக்ளக் அனுப்பி வைத்தார்.

துக்ளக் மேற்கொண்டு சீர்திருத்தச் செயல்களும், அவற்றின் தோல்விகளும், படையெடுப்புகளின் விளைவுகளும் மக்களின் மனதில் அச்சத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தின. சமயக் கொள்கையால் வைதீக முஸ்லீம்கள் மனம் கொதித்தனர். இத்தகைய புரட்சிகளால் பேரரசு பலவீனமடைந்து, பல தனி அரசுகள் தோன்ற ஆரம்பித்தன.

## டில்லி சுல்தானியத்தின் வீழ்ச்சி

### 1. ஆள்பவரின் தனிப்பட்ட வல்லாட்சித் தன்மை

தில்லித் சுல்தானியம் நீடித்து நிலைபெறுதற் பொருட்டு ஆள்பவரின் குணவியல்பையும், ஆட்பண்ணையும் பொறுத்து அவரது தனிப்பட்ட வல்லாட்சித் தன்மையிலேயே இயங்குவதாயிற்றது. வலிமையும் திறமையும் வாய்ந்த அரசர்கள் கோலேந்திய வரையில் ஒவ்வொரு காரியமும் செவ்வனே செயற்பட்டது. ஆட்சிப் பிடி வலிமையான கரத்தினின்று நழுவியதும் தடுக்கமுடியாத வகையில் சுல்தானியம் தடுமாறத் தொடங்கியது.

### 2. கூடுதலான அதிகாரக் குவிப்பு, பேரரசின் மிகப்பரந்த தன்மை

கூடுதலான அதிகாரக் குவிப்பு தில்லிச் சுல்தானியத்தின் முக்கியக் கூறாக அமைந்தது. சுல்தான் எல்லா அதிகாரங்களையும் தம்மிடத்தில் ஒருங்கிணைத்திருந்தார். நாளடைவில் பேரரசின் பரப்பு அதன் நீர்மநிலையை எய்தியது. முகம்மது-பின்-துக்ளக் காலத்தில் மாநிலங்களின் எண்ணிக்கை 23-ஆக உயர்ந்தது. கூடுதலான அதிகாரக் குவிப்பின் தீய விளைவுகள் பேரரசின் உயிர்ப்புக்களையே உண்ணலாயிற்று. பல்கிப் பெருகிய அரசுக் கடமைகளால் மைய ஆட்சி மழுங்கியும் மாநில ஆட்சிகள் மரத்தும் போயின. பேரரசு கட்டுக்கடங்காமற் போகவே பேரரசால் மாநிலங்களின்மீது தமது கட்டுப்பாட்டைத் திறம் படச் செலுத்தமுடியவில்லை. மாநிலங்களில் தோன்றிய கிளர்ச்சி யால் விளைந்த இடரையும் குடும்பத்திற்குள்ளே உருவான சதித்திட்டத்தின் சாயலையும் கண்டு எப்போதும் கிலி கொண்டிருந்த பேரரசர் நாட்டு அரசில் தம்மை முழுமையாக முனைப்புடன் ஈடுபடுத்திக் கொள்ள முடியாமற் போயிற்று. அரசினுடைய நிலைமை கட்டுக்கடங்காமல் மீறிப் போனபொழுது மாநிலங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மைய அரசின் பிணைப்பிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டன. முகம்மது-பின்-துக்ளக் ஆட்சிக்காலத்தில் 1334-35ல் இவ்வாறு சுதந்திரத்தை முதலில் நிலைநாட்டியவர் மாபார் ஆளுநராவார். மாபாரைப் பின் தொடர்ந்து 1337-ல் வங்காளமும் தனது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியது. முகம்மது-பின்-துக்ளக்கின் அடக்குமுறை நடவடிக்கைகள் 1336-ல் விஜயநகர இந்துப்பேரரசும், 1347-ல் பாமினிய முஸ்லிம் அரசும் தோன்றிட வழிவகுத்தன. முகம்மது-பின்-துக்ளக்கினுடைய பெரிய மருமகனான நாசிருதீன் மாமூதீன் ஆட்சிக் காலத்தில் தில்லியும் அதன் சுற்றுப்புறமுமடங்கிய ஒரு சிற்றரசின் அளவிற்குச் சுல்தானியத்தின் ஆளுகையெல்லை குறுகியிருந்தது. "உலகத் தலைவரின் ஆளுகை தில்லியிலிருந்து பாலம் வரை பரவியிருந்தது" என வழங்கிய

சொற்களில் இவரது அரசின் பரப்பைக் கிண்டலாகக் குறிக்கப்படுவதைக் காணலாம். (தில்லியினின்றும் ஒரு சில கற்களுக்கு அப்பால் அமைந்துள்ள ஒரு சிற்றூரே பாலம் ஆகும்).

### 3. முகம்மது-பின்-துக்ளக்கின் பொறுப்பு

முகம்மது-பின்-துக்ளக்கின் அடக்குமுறை நடவடிக்கைகள் பேரரசின் சிதைவிற்கு வழிவகுத்தன. தோவாப் மீது வரி விதித்தது, தில்லியினின்றும் தேவகிரிக்குத் தலைநகரை மாற்றியது, அடையாள நாணயினின்றும் தேவகிரிக்குத் தலைநகரை மாற்றியது, அடையாள நாணயம் வெளியிட்டது, டிரான்சாக்´யானா, குராசன்,ஈராக் ஆகிய பகுதிகளைக் கைப்பற்ற மதியீனமான திட்டங்கைளத் தீட்டியது, குராஜல் மீது படையெடுத்தது ஆகிய செயல்கள் அரசுக் கருவூலத்தை வெறுமையாக்கின. மக்களின் அதிருப்தி மலையெனப் பெருகினப் பல புரட்சிகளாக வெளிப்பட்டன. மாநில ஆளுநர்கள் இவருக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். மாபார் 1334-35-லும், வங்காளம் 1337-லும் சுதந்திர அரசுகளாயின, முகம்மது-பின்-துக்ளக்கின் அடக்குமுறை நடவடிக்கைகள் 1336-ல் விஜயநகர இந்துப் பேரரசும் 1347-ல் பாமினிய அரசும் தோன்றிட வழிவகுத்தன. கிரு‘ணா, துங்கபத்திரா நதிகளுக்குத் தென்புறத்திலான பகுதி முழுவதும் சுல்தானிடமிருந்து பறிபோனது.

### 4.பிரோஸ் துக்ளக்கின் பொறுப்பு

உள்ளாந்த வகையில் பிரோஸ் துக்ளக் அமைதியை விரும்பும் மினதராகவிருந்தார். உலேமா அரசாங்கக் காரியங்களில் தாராளமாகத் தலையிட இவர் அனுமதித்தார். மிகவும், வெறுத்தொதுக்கப்பட்ட ஜாகிர் முறையை இவர் புதுப்பித்ததுடன் அடிமை முறையையும் ஊக்குவித்தார். இவர் ஒரு பெரும் தளபதியல்ல. தம்மிடமிருந்து பறிபோன தக்காணம், வங்காளம், சிந்து, இராஜஸ்தானம் ஆகிய மாநிலங்களை மீட்க இவர் எவ்விதத் தீவிர முயற்சியும் மேற்கொள்ளவில்லை. “அவருக்கு முந்திய அரசரின் ஆளுகையினின்றும் முற்றிலும் மாறுபட்டதாக நயமிக்கதும், நலஞ்சாந்ததுமான நடவடிக்கைகள் பிரோஸ் ஆளுகையில் காணக்கிடப்பினும், சுல்தானியத்தின் அடித்தளத்தை அசைத்து வீழ்த்தியதற்கும் அவர் ஆளுகையே பெருமளவிற்குக் காரணமாயிற்று. முழுமையாகப் பார்க்குமிடத்து, பிரோஸ் ‘ாவின் நீண்டகால ஆட்சியில் அமைதியும், வளப்பமும், மனநிறைவும் நிலவியபோதிலும் அவருடைய கொள்கையும், நிருவாக நடவடிக்கைகளும் தில்லிச் சுல்தானிய வீழ்ச்சிக்குப் பெருமளவு காரணமாகியதுடன் அவருக்கு முந்திய அரசரின் ஆளுகையில் ஏற்கெனவே ஏற்பட்டுவிட்ட வீழ்ச்சிப்போக்கை வேகமூட்டியது என்பதை ஒருக்கால் எவருமே ஐயுறமாட்டார்கள்” என ஆர். சி. முஜூம்தார் குறிப்பிடுகிறார்.

### 4. சுல்தான்களின் இந்துக்களுக்கெதிரான கொள்கை

நாட்டில் பெரும்பான்மையராகத் திகழ்ந்த இந்துக்கள்பால் தில்லிச் சுல்தான்களில் பலர் சகிப்புத்தன்மையற்ற கொள்கையைப் பின்பற்றி வந்தனர். சோமநாதர் கோயிலை கிஜினி மாமூது கொள்கையைப் பின்பற்றி வந்தனர். சோமநாதர் கோயிலை கஜினி மாமூது கொள்ளையிட்டது. விறகுவெட்டுபவராகவும், நீரிறைப்பவராகவும், பேரரசின் குற்றவேல் அடிமைகளாகவும் இருக்கும் நிலைக்கு இந்துக்களை அலாவுதீன் கில்ஜி தாழ்வுறுத்தியது, பிராமணர்கள்மீது பிரோஸ் துக்ளக் ஜிலியா வரி விதித்தது, கோயில்களை சிக்கந்தர் லோடி வேண்டுமென்றே தகர்ந்தெறிந்தது ஆகிய நிகழ்ச்சிகள் இந்துக்களின்

மெல்லிய உணர்ச்சிகளைப் புண்படுத்திய வில்லம்புகளை ஒத்த செயல்களாகும். இந்துக்களின் அடக்கப்பட்ட உணர்ச்சிகள் சுல்தானுக்கு எதிராக பல கலகங்களின் வடிவில் உருவெடுத்தன.

## 5. தைமூரின் இந்தியப் படையெடுப்பு

1398-ல் தைமூர் மேற்கொண்ட படையெடுப்பு தள்ளாடிக் கொண்டிருந்த பேரரசை மேலும் தடுமாறச் செய்யும் பேரிடியாக அமைந்தது. நாட்டைச் சூறையாடியதுடன் இவர் ஆயிரக்கணக்கான இந்துக்களைக் கொன்றார். "இதற்கு முன்பு ஓரே படையெடுப்பில் எவர் விளைவித்ததையும்விடக் கூடுதலான துயரை இந்தியாவின் மீது விளைவித்துவிட்டு" இவர் 1399-ல் இந்தியாவினின்றும் வெளியேறினார். தைமூர் வெளியேறியதும் மேற்கத்திய இந்தியாவில் குழப்பமும் குளறுபாடும் குடிகொண்டன. தில்லியைப் பாழ்நிலத் தோற்றமுடைய ஒரு நகரமாக இவர் விட்டுச்சென்றார். கொடும் பஞ்சமும், கொள்ளை நோயும் கைகோர்த்துக் களியாட உரைக்கவியலா இடுக்கணுக்கு மக்கள உள்ளாயினர். துக்ளக்கின் பேரரசு சிறு துண்டுகளாகச் சிதறுண்டு போயிற்று. தைமூர் இந்துக்களைக் கூட்டக் கொலை செய்தது. இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கு இடையே நிலவிய நட்புறவைப் பாதித்தது.

## 6. இப்ராஹிம் லோடியின் பொறுப்பு

இப்ராஹிம் லோடி தில்லிச் சுல்தானியத்தின் கடைசிச் சுல்தானாவார். இப்ராஹிம் லோடியின் பேரரசு ஏற்கெனவே குன்றிக் குறுகி இருந்தது. தில்லி, ஆக்ரா, சாந்தேரி, தோவாப், ஜான்பூர், பீகாரின் ஒரு பகுதி, பயானா ஆகிய பகுதிகளுக்கப்பால் இப்ராஹிம் லோடியின் ஆட்சி பரவியிருக்கவில்லை. இணங்கிப்போகும் இயல்பில்லாத அரசரான இவர் பிரபுக்களை இன்னலுக்கு ஆளாக்கி இழிவும் படுத்தினார். பஞ்சாப் ஆளுநரான தௌலத்கான் லோடியும், இப்ராஹிம் லோடியின் மாமனான ஆலம் கானும் இந்துஸ்தான்மீது படையெடுக்குமாறு பாபருக்கு அழைப்பு விடுத்ததில் வியப்பேதுமில்லை. சதியாளர்களும், சாகசக்காரர்களும், பணம், பட்டத்திற்காக எதையும் செய்யத் துணிவும் சந்தர்ப்பவாதிகளும், நாட்டின்கண் மலிந்து கிடந்தனர். இப்ராஹிம் லோடி தமது அரசியல் தந்திரமற்ற செயல்களால் தில்லிச் சுல்தானிய ஆட்சிக்குச் சாவுமணி அடித்துவிட்டார் என்று கூறுதல் பொருந்தும். காரியங்கள் மோசத்தினின்றும் படுமோசத்திற்குத் தாழ்வுற்றுக் கொண்டிருக்கையில் பாபர் இந்துஸ்தான்மீது படையெடுத்து 1526-ல் முதல் பானிபட் போரில் இப்ராஹிம் லோடியைத் தோற்கடித்துக் கொன்றார்.

## அலகு – 5 : விஜயநகரப் பேரரசு

### தோற்றம்

விஜயநகரின் தொடக்கக்கால வரலாறு புதிர் நிறைந்ததாய் காணப்படுகின்றது. முகம்மது-பின்-துக்ளக்கினுடைய அடக்குமுறை நடவடிக்கைகள் விஜயநகரின் எழுச்சிக்கு வழிவகுத்தன. 14-ஆம் நூற்றாண்டில் இந்திய அரசியல் நிலை மிகவும் கொந்தளிப்பான ஒரு கட்டத்திலிருந்தது. அந்நிலை தென்திசையில் பல புதிய அரசுகள் எழுச்சிபெற அரிய வாய்ப்புக்களை ஏற்படுத்தியது. முகம்மது-பின்-துக்ளக் ஆட்சிப் பகுதியில் தென்கோடி மாநிலமாகவிருந்த மாபார் 1334-35-ல் தனது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியது. மாபார் கவா்னரின் வக்கிரபுக்திக்குப் பாடம் கற்பித்திடும் நோக்குடன் இவா் மாபாா் நோக்கிச் செல்லுகையில் வாரங்கலில் ஒரு புரட்சி ஏற்பட்டதால் அங்கு தங்க நேரிட்டது. தெலிங்கானா நிருவாகத்தைப் பொறுத்த அவா் ஒரு புதிய ஏற்பாடு செய்தாா். தெலிங்கானா இரு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டது. பண்டைய காஹத்திய அரசின் படைத்தளபதி ஒருவரை இஸ்லாமிய மதத்திற்கு மாற்றிய பின்பு, வாரங்கலைத் தலை நகராகக் கொண்ட கீழ்த்திசைத் தெலிங்கானாப் பகுதியின் ஆட்சிப் பொறுப்பு அவா் வசம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது வாரங்கலை ஆண்டுவந்த கபாய நாயக் (கிரு‘ண நாயக்) 75 குறுநிலத் தலைவா்களைக் கொண்ட கூட்டை அமைத்தாா். ஹோய்சால அரசரான மூன்றாம் பல்லாலரும் அவருடன் சோ்த்துக்கொண்டாா். தெலிங்கானா மக்களின் தேசிய உணா்ச்சியை அவா்கள் கிளறிவிட்டனா். இதனால் விளைந்த தேசியக் கலகம் ஓா் இந்தச் சமயக் கலகமாக உருப்பெற்றது. வாரங்கல் அவா்கள் வசமாகவே முகம்மது பின்-துக்ளக், தமது ஆந்திர அரசை இழந்திடும் நிலை வந்துற்றது வாரங்கலில் தோல்வியுற்ற போதிலும் காம்பிலியில் அவா் வெற்றி பெற்றாா். காம்பிலிப் போரில் ஹரிஹரா், புக்கா் இருவரும் கைதிகளாக்கப்பட்டனா். அவா்கள் இஸ்லாமிய மதத்திற்கு வல்லந்தமாக மாற்றப்பட்ட பின்பு முறையே காம்பிலியின் ஆளுநராகவும் துணை ஆளுநராகவும் நியமிக்கப்பட்டனா். ஆனால் மாநிலத்தின் அமைதியைப் பேணிக் காத்திட அவா்களால் இயலவில்லை. தேசிய எழுச்சி

அப்பகுதியில் பெருமளவு பெருகியதன் விளைவாக அவர்கள் தோற்கடிக்கப்பட்டு நாட்டிலிருந்து விரட்டப்பட்டனர். ஊர்ஊராக நாடோடிகளாக அலைந்த இச்சகோதரர்கள் இறுதியில் வித்யாரண்யர் என்ற சாது ஒருவரின் உதவியை நாடினர். துங்கபத்திரையின் வடகரையில் அமைந்துள்ள அனகண்டியை இவர்கள் தமது பிடிதரமான உறைவிடமாகக் கொள்வதற்கு சாது வழங்கிய அறிவுரையே காரணமாகியது. மீண்டும் இந்து மதத்தைத் தழுவிய இவர்கள் 1336-ல் விஜயநகரப் பேரரசிற்கு அடிக்கல் நாட்டினர்.

## அரசியல் வரலாறு

1336-ல் நிறுவப்பட்ட விஜயநகரப் பேரரசின் அரசியல் வரலாற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. முந்நூறு ஆண்டுகட்கு மேலாக விஜயநகரப் பேரரசு இந்துமதக் காவலனாக நிலைபெற்றிருந்ததோடு தென் திசையில் முஸ்லிம்களின் ஊடுருவலைத் தடுக்கும் தடைக்கல்லாகவும் அமைந்திருந்தது. சங்கம, சலுவ, துளுவ, ஆரவீடு என்ற நான்கு வமிசங்கள் விஜயநகர வரலாற்றில் இடம் பெறுகின்றன.

## கிருஷ்ணதேவராயர் (1509-1529)

வீர நரசிம்மருக்குப் பிறகு அவருடைய ஒன்றுவிட்ட சகோதரரான கிரு‘ணதேவராயர் பதவிக்கு வந்தார். துளுவ வமிசத்தினரில் மிகவும் குறிப்பிடத்தக்க உறுப்பினரும், விஜயநகரத்தின் சிறந்த அரசரும் இவரேயாவார். இவருடைய ஆட்சியில் விஜயநகரப் பேரரசு சிறப்பிலும் புகழிலும் அதன் உச்ச நிலையை அடைந்தது. இவர் அரியணையேறியதும் அது மலர் தூவிய மஞ்சமன்று என்பதை உணர்ந்தார். நாற்றிசைகளிலிருந்தும் இடர்ப்பாடுகள் இவரைச் சூழ்ந்துகொண்டன. கிரு‘ணதேவராயரின் பணி கடுமையானதாக இருந்தது உண்மையே.

## பாமினி அரசின் மீது போர் நடவடிக்கை

இவரது ஆட்சியின் முதல் ஆண்டிலேயே, விஜயநகரத்தின் மீது ஜிஹாத் என்ற புனிதப் போரை நடத்திய பாமினிச் சுல்தான் மாமூது ஷாவை இவர் எதிரிட நேரிட்டது. இவரது மேலாண்மையை ஏற்றுக் கொண்டிருந்த பிரபுக்களும், குறுநிலத் தலைவர்களும் இவருடன் கூட்டுச் சேர்ந்தனர். 1509-ல் ய நிகழ்ந்த போரில் கிரு‘ணதேவராயர் பாமினிச் சுல்தானைப் படுதோல்வியுறச் செய்தார். பிஜப்பூர் சுல்தான் போரில் கொல்லப்படவே குழவிப் பருவ நாடான பிஜப்பூரில் பாதுகாப்பற்ற நிலைமை நிலவியது. பிஜப்பூரில் நிலவிய குழப்பமான நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி கிரு‘ணதேவராயர் 1512-ல் ரெய்ச்சூர் தோவாப்பைக் கைப்பற்றினார். குல்பர்கா, பீடார் ஆகிய அரண்களைக் கைப்பற்றுவதன்மூலம் இவர் தமது வெற்றியைப் பெருக்கினார். தோல்வியுற்ற பாமினிச் சுல்தானுக்கு அவரது பழைய நிலையை இவர் வழங்கினார்.

## ஊம்மத்தூரைக் கீழடக்குதல்

கிருஷ்ணதேவராயரின் தாக்குதலுக்கு அடுத்த இலக்காக உம்மத்தூர் அமைந்தது. தமக்கு முன்பு ஆண்ட அரசருக்கு உம்மத்தூர் பளையக்காரர் இழைத்த தீங்குகளுக்காக அவரைப் பழிவாங் வேண்டுமென இவர் விரும்பினார். ஸ்ரீரங்கப்பட்டினம், சிவசமுத்திரம் ஆகிய இரண்டும் பாளையக்காரரின் ஆதிக்கக் கோட்டைகளாயிருந்தன. கிரு‘ணதேவராயர் அவருக்கெதிராக ஒரு படையெடுப்பைத் தாமே மேற்கொண்டு மழு வெற்றியையும் பெற்றார்.

உம்மத்தூர் பாளையக்காரரான கங்கராஜாவிடமிருந்து இவர் ஸ்ரீரங்கப்பட்டிணத்தையும், சிவசமுத்திரத்தையும் கைப்பற்றினார். போர்க்களத்தினின்றும் தப்பி ஓடிய பாளையக்காரரை காவிரி அணைத்துக் கொண்டது. பாளையக்காரரிடமிருந்து தாம் புதிதாகக் கைக்கொண்ட பகுதிகளை ஒரு மாநிலமாக உருவாக்கி ஸ்ரீரங்கப்பட்டிணத்தை அதன் தலைமையிடமாக்கினார்.

## ஓரிசாவுடன் போர்

கிருஷ்ணதேவராயருக்கு முன்பு ஆண்ட அரசர்களின் ஆட்சியின் போது உதயகிரி, கொண்ட வீடு ஆகிய மாநிலங்கள் விஜயநகரத்திடமிருந்து பிறபோய்விட்டன. இம்மாநிலங்களை மீட்கும் பொருட்டு ஓரிசாவின் கஜபதியின்மீது கிரு'ணதேவராயர் போர்ப்பறை கொட்டினார். 1513-லிருந்து 1518 வரை நீடித்த இப்போர்க் காலத்தில் கஜபதி பெரும் தோல்விகளுக்கு ஆளானார். அவரிடமிருந்து அவ்வித மாநிலங்களையும் கிரு'ணதேவராயர் பறித்தெடுத்தார். 1518-ல் ஓர் உடன்படிக்கையின் படி போர் முடிவுற்றது. உடன்படிக்கை நிபந்தனைகளின்படி கஜபதி தமது மகளை கிரு'ணதேவராயருக்கு மணம் முடித்துத்தர, கிரு'ணாவிற்கு வடக்கில் கஜபதியிடமிருந்து கைப்பற்றிய பகுதிகள் அனைத்தையும் கிரு'ணதேவராயர் அவரிடம் ஒப்படைத்தார்.

## கோல்குண்டாவின் கூலி குத்துப் ஷாவுடன் போர்

ஓரிசா மீதான போர் நடவடிக்கைகளில் கிரு'ணதேவராயர் முனைந்து ஈடுபட்டிருந்தபோது தெலிங்கானா அரசரான கூலி குத்துபஷா விஜயநகரப் பகுதிக்குள் ஊடுருவிச் சில இடங்களைக் கைப்பற்றினார். கிருஷ்ணதேவராயர் ஓரிசாப் போர் நடவடிக்கைகளை முடித்துத் தலைநகர் திரும்பியவுடனேயே இப்படையெடுப்பாளரை கொண்ட வீட்டிலிருந்து விரட்டும் பொருட்டு சலுவ திம்மா என்பவரின் தலைமையின்கீழ் படையொன்றை அனுப்பினார். கூலி குத்துப் 'ாவின் படையைத் தோற்கடிப்பதில் வெற்றிகண்ட சலுவ திமா படையெடுப்பாளரின் கரங்களின்றும் அம்மா நிலத்தை முழுமையாக விடுத்தார்.

## பிஜப்பூருடன் போர்

ஓரிசாவின் மீதான போர் நடவடிக்கையிலும், மற்றும் கீழத்திசைப் போர்கிளலும் கிருஷ்ணதேவராயர் முனைந்து ஈடுபட்டிருந்த போது பிஜப்பூர் சுல்தான் இஸ்மாயில் அதில்கான் ரெய்ச்சூரைக் கைப்பற்றினார். சலுவ திம்மாவின் கீழ் கிரு'ணதேவராயர் படையொன்றினை அனுப்பினார். முஸ்லிம் முகாம் மும்மரமாகத் தாக்கப்பட அளவிறந்த கொள்ளைப்பொருட்கள் இவர் கரங்களில் வீழ்ந்தன.

## கிருஷ்ணதேவராயரின் இறுதி நாட்கள்

கிருஷ்ணதேவராயர் தமது இறுதி நாட்களில் அமைதியோடிருக்க முடியவில்லை. இவர் தமது மகனுக்காக அரியணையைத் துறந்தார். ஆனால், எட்டுமாத ஆட்சிக்குப் பிறகு எதிர்நோக்காச்சாவு அவ்விளவரசரை எதிருற்றது. சலுவ திம்மாவின் மைந்தரான திம்மா தண்டநாயகாவால் இளவரசர் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார் என கிரு'ணதேவராயர் ஐயுறவே, அவ்விருவரையும் சிறைப்படுத்தினார். சிறையினின்றும் தப்பிய திம்மா தண்டநாயகா புரட்சிக் கொடியைய உயர்த்தினார். மிகப் பெரும் கடினப்பாட்டுடனேயே ராயர் கிளர்ச்சியை ஒடுக்க வேண்டியதாயிற்று. தமது ஆட்சியின் கடைசி ஆண்டுகளில் அரியணைக்கு வாரிசு நியமிக்கும் பிரச்சினையில் இவர் ஆழ்ந்த கவலை கொண்டிருந்தார். பதினெட்டு மாதக் குழந்தைப் பருவத்தினனான தமது மகனுக்காகவும், தமது மருமகனுக்காகவும் (வீர நரசிம்மரின்

மகன்)எழுப்பப்பட்ட கோரிக்கைகளை இவர் புறந்தள்ளினார். ஏனென்றால் பேரரசுப் பதவிக்கு அவர்கள் தகுதியற்றவரென இவர் கருதினார். தமது ஒன்றுவிட்ட சகோதரர்களில் ஒருவரான அச்சுதரைத் தமது வாரிசாக இவர் நியமித்தார். புகழ் மணக்க 20 ஆண்டுகள் அரசோச்சிய பிறகு 1529-ல் கிரு‘ணதேவராயர் உயிர் நீத்தார்.

## போர்ச்சுக்கீசியருடன் உறவுமுறை

போர்க்சுக்கீசியருடன் கிருஷ்ணதேவராயர் நட்புமிக்க உறவு முறைகளைக் கொண்டிருந்தார். தமது படைக்குக் குதிரைகள் வாங்கும் பொருட்டு இவர் அவர்களுடன் நட்புப் பூண்டார். இலாபகரமாக வாணிபம் நடத்த வாய்ப்பளிக்கும் எனக் கண்ட போர்ச்சுகீசியரும் கிரு‘ணதேவராயரின் நட்பை நாடி வளர்த்தனர். அவர்களுடைய அரசியல் திட்டங்களுக்கு ராயர் என்றுமே ஊக்கந்தரவில்லை. சிறிய ஒரு சச்சரவு தவிர அவர்களுடைய இவர் நட்பான உறவுமுறைகளையே கொண்டிருந்தார்.

## கட்டிட வல்லநரும், கலை, இலக்கியம் புரவலருமாக ராயர்

கட்டிடம் எழுப்புவதில் கிருஷ்ணதேவராயர் கைதேர்ந்தவராக இருந்தார். அணைகள், பாசனத் கால்வாய்கள், கோயில்கள் பல இவர் கட்டியுள்ளார். தமது மனைவி நாகலாதேவியின் நினைவிற்காக விஜயநகரத்திற்கு அருகே நாகலாபுரி எனும் பெயரில் இவர் ஒரு புதிய நகரை எழுப்பினார். ஆழ்ந்த வைணவப் பற்றுடையவராக இருந்தமையால் திருப்பதியிலும், திருவண்ணாமலையிலும் பல கோயில்களைக் கட்டினார். இக்காலத்தியக் கோயில் கட்டிடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது ஹலாரே ஆலயமாகும். இவரால் கட்டப்பட்ட விட்டலசுவாமிக் கோயில் சிற்பவேலைப்பாடுகள் மிளிர்கின்றன. கிரு‘ணதேவராயர் கலையையும் இலக்கியத்தையும் போற்றி வளர்த்த புரவலராகத் திகழ்ந்தார். தெலுங்கு இலக்கியத்தின் ‘அகஸ்டஸ் காலமாக’ இவருடைய காலம் கருதப்படுகின்றது. ‘அஷ்டதிக்கஜர்கள்’ என வழங்கிய மிகச் சிறந்த எட்டு தெலுங்குக் கவிஞர்கள் இவரது அவையை அணிசெய்தார். அல்லாஸானி பெட்டண்ணா, திம்மன்னா, தெனாலி இராமகிரு‘ணா ஆகியோர் அவர்களில் மிகு புகழ்பெற்றோராவர். கிரு‘ணதேவராயர் தாமே பல்திறம் வாய்ந்த ஓர் அறிஞராக விளங்கினார். ‘அமுக்தமால்யதா’ எனும் தெலுங்குக் கவிதையும், உ‘ாபரிணயம்’ எனும் சமஸ்கிருத நாடகமும் இவரால் எழுதப் பெற்றனவாகும். அறிஞருக்கு அள்ளிவழங்கும் பண்பு இவருக்கு ‘ஆந்திர போஜர்’ எனும் பட்டத்தைத் தேடித் தந்தது.

## தளபதியாகவும், நிருவாகியாகவும் கிருஷ்ணதேவராயர்

கிருஷ்ணதேவராயர் புகழ்பெற்ற தளபதியாகத் திகழ்ந்தார். இவர் படைக்குத் தலைமையேற்றுச் சென்ற வேளைகளில் இவரது இராணுவ வீரம் வெளிப்பட்டது. இவர் போர்க்களங்களில் பல வாகைகள் சூடினார். தோல்விகளை வெற்றிகளாக மாற்றுவதில் இவர் கைதேர்ந்தவராக விளங்கினார். வீழ்ச்சியுற்ற எதிரியை இவர் பெருந்தன்மையுடன் நடத்தினார். காயமுற்ற படைவீரர்களுக்கு மருத்துவ உதவி அளிப்பதில் தனிப்பட்ட அக்கறை காட்டினார். இவர் சிறந்த நிருவாகியாகவும் விளங்கினார். மாநில நிருவாகம் கெட்டுவிடலாகாதென்பதற்காக இவர் மாநிலங்களை எச்சரிக்கையுடன் கண்காணித்து வந்தார். இவர் ஊக்கமான வெளிநாட்டுக் கொள்கைளைப் பின்பற்றினார். ஏராளமான நிலங்களைச்

சாகுபடிக்குக் கொண்டுவந்து குடியானவர் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்தினார். தொந்தரையான சில வரிகளை இவர் நீக்கினார்.

## தலைக்கோட்டைப் போர் (1565)

ஐந்து தக்காணச் சுல்தானியங்களில் பீரார் நீங்கலாக மற்றவை விஜயநகரத்திற்கெதிரான வலிமைவாய்ந்த ஒரு கூட்டினைப்பை உருவாக்கின. 1565-ல் நடந்த புகழ்பெற்ற தலைக்கோட்டைப் போரில் இக்கூட்டுப்படையினர் விஜயநகரத் துரப்புக்களைப் படுதேல்வியுறச் செய்தனர். இராமராயர் சிறைகொள்ளப்பட்டுக் கொல்லப்பட்டார். ‘‘மறக்கப்பட்ட பேரரசு’’ என்ற தமது நூலில் விஜயநகரம் வீழ்ச்சியுற்றதை மனங்கவரும் வண்ணம் வருணித்துரைக்கும் ராபர்ட் ஸீவெல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார். ‘‘மூன்றாவது நாள் முடிவின் தொடக்கத்தைக் கண்ணுற்றது. வெற்றிபெற்ற முஸல்மான்கள் ஓய்வும், விட்டாற்றியும் பெறப் போர்க்களத்தில் தங்கினர். ஆனால் இப்போது அவர்கள் தலைநகரை வந்தடைந்துவிட்டனர். அதிலிருந்து ஐந்துமாக காலத்திற்கு விஜயநகரத்திற்கு ஓய்வே இருக்கவில்லை. அழிப்பதற்காக வந்த பகைவர் சிறிதும் விட்டுக்கொடுக்காது தமது குறிக்கோளை ஈடேற்றினர். அவர்கள் ஈவிரக்கமின்றி மக்களைக் கொன்று குவித்தனர் கோவில்களையும், அரண்மனைகளையும் உடைத்தெறிந்தனர் முன்பு கண்கவர் வன்பபுடைய கட்டிடங்கள் காட்சியளித்த இடத்தைச் சுட்டிக்காட்டிட இன்று பாழ் நிலமே மீந்திருக்கின்ற வகையில், கல்லினால் கட்டப்பட்ட ஒரு சில பெரிய கோயில்களையும், சுவர்களையும் தவிர, அரசர்களின் அரண்மனைகள் அனைத்தின் மீதும் முரட்டுத்தனமாக அவர்கள் தங்களது வஞ்சத்தைத் தீர்த்தக் கொண்டனர். அவர்கள் சிலைகளை உடைத்ததுடன் ஒற்றைக்கல்லில் செய்யப்பட்ட நரசிம்மரின் பெரிய உருவச்சிலையின் கைகளை ஒடிப்பதிலும் வெற்றிகண்டார். பகட்டான நுண்வேலைப்பாடுகள் கொண்டதாக நதிக்கரையில் அமைந்திருந்த விட்டலசாமிக் கோயில் கட்டிடங்களுக்கு தீயிட்டதுடன், அவற்றின் நேர்த்தி வாய்ந்த கற்சிற்பங்களைத் தூள்தூளாக்கினர். நெருப்பும், வாளும், கடப்பாறைகளும் , கோடாரிகளும் கொண்டு நாசவேலையில் நாளுக்குநாள் அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டனர். முழுமையான வளப்பத்துடன் செல்வமும் விடாமுயற்சியும் கொண்ட மக்கள் நிறைந்திருப்பதாய் ஒரு நாள் காட்சியளிப்பது, விவரித்துக்கூறும் எல்லையைக் கடந்த காட்டு மிராண்டித்தனமாக கூட்டகட கொலைகளுக்கும், நாசங்களுக்கும் நடுவே திடுமெனத் தாக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டு, பாழ் படுத்தப்பட்டாய் மறுநாள் தோற்றந்தருகின்ற இத்தகைய பெருஞ்சேதம், அதுவும் இவ்வளவு சீக்கிராக, அதுவும் இத்தகைய அழகுவாய்ந்த நகரின் மீது விளைவிக்கப்பட்ட நிலை உலக வரலாற்றிலேயே எப்போதும் ஏற்படவில்லை என்று கூறலாம்’’.

தலைக்கோட்டைப் போர் அறுதியான போரன்று. அது விஜயநகரப் பேரரசின் முடிவை முத்திரையிட்டுவிடவில்லை, ஏனெனின், 17-வது நூற்றாண்டின் மூன்றாவது காற்பகுதி வரையில் ஆரவீடு வமிசத்தினர் விஜயநகரை ஆண்டுவந்தனர். விஜயநகர வீழ்ச்சியால் தக்காணச் சுல்தானியங்களுக்குப் பயன் ஏதும் விளையவில்லை ஏனெனின், விரைவில் அவை முகலாய ஏகாதிபத்தியத்தால் ஆட்கொள்ளப்பட்டுவிட்டன.

# பாமினி அரசு

## தோற்றம்

முகமது பின் துக்ளக் அலாவுதீன் கில்ஜியின் அரசியற் கோட்பாடுகளினின்றும் விலகி, இந்தியா முழுவதையும் வென்று ஆளவேண்டும் என்னும் அசம்பாவிதமான ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டார். இதனால் ஒரு சில நாட்களுக்கேனும் இந்தியத் துணைக் கண்டத்தின் பெரும்பகுதி அவருடைய சுல்தானிய ஆட்சியில் அடங்கிற்று. தக்காணத்தில் அவரது ஆட்சி தென்னிந்தியாவைக் காட்டிலும் சற்று அதிக வலுவோடு நின்றது. ஆயினும், அவருடைய தனிப்பண்புகளாலும் அவ்வளவு பெரிய அரசினைத் தொடர்ந்து ஆளுவதற்குத் தேவையான நிர்வாகக் கருவிகள் இன்மையாலும் அப்பேரரசு சிதறுண்டது. தெற்குக் கோடியிலிருந்த துக்ளக் ஆட்சிப் பிரதிநிதி சுதந்தரத்தை அறிவித்துக் கொண்டு மாபார் சுல்தானியத்தை நிறுவிக் கொண்டார். தேவகிரியில் இருந்த முஸ்லீம் ஆட்சியாளர்கள் முகமதுவின் வாழ்நாளிலேயே கலகம் செய்யத் தொடங்கினார்கள். 1336-ல் விஜயநகரத்தில் நிறுவப்பட்ட இந்து அரசைத் தவிர தக்காணத்தில் பாமினி அரசம், ஒரிஸ்ஸாவின் தனி அரசும் ஆளத் தொடங்கின. தாம் கட்டிய பேரரசு தம் கண் எதிரிலேயே அழியத் தொடங்கி விட்டதைத் தம் கண்ணாரக் கண்டுகொண்டே முகமது துக்ளக் இறந்தார்.

முகமது பின் துக்ளக் தனது தலைநகரைத் தேவகிரிக்கு மாற்றியதிலிருந்து அந்நகரில் ஏராளமான முஸ்லீம்கள் குடியேறினார்கள். ஆனால், முஸ்லீம் இந்து வேறுபாடு காணாமல் அம்மன்னர் யாவரையும் துன்புறுத்தினார். அவர்களுடைய பகைமையையும் சம்பாதித்துக் கொண்டார். அன்றியும், தௌலதாபாத் (இதுவே தேவகிரிக்குத் தரப்பட்ட முஸ்லீம் பெயர்) தில் பலராலும் விரும்பப்பட்ட கவர்னர் குட்லுக்கான் என்பவரை அப்பதவியினின்றும் நீக்க நிஸாம் உதீன் என்பவரை நியமித்தார். அந்நியமனம் பலராலும் எதிர்க்கப்பட்டது. அதனால் ஒரு கலகமே உருவாயிற்று.

கி.பி. 1345-ல் முகமதுவின் ஆளான அஸீஸ் என்பவனைக் கலகக்காரர்கள் கொன்றுவிட்டனர். அப்பொழுது சுல்தான் குஜராத்தில் இருந்தார். அஸீஸின் கொலையைக் கேட்டுக் பெருஞ்சினங் கொண்ட முகமது தேவகிரியில் இருந்த தம் அதிகாரிகளை அனுப்பினார். அவர்கள் தலைநகரையடைந்ததும் அங்கிருந்த கவர்னரைக் கொன்றுவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றி மாலிக் இஸ்மாயில் என்பவருக்குத் தக்காணத்து மன்னர் என்னும் பட்டத்தையும் சூட்டி மன்னராக்கினார். அது கண்டு கலகம் அளவிற்கு விஞ்சிவிட்டது என்பதையுணர்ந்த முகமது தேவகிரியை முற்றுகையிட்டார். ஆயினும், தேவகிரியைக் காட்டிலும் குஜராத்தில் கட்டுக் கடங்காத கலகம் முற்றிக் கொண்டிருந்தது. அதை அடக்க சுல்தான் அங்கு விரைந்தார். இதற்கிடையே தௌலதாபாத்தில் முடிசூட்டப்பெற்ற இஸ்மாயில் முடிதுறந்தார். அவரையடுத்து ஹஸன் என்பவர் 1347-ல் சுல்தானாக்கப்பட்டார்.

## அலாவுதீன் பாமன்ஷா

அவர் தக்காணத்துக் கலகத்தில் பெரும் பங்கு கொண்டவர். அவர் முதலாம் அலாவுதீன் பாமன்'ா என்னும் பட்டத்துடன் மன்னரானார். அவர் தொடக்கி வைத்த அரசகுலத்திற்குப் பாமினி அரசு என்று பெயராயிற்று. சிலர் பாமன் என்பது பிராமணர் என்பதன் திரிபு என்பர். முன்னொரு காலத்தில் பாரசீகத்தில் ஆண்டுவந்த பாமன்'ா என்பாருக்கும் 14-ம் நூற்றாண்டில் தக்காணத்தில் ஆண்ட சுல்தானுக்கும் யாதொரு தொடர்பும் இருக்க முடியாது. ஆதலால், மேற்கூறியவையெல்லாம் கட்டுக்கதை என்பதே

பொருத்தமாகும். அலாவுதீன் பாமன்'ா தமது ஆட்சியைத் தொடக்கத்திலிருந்தே திறமையோடு செலுத்தினார். அவர் காலத்தில் பாமினி அரசின் தெற்கு எல்லை கிரு'ணா ஆறுவரை எட்டிற்று. அப்போது விஜயநகர அரசின் அரசியல் ஆசைகளோடு பாமினி அரசு மோதத் தொடங்கியது. கிழக்கே இருந்த வாரங்கலும் பாமினியின் பரப்பால் பாதிக்கப்பட்டது. அவர் தமது அரசினை நான்கு மாநிலங்களாகப் பிரித்தார். அவையாவன, குல்பர்கா, பீதர், தௌலதாபாத், பீரார் என்பவை. அவர் குல்பர்காவைத் தலைநகராக்கிக் கொண்டார்.

## முதலாம் முகமது

முதலாம் அலாவுதீன் பாமன் 'ாவிற்குப் பிறகு அவர் தம் மூத்த மைந்தரான முதலாம் முகமது (1358-1373) என்பார் சுல்தானானார். அவர் காலத்திலேயே வாரங்கல், விஜயநகரம் ஆகிய இடங்களிலிருந்த அரசுகள் பாமினி அரசினைத் தங்களது இயற்கைப்பகை என்று கருதத் தொடங்கின. அதே போன்ற கருத்து பாமினி அரசிலும் இந்து அரசுகளைப் பற்றி இருந்தது. பாமினி அரசிற்கும் விஜயநகர அரசிற்கும் இடையில் இருந்த ராய்ச்சூர் தோ ஆப் (ஆற்றிடைப் பிரதேசம்) பல போர்களுக்குக் காரணமாய் இருந்தத. அப்பிரதேசத்தை இரு அரசுகளும் தமது என்று போட்டியிட்டு வேண்டினர். சில பொருளாதாரக் காரணங்களுக்காவும் அவ்வரசுகளிடையே பொறாமையும் போரும் விளைந்தன.

முதலாம் முகமது பொற்காசுகளை அச்சிட்டுத் தமது நாட்டில் வழங்கினார். பாமினி அரசில் இருந்த இந்துப் பொற்கொல்லர்கள் அக்காசுகளை உருக்கிப் பொன்னாக்கி விஜயநகருக்கு அனுப்பிவிட்டனர். விஜயநகர அரசர்கள் அத்தங்கத்தைக் காசாக அடித்துத் தமது நாட்டில் வழங்கினார்கள். இத்தகைய காரணங்களால் பாமினிக்கும், விஜயநகருக்கும் இடையே போர் மூண்டது. அப்போரில் விஜயநகரப் படைகள் தோற்றன. இது போதாதென்று வாரங்கலை ஆண்ட இந்து மன்னர் பாமினி பேரரசுக்கு சேரவேண்டிய குதிரைகளைக் குறுக்கிட்டு வாங்கிவிட்டனர் (1362) பாமினி அரசர் வாரங்கல் மீது படையெடுத்தார். அந்நாட்டு மன்னரைப் பிடித்து அவர் தலையை துண்டித்தார். வாரங்கல் அவைக் களத்திருந்த கிரு'ணப்ப நாயக்கர் என்பவர், பாமினி சுல்தானிடம் சரண் புகுந்தார்.

கி.பி. 1365-ல் பாமினி அவையில் ஆடிப்பாடிய சில இசைப்புலவர்களுக்கு வெகுமதி அளிக்கப்புகுந்த பாமினி அரசர் அவர்களுக்கு ஒரு தாக்கீது அளித்து அதன்மூலம் அவர்களுக்குச் சேரவேண்டிய வெகுமதிய விஜய நகரப் பேரவையில் பெற்றுக் கொள்ளும்படி உத்தரவிளித்தார். அப்பபுலவர்களும் அதனை உண்மையென்று நம்பி விஜயநகரத்திற்குச் சென்று பாமினி சுல்தாதனின் உத்தரவைக் காண்பிக்கவே அம்மன்னருக்கு வந்த கோபம் அளவிறந்தது. அப்போது விஜய நகரத்தில் முதலாம் புக்கர் என்பவர் ஆண்டார். அம்மன்னர் பாமினி அரசருக்குத் தக்க தண்டனை அளிக்க விரும்பி ராய்ச்சூர் ஆற்றிடைப் பகுதிமீது படையெடுத்தார். ஆனால், முதலாம் முகமது விஜயநகரப் படைகளை எதிர்த்துத் தாக்கி விரட்டியடித்தார். பாமினி மன்னர் அதோடு நில்லாமல் விஜயநகர அரசிற்குட் புகுந்து அந்நாட்டில் பெருஞ்சேதம் விளைத்தார். ஆனால் தலைநகரை அவர் தாக்காமல் விடுத்தார்.

## ஆட்சித்துறை

போர்த்துறையினரைப் போல ஆட்சித் துறையிலும் முகமது வெற்றி கண்டவர். அவர் நாட்டில் அமைதியை நிலைநாட்டினார். மதுவிலக்கைப் புகுத்தினார். அவர் தம் நாட்டின்

ஆட்சியில் நேரடியான சிரத்தை கொண்டு அலுவலாளர்களை மேற்பார்த்தார். அவரது அமைச்சரவையில் எட்டு மந்திரிகள் இருந்தனர். முகமது ஆக்கிய இந்நிர்வாக ஏற்பாடுகள் பாமினி அரசின் நிலையான சீர்திருத்தங்களாய் அமைந்தன.

முகமதுவிற்குப் பின அவர் மைந்தர் முஜாஹிது என்பார் மன்னராகி 1373-லிருந்து 1378 வரை ஆண்டார். அவர் ஆட்சிக் காலத்திலும் விஜயநகரத்திற்கும் பாமினிக்கு ராய்ச்சூர் ஆற்றிடைப் பிரதேசத்தைப்பற்றித் தகராறு தொடர்ந்தது. ஆதோனியில் நடந்த போரில் இந்துக்கள் தோற்றனர். முஜாஹிதிற்குப் பின் அவர் மாமனான தாவுத்கான் என்பவர் சுல்தானைக் கொன்று தாமே அரசரானார். இந்நிலையில் இதுவே தக்க தருணம் என்று கருதி விஜயநகரப் படைகள் துங்க பத்திரையைக் கடந்து ராய்ச்சூர் வரை படையெடுத்தனர். வலுவில் அரசைக் கைப்பற்றிய தாவுதுகானும் விரைவில் கொல்லப்பட்டார்.

அவருக்குப்பின் அலாவுதீன் பாமன்'ாவின் கடைசி மகனான முகமதின் மகன் இரண்டாம் முகமது பாமினி சுல்தானானார். அவர் ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் யாதொன்றும் நிகழவில்லை. அவர் ஆட்சியில் அமைதி நிலவிற்று. அவர் ஆட்சியை நல்லாட்சி எனல் வேண்டும். இருந்தும் 1387-95 வரை அந்நாட்டில் கொடிய பஞ்சம் ஒன்று தோன்றி மக்களை வாட்டிற்று. மன்னர் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக அப்பஞ்சத்தின் கடுமை குறைந்தது. அவர் அவைக்களத்தில் சைபுதீன் கோரி என்னும் அமைச்சர் இருந்தார். அவருடைய திறமைசான்ற நிர்வாகத்தால் மக்களுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டன. அவ்வமைச்சர் ஏறத்தாழ நூறாண்டுக்குமேல் வாழ்ந்தவர். மன்னர் இறந்ததும் மந்திரியும் இறந்தார். அப்போது பாமினி இராச்சியத்தில் குழப்பம் ஏற்பட்டது. அக்குழப்பத்திற்குக் காரணம் துகால்சின் என்பான் தலைமையில் தக்காணத்தில் இருந்த சில துருக்கி அடிமைகள் தான் காரணம்.

## பெரோஷா

இரண்டாம் முகமதை அடுத்து அவர் மைந்தர் கியாஸுதீன் அரசரானார். அவர் துகால்சினின் சூழ்ச்சியால் கண்ணையும் அரசையும் இழந்தார். அவருக்குப் பதிலாக அவருடைய சகோதரன் ஷாமஷுதீன் என்பவர் அரசராக்கப்பட்டார். ஆயினும், அம்மன்னர் ஒரு பொம்மை அரசராகவே இருந்தார். உண்மையாக அதிகாரம் அத்தீயகுண துகால்சின் வசமே இருந்தது. இந்நிலையில் முதலாம் அலாவுதீன் மற்றொரு மகனின் மக்களான பிரோஸ், அகமது என்பவர்கள் கலகம் செய்து துகால்சினைக் கொன்றனர். அந்நிகழ்ச்சியை அடுத்து பிரோஸ் மன்னரானார்.

பிரோஸின் ஆட்சி இருபத்தாறு ஆண்டுகாலம் நடந்தது. அவர் ஆட்சிக்காலத்தில் பாமினி அரசிற்கும் விஜயநகரத்திறகும் இடையே பல போர்கள் நிகழ்ந்தன. இரண்டாம் ஷிறிஹரர் ராய்ச்சூர்ப் பகுதியைத் தாக்கினார். பிரோஸ் விஜயநகர அரசின் உள்ளே புகுந்து சேதம் விளைத்து மிகுந்த திறைப்பணத்தோடு திரும்பினார். கி.பி. 1399-ல் பிரோஸ் கோண்டுவானா பிரதேசத்தையும் வென்று கொண்டமையால் பாமினியின் பலமும் செல்வாக்கும் மிகுந்தன. பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இந்தியா மீது படையெடுத்து டெல்லிப் பிரதேசத்தில் பெருங் கொள்ளையடித்த தைமூர் பிரோஸை இந்தியாவில் அக்காலத்தில் ஆண்ட மன்னர்கள் யாவருள்ளும் பெரியவராக ஏற்றுக் கொண்டார். பிரோஸைத் தக்காணம்,குஜராத், மாளவம் ஆகிய மாநிலங்களுக்கெல்லாம் தலைவராக அவர்

கருதினார். அதனால்,குஜராத்தும், மாளவமும், பாமினி அரசிடம் வெளிப்படுத்தாப் பகைமை பூண்டன. அதே காரணத்திற்காக வை விஜயநகர அரசிடம் நட்பும் பூண்டன.

அப்போது விஜயநகரத்தை ஆண்ட மன்னர் முதலாம் தேவராயர் என்பவர். அவர் ராய்ச்சூர்ப் பகுதியைச் சேர்ந்த முட்கல் என்னும் ஊரில் இருந்த ஒரு பொற்கொல்லன் மகளை விரும்பினார். அவ்விருப்பத்திற்கு அவர் இணங்க மறுத்தமையால் அம்மன்னர் ராய்ச்சூர் மீது படையெடுத்தார். இதனால் சினங்கொண்ட பிரோஸ் தம் படைகளைக் கொண்டு எதிர்த்தாக்குதல் நடத்தி விஜயநகரப் படைகளைத் துங்க பத்திரையாற்றிற்கும் தென்பால் துரத்தினார். அன்றியும், அவரே தமது படைஞரோடு விஜயநகரத்துட்புகுந்து தேவராயர் தம் மகள் ஒருத்தியைத் தமக்கு மணம் புரிவிக்குமாறு வற்புறுத்தித் தம் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டார். தவிரவும், இத்துணை இன்னல்களுக்கும் காரணமாயிருந்த அப்பொற்கொல்லரின் மகளைத் தம் மகனுக்கு மணம் செய்வித்தார். பிரோஸ் கி.பி. 1417-ல் வாரங்கலை வென்றார்.

மேற்கூறிய போர்முனை வெற்றிகளேயன்றி அமைதிக்காலச் சாதனைகளிலும் அவர் பிற மன்னர்களை விஞ்சி நின்றார். பிரோஸ் பிரோஸாபாத் என்று தம் பெயரால் ஒரு நகரத்த ஆக்கினார். ராய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியை ஒரு மாநிலமாக்கினார். அவர் மதுவை மிதமின்றி அருந்தினார். இவற்றின் ஆதிக்கத்தினின்றும் அவர் விடுபட்டிருந்த காலங்களில் அவர் நல்லாட்சியே நடத்தினார் எனலாம். பாமினி அரசை ஆண்ட பல மன்னர்களுள்ளும் சிறந்தவர்களில் அவர் ஒருவர் என்பதில் ஐயமின்றி.

## அமகதுஷா

பிரோஸை அடுத்து அவரது இளவல் அஹுமது என்பவர் அரசராகி கி.பி 1422-லிருந்து 1436 வரை ஆண்டார். தமக்கு முன் ஆண்ட ஏனைய பாமினி மன்னர்களைப் போலவே அவரும் ராய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியையும் துங்கபத்திரை ஆற்றையும் கடந்து விஜயநகரத்துட்புகுந்து சூறையாடினார். அவர் விடுத்த வேண்டுகோளுக்கு விஜயநகரத்தினர் ஒப்புக் கொண்டார். மிகுந்த செல்வமும் பல போர்க் கைதிகளும் உட்பட ஏராளமான திறையோடு திரும்பினார் அஹுமது. அவ்வாறு கைப்பற்றிச் செல்லப்பட்டவர்களில் இரு அந்தணர் இருந்தனர். அவர்கள் முஸ்லீம்களாக மத மாற்றப்பட்டனர். அவர்களில் ஒருவர் பிற்காலத்தில் பீதரில் இமாது‘ஷாஹி வமிசத்தையும் மற்றவர் அஹுமது நகரில் நைஜாம் ‘ஷாஹி வமிசத்தையும் நிறுவிறவர்கள்.

கி.பி. 1424-ல் அஹுமது தெலிங்கானாப் பிரதேசத்தைப் பாமினி ஆட்சியில் உட்படுத்தி, மாளவத்தைய்ு வென்றார். அவர் காலத்தில்தான் பாமினியின் தலைநகரம் குல்பர்க்காவிலிருந்து பீடாருக்கு மாற்றப்பட்டது. (1429) அவர் ஆட்சிக் காலத்தில் சுல்தானியத்தில் பல உட்பூசல்கள் தோன்றி அரசைப் பலவீனப்படுத்தின. இப்பலவீனங்கள் ஒன்று சேர்ந்து இறுதியில் அரசிற்கே இறுதி தேடிவிட்டன. பாமினிப்படையில் அராபியர்கள், பாரசீகர்கள், துருக்கியர்கள் முதலிய பிறகு முஸ்லீம்களாக மதமாற்றப் பட்டவர்கள் பலரும் இருந்தனர். இப்பிரிவுகள் தவிர, உட்சமய அடிப்படையில் ஷியாக்கள் என்றும் சன்னிகள் என்றும் இரு பிரிவினர் இருந்தனர். இப்பிரிவுகள் ஒன்றோடொன்று தீராப்பகைமை பூண்டு இருந்தன. இவையேயன்றி அபிசீனிய ஆப்பிரிக்கர்கள் வேறு மற்றொரு பிரிவினராகப் புகுந்து குழப்பத்தை மிகுவித்தனர். இப்பிரிவினர் ஒவ்வொருவரும் சுல்தானின் ஆதரவையும்

பாதுகாப்பையும் தனித்தனியே நாடினார், அன்றியும் ஊரில் நடந்த குற்றங்கள் யாவற்றிற்கும் ஒருவரையொருவர் குற்றமும் சாட்டினர். பாமினி அரசின் முடிவிற்கே இப்பூசல்கள் காரணமாயின.

## இரண்டாம் அலாவுதீன்

அஹமதுவின் ஆட்சிக்குப்பின் அவர் மகனான இரண்டாம் அலாவுதீன் (1436-1458) என்பவர் அரசரானார். கி.பி. 1437-ல் அவர் ஒரு கொங்கணிச் சிற்றரசரை வென்று அவர்தம் மகளை மணந்து கொண்டார். இதற்கு முன்பே சுல்தான் கான்டேீன் மன்னரான நஸிர்கான் என்பவரின் மகளை மணந்திருந்தார். ஆதலால் கான்டேீ மன்னர் சுல்தானின் இரண்டாவது திருமணத்தைப் பற்றிக் கேள்வியுற்றுச் சினங்கொண்டு பேரரசர் மீது படையெடுத்தார். ஆனால் வெற்றி காணவில்லை. இதற்கடுத்தாற்போல் கி.பி. 1443-ல் பாமினி அரசுக்கும் விஜயநகரத்தாருக்கும் வழக்கம்போல் போர் மூண்டது. இப்போர் அதில் ஈடுபட்டவர்களுக்கு யாதொரு பயனுமின்றிக் கழிந்தது. அலாவுதீன் இஸ்லாம் மதத்தில் மிகுந்த ஈடுபட்டு உடையவர். அவரைச் செங்கோலர் என்னும் விருது கொண்டழைப்பர்.

## ஹுமாயூன்

அலாவுதீனயைடுத்து மன்னரான ஹுமாயூன் என்பவர் புறத்தரான பாரசீக-அராபிய முஸ்லீம் கூட்டத்தை ஆதரித்தவர். அவர் அவைக்களத்தில் முகமது கவான் என்னும் பெயரில் அரசியல் அலுவலாளர் ஒருவர் இருந்தார். அவர் அப்புற முஸ்லீம் கூட்டத்தைச் சேர்ந்தவர். ஆதலால் ஹுமாயூனால் ஆதரிக்கப்பட்டார். கவான் கி.பி. 1404-ல் பிறந்தார். இந்தியாவிற்கு 1447-ல் வந்தார். அவர் எல்லாவகையிலும் திறமைசாலி, மன்னனின் நம்பிக்கைக்குப் பாத்திரர் அவரது தகுதியை உயர்ந்த சுல்தான் அவரைத் தலைமைப் பிரபுவாக நியமித்தார். ஹுயூமாயூன் நல்ல அமைச்சரைத் தெரிந்தெடுத்துக் கொண்டாராயினும் அவர் சொற்படியோ அன்றித் தனது நற்புத்தியைப் பயன்படுத்தியோ நடந்து கொள்ளவில்லை. அவர் ஒரு கொடுங்கோலர். அவரை மனித உருவில் ஒரு பேய் என்று கூறினர்.

ஹுமாயூன் ஆட்சி 1462-ல் முடிந்ததும் அவர் மைந்தர் நைஜாம் சுல்தானானார். அவர் பட்டத்திற்கு வந்தபோது எட்டாண்டுச் சிறுவராய் இருந்தனர். ஆயினும், அவர் இரண்டாண்டுக் காலமே ஆட்சி புரிந்தார். அவர் ஆட்சிக் காலத்தில் குவாஜா, ஜஹான், முகமது கவான் என்னும் இர பிரபுக்களும் சுல்தானின் தாயாரைக் கலந்து ஆலோசித்து ஆட்சி நடத்தனர். சுல்தான மிகச் சிறுவராயிருந்தமையால் சுல்தானியமும் பலவீனமுற்றிருக்கும் என்று கருதிய மாளவ, கலிங்க மன்னர்கள் பாமினி அரசைத் தாக்கினர், ஆயினும் முகமது கவானின் திறமையாலும் குஜராத் மன்னன் காலத்திற் செய்த உதவியாலும் நிலைமை சமாளிக்கப்பட்டது.

சுல்தானான நைஜாம் இறந்தபின் அவர் தம்பியான முகமது என்பவர் அரசரானார். அவரும் ஆட்சிக்கு வரும்போது மிகச்சிறு வயதினரே. ஆகையால், பழைய ஆட்சிச் சபை, தொடர்ந்து ஆட்சி செய்து வந்தது. சுல்தானின் தாயார் அச்சபையில் இருந்த குவஜா ஜஹான் என்பவர் அரசியல் அதிகாரம் முழுவதையும் பறித்துக் கொள்ள முயன்றார் என்று காரணம் காட்டி அவருக்குக் கொலைத் தண்டனையளித்து விட்டார். ஆகையால் அவைக்களத்தில் அதிகாரத்திலும் செல்வாக்கிலும் திறமையாலும் எஞ்சியவர் முகமது கவான் ஒருவரே. அவருடைய மேற்பார்வையில்தான் மன்னரே வளர்ந்து வந்தார். முகமதுவின்

ஆட்சிக் காலத்தில் பாமினி அரசு பருமையிலும் பெருமையிலும் விஞ்சி நின்றது. அவர் காலத்தில் பாமினிப் படைகள் விஜயநகரத்தையும் தாண்டித் தொண்டை மண்டலம் வரை வெற்றியோடு வந்து மீண்டதாகக் கூறப்படுகிறது. அவர் ஆட்சிக் காலத்தில் ருஷ்யரான நிசிடின் என்பவர் பாமினிக்கு விஜயம் செய்தார். அவர் தாம் கண்டதையும் கேட்டதையும் குறிப்புகளாக எழுதி வைத்துள்ளார்.

### பாமினி அரசின் மறைவு

கவானை அவ்வாறு ஒழித்துக் கட்டத் திட்டமிட்டிருந்த மாலிக் ஹஸன், அத்தூயவர் மீது பொய்க்குற்றச்சாட்டு ஒன்றினைச் செய்து அது மன்னருக்கும் எட்டுப்படியாகச் செய்தான். கவானின் பகைவர்கள் சில காலமாகவே சுல்தானுக்கு அவருடைய நம்பிக்கை மீது ஐயம் ஏற்படும் முறையில் அவதூறுகளையும், புகார்களையும் கிளப்பிவிட்டுக் கொண்டே வந்தனர். இதனையொட்டி மாலிக்ஹஸன் தூண்டுதலால் கவான் எழுதியதாகப் பொய்க் கையெழுத்திட்டு ஒரு கடிதம் வரையப்பெற்றது. அக்கடிதம் கவான் ஒரிஸ்ஸா அரசருக்கு எழுதியதாகக் கண்டது. அக்கடிதத்திற்குக் கவானின் முத்திரை திருடப்பட்டு வைத்து உறுதி செய்யப்பட்டது.

இக்கடிதம் மன்னர் கையில் சேர்ப்பிக்கப்பட்டது. கடிதத்தைப் படித்தபோது குடிவெறியில் இருந்த சுல்தானுக்கு அதன் உண்மையைக் காணவேண்டும் என்று தோன்றவில்லை. அன்றியும் தீர ஆராயாமல் தவறு செய்துவிட்டால் அதனைப் பிறகு திருத்தமுடியாத என்பதையும் உணரவில்லை. அவர் கவானை அழைத்து மன்னரை எதிர்த்துச் சதி செய்பவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய தண்டனையை கொடுக்க ஆணையிட்டார். அதன்படி கவானுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது. மன்னர் செய்த பல தவறுகளுள் மிகக் கொடுமையான தவறு இதுவேயாகும், கவானுக்குப் பிறகு மாலிக் ஹஸனே முதல் மந்திரியானார். இவரது காலத்தில் பாமினி அரசு முடிவுக்கு வந்தது.

## முகமது கவான்

மாமூது கவான் கி.பி. 1411-ல் கிலான் நாட்டில் பிறந்தார். இது காஸ்பியன் கடலின் தெற்கேயுள்ளது. இவர் 1453-ல் இந்தியாவிலுள்ள தபோல் என்ற இடத்திற்கு வணிகம் செய்ய வந்தார். அப்பொழுது பாமினி அரசை அலாவுதீன் அகமது ஆண்டு வந்தார். இவரது அவையில் ஓர் அமீராக மாமூது அமர்ந்தார். பின்னர் ஆயிரம் வீரர்களைக் கொண்ட படைக்கு மான்சப்தாராக பொறுப்பேற்றார். ஹுமாயூன் மறைந்த பின் எட்டு வயதான அவரது புதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்றார். மாமூதுகவானும், கவாஜா ஜஹானும் அடங்கிய பகர ஆட்சி குழு நாட்டை ஆண்டது. கி.பி. 1466-ல் முகமது ஷாவின் காலத்தில் கவாஜா அரசுப் பணத்தைக் கையாடல் செய்ததால் தூக்கிலிடப்பட்டார். 1466-ல் கவான் பாமினி அரசின் தலைமை அமைச்சரானார்.

கி.பி. 1468-ல் மாளவத்தின் மீது படையெடுத்து மாமூது கில்ஜியிடமிருந்து கேர்லா கோட்டையைக் கைப்பற்றினார். குறுநில மன்னர்கள் ஆட்சி செய்த பால்கேட், ஹுப்ளி ஆகியவை கைப்பற்றப்பட்டன. அதனால் ஏராளமான திறைப் பொருள்கள் கிடைத்தன. 1470-ல் கொங்கணத்தின் மீது கவான் படையெடுத்து அதனை இணைத்துக் கொண்டார். விஜய நகரத்தின் மீது படையெடுத்து கோவாவைக் கைப்பற்றினார். மராத்திய அரசால்

கைப்பற்றப்பட்ட அண்டூர், வீரகேரா ஆகியவை மீண்டும் கைப்பற்றப்பட்டன. பெல்காமும் கைப்பற்றப்பட்டது.

புரட்சி ஏற்பட்ட தெலிங்கானா பகுதி அடக்கப்பட்டது. இதற்குக் காரணமாயிருந்த குறுநில மன்னர் ஹமீரும் தண்டனைக்கு ஆளானார். ஓரிசாவில் ஏற்பட்ட அடக்கப்பட்டது. காந்தே' பகுதியை பாமினி அரசின் காப்பு நாடாக அமைத்தார்.

பாமினி வரலாற்றிலேயே பெருமையோடு பேசப்பட்க கூடியவர்களில் முகமது கவான் முக்கியமான ஒருவர். ஆவர் அமைச்சுத் தொழிலைத் திறம்படவும் முழு ஈடுபாட்டுடனும் ஆற்றினார். அவர் அரசை வலுப்படுத்தினார். சிவில் நிர்வாகமும் இராணுவமும் சிறந்திருந்தன. மிகப்பெரிதாக வளர்ந்து விட்ட அவ்வரசை அவர் எட்டு மாநிலங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒருகவர்னரை நியமித்து அக்கவர்னர்களுடைய அதிகாரத்த அளவிற்குள் அடக்கினார். குல்பர்கா, பிஜப்பூர், தௌலதாபாத், ஜுன்னார், மாகூர், சுவில், வாரங்கல், இராஜமகேந்திரம் என்பவையே அவர் ஆக்கிய மாநிலங்கள், பீதர் தனி ஆட்சியில் நின்றது, தங்களுடைய அதிகாரம் பெருமளவிற்குக் குறைக்கப்பட்டதைக் கண்ட அக்கவர்னர்களுக்கு ஆத்தரம் ஏற்பட்டது.

தெலிங்கனாவில் இருந்த மாலிக் ஹஸன் என்பவனுக்கு இக்காரணம் பற்றிக் கவானிடம் நேரடியான பகைமையே தோன்றிற்று. சுதேச முஸ்லீம்கள் ஒன்றாகச் சேர்ந்து கவானைத் தொலைத்துவிடச் சூழ்ச்சி செய்தனர். இப்பகைமைகளையும், சூழ்ச்சிகளையும் அறிந்திருந்தும் பொருட்படுத்தாமல் மக்களது நன்மை ஒன்றையே கருதி மேலும் மேலும் நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்து வந்தார். அவர் வரி வசூல் முறைகளை மாற்றியமைத்தார். நிலவரியைப் பொருள்காளக அல்லாமல் ரொக்கமாகவே கட்டும் வசதியளிக்கப்பட்டது. அவர் பீதரில் ஒரு கல்லூரியை நிறுவியதிலிருந்து கல்வி முன்னேற்றத்தில் அவருக்கிருந்த அக்கறை புலப்படும். அவர் சுயநலம் கருதாமல் நாட்டு நலம் கருதியவர். நிர்வாகத் திறமைமிக்கவர். அவர் ஒரு சிறந்த கல்விமான். நல்லொழுக்க நெறியில் நின்றவர். ஆயினும், இஸ்லாம் உட்பிரிவுகளில் ஒன்றான சன்னி நெறியைப் பின் பற்றியதோடு அந்நெறியில் அளவிற்கு விஞ்சிய பற்றும் கொண்டவர்.

**Prepared by**
**DR. B. MUTHARASI**
Associate Professor, Department of History,
A.P.C. Mahalaxmi College for Women, Tuticorin – 628 002.